www.tamilarangam.net

# அசை

## மறுபடியும் மார்க்ஸிடம்



நினைவுகள் மரணிக்கும்போது
ஏ சிவானந்தனுடன்
யமுனா ராஜேந்திரன்



பெண்நிலைவாதம் ஷாஹ்லா லாஹிஜி

உலகமயமாக்கல் சமுத்திரன்

இஸ்லாமிய அடிப்படைவாதம்
ஜமாலன்

இஸ்த்வான் மெஸரஸ்

கண்டறியாப்புலத்தில் ஒரு சஞ்சாரம்
கோம் டோய்பின்

மனு - அதிமனிதன் - நீட்ஷே

ஜீனட் வின்டர்ஸன்



அம்பேத்கர்



ஜெர்மேய்ன் க்ரீயர்

இன்னும் ...

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அசை

தொகுப்பாசிரியர்

**அசோக் யோகன்**

அச்சாக்கம்:
மணி ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 5

Printers:
**Mani Offset Printers**
**Chennai - 5.**

Design:
**Udhayakumar**

விலை: ரூ. 50

வெளியீடு:
பதிவுகள்
சி.275, சேரன் மாநகர்
விளாங்குறிச்சி சாலை
கோயமுத்தூர் - 35

**மார்க்ஸ் எனும் மானுடன்** 5
நூலாய்வு - ஜென்னி டிஸ்கி

**உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும்** 13
**சமுத்திரன்**

**தீவிர மாற்றுக்கான தேவை** 32
இஸ்த்வான் மெஸரஸுடன்
எலியாஸ் கனலிஸ் உரையாடல்
மொழிபெயர்ப்பு : **சிங்கராயர்**

**உலக அரசாட்சியில் புனித ஆவிகளும்**
**அடிப்படைவாத ஜின்களும்** 46
**ஜமாலன்**

**நீட்ஷேயின் மூலங்கள்** 69
**தமிழரசன்**

**மனு - அதிமனிதன் - நீட்ஷே** 90
அம்பேத்கர்
மொழிபெயர்ப்பு : **உதயகுமார்**

**நினைவுகள் மரணிக்கும்போது** 98
ஏ.சிவானந்தனுடன்
**யமுனா ராஜேந்திரன்** உரையாடல்

**கண்டறியாப்புலத்தில் ஒரு சஞ்சாரம்** 106
கோம் டோய்பின்
மொழிபெயர்ப்பு : **ஆர். பால கிருஷ்ணன்**

**பெண்நிலைவாதம்** 121
ஷாஹ்லா லாஹிஜியுடன்
மஹ்ஸா ஷேகர்லூ உரையாடல்
மொழிபெயர்ப்பு : **லக்சுமி**

**முறைகேடு இலக்கியம்** 133
ஜீனட் வின்டர்ஸன்
மொழிபெயர்ப்பு : **ஆர். பால கிருஷ்ணன்**

**ஆபாசக் கலையைத் தேடும் அகோரப்பசி** 137
ஜெர்மேய்ன் க்ரீயர்

**இலங்கையின் பூர்வகுடிகள்** 144
**ராகவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மறுபடியும் மார்க்சிடம்

சென்ற நூற்றாண்டு மிகப்பெரிய சவால்களையும் இடிபாடுகளையும் சோதனைகளையும் நம் முன் விட்டுச் சென்றிருக்கிறது. தேசிய இனச்சுத்திகரிப்பு பிணமலைகளை நம்முன் குவித்திருக்கிறது. உலகமயமாதல் போக்கு பிரம்மாண்டமான தனது பகாசுரச் சக்கரங்களின் கீழ் மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மையைச் சுரண்டி வருகிறது. ஐரோப்பிய, சீன மார்க்சியமன்றி, ஆப்பிரிக்க, இலத்தினமெரிக்க, மத்திய கிழக்கு மார்க்சியம் என்பதையும் அறிமுகப்படுத்தவும் பேசவுமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். தேசியத்திற்கும் மத அடிப்படைவாதத்துக்குமான உறவை நாம் பரிசீலனை செய்யவேண்டி இருக்கிறது. அமைப்பியல்வாதம், பின்நவீனத்துவம் போன்றவற்றின் வர்க்கத் தன்மையையும், வலதுசாரி இடதுசாரி நிலைபாடுகளையும் நாம் அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் ... புரட்சிகர இயக்கங்களில் ஜனநாயக மறுப்பு மற்றும் பின்புரட்சி சமூகங்களின் அனுபவங்கள் போன்றவைகளைத் தொகுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாம் நமது தலைமுறைக் காலத்திலேயே மார்க்சியத்தின் நேரடி அல்லது மறைமுகத் தாக்கத்தின் விளைவாக உலகெங்கிலும் ஏற்பட்ட எண்ணற்ற சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு இயக்கங்களைக் கண்டவர்கள். மரபுரீதியான மார்க்சியர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சாதியம், ஆணாதிக்கம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள், சமப்பாலுறவு உளவியல், இனத்தேசியம் போன்ற பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளை / பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்கிற விமர்சனம் நமக்கிடையில் இருக்கிறது.

சோசலிச நம்பிக்கைக்கு சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஏற்பட்ட தற்காலிகத் தோல்விகள் உலகெங்கிலுமிருந்த மார்க்சிய, சோசலிச, இடதுசாரிக் கட்சிகளிலும் இயக்கங்களிலும் நெருக்கடிகளையும், பின்னடைவுகளையும், குழப்பங்களையும், சோர்வையும் உண்டாக்கியிருக்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். இனியும் *ஏகாதிபத்திய சதி, பிற்போக்குவாதம், தன்னார்வக் குழுக்களின் சதி, புரட்டல்வாதம், திரிபுவாதம்* என்பதை நமது தோல்விக்கான

www.tamilarangam.net

காரணங்களாக உச்சாடனம் செய்துகொண்டிருக்க முடியாது. ஸ்டாலினிசம் குறித்து நிறையப் பேசியாகிவிட்டது. டிராட்ஸ்கியத்தின் *நிரந்தரப் புரட்சி* குறித்தும், மாவோயிசத்தின் பங்களிப்புகளாகச் சொல்லப்படுகிற *கலாச்சாரப் புரட்சி* மற்றும் *மாபெரும் பாய்ச்சல்* போன்றவை குறித்தும் நாம் பேசியாக வேண்டும்.

***அசை*** மூலம் இந்தியா, இலங்கை, வட அமெரிக்கா, கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மார்க்சியர்களையும், அவர்தம் விமர்சனங்களையும், கேள்விகளையும், அனுபவங்களையும் இணைக்க விழைகிறோம். சமகாலத்தில் மேற்கில் வளர்ந்து வந்திருக்கும் ஸ்டாலினிய எதிர்ப்பு மார்க்சியத்தின் வளமான பகுதிகளையும், கிராம்ஸி முதல் பிரடெரிக் ஜேம்ஸன் வரையிலான சிந்தனைகளையும் அவற்றினது அசல் தன்மையுடன் தமிழுக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

மேற்கிலும், பல்வேறு பின்புரட்சி சமூகங்களிலும் வளர்ந்து வரும் மார்க்சிய விமர்சனம் சார்ந்த மறுஎழுச்சி வகையிலான மார்க்சியம், திட்டமிட்ட வகையில் தமிழ் பின்நவீனத்துவ வாதிகளாலும் தமிழ்த் தேசியவாதிகளாலும் மறைக்கப்பட்டு வருகிறது என நாம் காண்கிறோம். இவ்வகையிலேயே தமிழ் மொழியில் ***அசை*** போன்றதொரு நூலின் தேவையை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இதன் வழியில், உலகின் பிற மார்க்சியர்களுக்கும் தமிழ் பேசும் மார்க்சியர்களுக்கும் இடையில் திசைகளுக்கிடையிலான ஒரு தொடர் உரையாடலை நாம் உருவாக்க நினைக்கிறோம்.

வடஅமெரிக்காவிலிருந்து வெளிவரும் *மன்த்லி ரெவ்யூ*, இங்கிலாந்திலிருந்து வெளியாகும் *நியூ லெப்ட் ரெவ்யூ* மற்றும் *ரேஸ் அண்ட் கிளாஸ்*, ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் *அரீனா* போன்ற மார்க்சியச் சஞ்சிகைகளை ***அசை*** தனது முன்மாதிரியாகக் கொள்ளும். கல்வித்துறைசார் ஆய்வுநெறிக்கும் நடைமுறைசார் கோட்பாட்டு எழுத்துக்குமான செயல்ரீதியிலான தொடர்பை உருவாக்க ***அசை*** முயலும். 1) மார்க்சியக் கோட்பாடு 2) புரட்சிகர அரசியல் 3) மாற்றுக் கலாச்சாரம் என்ற மூன்று வகைப்பாடுகளின் கீழ் ***அசையின்*** கட்டுரைகள் அமைய வேண்டும் என விரும்புகிறோம்.

www.tamilarangam.net

கோட்பாட்டுரீதியிலான எழுத்துக்களை மட்டுமே ***அசை*** வெளியிடும். படைப்பிலக்கியம் சார்ந்த, நுண்கலைகள் சார்ந்த கோட்பாட்டுரீதியிலான கட்டுரைகளை ***அசை*** தாங்கிவரும். ஆயினும் படைப்பிலக்கியத்திற்கான இடம் ***அசையின்*** வரையறைக்குள் இல்லை. மூலக்கட்டுரைகள் தொடர்பான விவாதங்களுக்கும் ***அசை*** இடம் தரும்.

நவீனத்துவத்திற்குப் பிந்திய கோட்பாடுகள், பின்சோவியத் அனுபவங்கள், தேசிய விடுதலை இயக்கங்கள் குறித்த மீளாய்வுகள் மற்றும் சாத்தியமான மாற்றுச் சமூகத் திட்டங்கள் போன்றவை குறித்த கட்டுரைகளை நாம் எதிர்பார்க்கிறோம். எமது சக்திக்கு எட்டியவரை தமிழ்ச் சூழலில் செயல்படும் அனைத்து மார்க்சியச் சிந்தனையாளர்களிடமிருந்தும் மூலக்கட்டுரைகளைப் பெற்று வெளியிட முயல்வோம். மேற்கத்திய மார்க்சியர்களிடமிருந்தும், பிற உலகப் புரட்சியாளர்களிடமிருந்தும், இலங்கை மற்றும் தமிழகத்திலுள்ள தமிழ் பேசும் மார்க்சியர்களிடமிருந்தும் அசலான கட்டுரைகளையும் உரையாடல்களையும் பெற ***அசை*** முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

முதலில் ஆண்டுக்கு இருமுறை இதழாக ***அசையைக்*** கொண்டுவர விரும்புகிறோம். ஓரிரு ஆண்டுகளில் காலாண்டிதழாகக் கொண்டுவரவும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். கோட்பாட்டாளர்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து கட்டுரைகளையும், இதழ் குறித்த எண்ணங்களையும், எதிர்கால சஞ்சிகை குறித்த விருப்பங்களையும் எதிர்பார்க்கிறோம்.

அன்புடனும் தோழமையுடனும்

**அசோக் யோகன்**

தொகுப்பாசிரியர்

படைப்புகளுக்கும்
விமர்சனங்களுக்கும்:

Ashok Yogan
Assaie Biannual
45 Rue Davy
75017 Paris
France

www.tamilarangam.net

# மார்க்ஸ் எனும் மானுடன்

**ஜென்னி டிஸ்கி**

ஃப்ரான்ஸிஸ் வீன், மார்ஷல் பெர்மன் ஆகிய இரு எழுத்தாளர்களும் மார்க்ஸைப் பற்றிய இரண்டு வகையான பார்வையைக் கொடுக்கிறார்கள். மக்கள் தமக்கு ஏற்ற தலைமை அமைச்சர்களையும், தலைவர்களையும் அடைகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்போது கார்ல் மார்க்ஸைப்பற்றி வெளிவரும் நூல்களைப் பார்த்தால், ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு ஏற்ற கார்ல் மார்க்ஸை அடையும் என்பது போலத் தோன்றுகிறது. சமூகப் பண்டிட்டுகளுக்கு அவ்வப்போது உண்டாகும் பார்வைக்கு ஏற்றவாறு கார்ல் மார்க்ஸ் மீண்டும் மீண்டும் மீளாய்வு செய்யப்படுகிறார். இதனால் நமக்குச் சாதகங்கள் உண்டு. ஒவ்வொருவரும் மறுவார்ப்புச் செய்பவராக தம்மைத்தாமே மாற்றிக்கொண்டு மார்க்ஸை இப்போதைய எண்ணத்துக்கேற்ப மறுவார்ப்புச் செய்கிறார். நமது மனநிலைக்கேற்ற மார்க்ஸைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. நம் மார்க்ஸே உண்மையான கார்ல் மார்க்ஸ் என்று தேற்றிக்கொள்ள முடியும்.



இதழாளரும், டாம் டிரிபெர்க்கின் வரலாற்றை எழுதிய வருமான ஃப்ரான்ஸிஸ் வீன், மார்க்ஸைத் திறனாய்வு செய்கிறார். இதற்கு முன்னர் மார்க்ஸின் தத்துவங்களை நடைமுறைப்படுத்தியவர்கள் மற்றும் கோட்பாட்டாளர்கள் - அரசாங்கங்கள் மற்றும் படைப்பாளிகள் (பொருளியல், வரலாறு, புவியமைப்பியல், சமூகவியல், இலக்கியம் ஆகியவற்றில்) புலமை பெற்றவர்களான மார்க்ஸீயர்கள், இப்போது மார்க்ஸீயச் சிந்தனையை 'பேரழிவுக்குள்ளாக்கும் வண்ணம் தவறாக

ஃப்ரான்ஸிஸ் வீன் எழுதி ஃபோர்த் எஸ்டேட் வெளியிட்ட *கார்ல் மார்க்ஸ்* என்ற நூலுக்கும், மார்ஷல் பெர்மன் எழுதி வெர்வோ வெளியிட்ட *மார்க்ஸீயத்தில் சாகஸங்கள்* (Adventures in Marxism) என்ற நூலுக்கும் London Review of Books (Nov. 1999) ல் **ஜென்னி டிஸ்கி** எழுதிய

**ஒரு மானுடர்: மார்க்ஸும் பிளவைக்கட்டிகளும் பிறவும்**
(A Human Being: Marx, Carbuncles and All)

என்ற நூல் மதிப்புரையைத் தமிழ் வாசகர்களுக்குத் தருகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்குவதாக'க் கூறுகிறார். இந்தப் படிப்பாளிகளுக்கும், ஆர்வலர்களுக்குமான நேரம் இது; 'புராணக் கட்டுக்கதைகளைப் புறந்தள்ளிவிட்டு கார்ல் மார்க்ஸ் என்ற மனிதரைக் கண்டறிவதற்கான நேரம் இது' என்று வீன் கூறுகிறார்.

நீங்கள் உடனே 'ஏன்?' என்று கேட்பீர்களானால், இந்த உலகத்தை விட்டுச் சில ஆண்டுகளாக எங்கோ போய்விட்டீர்கள் என்று பொருள். வாழ்க்கை வரலாற்றைத் தமக்குப் பிடித்த வகையில் எழுதுவதென்பது இப்போது எல்லா இடத்திலும் பரவியுள்ளது. நாம் ஒரு மனிதரின் சிந்தனையைப் பற்றி நினைத்துப் பார்ப்பதைவிட, அவருடைய வாழ்க்கைச் சித்திரத்தையே பார்க்க விரும்புகிறோம். ஒருவருடைய கருத்துகளையும் அவற்றின் வளர்ச்சியையும் பற்றி ஆராய்வது பின்னுக்குத் தள்ளப்பட்டு அவருடைய சொந்த வாழ்க்கையை ஆராய்வது முன்னுக்கு வந்துவிட்டது.




'மார்க்ஸ்' என்ற திரைப்படம் விரைவில் வெளிவரலாம். ஒரு வேளை நமது அதிர்ஷ்டவசமாக வால்ட் டிஸ்னி கார்ல் மார்க்ஸ் பற்றி கார்ட்டூன் படம் தயாரிக்கலாம். வீன் மார்க்ஸை விவரிப்பதைப் போல, 'கருநிறக் குட்டை மனிதர், தன்னைத் தானே வெறுப்பதால் துன்புறுபவர்' என்று கூறலாம் (குரல் உதவி: ராபின் வில்லியம்ஸ்). மார்க்ஸ் சாய்வு மேசையில் பொதுவுடைமை அறிக்கையை எழுதிக் கொண்டிருக்கும்போது சுற்றியிருக்கிற கடன் கொடுத்த தியவர்கள் பஃபூன்களைப் போல சுற்றி நின்று முதலாளியம் பற்றிக் கூட்டிசை பாடுவார்கள்:

'நாம் இழப்பதற்கு எதுவுமில்லை,
கொடுத்திருக்கும் கடனைத் தவிர'.

ஆஹா! நாம் பார்க்கப் போவது எத்தகைய புதிய நூற்றாண்டு!

கார்ல் மார்க்ஸ் என்ற மனிதரின் பெயரால் நடந்தவற்றிலிருந்து அவருடைய பொறுப்பைக் கழற்றிவிட வீன் விரும்புகிறார். டார்வினியம் என்பது சார்லஸ் டார்வின் இல்லை; இது போல மார்க்ஸீயமும் கார்ல் மார்க்ஸ் இல்லை. இது உண்மை. இப்படிச் சிந்திப்பதால் நீங்கள் திடுக்கிட்டுவிடக்கூடாது. 'அவருடைய எதிரிகளோ அல்லது அவருடைய சீடர்களோ ஒப்புக்கொள்ள விரும்பாதது என்னவென்றால், அவருடைய பண்புகளி லெல்லாம் மிகவும் வெளிப்படையான ஓர் உண்மையை - இந்தக் கட்டுக்கதைப் பூச்சாண்டி மற்றும் முனிவர் உண்மையில் ஒரு மனிதரே என்பதே அது; இப்படி ஒப்புக் கொள்வது உப்புச்சப்பற்றதாகி விடுகிறது. இது வாசகர்களுடைய பொறுமையைச் சோதிப்ப தென்று அவருடைய எதிரிகளோ அல்லது சீடர்களோ கருதி விடலாம். ஆனாலும் இதை உலகுக்குச் சொல்லுவதற்கான நேரம் வந்து விட்டதெ'ன்று வீன் உணர்கிறார். இது நமக்குச் சோர் வூட்டினாலும் அவர் சொல்லுவது சரிதான்.

1950களில் மக்கார்த்திகள் ஆடிய நரவேட்டை வியட்நாமிலும், கொரியாவிலும் நடந்த போர்கள், க்யூபாவின் ஏவுகணை நெருக்கடி, செக்கோஸ்லோவாக்யா மற்றும் ஹங்கேரி ஆக்கிரமிப்பு, தியானன் மென் சதுக்கத்தில் நடந்த மாணவர் படுகொலை - இத்தகைய இரத்தம் கொட்டிய, வெட்கப்படத்தக்க இருபதாம் நூற்றாண்டு வரலாற்று நிகழ்ச்சிகளெல்லாம் மார்க்ஸீயம் அல்லது மார்க்ஸீய எதிர்ப்பின் பெயரால் நடந்தவையேயாகும். தன்னுடைய வாழ்க் கையின் பெரும் பகுதியை வறுமையில் பிள்ளைகளுடனும், ஈரல்வலியுடனும் கழித்த ஒருவருக்குக் கிடைத்த பெரும் பேறு இது எனலாம். இவர் ஒரு முறை அதிகம் குடித்து விட்டு இலண்டன் குடிமனையில் தள்ளாடிக் கிடந்ததால் மெட்ரோபாலிடன் போலீஸால் துரத்தப்பட்டிருக்கிறார்.

உலகத்தையே குலுக்கக்கூடிய நிகழ்ச்சி களெல்லாம் மார்க்ஸின் பிள்ளைக்கட்டி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1844 கையெழுத்துப் படிகளில் தனிமனிதனுக்கு வழங்கப் பட்டிருக்கும் மரியாதை - ஒரு தொழிலாளியாக, படைப்புச் சக்தியாக, ஒரு காதலனாகக்கூட மனிதன் புரிந்துகொள்ளப்பட்டுப் போற்றப்படுவது - 'கீட்ஸ், டிக்கன்ஸ், ஜார்ஜ் எலியட், தாஸ்தயேவ்ஸ்கி, ஜேம்ஸ் ஜாய்ஸ், ஃபிரான்ஸ் காஃப்கா, டி.எச். லாரன்ஸ்' போன்ற இலக்கியவாதிகளின் தரத்தில் மார்க்ஸை நிறுத்துவதைக் கண்டுணர்ந்தார் பெர்மன்.**

களாலும், குடித்துத் தள்ளாடியதாலும் உண்டாயின என்பதை அறிய உங்கள் இதயம் துடிக்கிறதா என்பதை நான் அறியேன். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றோடு இவை போன்ற விஷயங்கள்தான் நெருங்கிய உறவு கொண்டிருந்தன என்பதை அறியும்போது என் மனம் சோர்வடைகிறது. மார்ட்டின் லூதருக்கு வாயுத்தொல்லை இருந்ததால்தான் புராட்டஸ்டண்டு மதம் உண்டாகியது; நரம்புகள் மற்றும் வயிற்றுவலி இருந்ததால்தான் டார்வின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையைக் கண்டுபிடித்தார் என்கிறபோது பிளவைக் கட்டிகளால் மார்க்ஸீயம் தோன்றியிருக்க முடியாதா? நிச்சயமாக, வாழ்க்கை சுவையானதுதான். பல வாழ்க்கை வரலாற்றாசிரியர்களைப் போல, மார்க்ஸின் வரலாற்றாசிரியர் மார்க்ஸின் படைப்புகள் அவருடைய வாழ்க்கைப் போக்குடனும், உளவியலுடனும் தொடர்புடையன என்பதை விவாதிக்கிறார். எனினும், மார்க்ஸின் படைப்புகளை அவரது மாணவர்கள் விளக்குவதில் உண்டாகும் கடந்தகால, மற்றும் நிகழ்கால பிழைகளையும், குழப்பங்களையும் விளக்குவதற்கு மார்க்ஸின் அன்றாடவாழ்க்கை உதவக்கூடும் என்பதை நான் அறிந்தவரையில் வேறெவரும் கூற வில்லை.



பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதுமே மார்க்ஸீயம் முடிவடைந்துவிட்டதென்று கற்பனை செய்தவர்களுக்காக மார்க்ஸீய சிந்தனையை மீட்டெடுக்கும் சிலுவைப்போரை வீன் நடத்துகிறார். செயலற்றுப்போன கருத்துகளின் கழிவுக்குப்பைமேட்டில் மார்க்ஸ் கிடக்கிறார் என்கிறவர்களுக்கும், வரலாறு முடிந்து விட்டது என்கிறாற்போல சோகமாகவும், துயரமாகவும் உணர்கிறவர்களுக்காகவும் ஆன நூல் இது. இப்படிச் சோகமாகவும், துயரமாகவும் உணர்வது நல்லதே. நாம் உதறித்தள்ளத்தக்க, ஆர்வம் ஊட்டக்கூடியதாக உள்ள கருத்துக்கள் அதிகமில்லை; அல்லது கொள்கைப் பிடிப்புடைய தெளிவான சிந்தனையாளர்களும் நிறையப்பேர் இல்லை; அவர்களது சிந்தனை அமிழ்ந்து காணாமற் போகவிட முடியாததுதான். ஆனால் ஒரு சிந்தனையாளரைப் பிளவைக்கட்டிகளை உடையவராகவும், மதுபான விரும்பியாகவும் சித்தரித்து இந்தத் துன்பங்களுக்கிடையே செயல்படுபவராகக் காட்டுவது மிகச் சிறந்த செயல்தானா என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். அது எப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பது குறித்துக் கவலை இல்லை என்று சொல்லுவோரும் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. கருத்துகள் தெளிவாக இருக்கிறவரையில் *மூலதனம்* மற்றும் *பொதுவுடைமை அறிக்கையை* எழுதியவர் அரவணைக்கத்தக்க, அடிக்கடி சினமுறும் கிழவராக இருந்துவிட்டுப் போகட்டுமே! மாறாக, ஒரு பாதுகாப்பான, நெருங்கிய, ஆனால் ஏற்க முடியாத புரட்சியாளர் புதிய வகையில் கட்டுக்கதைக்கு உள்ளாகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரவர் சுவைக்கேற்றபடி இது அமைகிறது. நான் என்னுடைய முற்போக்காளர்கள் உரத்த குரலில் கத்துவதையே விரும்புகிறேன்.

விடுதியில் தங்கிப் படிக்கும் பையனுடைய சுவையைக் கொண்டிருக்கிறார் வீன். பள்ளிச்சிறுவர்களின் கதாநாயகர்களைப் போன்ற கதைய்யை இவர் கட்டுகிறார். இது கடினமான மார்க்ஸை மக்கள் மொழியில் மறுபடியும் எழுதும் முயற்சியாகும். இதை வீன் பல பத்தாண்டுகளுக்கு முன்னே எழுதியிருக்க வேண்டும். மற்றபடி புறக்கணிக்கப்பட்ட தன் தாயாரை கார்ல் மார்க்ஸ் நயந்து அவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதையும், பிரஸ்ய ஆளும் வர்க்க இளம்பெண் (ஜென்னி வான் வெஸ்ட்பாலென்)... ஒரு முதலாளிய யூத குறும்புக்கார நகைச்சுவையாளர் (scallywag) மீது காதல்வயப்பட்டதையும் படிப்பது வழமைக்கு மாறான ஒரு புதிய அனுபவம்தான்!




மார்க்ஸ் மிகவும் பிற்போக்கான முட்டாள்களோடு பிரஸ்யாவில் கலந்து திரிந்தார்; எங்கெல்ஸ் மதிய உணவுக்குப் பிறகு பழைய நடையிலான, மதுமயக்கத்துடன் கூடிய கடிதங்களை எழுதினார்; மார்க்ஸும், எங்கெல்ஸும் ஜெர்மன் சித்தாந்தத்தைத் தகர டப்பாவைப் போல கோட்பாட்டுருவாக்கம் செய்தனர்; மார்க்ஸ் சில சிறந்த ரம் குடிமனைகளில் சந்தர்ப்பவசமான கூட்டாளியானார் என்பதையெல்லாம் புதையலைத் தேடித் தருவதைப் போல விவரிக்கிறார்.

'ரம் குடிமனைகள்'? மதுபானக் கடத்தல்காரர்கள் மார்க்ஸுக்கும், எங்கெல்ஸுக்கும் நிதியளித்தார்கள் என்பது புதிய வெளிப்பாடு? வீன் எழுதும் சில சொற்கள் ஒரு தலைமுறைக்கே விளங்காததால் வட்டார மொழிகளின் அகராதி தேவைப்படுகிறது.

எழுத்தாளர்களுக்குத் தனித்தனி நடை உண்டு. சிலருக்குக் கரடுமுரடான நடை. இதை அழகியல் கண்ணோட்டத்தில் நான் கூறவில்லை. மார்க்ஸை சமகாலத்தவராகவும், இக்காலத்துக்கு ஏற்றவராகவும் எழுதப் பழங்காத்திய பிரிட்டிஸ் மழலையர் பள்ளியில் பயன்பட்டு செயலற்றுப்போன மொழியைப் பயன்படுத்துவது விந்தையாக உள்ளது.

எவருக்கும் பிடித்தது போல தெளிவாகவும், உணர்ச்சியூட்டுவதாகவும், நேர்த்தியாகவும் மார்க்ஸின் வாழ்க்கை, யுவோன் கூப் (Yvonne Kapp) எழுதிய *எலினார் மார்க்ஸின் வாழ்க்கையின்* முதல் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. இது 1972ல் எழுதப்பட்டது. மார்க்ஸின் குடும்ப வாழ்க்கையையும் அவரது படைப்புகளையும் தொடர்புபடுத்தி கூப் எழுதியதைக் காட்டிலும், வீன் எழுதிய வாழ்க்கை வரலாற்றில் எதுவுமில்லை.

கார்ல் மார்க்ஸ் இந்த சமூகக் கட்டமைப்பிலுள்ள கோளாறுகளைப் பகுத்தாராயும் அதே நேரத்தில், தன் மகள்களை அந்த முதலாளிய ஆங்கிலேய சமூகம் ஏற்றுக்கொள்ளும்படி வளர்க்கவும், முறையாகக் கல்வி அளிக்கவும் வரவுக்கு மேல் செலவு செய்ய வேண்டி இருந்தமை ஒரு முரண்பாடு என்பதை வீன் சுட்டிக் காட்டுகிறார். மார்க்ஸ் அவருடைய காலத்துக்கேற்ற மனிதராக வாழ்ந்த அதே வேளையில், கொஞ்சம் வேறுபட்ட எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தார் என்பதைவிட கொஞ்சம் அதிகமாகவே இது காட்டுகிறது. 'மனிதரின் விழிப்புணர்வு (consciousness - சிந்தனை) அவர்களது வாழ்நிலையைத் திர்மானிப்பதில்லை; அதற்கு மாறாக அவர்களுடைய வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது'. இந்தக் காலத்துக்கு மார்க்ஸின் எழுத்துக்கள் பொருந்துமா என்பதை, மார்ஷல் பெர்மனின் கட்டுரைத் தொகுதியான *மார்க்ஸியத்தில் சாகசங்கள்* என்ற நூலைப் போல ஆற்றல், கவர்ச்சி, அறிவுப்பூர்வமான ஈடுபாடு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆகியவற்றுடன் மார்க்ஸின் திறனை வீன் வெளிப்படுத்த வில்லை.

1848 புரட்சிகளைப் பற்றி வீன் எழுதியுள்ளது மழலையர் பள்ளிப் பிள்ளைகளுக்கான பாட நூலைப் போல் உப்புச்சப்பில்லாமல் உள்ளது. இதைப் படித்து விட்டு பெர்மன் எழுதியுள்ள தூய உரைநடையைப் படித்தால் இனிய நிவாரணமாக உள்ளது. பெர்மனுக்கு இப்போது வயது அறுபதை நெருங்குகிறது. அவருக்குப் பதினெட்டு வயதாகும்போது அவருடைய சமயப் பேராசிரியர் ஜாகோப் டாப்ஸ் அமெரிக்காவில் அப்போதுதான் வெளியான ஒரு புத்தகத்தைப் பற்றிக் கூறினார். அந்தப் புத்தகம் மார்க்ஸ் 'கார்ல் மார்க்ஸாக' மாறுவதற்கு முன்பாக, இன்னமும் சிறு குழந்தையாக இருந்தபோது எழுதியதாகும்.

தன் தந்தையைத் தான்தான் காட்டிக் கொடுத்துக் கொன்றுவிட்டதாகக் கருதி மறுகும் அமெரிக்க முதலாளியின் சித்தரிப்புக்கு இணையான ஓர் உணர்ச்சிச் சித்தரிப்பை இளம் மார்க்ஸில் - அதாவது *1844 கையெழுத்துப் படிகளில்* - கண்டுணர்ந்தார் அன்றைய இளவயது பெர்மன். அப்புத்தகத்தில் தனிமனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் மரியாதை - ஒரு தொழிலாளியாக, படைப்புச் சக்தியாக, ஒரு காதலனாகக்கூட மனிதன் புரிந்துகொள்ளப்பட்டுப் போற்றப்படுவது - "கீட்ஸ், டிக்கன்ஸ், ஜார்ஜ் எலியட், தாஸ்தாவோஸ்கி, ஜேம்ஸ் ஜாய்ஸ், ஃபிரான்ஸ் காஃப்கா, டி.எச். லாரன்ஸ்'' போன்ற இலக்கியவாதிகளின் தரத்தில் மார்க்ஸை நிறுத்துவதைக் கண்டுணர்ந்தார் பெர்மன். அவரைப் பொறுத்தளவில், மார்க்ஸியச் சிந்தனையாகட்டும், நவீனத் துவ மரபாகட்டும், இரண்டுமே நவீன அனுபவத்தை விளங்கிக் கொள்ளவும் எதிர்கொள்ளவும் முயல்வதால், இணைவு கொள்வதாகின்றன. இவர்கள்



***'தெருக்களில் உள்ள சைகைகளையும் நாம் படித்தறிய இயலாவிட்டால் மூலதனத்தைப் படிப்பதால் நமக்குப் பயனில்லை'***

மார்க்ஸின் "புதிதாய்க் கோரைப் பல் முளைத்த மனிதர்கள் ... நவீன யுகத்தின் கண்டு பிடிப்பு, நவீன எந்திரத்தைப் போலவே''.

கள்ளங்கபடமற்ற வயதில் உணர்ந்தறியப்பட்ட பெர்மனின் இந்தக் கண்டுபிடிப்பு அவரை மரபார்ந்த மார்க்ஸியர்களிடமிருந்து தூர விலக்கி, 'மார்க்ஸிய மனிதாபிமானம்' நோக்கி அழைத்துச் சென்றது.

மரபார்ந்த வறட்டு மார்க்ஸியர்களோ "மிஞ்சிப்போனால் நவீனத்துவத்தைக் கண்டுகொள்ளாமல் ஒதுக்கினர்; மற்றபடி அதை நசுக்கிவிடவே பெரும்பாலும் பாடுபட்டனர் - அச்சத்தினால் தான். பாதாளத்தை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தால், அது தம்மைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கும் என்ற அச்சமாய் இருக்கக்கூடும்''. பெர்மன் புதிய இடதுகளில் ஒருவராய் இருந்தவர் (இப்போது அதையே 'கழிந்துபோன இடது' என்கிறார்). இளம் மார்க்ஸின் 'மனிதாபிமான' எழுத்துக்களில் அவருக்கிருக்கும் நாட்டம், கோட்பாட்டுத் தீவிரம் மிகக்கொண்ட, ஆனால் மனமிளக்கம் குறைந்த மார்க்ஸியச் சிந்தனையாளர்களுக்கு எதிராக அவரை மோதச் செய்கிறது.

'தெருக்களில் உள்ள சைகைகளையும் நாம் படித்தறிய இயலாவிட்டால் மூலதனத்தைப் படிப்பதால் நமக்குப் பயனில்லை' என்று பெர்மன் வலியுறுத்துகிறார்.

பெர்மன், *கடினமானவை எல்லாம் காற்றில் கரையும்* (All That Is Solid Melts into Air) என்ற நூலை எழுதியுள்ளார். அதை பெரி ஆண்டர்சன் திறனாய்வு செய்துள்ளார். பெர்மன் அதற்கு மறுமொழி எழுதும் பொழுது தனது நிலையை அறிவிக்கிறார். 'தெருவோரச் சாதாரண மனிதர்களையும் அவர்களுடைய வாழ்க்கையையும் பற்றி நான் இவ்வளவுக்கு

www.tamilarangam.net

எழுதக் காரணம்... ஆண்டர்சன் பார்வை அவர்களிடமிருந்து மிகவும் விலகி இருப்பதாகும். அரசியல் என்றால் உலக வரலாற்றுப் புரட்சிகளும், பண்பாடு என்றால் உலகத்தரமுள்ள தலையாய படைப்புக்களும் மட்டுமே அவருடைய கண்ணில் படுகின்றன. தத்துவ முழுமையின் உயரங்களுக்கு அவர் உரிமை கொண்டாடுவார். அதற்குக் கீழானவற்றைப் பார்க்கத் தலைதாழ மாட்டார்'. அந்தப் புத்தகத்தை (*1844 கை ப*) வீனும் படித்தார். அதை இக்கால மேலைத்தேய வாழ்வு பற்றிய துலக்கமான பகுப்பாய்வு என்றும் காண்கிறார். ஆனால் அந்த மெய்யியலாளரைத் தனக்குச் சாதகமாகத் திருப்பிக்கொள்ள வேண்டிய தேவையை உணர்கிறார். மார்க்ஸை ஒரு முரண்பட்ட மனிதராக நமக்குக் காட்ட விரும்புகிறார்.

உண்மையில் முரண் (irony) என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளும் வரையில் அந்தச் சொல்லை ஒரங்கட்டி வைத்திருப்போம். முரண் என்ற சொல் தாறுமாறாகப் பயன்படுகிறது. நீங்கள் உற்பத்தி செய்த ஏதோ ஒன்று தரம் குறைந்து, அதை விரும்பி வாங்கி நுகர்வோருக்குக் கேடு விளைவிப்பது என்றால் (pandering) அதை 'முரணுடையது' என்று சொல்லுங்கள்: அதை நீங்கள் திட்டமிட்டுச் செய்ததாகக் கருதி மகிழ்ச்சியோடு காண்பதற்கு மக்கள் வரிசை வரிசையாகக் காத்திருப்பார்கள்.

நான் மார்க்ஸைப் போற்றலாம் என்று சொல்லப்பட்டால் எனக்குக் கவலை வந்து விடுகிறது. ஏனெனில் அவர் முரணின் தலைவர். சோவியத் ஒன்றியம் சிதைந்ததைப்பற்றிக் கவலைப்படாதிர்கள். முரணை உணருங்கள். "முதலாளியத்தின் ஒழுங்கு சிதைந்த (deranged) தருக்கத்தை நியாயப் படுத்த மார்க்ஸின் பிரதி சொல்ல வேண்டியதை எல்லாம் விடாமல் சொல்லி விட்டது, சில நேரங்களில் முரண்களால் நிரம்பி மூழ்கும் நிலையில் உள்ளது (water-logged with irony). நூறாண்டுகளுக்கும மேலாக கிட்டத்தட்ட ஒவ்வொரு வாசகர் கண்ணுக்கும் தப்பிவிட்ட முரண்". குற்றவாளி ஆக்கபூர்வமாகப் பயன்படுவதைப் பற்றிய மார்க்ஸின் அங்கதத்தை வைத்துக் கொண்டு தான் சொல்ல வந்ததை மெய்ப்பிக்கிறார் வீன்: "காவல்துறை, குற்றவியல் நீதித்துறை, காவலர்கள், நீதிபதிகள், தூக்குப் போடுவோர், நடுவர்கள் போன்ற எல்லாரையும் குற்றவாளி உருவாக்குகிறார்; ஒரு தொழிலின் பல்வேறு பிரிவுகளான இவை எல்லாம் சமூக வேலைப் பிரிவினையின் பல்வேறு வகைப்பாடுகளை உண்டாக்குகின்றன. மனித மனத்தின் வெவ்வேறு திறன்களை வளர்க்கின்றன; புதிய தேவைகளையும், அவற்றை நிறைவுசெய்யும் புதிய வழிகளையும் உருவாக்குகின்றன'.

வீன் மார்க்ஸின் முரணை ஸ்விஃப்டின் முரணோடு ஒப்பிடுகிறார். மார்க்ஸின் முரணை உலகம் கண்டுகொள்ள வில்லை; எட்மன்ட் வில்சன் எப்படியோ கண்டுபிடித்து மார்க்ஸை 'ஸ்விஃப்ட்டுக்குப் பின் தோன்றிய மாபெரும் முரண் மனிதர்' என்று குறிப்பிட்டதாக வீன் எழுதுகிறார்.

மார்க்ஸின் நடை மற்றும் நுண்ணறிவு (wit) மார்ஷல் பெர்மனின் கவனத்திலிருந்து தப்பவில்லை:

' முதலாளி வர்க்கத்தின் சமூகமாற்ற நடவடிக்கையூக்கத்தில் (activism) மார்க்ஸ் காணும் முரண் என்னவென்றால், மேலும் மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளக்கூடிய, முதலாளித்துவத்தின் வலிமையை உடைப்பவர்களால் மட்டுமே சாத்தியமாகக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றிற்கு முகம் கொடாதபடி உடைமை வர்க்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்பதே. தம் முன்னோர்களிடமிருந்து அதிகாரத்தைப் பாரம்பரியமாய்ப் பெற்றுக் கொள்ளாமல், தம் நடவடிக்கைகளின் மூலமே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் முதல் வர்க்கமாக இருப்பது முதலாளி வர்க்கம்தான். ஒன்றுதிரண்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையால் இவ்வுலகை மாற்றிவிட முடியும் என்ற சாத்தியத்தை மெய்ப்பித்துக் காட்டியவர்கள் அவர்களே.'

இது வெறுமனே முரண் மட்டுமல்ல;

www.tamilarangam.net

உண்மையில் நீங்கள் விரும்புவது அதுதான் என்றால், உங்கள் செயலுக்கு ஊக்க மூட்டக்கூடியது.

19ம் நூற்றாண்டின் பெருமையை மீட்க முனைவோர்க்குள்ள பிரச்சினைகளில் ஒன்று என்னவென்றால், அன்றைய சமூக நியதிகளை இன்றைய காலகட்டத்துக்கேற்ப நியாயப்படுத்த வேண்டும். எதிர்கொள்ளக்கூடிய சிக்கல் ஒன்றுள்ளது; அவர்கள் இக்காலத்திய மேலதிக நிகழ்வுகளை நியாயப்படுத்தியாக வேண்டும். வீன் தனது 'கட்டை குட்டையான கருநிற' யூத நாயகனை (hero) யூத எதிர்ப்பின் (anti-Semeticism) பழியிலிருந்து மீட்க விரும்புகிறார். மிகக் கடினம்! யூதப் பிரச்சினை பற்றி மார்க்ஸின் இரண்டாவது கட்டுரை இருக்கிறதே :

'யூதத்தின் (Judaism) மதஞ்சாரா அடிப்படை என்ன? நடைமுறைத் தேவை; தன்னலம். யூதரின் மதமல்லாத ஈடுபாடு என்ன? சண்டை சச்சரவு. மதமல்லாத கடவுள் எது? பணம்... எனவே, இன்றைய உலகளாவிய ஒரு சமூகவிரோதக் கூறையே நாம் யூதத்தில் அடையாளம் காண்கிறோம்; அதன் தீமையான பண்புகளோடு யூதர்களால் ஆர்வமாய் ஊட்டி வளர்க்கப்பட்ட இச்சமூகவிரோதக் கூறின் வரலாற்றுப் பரிணாமம் இன்று தன் உச்சத்தை, இனி மேற்செல்ல முடியாது சிதைந்து விழுந்துவிடக்கூடிய உச்சத்தை எட்டிவிட்டதைக் காண்கிறோம். எனவே, யூதர்களின் விடுதலை என்பது, இறுதி ஆய்வில், யூதத்திலிருந்து மனிதகுலத்தின் விடுதலையே ஆகும்'.

வீன் கூற்றுப்படி இந்த மேற்கோள் இடப்பொருத்தமின்றி எடுத்தாளப்படுகிறது. 'ஜூடாயிசத்திலிருந்து, - கவனிக்கவும், யூதர்களிடமிருந்தன்று - இறுதியாக மனித குலம் கிறித்துவ மதம் உட்பட எல்லா மதங்களின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்கப்பட்டாக வேண்டும்'. மதச்சார்பற்ற சோசலிஸவாதி என்றளவுக்கு யூத எதிர்ப்பற்றது (not anti-Semetic) - இந்த வகையில் மேலதிகம் ஏற்கத் தக்கது.

அப்படியானால் வீன் புத்தகத்தின் பிற் பகுதியில் மார்க்ஸ் இந்த சிக்கலை *டெய்லி டெலிகிராப்* ஆசிரியர் ஜோசப் மோசஸ் லெவியுடன் எடுத்துக் கொள்ளும் போது என்ன நேர்ந்தது? 'திரு லெவி திரு டிஸ்ரேலியைத் தாக்குவதால் என்ன லாபம்? 'ஐ'யை 'ஒய்' என்று மாற்றுவது எதற்கு? இயற்கை அன்னை அவரது தோற்றுவாயை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குத் தெளிவாக அவர் முகத்தில் எழுதியிருக்கும் போது இதனால் லெவிக்கு என்ன ஆதாயம்? லெவியின் மூக்கு ஆண்டு முழுவதும் இலண்டன் நகரில் உரையாடுகிறது'.

அல்லது அவர் ஃபெர்டினான்டு லஸ்ஸாலை 'லாசரஸ்' என்றும், 'பரோன் இஸ்ஸி' என்றும், 'யூத நீக்ரோ' என்றும் விவரிக்கும் போது? அந்தக் காலங்கள் அப்போது வேறாக இருந்தன என்று பெருமூச்சு விடுவதைத் தவிர செய்வதற்கு உண்மையில் வேறொன்றும் இல்லை. பெர்மன் மார்க்சின் யூத எதிர்ப்பை (anti-Semitism) மாறும் கட்டம் (passing phase) என்று பெயரிட்டு அதை மீட்டு வளர்க்க (redeem) முயற்சி செய்யும்போது யூதச் சிக்கல் பற்றிய அதே மேற்கோளை அதிகம் சிரத்தையோடு எடுத்தாள்கிறார். மார்க்சைப் பொறுத்தவரையில் முதன்மை யூதப்பாவம் என்பது நடைமுறைத் தேவை, தன்னலம், போன்றவற்றில் உள்ள சுயம் (தான்) என்ற உணர்வு. அவர் இதை பிளாட்டோனியம் மற்றும் கிறித்துவம் ஆகியவற்றின் மரபுடன் (legacy) தொடர்புபடுத்துகிறார். அவற்றில் சுயம் (தான்) என்பது தியது; சுயத்தை அழித்துக் கொள்ளுதல் பெருமைக்குரியது (virtue) ஆகிறது. 'இருபதாம் நூற்றாண்டில் இந்த வெற்றுச் சொல் ஸ்டாலினியப் பொது வுடைமையால் மறுபடி கண்டுபிடிக்கப் படுவதாகிறது'.

பெர்மன் ஐயங்களைக் கிளப்புகிறார். ஆனால் முடிவில் நல்லதே நடக்கும் என்று நம்புகிறார். 'மார்க்ஸ் இது போன்ற எதை யாவது எப்போதாவது நம்பியிருக்கிறாரா? அவர் நம்பவில்லை என்று சத்தியம் செய்ய என்னால் முடியாது. ஆனால் அவர் அப்படிச்

www.tamilarangam.net

செய்திருந்தால் அது நீண்ட காலத்துக்கு இருந்திருக்காது. மிகக் குறுகிய காலத்திலேயே அவருடைய மாபெரும் படைப்புகளிலெல்லாம் அவர் வாழ்க்கையை இயக்குகிற நடைமுறைத் தேவையையும், சுயநலத்தையும் முதன்மைச் சக்தியாக உறுதி செய்திருப்பார்'. பெர்மனுக்கு யூதச் சிக்கல் தீர்க்கப்படாததாகவும் மிகுந்த வலி உண்டாக்குவதாகவும் உள்ளது. ஆனால் என்னால் வீனின் தேற்றவியலாத பளபளப்பை (gloss) விடவும் பெர்மனின் கூற்றுடன் நன்றாக ஒத்துப் போக முடியும்.

மார்க்சின் வாழ்க்கையிலுள்ள மாபெரும் முரணியல்பு (paradox), பெர்மன் மற்றும் காப், வீன் போன்று ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருப்பது அவருடைய கோட்பாட்டுக்கும், அவரை நெட்டித்தள்ளிய வறுமைக்கும் அல்லது பணமின்மைக்கும் இடையிலான தொடர்பின்மையே ஆகும். இது உழைப்பு அந்நியமாதல் பற்றிய முழுநிறைவான எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காரல் மார்க்ஸ் குடும்பம், அவ்வப்போது கிடைத்த பரம்பரைச் சொத்து, அல்லது, தேவதை போல உதவிய எங்கெல்சின் நன்கொடையால் கிடைத்த ஒப்பீட்டளவில் கூடுதல் தொகையை வைத்துக்கொண்டு வாழ முடியவில்லை என்பதை வீன் புரிந்துகொண்டுள்ளார். அவருக்கு முன்பே காப் இதைத் தெரிந்து வைத்திருந்தார். மார்க்ஸ் ஒரு சமூக மனிதர் என்றளவில் முதலாளிய சமூக வாழ்க்கைத் தரங்களை நிறைவுசெய்ய வேண்டியிருந்தது. மூன்று பெண்களை அவர் திருமணம் செய்து கொடுக்க வேண்டியிருந்தது. அந்தப் பெண்கள் சௌத் ஹாம்ஸ்டெட் பள்ளியில் படிக்க வேண்டியிருந்தது. இதனுடன் கூடவே அவர்கள் ஓவியமும் இசையும் கற்க வேண்டியிருந்தது. அவர்களுடைய நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வர நாகரிகமான ஒரு வீடு தேவைப்பட்டது.

வீன் இந்நூலின் மற்ற பகுதிகளில் உள்ளதைப் போலவே இப்பகுதியிலும், இவருக்கு முன்னர் மற்ற ஆராய்ச்சியாளர்கள் செய்ததைப் போல காரல் மார்க்சின் வாழ்க்கை மற்றும் படைப்புகள் முழுவதும் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார். அவர் ஆராய்ச்சி செய்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அவர் இந்நூலில் மேற்கோள் காட்டியிருப்பதும் விமர்சித்திருப்பதும் மார்க்சியத்தைப் பற்றிய தொடக்கநிலை அறிவுள்ளவர்கள் கூட அறிந்த வழக்கமான சரக்குதான். உழைப்பாளர்கள் அந்நியமாவதைப் பற்றிய மார்க்சின் பகுப்பாய்வு குறித்து வீன் தம்பட்டமடித்துக் கொள்வதைப் படிக்கும் போது திகைப்பூட்டுகிறது. 'மேரி ஷெல்லி படைத்த *ஃபிராங்கென்ஸ்டீனுடன்* அந்நியமாதலை ஒப்பிட்டு எந்த ஒரு மார்க்சிய அறிஞரும் எழுதவில்லை' என்று கூறுகிறார்; அந்தக் கதை நமக்குத் தெரியாதென்று கருதி நினைப்பூட்டுவதற்கு 'படைத்தவனுக்கு எதிராகத் திரும்புகிற அரக்கனின் கதை' என்கிறார்.

*1978 இல் எழுதப்பட்ட கடினமானவை எல்லாம் காற்றில் கரையும்* என்ற பெர்மனின் மூலக் கட்டுரையை நோக்குங்கள்: 'மார்க்சின் உடைமை வர்க்கச் சூனியக்காரன் (sorcerer), கதேயின் *ஃபாஸ்ட்* வழித்தோன்றல்; மேலும் மற்றோர் இலக்கியப் பாத்திரமான மேரி ஷெல்லியின் *ஃபிராங்கென்ஸ்டீன்.* இப்பாத்திரம் அந்தத் தலைமுறை முழுவதன் கற்பனையையும் ஆட்டிப் படைத்தது. இந்தக் கட்டுக்கதைப் பாத்திரங்கள் மனித ஆற்றலை அறிவியல் மற்றும் பகுத்தறிவின் மூலம் விரிவுபடுத்தக் கடுமுயற்சி எடுக்கின்ற அதே வேளையில், பூதங்களின் ஆற்றலை பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு, மனிதக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு, திகிலூட்டும் முடிவுகளுடன் கட்டவிழ்த்து விடுகின்றன' என்கிறார்.

மார்க்சை நீங்கள் அனா ஆவன்னாவிலிருந்து தொடங்கிப் படிக்க முயன்றால் வீன் எழுதிய நூலைப் படித்து அடிப்படைத் தகவல்களைப் பெற முடியும் என்பது உண்மைதான். ஆனால் அதைக் காட்டிலும் பெர்மனின் பக்கங்கள் குறைந்த புத்தகம் இச்சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளைக் கொண்டது. இதைப் படித்தால் சிந்தனையாளர் மார்க்சுக்கு வருங்காலம் உறுதிப்பட்டுள்ளதை உணரலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும்

## ஒரு அரசியல் பொருளாதாரப் பார்வை

**சமுத்திரன்**

எங்கும் உலகமயமாக்கல் என்பதே பேச்சு. உலகம் ஒரு கிராமம் போல் சுருங்கிவிட்டதெனும் வார்த்தைகள் பிரபல்யம் பெற்றுவிட்டன. இதில் உண்மையுண்டு. தொடர்புத் தொழில்நுட்பங்களின் வளாச்சி உலகத்தைப் பற்றிஅறிந்துகொள்ள உதவுகின்றது. இத்துறையில் நவீனமயமாக்கல் ஆற்றிய சாதனைகளோ பல. இவற்றின் முக்கிய விளைவுகளில் ஒன்று துாரத்தை மனிதர் நேரத்தால் வெற்றி கொள்ள முடிவதாகும். இந்தவகையில் உலகம் ஒரு "கிராமம்" போல் சுருங்கிப் போய்விட்டதெனலாம். ஆனால், இந்த உண்மையின் மறுபுறத்தில் அதைவிடப் பெரிய உண்மைகளைக் காண்கிறோம். உண்மையில் உலகம் எவ்வளவு பரந்தது என்பதை, அந்த உலகின் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை, அங்கே பலம்வாய்ந்த அணிகள் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய அதிகாரத்தை, மனித உரிமை மீறல்களை, இனவாதத்தை, நிறவாதத்தை, பால்ரீதியான பாகுபாட்டை மறுபுறத்தில் காண்கிறோம்.

எங்கும் ஜனநாயகம் என்பதே பேச்சு. உல்கமயவாதிகள் சொல்கிறார்கள், மனிதவரலாறு மனிதவிடுதலை எனும் இறுதி நிலையத்திறகு வந்துவிட்டது அல்லது அதை நோக்கி துரிதமாக வந்து கொண்டிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள், "கம்யூனிசத்தின்" தோல்வி ஜனநாயத்தின் வெற்றி, இனி சுயபோட்டிச் சந்தை உலகில் மனிதர்கள் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அநுபவிக்க முடியும் என்று.

உலகமயமாக்கல் பற்றி விமர்சன நோக்கில் பார்ப்போர் இக்கருத்துக்களை ஏற்கவில்லை. ஆகவே உலகமயமாக்கல் பற்றி வேறுபட்ட விளக்கங்கள் வளர்கின்றன. விவாதங்கள் தொடர்கின்றன. இந்தக் கட்டுரையில் உலகமயமாக்கலின் அரசியல் பொருளாதாரத் தன்மைகள் பற்றியும், மனித சுதந்திரத்தை

www.tamilarangam.net

நோக்கிய ஜனநாயகப் போராட்டங்களின் அவசியம் பற்றிய சில அவதானிப்புக்களையும் விமர்சனரீதியான அபிப்பிராயத்தையும் முன்வைக்க விரும்புகிறேன்.

நாம் முன்னெப்போதும் இல்லாதவகையில் மூலதனத்தின் ஆட்சிக்குள்ளாகியிருப்பதை அநுபவரீதியில் காண்கிறோம். உலகம் கிராமம் போல சிறிதாகி விட்டதெனும்போது மூலதனத்தின் வரலாற்றுச் சாதனையைத்தான் குறிப்பிடுகிறோம். முதலாளித்துவத்தின் வரலாறு மூலதனத்தின் சர்வதேசமயமாக்கலின் வரலாறு என்றால் மிகையாகாது. இந்த வரலாற்றின் இன்றைய காலகட்டம் சில விசேடத் தன்மைகளைக் கொண்டுள்ளது. இது தகவல்புரட்சியின் யுகம் என்றும் தொடர்புத் தொழில்நுட்பத்தின் யுகம் என்றும் பலர் சொல்வதைக் கேட்கிறோம். இந்தப் புரட்சியே உலகமயமாக்கலின் இன்றைய காலகட்டத்தின் ஊடகம். இந்த புதிய தொழில்நுட்பம் பண மூலதனத்தின் துரித நுகர்ச்சிக்கும், உலகரீதியான தொடர்புகளுக்கும் உதவுகிறது. ஆயினும் இந்த தொழில்நுட்பத்தினை மட்டும் வைத்து இன்றைய உலகமயமாக்கலின் அனைத்துத் தன்மைகளையும் விளக்கிவிட முடியாது.

அந்த விளக்கத்தை உலக அரசியல் பொருளாதாரப் போக்குகளில் தேட வேண்டும். விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சிகளின் முக்கியத்துவத்தை அத்தகைய ஒரு தேடலுக்கு ஊடாகவே முழுமையாக கிரகிக்க முடியும். இந்த வகையில் 1980 - 90களில் ஏற்பட்ட சர்வதேச அரசியல் மாற்றங்கள் முக்கியமானவை. சோவியத் முகாமின் மறைவு உலக அரசியல் சக்திகளின் சமநிலையை அடிப்படையில் மாற்றியது. சீனாவின் உள்நாட்டு மாற்றங்களும் இதற்கு உதவின. இந்த அரசியல் மாற்றங்கள் முதலாளித்துவத்திற்கு மேலும் சார்பான பொருளாதார சூழ்நிலைகள் வளர உதவின. மூலதனத்தின் இயக்கத்திற்கு அரசியலமைப்பு ரீதியான சவால்கள், தடைகள் பெருமளவில் அகற்றப்பட்டன. பொருளாதார பலத்தாலும் இராணுவ பலத்தாலும் USA உலகின் தலைமையைப் பெற்றுக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றியமும், ஜப்பானும் USA இன் தலைமையைத் தொடர்ந்தும் ஏற்றன. இப்படிச் சொல்வது இந்தக் கூட்டுக்குள் முரண்பாடுகள் இல்லை என்பதாகாது.

மாறிய சர்வதேச அரங்கில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதி போன்ற நிறுவனங்களின் பங்கு மேலும் முக்கியத்துவம் பெற்றது. வளர்முக நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில் இவை முக்கியப் பங்கினை வகித்து வந்துள்ளன. 1970 களிலிருந்து இந்நிறுவனங்களினால் வகுக்கப்பட்ட சுயபோட்டிச் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளை மேலும் பரவலாக்கவும் பலப்படுத்தவும், புதிய சர்வதேச நிலைமை உதவியது. இப்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அந்த பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டன. ஆகவே மூலதனத்தின் சர்வதேசமயமாக்கலை ஒரு குறிப்பிட்ட போக்கில் வழிநடத்தும் கொள்கைகளை அமுல் நடத்த சாதகமான அரசியல் நிலைமை உருவாகிற்று. இன்றைய உலகமயவாதமெனும் கருத்தமைவின் பொருளாதார அடிப்படை சுயபோட்டிச் சந்தைக் கோட்பாடாகும். ஆனால் உலகமயமாக்கல் ஒரு பொருளாதாரப் போக்கு மட்டுமல்ல, அதற்கு அரசியல், சமூக, கலாச்சார சூழல் பரிமாணங்கள் உண்டு. உலகமயமாக்கலின் இன்றைய கட்டம் நவீனத்துவத்தின் தொடர்ச்சியே. அரசியல் மட்டத்தில் இன்றைய காலகட்டம் உலகின் ஜனநாயகமயமாக்கலின் காலகட்டம் என ஜனநாயகவாதிகள் கூறி வருகின்றார்கள். மனித சுதந்திரம் பற்றிய பிரச்சாரங்களை அவர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து செய்து வருகிறார்கள். சிவில் சமூகமே மனித சுதந்திரத்தின் உறைவிடம் எனும் கருத்து பலம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். அதேவேளை தாராளவாதத்தின் பொருளியலிற்கும் அரசியலுக்கும் இடையிலான முரண்பாடுகளையும் நடைமுறையில் சகல நாடுகளிலும் காண்கிறோம். இந்த முரண்பாடுகள் பற்றி நான் வேறு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளேன்.

இங்கு மனித சுதந்திரத்திற்கு ஒரு சுருக்கமான வரைவிலக்கணத்தை முன்வைத்த உரையாடல் பயன் தரும். பொதுவாக மனித சுதந்திரம் என்னும் போது தனிமனித சுதந்திரமே முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு நபர் தனக்கு பெறுமதி மிக்கதெனக் கருதும் செயற்பாட்டினை, இருப்பினைத் தேர்ந்தெடுக்கவும் அநுபவிக்கவும் இருக்கும் உரிமை, ஆற்றல்தான் மனிதசுதந்திரம் எனலாம். இக்கருத்திற்கு ஒரு வரலாற்றுப் பின்னணியுண்டு. இதனை தாராளவாத மரபுடன் இணைத்தல் சுலபம். தாராளவாதம் தனிமனித சுதந்திரம் பற்றி பலம் வாய்ந்த தத்துவ மரபை உள்ளடக்கியது. இந்த மரபில் இக்கருத்திற்கு விளக்கம் தேடும்போது தனிநபர் வாதத்திற்கே அது இட்டுச் செல்லலாம். ஆயினும் இக்கருத்திற்கு நவீன தாராளவாதத்தின் வரலாற்றையும்விட நீண்ட பின்னணியுண்டு. உதாரணமாக

www.tamilarangam.net

அரிஸ்டாட்டிலிய சிந்தனை மரபில் மனித ஆற்றல் உடைமையை இவ்விதமாக வரைவிலக்கணப்படுத்தலாம். மனிதசுதந்திரம் பற்றிய மேற்கூறிய வரைவிலக்கணத்தை சமீபகாலத்தில் வலியுறுத்தி வருபவர் அமர்த்தியா சென் ஆவார். அவரின் விளக்கங்கள் தாராளவாதமரபு சார்ந்ததெனினும் சமூக ஜனநாயக விழுமியங்களை உள்ளடக்கியன.

தனிமனித சுதந்திரம் பற்றிய இவ்வரைவிலக்கணத்தை மார்க்சின் மனித விடுதலை பற்றிய சிந்தனையுடன் இணைக்க முடியும். தனிமனிதனின் பூரண விடுதலையே வரலாற்றின் இறுதி என மார்க்ஸ் கருதினார். அவருடைய கனவில் இவ்விடுதலையானது,

> "நான் இன்று ஒன்றையும் நாளை பிறிதொன்றையும் செய்வதைச் சாத்தியமாக்குகிறது. எனது மனதில் இருப்பது போல் காலையில் வேட்டையாடி, மதியநேரம் மீன்பிடித்து, பிற்பகல் கால்நடைகளைப் பராமரித்து, மாலை உணவுக்குப் பின் விமர்சனத்தில் ஈடுபடும் அதேவேளை, ஒரு வேட்டைக்காரனாகவோ, மீன்பிடியாளனாகவோ, மந்தைக் காவலனாகவோ, விமர்சகனாகவோ மாறாத சுதந்திர மனிதன்".



இது மனித விடுதலையின் பூரணத்துவம் பற்றிய கவித்துவமான கனவு. இதை இளைய மார்க்சின் அதிஇலட்சியவாத மனோகரக் கனவு என ஒதுக்கிவிட முடியாது. இந்த இலட்சியம் மார்க்சின் முக்கிய ஆக்கங்களில் குறிப்பாக *மூலதனத்தில்* இழையோடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். மனிதர் தம் அன்றாட வாழ்வில் தேவைகளிலிருந்து விடுபட்டு இருப்பினும், செயற்பாட்டிலும் சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலைமைகளை உருவாக்குதலே மனித விடுதலைப் போராட்டத்தின் நோக்கமாகும். முதலாளித்துவம் பற்றி மார்க்ஸ் கொடுத்த விமர்சனம் இந்த பார்வையில் அமைந்ததாகும். உழைப்பு மனித வாழ்விற்கு இன்றியமையாதது. ஆனால் உழைப்பினை நிர்ணயிக்கும் சமூக உறவு சுரண்டலற்றதாகவும் சுதந்திரத்தைப் பேணுவதாகவும் இருக்க வேண்டும். மூலதனத்திற்கும் உழைப்பிற்குமிடையேயான உறவை நிராகரிப்பதிலேயே இத்தகைய சுதந்திரம் பிறக்க முடியுமெனக் கருதியபோதும், முதலாளித்துவ அமைப்பிற்குள் உழைப்பாளர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடுதலை மார்க்ஸ் ஆதரித்தார். இந்த வகையில் வர்க்கப் போராட்டங்களும் ஏனைய சமூகப் போராட்டங்களும் மனித சுதந்திரதிற்கான போராட்டத்தின் அம்சங்களே. வர்க்கங்கள் மட்டுமின்றி இனம், நிறம், பால், சாதி போன்றவையும் இங்கு முக்கியத்துவமடைகின்றன.

இன்றைய உலக அமைப்பில் தனிமனிதர்கள் அனுபவிக்கும் உரிமைகள் கூட்டுச் செயற்பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் ஊடாகவே பெறப்பட்டன. இந்த போராட்டங்கள் உலகின் பல பாகங்களில் பல மட்டங்களில் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. ஒரு

www.tamilarangam.net

சந்தர்ப்பத்தில் வர்க்கம், இன்னொரு சந்தர்ப்பத்தில் பால், பிறிதொரு இடத்தில் சாதி, வேறொரு கட்டத்தில் சூழலுக்கான உரிமை, இனத்தின் கூட்டுரிமை, இப்படியாகப் பலவேறு காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அத்துடன் இவற்றுள் பல காரணிகள் ஒன்றிணைவதையும் முரண்படுவதையும் காண்கிறோம். இவை எல்லாவற்றையும் இங்கு ஆராய்வது எனது நோக்கமல்ல. அதேவேளை இந்த பல்வேறுபட்ட பரிமாணங்களையும் உள்ளடக்கிய ஒரு உலகப் பார்வை அவசியம் என்பதை அழுத்திக் கூறுதல் தகும். இன்றைய போராட்டங்கள் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள். நாம் இன்னமும் ஜனநாயகப் புரட்சியின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிலேயே உள்ளோம். உலகமயமாக்கலின் அரசியல் பொருளாதார அம்சங்கள் சிலவற்றை சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

## உலகமயமாக்கலின் முக்கிய தன்மைகள்

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் நவீனயுகத்தின் சிந்தனையாளர்கள் பலர் முதலாளித்துவத்தின் தன்மைகள் பற்றியும், சுயநலத்தினால் உந்தப்பட்ட தனிநபர்களின் செயற்பாடுகளுக்குச் சுயபோட்டிச்சந்தை உதவுவது பற்றியும், சிவில் சமூகத்தின் சுயாதீனம் பற்றியும் விளக்கங்களை முன்வைத்தனர் ஆயினும், முதலாளித்துவத்தின் சர்வதேசியத் தன்மை பற்றியும் உலகனைத்தையும் ஆட்கொள்ளவல்ல மூலதனத்தின் உள்ளாந்த ஆற்றல் பற்றியும் தீர்க்கதரிசனப் பார்வையைக் கொண்டிருந்தவர் மார்க்ஸ் எனலாம்.

1848 ம் ஆண்டில் மார்க்சும் ஏங்கல்சும் எழுதிய கம்யூனிஸ் கட்சி அறிக்கை எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோள் இதனை விளக்குகிறது:

> "உலகச் சந்தையின் சுரண்டலுக்கு ஊடாக முதலாளி வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்திற்கும் நுகர்வுக்கும் ஒரு பல்கலாச்சார (cosmopolitan) தன்மையைக் கொடுக்கிறது. அது பிறபோக்காளருக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கும் வகையில் இதுவரை ஆலைத்தொழில் காலூன்றி நின்ற தேசிய புலத்தினை (national ground) பின்னிழுத்து விடுகிறது. நிலைபெற்றிருந்த எல்லா ஆலைத்தொழில்களும் அழிக்கப்பட்டுவிட்டன அல்லது தினந்தோறும் அழிக்கப்படுகின்றன. இப்புதிய ஆலைத்தொழில்களின் அறிமுகம் நாகரிகம் அடைந்த சகல தேசங்களுக்கும் ஒரு சீவ-மரண பிரச்சனையாகிறது.... .
>
> ....பழைய உள்ளூர் தேசிய தனித்து நின்ற சுயபூர்த்திக்குப் பதிலாக நாம் சகல திசைகளிலும் உறவு கொள்ளலையும் தேசங்களிடையே பரஸ்பரமான தங்கிநிற்பினையும் கொண்டுள்ளோம். இது பொருள்ரீதியான உற்பத்தியில் மட்டுமல்ல, அதேபோன்று அறிவு உற்பத்தியிலும்தான். ஒவ்வொரு தேசத்தினதும் அறிவுரீதியான ஆக்கங்கள் (உலகின்) பொதுச்சொத்தாகின்றன. தேசியரீதியான ஒரு பக்கச் சார்புநிலையும் குறுகிய மனப்பான்மையும் அசாத்தியமாகின்றன. எண்ணற்ற உள்ளூர் தேசிய இலக்கியங்களிலிருந்து ஓர் உலக இலக்கியம் பிறக்கிறது".

53 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட இந்த வார்த்தைகள் இன்றைய உலகநிலை பற்றிய விவரணம் போன்று இருக்கின்றன. சுவாரசியமான விடயம் என்னவென்றால் இதைத்தான் உலகமயமாக்கலுக்கு நியாயப்பாடு வழங்கும் தாராளவாதிகளும் சொல்கிறார்கள். ஆனால் உலகமயமாக்கல் பற்றிய மார்க்ஸின் விளக்கத்தில் இன்னொரு மாபெரும் எதிர்பார்ப்பு இருந்தது. அதாவது முதலாளித்துவத்தின் மாற்றமும் கம்யூனிஸத்தின் வருகையும் மனித ஆளுமையின் முழுமையான மீட்சியுமாகும். இன்று உலகமயமாக்கலை விளக்கும் தாராளவாதிகள் சிலரின் கருத்தில் வரலாறு எனும் இரதம் இறுதி நிலையத்தை வந்தடைந்துவிட்டது. இதற்கு அப்பால் ஒரு மாற்று அமைப்பு இருக்க முடியாது என அடித்துக் கூறுவோரும் உண்டு. உலகமயமாக்கலின் இன்றைய போக்குகளைப் பார்க்கும்போது இத்தகைய கருத்துக்களின், அகச்சார்புநிலையும் வெறுமையும் வெளிப்படையாவதுடன் ஜனநாயகப் புரட்சியின் உலகமயமாக்கலே இன்றைய சர்வதேசத் தேவை எனும் அரசியல் முடிவும் மேலும் தெளிவாகிறது. உலகமயமாக்கலின் இன்றைய போக்குகளை நோக்குவோம்.

www.tamilarangam.net

## நவதாராளவாதப் பொருளாதாரக் கொள்கை

உலகமயமாக்கல் ஒரு வரலாற்றுப் போக்கு என்பதைக் கண்டோம். ஆயினும் இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக 1970 களிலிருந்து உலகமயமாக்கலை வழிநடத்துவதற்கென ஒரு சர்வதேசரீதியான கொள்கை பல மட்டங்களில் அமுல் நடத்தப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் இது நிறைபோட்டிச் சந்தை (அல்லது சுயபோட்டிச் சந்தை) எனும் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டது. USA மற்றும் OECD இன் தலைமைத்துவ நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க (லத்தீன் அமெரிக்க), கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீது நவதாராளவாதக் கொள்கையை நேரடியாகவும் மறைமுகமாகவும் திணித்துள்ளன. இந்தப் பொருளாதாரக் கொள்கையின் மிகப் பிரதான நாயகன் USA ஆகும். இந்தக் கொள்கை முன்வைக்கும் அபிவிருத்தி மாதிரியின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு

- கட்டுப்பாடற்ற சுயபோட்டிச் சந்தை
- சர்வதேச, உள்ளூர் வர்த்தகத்தின் தாராளமயமாக்கல்
- தனியுடைமையாக்கல் அதாவது அரசின் உடைமைகளாக இருக்கும் உற்பத்தி சாதனங்களைத் தனியுடைமையாக்கல்
- குறைந்தபட்ச அரசு, அதாவது பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகள் விதிக்காத, பொருளாதார உற்பத்தி மற்றும் சேவைத்துறையில் முடிந்தவரை ஈடுபடாத அரசு.

இந்த அரசு சந்தை மீதான கட்டுப்பாடுகளை நீக்கி, தனியுடைமையாக்கலை அமுல் நடத்தி, முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தொழிற்சங்கங்களை நெறிப்படுத்த வேண்டும். அரசின் சமூகநல செலவினங்களைக் குறைந்தபட்ச மட்டத்தில் வைத்திருக்க வேண்டும். வறுமைக் குறைப்புத் திட்டங்கள் சுயபோட்டிச் சந்தைக்கு ஏற்ற சூழலைப் பாதிக்காத வகையில் அமுல் நடத்தப்பட வேண்டும்.

குறைந்தபட்ச அரசும் சுயநெறிப்படுத்தப்படும் சந்தையும் தனிமனிதனின் பொருளாதார சுதந்திரத்தை உயர்ந்த பட்சமாக்கும் எனும் கருத்து இக்கொள்கையின் நியாயப்பாடுகளில் அடங்கும். சுயநலத்தினால் உந்தப்படும் தனிமனிதர் தமது பொருளாதார நோக்கை அடைவதற்குரிய நியாயமான சூழ்நிலையை நிறைபோட்டிச் சந்தை கொடுக்கின்றதென்பதால், இத்தகைய கொள்கை எல்லா தனிமனிதரும் சமமாகப் போட்டியிட்டு சமூகத்தின் மொத்த நலனை உயர்ந்தபட்சமாக்க உதவுகிறது. சமூகம் என்பது தனித்தனியான மனிதரின் சாதாரண கூட்டே. ஆகவே ஒவ்வொரு தனிநபரும் தனது சுயநலனை அதிகரிக்கும் முடிவுகளை எடுத்துச் செயற்படுவது சாத்தியமாகும் பொருளாதாரச் சூழலிலேயே முழுச் சமூகத்தின் நலனும் அதிகரிக்க முடியும். இத்தகைய சூழ்நிலைகளை எல்லா நாடுகளிலும் உருவாக்கினால் எல்லா நாடுகளும், முழு உலகமும் பயன்பெறும். இது எல்லோரும் வெல்லும் (win- win) கொள்கை. வறிய நாடுகள் இக்கொள்கையை அமுல் நடத்துவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தில் மேலும் பங்குபற்றி அத்துடன் ஒருங்கிணைவதன் மூலம், பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம். ஒவ்வொரு நாட்டின் அரசினாலும் இதைச் சாத்தியமாக்க முடியும்.

இது தாராளவாதக் கொள்கையின் உலகப் பார்வை பற்றிய ஒரு சுருக்கமான, சற்று இலகுவாக்கப்பட்ட விளக்கமாகும். இந்தக் கொள்கையின் கருத்தியலை உலகமய்வாதம் எனக் கூறலாம். அப்படியானால் தேசிய அரசு முக்கியத்துவமிழந்து போகிறதா? இந்தக் கொள்கை பற்றி விவாதங்கள் தொடர்கின்றன. தேசியஅரசு தனது நாட்டின் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தும், கட்டுப்படுத்தும் சுதந்திரத்தை பெருமளவு இழந்து விடுகிறது என்பது உண்மை. அதேவேளை, சர்வதேச முதலீட்டிற்கும் தனியுடைமையாக்கலுக்கும் உதவும் கொள்கைகளையும் சட்டங்களையும் செவ்வனே அமுல் நடத்தும் பணியை தேசிய அரசு மேற்கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net

வரலாற்றுரீதியில் இத்தகைய தூய சந்தை அடிப்படைவாதக் கொள்கை நீண்டகாலமாகத் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. தூயபோட்டிச் சந்தை அடிப்படையில் மட்டுமே பொருளாதார விருத்தி பெற்ற நாடுகள் இல்லை என்பது பல பொருளியல் வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். ஆயினும் இக்கொள்கை இடைக்கிடை தலைதூக்கியது.இன்று முன்பைவிடப் பலமாகவும் பரவலாகவும் இது மேலாதிக்கம் பெற்றுள்ளது. மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான உறவை சந்தை மட்டுமே நெறிப்படுத்துவதென்பது தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளைப் பாதிக்கின்றது. இப்போது வட அமெரிக்காவிலிருந்து இலங்கை வரை சுயபோட்டிச் சந்தையைக் காட்டி, தொழிலாளர்களின் ஊதிய உயர்வுப் போராட்டங்களும் உரிமைப் போராட்டங்களும் நசுக்கப்படுவதைக் காணலாம். இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் உடல் உழைப்பாளர்களும், இலங்கை போன்ற நாடுகளின் சுதந்திர வர்த்தக வளையங்களில் தொழில் செய்வோர்களும் ஆவர். இங்கு பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களைவிட அதிகமாகச் சுரண்டப்படுகின்றனர்.

மேலாதிக்கம் செலுத்தும் தாராளவாதம் நடைமுறையில் உழைப்பினை முற்றாகத் தாராளமயமாக்க வில்லை. தொழிலாளர்களின் புவியியல்ரீதியான நகர்ச்சி தேசிய எல்லைகளைத் தாண்டிச்செல்ல பல புதிய பாரிய தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. உலகச்சந்தை, உலகமயம் என்று பேசப்பட்டாலும் தொழிலாளர்கள் தமது உழைப்புசக்தியை தாராள உலக சந்தையில் விற்கவில்லை. மூலதனத்திற்கு தேசிய எல்லைகள் கிடையாது. ஆனால் உழைப்பிற்கு அவை உண்டு. இந்த வேறுபாடு சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. மலிந்த உழைப்பைத் தேடி மூலதனம் நகரும் சுதந்திரத்திற்குத் தடை யில்லை. ஆனால் கூடிய ஊதியத்தை தேடி உழைப்பாளர் வேறு நாடுகளுக்கு, குறிப்பாக செல்வந்த நாடு களுக்கு செல்வதற்குப் பல தடைகள். இது நவீன தாராளவாதத்தின் உலகமயவாதத்தின் இரட்டை நியமங்களில் ஒன்று.

## பணமூலதனத்தின் அதிவேக நகர்ச்சி

இன்றைய கணினி யுகத்தில் பணமூலதனம் ஏறக்குறைய ஒளியின் வேகத்தில் பூகோளத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்கிறது. இப்படியாக நகரும் பணமூலதனம் உற்பத்தி மூலதனமாக மாறுவது குறைவு. இப்போது ஊகம் (speculation) முன்னெப்போதையும்விட பெரியளவில் இடம் பெறுகிறது அதுவும் பணத்தை விற்றுப் பணத்தைச் சம்பாதிக்கும் போக்கே இன்றைய ஊகத்தின் பிரதான தன்மையாகும். உலகின் அந்நிய நாட்டுச் செலாவணி பற்றிய விதிகளை வகுத்த Bretton Woods ஒப்பந்தம் 1970களில் கைவிடப்பட்டு, வளைந்து கொடுக்கும் அல்லது நெகிழ்ந்து கொடுக்கும் அந்நிய செலாவணிக் கொள்கை பின்பற்றப்படுகிறது. பெறுமதி ஏறிச் செல்லும் அந்நியப் பணத்தின் வாணிபமே ஊகத்தின் பொருளாகிறது. கணினித் தகவல் தொழிநுட்பம் அதை உலகரீதியில் சாத்தியமாக்குகிறது. இதன் வளர்ச்சியைப் பின்வரும் உதாரணம் சுட்டிக் காட்டுகிறது.

1973இல் உலக அந்நிய செலாவணி சந்தையின் ஒரு நாள் சராசரி வர்த்தகம் 15 பில்லியன் US டாலர்களாக இருந்தது. 1992இல் இது 900 பில்லியன்களாக அதாவது 60 மடங்காக அதிகரித்தது. இன்று மேலும் பல மடங்குகளாகிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. இந்தப் போக்கின் முக்கிய அம்சமென்னவெனில், ஊகத்தில் ஈடுபடும் பணத்திற்கும் உற்பத்தி சார்ந்த அடிப்படைக்கும் இடையிலான தொடர்பு தொடர்ச்சியாகப் பலவீனமடைவதாகும். பணஊகத்தின் புலம் ஒரு கணினிப்புலம். இந்த ஆறாந்திணைப் பொருளாதாரத்தின் போக்குகள் உற்பத்திப் பொருளாதாரங்களைப் பலவகையில் பாதிக்கின்றன. இங்கு ஒருசில தனிமனிதர்கள் கையாளும் யுத்திகள் பெரும்பரவலான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சமீபகாலங்களில் தென்கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளில் பொருளாதாரங்கள் வலுவிழந்து வீழ்ச்சி பெற்றதை இங்கு நினைவுகூறலாம். அதேபோன்று சிங்கப்பூரில் இயங்கி வந்த ஆங்கிலேய வங்கியொன்று அதன் இலிகிதர் ஒருவரின் கையாடல் யுத்திகளால் திடீரென ஒரு பில்லியன் பவுண்டுகளை இழந்த சம்பவத்தையும் நினைவுகூறலாம்.

கட்டுப்பாடற்ற செலாவணிச் சந்தையின் விளைவுகள் இவை. தனிநபர்களின் குறுகியகால பணலாபம் தேடல்களின் மொத்தமான விளைவு உற்பத்தியையும் தேசியப் பொருளாதாரங்களையும் வலுவிழக்கச்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்கிறது. இப்போது நீண்டகால நோக்கிலான நேரடி முதலீடுகள் எதிர்பார்ப்பது போல் இடம்பெறுவதில்லை என்பது பற்றி உலக வங்கி கூட கவலைப்படுகிறது.

## புதிய அறிவுமூலதனத்தின் எழுச்சி

தகவல் புரட்சியினதும் ஏனைய புதிய விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சிகளின் விளைவாக முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்று அறிவுமூலதனம் மேலோங்கியுள்ளது. இதன் விளைவு மூளை உழைப்பின் முக்கியத்துவம் மேலும் வளர்வது ஆகும். உற்பத்திப் போக்கிலும் பொருளாதார சமூக சேவைகளிலும் கணினிமயமாக்கல் நிரந்தரமாகத் தொடர்கிறது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி முன்னர் மூலதனத்தால் முற்றாக கைப்பற்ற முடியாத பல துறைகளை இப்போது கைப்பற்ற வழி செய்கிறது. உதாரணமாக மரபணுக்களைப் பிளக்கும் தொழிநுட்பமும் அவற்றின் தகவல்களை புரிந்து கொள்ளும் அறிவும் இப்போது உயிரியல் வளங்களை மேலும் தனியுடைமையாக்குவதைச் சாத்தியமாக்கியுள்ளன. இத்துறைகள் சார்ந்த ஆய்வும் அபிவிருத்தியும் Trans National Corporations (TNCs)ன் வசமாகியுள்ளது.

இத்தகைய அறிவு மூலதனத்தின் எழுச்சியின் விளைவுகள் பலவிதமானவை. முதலில் உழைப்பின் தன்மையிலான மாற்றங்கள் குறிப்பிட்ட ஆற்றல்கள் இல்லாதோரை தொழிற்சந்தையிலிருந்து வெளியேற்றுகின்றன. உழைப்பாளிகளின் கூட்டுப்பலம் குறைவதும் அவர்களின் தொழிற்சங்கங்கள் ஓரப்படுத்தப்படுதலும் பொதுவான போக்காகியுள்ளது. இன்று உலகரீதியில் பின்பற்றப்படும் சுயபோட்டிச் சந்தைக் கொள்கை, தொழிற்சங்கங்களின் இப்பலவீனமாக்கலை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இன்னொரு மட்டத்தில் அறிவுமூலதனத்தின் குவியலும் கட்டுப்பாடும் ஒரு சில நாடுகளிலும் TNCகளிடமும் இருப்பதால் பலநாடுகள் தமது இயற்கை வளங்கள் மீதான உடைமையை இழந்து விடுகின்றன. இந்தப் போக்கினை குறிப்பாக மரபணு வளங்களின் தனியுடைமையாக்கலில் காணலாம். உதாரணமாக நவீன விதைத் தொழில்நுட்பத்தினாலும் அதன் தனியுடைமையாக்கலாலும் TNCs பெருமளவு இலாபம் பெறும் அதேவேளை, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள் மரபணுக்களைத் தமது தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் உரிமையை இழந்துவிடுகின்றன. ஆப்பிரிக்க ஆசிய கண்டங்களிலேயே பெருமளவிலான தாவர மரபணு வளங்கள் இயற்கையாகச் செறிந்துள்ளன. இவ்வளங்களைப் பயன்படுத்தியே மேற்கத்தைய நாடுகளின் ஆய்வு நிலையங்கள் நவீன விதைகளை உருவாக்குகின்றன. இந்த விதைத் தொழிநுட்பம் இன்று பெருமளவில் TNCகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இதற்கு உதவும் வகையில் சர்வதேசச் சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இது பற்றிய விவாதங்கள் முடிவுபெறவில்லை ஆயினும் தொழிநுட்பத்தின் உதவியால் TNCகள் பெருலாபம்



பெறுகின்றன. இவ்வாறாக அறிவுமூலதனத்தின் எழுச்சி, உழைப்பாளர்களின் உரிமைகள், இலாபத்தின் பங்கீடு, வளங்கள் மீதான உடைமை, உரிமைகள் பற்றிய பல பிரச்சனைகளை எழுப்பியுள்ளது.

www.tamilarangam.net

அறிவு மூலதனத்தின் வளர்ச்சி சர்வதேச ரீதியில் அசமத்துவங்களைக் குறைக்க உதவும் என உலகமயமாக்கல்வாதிகள் கூறிவரும்போதும், இதுவரை நடைமுறையில் அவ்வளர்ச்சி சர்வதேச அசமத்துவத்தையும் தேசியங்களுக்குள்ளேயான அசமத்துவங்களையும் அதிகரிக்கவே உதவியுள்ளது. அத்துடன் மூளைஉழைப்பாளர்களின் உயர் நடுத்தரமட்டத்தினர் மூலதனத்தின் முகாமையில் பங்குவகிக்கும் சந்தர்ப்பங்களும் கூடியுள்ளன. பொதுவான அடிப்படைக் கல்வியிலும் குறிப்பாக விஞ்ஞான தொழிநுட்பத் துறைகள் சார்ந்த கல்வியிலும், நீண்டகால முதலீடுகளைச் செய்யத் தவறிய நாடுகள் இன்றைய உலக அமைப்பின் வெளி எல்லைகளுக்கு ஓரப்படுத்தப்படுவதைக் காண்கிறோம். மறுபுறம் இத்தகைய கல்வித்துறை விருத்தி பெற்றுள்ள வளர்முக நாடுகளிலிருந்து பயிற்சி பெற்ற திறமையாளர்களின் சர்வதேசரீதியான சமூகநுகர்ச்சி பெருகியுள்ளது. இவர்கள் உலகமயமாக்கலினால் நன்மை பெறுவோரில் அடங்குவர். அதேவேளை, இவர்களுக்கு தொழில் வழங்கும் நிறுவனங்களும் நாடுகளும் பெரும் பயனைப் பெறுகின்றன. இவர்கள் கொண்டுள்ள மனித மூலதனத்தின் உற்பத்தி பெருமளவில் இவர்களின் சமுதாயத்தின் செலவிலேயே செய்யப்பட்டுள்ளது. இதனால் இத்தகையோர், குடியேறும் நாடுகளுக்கு பெரும் சேமிப்பு.

## TNCகளின் ஆதிக்க வளர்ச்சி

உலகப் பொருளாதாரத்தின் மூலதனக் குவியலில் TNCகளின் பங்கு வேகமாக அதிகரித்து வருகிறது. இன்றைய உலகின் முதலாவது 100 பொருளாதாரங்களில் 51 TNCகளாகவும், 49 நாடுகளாகவும் உள்ளன. 1970ல் 7000 TNCகள் மட்டுமே இருந்தன. இன்று இவற்றின் தொகை 40,000 ஆக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியின் மறுபக்கம் பல உள்ளூர் நிறுவனங்களின் வீழ்ச்சியும், மரணிப்புமாகும். உலகின் முழு முதலீட்டின் மூன்றில் ஒருபங்கு 100 TNCகளின் உடைமையாகும்.

இன்று வெளிநாட்டு முதலீட்டிற்கான கேள்வி அதன் நிரம்பலையும் விட பெரிதாக இருப்பதால் TNCகளின் அதிகாரமும் சுதந்திரமும் கூடியுள்ளன. உலகின் பெருந்தொழில் உற்பத்தி, இயற்கைச் சுரங்கங்கள், (எண்ணெய், நிலக்கரி, வாயு, கனிமம்) மோட்டார்வாகன உற்பத்தி, விமான உற்பத்தி, தொடர்பு சாதனங்கள் (communication satellites உட்பட) கணினிகள், இரசாயனங்கள், மருந்துகள் போன்ற பொருட்களின் உற்பத்தி, விவசாயத்திற்குப் பயன்படும் விதைகளின் உற்பத்தி போன்ற துறைகளில் TNCகள் முதலிடத்தைப் பெற்று வருகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதி போன்ற நிறுவனங்களின் ஆலோசனைக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் ஏற்ப அரசாங்கங்கள் அமுல் நடத்திவரும் தனியுடைமையாக்கலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றன TNCகள். அதேவேளை, தமது இலாப அதிகரிப்பிற்குப் பாதகமான சட்டங்களைத் தவிர்க்கும் வழிவகைகளையும் இவை நன்கு அறிந்துள்ளன. உதாரணமாக குறிப்பிட்ட ஒரு நாட்டின் சூழல், வருமானவரி சட்டங்களிலிருந்து தப்பிக் கொள்ள TNCகள் சர்வதேச நிலைமைகளைப் பயன்படுத்துகின்றன. மலிந்த கூலி கிடைக்கும் சுதந்திர வர்த்தக வலையங்களில் முதலீடு செய்து, இலாபத்தினை வரிகள் மிகவும் குறைவாயுள்ள நாடுகளுக்கு மாற்றுவது, பல நிறுவனங்களும் கையாளும் ஒரு யுத்தியாகும். அதே போன்று, சூழலை அசுத்தம் செய்யும் தொழிற்போக்குகளை இறுக்கமான சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் இல்லாத அல்லது இருந்தும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாத நாடுகளுக்கு மாற்றுவதும் பல TNCகள் பயன்படுத்தும் ஒரு குறுக்குப் பாதையாகும். இதனால் சூழலின் அழிவு பரவிப் பெருகி வருவதற்குப் போதிய ஆதாரங்களுண்டு. (இதுபற்றி பிறிதொரு கட்டுரையை எழுதிக் கொண்டிருப்பதால் இதை அதிகம் விளக்க முற்படவில்லை).

அதேவேளை, TNC முதலீட்டினைக் கவரும் நோக்குடன் பலநாடுகளின் அரசாங்கங்கள் தமது சட்டங்களையும் விதிகளையும் மாற்றி வருகின்றன. தனியுடைமையாக்கலில் வெளிநாட்டு முதலீட்டாளர் பங்குபற்ற வசதிசெய்யும் சட்டம், வருமானவரி குறைப்பு அல்லது வருமானவரியிலிருந்து முற்றாக விடுமுறை, தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குப் புதிய தடைகள், கட்டுப்பாடுகள் இலாபத்தை வெளியே எடுத்துச்செல்ல உதவும் சட்டங்கள் போன்ற பல சீர்திருத்தங்களை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் செய்துள்ளன. ஆயினும் TNCகளின் பெரும்பாலான முதலீடும் அதன் வளர்ச்சியும் விருத்தி பெற்ற நாடுகளிலேயே இடம் பெறுகின்றது. அத்துடன் TNCகள் தேசிய தளங்களையும் கொண்டுள்ளன.

www.tamilarangam.net

உதாரணமாக சப்பானிய, அமெரிக்க, பிரஞ்சு, சுவிஸ், ஜெர்மனிய TNCகள் தமது நாடுகளில் பாரிய விஞ்ஞான தொழில் நுட்ப மற்றும் திட்டமிடல் தளங்களைக் கொண்டுள்ளன.

விருத்தி பெற்ற நாட்டு அரசாங்கங்களும் TNCகளின் முதலீட்டைக் கவரும் நோக்கில் பல வழிகளைக் கடைப்பிடிக்கின்றன. மேற்குறிப்பிட்ட நாடுகளுடன் வேறுசில விருத்திபெற்ற நாடுகளையும் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள OECD அமைப்பு TNCகளின் முதலீட்டிற்கு உதவும் கொள்கைகளை வகுக்கின்றது. OECDல் உலகின் அதிகப் பணம் படைத்த 29 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இன்றைய உலகப் பொருளாதாரத்தில் சென்றடையும் முதலீட்டின் 85 வீதமானது OECD அமைப்பிற்குள்ளிருந்தே செல்கிறது. அதேவேளை இந்த முதலீட்டின் 65 வீதம் OECD நாடுகளுக்குள்ளேயே இடம் பெறுகிறது. மிகுதியில் கணிசமான பகுதி வளர்முக நாடுகளுக்குப் போகிறது. இந்த முதலீடுகளில் பெரும்பங்கு TNCகளினாலேயே செய்யப்படுகின்றன.



வளர்முக நாடுகளிலும் விருத்தி பெற்ற நாடுகளிலும் TNCகளினால் அரசியல் ஊழல்கள் பன்மடங்காக அதிகரித்துள்ளன. தனியுடைமையாக்கல் திட்டங்களில் இலஞ்சம் பெரும் பிரச்சனையாகியுள்ளது. பல நாடுகளில் அதேபோல் சூழல் சட்டங்கள், தொழிலாளர்களின் பாதுகாப்புச் சட்டங்கள் போன்றவற்றை மீறும் TNCகளும் மற்றைய நிறுவனங்களும், அரசியல்வாதிகளுக்கும் உயர்மட்ட அரச நிர்வாகிகளுக்கும் இலஞ்சம் வழங்குதலும் பெரும் பிரச்சனையாகியுள்ளது. சந்தைப் பொருளாதாரக் கொள்கை ஊழல்களை இல்லாதொழிக்க உதவும் எனும் உலக வங்கியின் வாதத்தை இந்த ஊழல்கள் அர்த்தமற்றதாக்கியுள்ளன.

## சந்தை அடிப்படைவாதமும் ஜனநாயக உரிமைகளும்

சந்தை உறவுகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரானவை அல்ல. நிலவுடைமை உற்பத்தி உறவுகளுடன் ஒப்பிடும்போது, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் மனித சுதந்திரத்திற்குச் சாதகமானவை எனப் பொதுப்படையாகக் கூறலாம். இதில் மார்க்ஸியவாதிகளும் தாராளவாதிகளும் ஒத்த கருத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம். உழைப்பாளர்களைப் பலாத்காரமாகக் கட்டுப்படுத்தி வைக்கும் உற்பத்தி உறவு மனித உரிமையை மறுக்கும் உறவாகும். உற்பத்தியாளரைப் பலாத்காரத்திலிருந்து விடுவித்து சுதந்திரமான உற்பத்தி உறவில் பங்குபற்ற வைப்பதற்கு முதலாளித்துவம் சந்தை உறவுக்கு ஊடாக வழிசெய்வதை மார்க்ஸ் முற்போக்கான மாற்றம் எனக் கருதினார். இன்று நடைமுறைப்படுத்தப்படும் சந்தைச் சீர்திருத்தங்கள் அத்தகைய முற்போக்கான ஜனநாயகரீதியான மாற்றத்திற்கு உதவுகின்றன என நவதாராளவாதிகள் வாதிடுகின்றனர். நடைமுறையில் இது எப்படி என்ற கேள்வி முக்கியமானதாகும்.

பலாத்காரமற்ற உற்பத்தி உறவுகள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால் நடைமுறையில் சந்தைச் சீர்திருத்தங்களால் மட்டுமே மரபுரீதியான பலாத்கார உறவுகளை மாற்ற முடிவதில்லை என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. தென்னாசியாவில் பல இடங்களில் பழைய அடிமை உழைப்பு உறவுகளை நவீன முதலீட்டாளர்கள் பயன்படுத்தி வருவதை பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டில் கடன்அடிமைமுறை உழைப்பைப் பயன்படுத்தி செயற்கை இரத்தினக் கற்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்வதையும், வேறு மாநிலங்களில் செங்கல் உற்பத்திக்கு இது போன்ற உற்பத்தி உறவுகளைப் பயன்படுத்துவதையும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இத்தகைய உற்பத்தி உறவுகள் மற்றைய தென் ஆசிய நாடுகளிலும் இருக்கின்றன. இந்தியாவின் சட்டப்படி

www.tamilarangam.net



இத்தகைய உழைப்பு உறவுகளைப் பயன்படுத்துவது குற்றமாகும். ஆயினும் அவை நவீன உற்பத்தி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் ஆலைகளில் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இந்தியாவின் தாராளமயமாக்கல் இப்படியாக சுரண்டப்படும் உழைப்பாளிகளுக்கு விடுதலையைக் கொடுக்கவில்லை. மறுபுறம் தாராளமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள இலாப சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த இந்தச் சட்ட விரோதமான முறைகள் உதவுகின்றன. இது தாராளமயமாக்கலின் தவறல்ல எனும் வாதத்தில் நியாயம் இருப்பினும், இங்கு நாம் கவனத்தில் எடுக்க வேண்டியது என்னவெனில் சந்தைச் சீர்திருத்தமும் சட்டமும் குறிப்பிட்ட உழைப்பாளர்களின் சுதந்திரத்தை இதுவரை உத்தரவாதப்படுத்தவில்லை. இது ஒரு அரசியல் போராட்டத்திற்குரிய பிரச்சனை. உழைப்பாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை, அடிப்படைக்கூலி உத்தரவாதம் போன்றவற்றிற்கான போராட்டங்களின்றி சந்தை சீர்திருத்தம் விமோசனம் தரப்போவதில்லை.

அப்படியானால் சந்தைச் சீர்திருத்தத்தை எதிர்ப்பதை விட்டு அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுதல்தானே சரியான அணுகுமுறை என்ற வாதத்திலும் நியாயம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இங்கு வேறொரு முரண்பாட்டைக் கணக்கில் எடுக்க வேண்டும். சந்தைச் சீர்திருத்தத்தின் நோக்கம் சுயபோட்டி நிலைமைகளை எற்படுத்தி உற்பத்திக் காரணிகளை அதிகபட்ச பயன் தரும் வகையில் ஒதுக்க வழிவகுப்பதாகும். இங்கு பிரதான நோக்கமாக அமைவது பொருளாதாரத்திறன், அதாவது சந்தை விலைகளுக்கூடாக வெளிப்படுத்தும் சைகைகளுக்கமைய வளங்களை (உழைப்பு உட்பட) ஒதுக்கி இலாபத்தை அதிகரிப்பதாகும். உழைப்பின் ஒதுக்கலைக் கட்டுபாடற்ற சந்தையிடம் விடப்படுவதை தொழிலாளர்கள் வரலாற்றுரீதியில் கூட்டாக எதிர்த்து நியாயமான ஊதியத்திற்காக, பாதுகாப்பான வேலைத்தள சூழலுக்காக, சமூகப் பாதுகாப்பிற்காகப் போராடி வந்துள்ளனர். விருத்தி பெற்ற நாடுகளில் இப்போராட்டங்களின் விளைவாக ஊதியத்தின் நிர்ணயிப்பு கூட்டு ஒப்பந்தங்களினூடாக இடம்பெறும் முறைமை நிறுவனமயமாக்கப்பட்டது. பல வளர்முக நாடுகளிலும் இந்த முறைமையைப் பின்பற்றும் துறைகள் உண்டு. தொழிலாளர்களின் உரிமைகளை, நலன்களைப் பொறுத்தவரை பின்வருவன முக்கியமானவற்றுள் அடங்கும்.

- வாழ்க்கைச் செலவுக்கேற்ப நிர்ணயிக்கப்படும் நியாயமான கூலியும், உற்பத்தித்திறனுடன் அதன் நியாயமான வளர்ச்சியும்
- சுகாதாரமான வேலைத்தளச் சூழல்
- வேலையற்றிருக்கும் காலத்தில் சமூகப் பாதுகாப்பு
- ஓய்வூதியம்
- கல்வி, சுகாதார சேவை வசதி
- தொழிற்சங்க உரிமை, எழுத்து, பேச்சு சுதந்திரம்
- இன, பால். சாதி, நிற அடிப்படையிலான பாகுபாடு எதுவுமில்லாமை
- சமூகநுகர்ச்சிக்கான வசதிகள்

www.tamilarangam.net

இத்தகைய அம்சங்களை உள்ளடக்கிய பார்வையில் கட்டுப்பாடற்ற உழைப்புச் சந்தையில் தொழிலாளர்களின் பல உரிமைகளுக்குப் பாதகமான நிலைமைகள் உருவாகும் . என்பது தெளிவாகிறது. சர்வதேசரீதியில் தொழிற்சங்கப் போராட்டங்களின் நீண்ட வரலாறு இதை ஊர்ஜிதம் செய்வதுடன் ஊதியம் மற்றும் உரிமைகளைப் பொறுத்தவரை முதலாளிகள் - தொழிலாளர்கள் - அரசு ஆகிய மூன்றும் கூட்டு ஒப்பந்தங்கள் செய்வதே மரபாகிவிட்டது. இன்று இந்த மரபு தாக்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற உழைப்புச் சந்தையை தேசியமட்டத்தில் அதாவது நாடுகளுக்குள்ளே அமுல்படுத்தும் போக்கு தலைதூக்கியுள்ளது. இது பல நாடுகளில் தொழிலாளர்கள் இதுவரை பெற்ற உரிமைகளின் இழப்புக்கு வழிகோலியுள்ளது. 'குறைந்தபட்ச அரசு' என்னும் கொள்கையுடன் இது இணையும்போது அரசின் சமூகரீதியான பொறுப்புக்களும் குறைகின்றன. இந்தப் போக்கினால் தனியுடைமையாக்கப்படும் நிறுவனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பலர் வேலையிழந்துள்ளனர். கூலி உயர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## உழைப்பின் தற்காலிகமாக்கலும் பெண்தொழிலாளர் மீதான சுரண்டலும்

இந்தப் பொருளாதாரக் கொள்கையின் பின்னணியில் வேறு பல பிரதான போக்குகளை இனங்காணுதல் அவசியம். இன்றைய காலகட்டத்தில் உழைப்பு ஒப்பந்தங்கள் தற்காலிகமாக்கப்படலும், இத்தகைய உற்பத்தி உறவுகள் பெண்களையும், பல இடங்களில் சிறுவர்களையும் உள்வாங்கி வருவதையும் காணலாம். சம்பிரதாயபூர்வமான தொழில் ஒப்பந்தங்கள் இப்போது அருகி வரும் துறைகள் அதிகம். சர்வதேசரீதியில், குறிப்பாக வளர்முகப் பொருளாதாரங்களில் தொழிற்சங்கங்களின் அங்கத்துவ வீதம் கடந்த இருபது வருடங்களாக வீழ்ச்சியடைந்து வருகிறது. இன்று மிகப் பெரும்பான்மையினர் தற்காலிக அடிப்படையிலேயே தொழில் பெறுகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள். மரபுரீதியான தொழிற்சங்கங்களில் இத்தகைய தொழிலாளர்கள் சேர முடியாது. இவர்களுக்கான அமைப்புக்கள் பல நாடுகளில் இன்னும் தோன்றவில்லை. மூலதனத்திற்கு மிகவும் சாதகமான வகையில் தற்காலிக ஒப்பந்தங்கள் அமைகின்றன. பொதுவாக இவ்வொப்பந்தங்கள் எழுத்தில் போடப்படுவதில்லை. வேலை செய்த நேரத்தின்படி அல்லாது, உற்பத்தி செய்யும் வெளியீட்டிற்கமைய ஊதியம் வழங்குதல் வழக்கமாகிவிட்டது.

உழைப்பைப் பெறுவதற்கு மூலதனம் உபஒப்பந்த முறையையும் பயன்படுத்துகிறது. ஒரு தொழிற்சாலை முகாமையாளர் தனக்குத் தேவையான கூலியாட்களை வழங்கும் பொறுப்பினை ஒரு உழைப்பு ஒப்பந்தக்காரரிடம் விட்டுவிடுகிறார். இவரே தொழிற்சாலைக்கு வேண்டிய தொழிலாளர்களைக் கொடுக்கிறார். தொழிலாளரின் ஊதியம் பற்றிய விடயங்களை இவருடனேயே முகாமையாளர் பேசித் தீர்த்துக் கொள்கிறார். உழைப்பு ஒப்பந்தக்காரர் ஒரு தரகர். தொழிலாளர்களை தொழிற்சாலை முகாமை மலிந்த கூலிக்குப் பெறுவதற்கு இவருக்கு தொழிலாளருக்குச் சேரவேண்டிய வருமானத்தின் ஒரு பங்கு தரகாகக் கிடைக்கிறது.

வேறு உபஒப்பந்த முறைகளும் உண்டு. வெளிநாட்டு முதலீட்டாளர் உள்நாட்டு உபஒப்பந்தக்காரரை வைத்து தொழில் செய்வதைக் காணலாம். பல சிறிய தொழிற்கூடங்களில் பெண்களை வேலைக்கமர்த்தி ஏற்றுமதிக்கென சில வகையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உதாரணமாக சப்பாத்து, பின்னல் பொருட்கள், இலத்திரன் சம்பந்தப்பட்ட பொருட்கள், பூக்கள் போன்றவை இத்தகைய முறையில் உற்பத்தி செய்யப்படுவதுண்டு. இத்தகைய தொழிற்கூடங்களின் முகாமையாளர்கள் உள்நாட்டவர்கள். ஆனால் உரிமையாளர்கள் பெரும்பாலும் வெளிநாட்டவர்கள். பெண்தொழிலாளர்கள் ஒரு முதலாளிக்கோ ஒரு தொழிற்சாலைக்கோ வேண்டிய பொருட்களைத் தமது வீட்டிலேயே உற்பத்தி செய்து அவற்றின் தொகைக்கும் தரத்திற்குமேற்ப கூலி பெறும் முறையையும் பல இடங்களில் காணலாம்.

இப்படியாக தொழிலாளர்களை உதிரிகளாக்கும் ஒரு பெரும் போக்காகியுள்ளது. இன்று இந்தியாவில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் அங்கத்தவர்களில்லை. இவர்களில் பெரும்பாமையினர் பெண்களும், தலித்துக்களும் ஆவர். இலங்கையில் 80 வீதத்திற்கு மேலானோர் தொழிற்சங்கங்களில் அணிதிரட்டப்படவில்லை. தற்காலிகமயமாக்கப்பட்ட உழைப்பாளர்கள்

www.tamilarangam.net

மரபுரீதியான தொழிற்சங்கங்களில் சேருவதற்குச் சட்டரீதியான தடைகளுண்டு. இத்தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் போராடும் அமைப்புக்கள் அங்கும் இங்கும் தோன்றியுள்ளன. ஆயினும் இவர்களை அணிதிரட்டுதல் சுலபமல்ல. “Hire and fire” எனும் விதிப்படி வேலை கொடுத்தல் பரவிவரும் இன்றைய காலகட்டத்தில் தொழிலாளர் உரிமைகளும் அவர்களின் மனித சுதந்திரமும் உதாசீனம் செய்யப்படுகின்றன.

இத்தகைய வழிகளைச் சட்டபூர்வமாக்கி உழைப்பின் மீதான சுரண்டலை மூலதனம் அதிகரிக்க அரசுகள் உதவுகின்றன. இந்த வழிகள் ஒன்றும் புதியவையல்ல. முதலாளித்துவத்தின் ஆரம்ப காலகட்டங்களில் இவை போன்ற உறவுகளை மூலதனம் பயன்படுத்தியது. இங்கு நாம் கவனத்தில் எடுக்க வேண்டியது என்னவெனில், தொழிலாளர் முன்னர் பல போராட்டங்களுக்கூடாக வென்றெடுத்த உரிமைகள் படிப்படியாக மறையும் போக்காகும். இன்றைய பல வளர்முக நாடுகளிலும் காணப்படும் சுதந்திர வர்த்தக வளையங்கள் மற்றும் தொழிற் பேட்டைகள் போன்றவற்றில் தொழிலாளர் மீதான கட்டுப்பாடுகள் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளன.

தாராளமயமாக்கல் கொள்கையின் ஒரு விளைவான சுதந்திர வர்த்தக வளையங்களில் தொழிலாளர்கள் பலவிதமான உரிமை மறுப்புக்களுக்காளாகியுள்ளனர். இலங்கையில் சுதந்திர வர்த்தக வளையங்கள் 20 ஆண்டுகளாக இயங்குகின்றன. 1979 இல் இரண்டாக இருந்த இவ்வளையங்கள் இப்போது 12 ஆக அதிகரித்துள்ளன. இங்கு வேலை செய்யும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் ஏறக்குறைய 88 வீதத்தினர் பெண்கள். அவர்களில் பெரும்பான்மையினர் கிராமப்புறத்தவர். இங்குள்ள தொழிலாளர்களுக்கு இதுவரை தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. ஒரு வேலைத்தளத்தின் 40 சதவீதமானோர் சம்மதித்தால் தொழிற்சங்கம் அமைக்க முடியும் எனும் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆயினும் இந்த விதிப்படி தொழிற்சங்கம் அமைப்பதற்கு முதலாளிகளும் முகாமையாளர்களும் பல தடைகளை நடைமுறையில் ஏற்படுத்துகிறார்கள். இதனால் இவ்வளையங்களில் தொழிற்சங்கங்கள் இயங்குவது மிகவும் கடினமாகியுள்ளது. பெண்தொழிலாளர்கள் மோசமாகச் சுரண்டப்படுகின்றார்கள். அவர்களில் பலர் பாலியல் வன்செயலுக்கு ஆளாகியுள்ளனர். மனித சுதந்திரம் பற்றி பேசும் தாராளவாதத்தின் மற்றொரு முகத்தை சுதந்திர வர்த்தக வளையங்கள் காட்டுகின்றன.

“சுதந்திர வர்த்தக வளையம்” என்னும் பெயரில் நிறைய அர்த்தம் உண்டு. இலங்கையில் வகுக்கப்பட்டுள்ள தொழிலாளர் உரிமைச் சட்டங்கள் செல்லுபடியாகாத ஒரு தனிப் பிரதேசத்தை உருவாக்கி அங்கு முதலீட்டாளர்கள் தொழிலாளர்களை சுதந்திரமாகச் சுரண்டுவதற்கான சட்டதிட்டங்களை நிறுவனமயமாக்கியுள்ளனர். இங்கு தொழிலாளர்களின் சுதந்திரத்தை மறுக்கும் “சுதந்திரத்தை” முதலாளிகள் கொண்டுள்ளனர். இத்தகைய சுதந்திர வர்த்தக வளையங்கள் தாராளவாதத்தின் அரசியல் விழுமியமான தனிமனித சுதந்திரத்தின் மறுப்பாகியிருப்பது இன்றைய உலமயமாக்கலின் முரண்பாடுகளில் ஒன்றெனலாம்.

சென்றவருடம் (2000) நான் சுவீடனிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி பற்றி உரையாற்றியபோது இலங்கையின் சுதந்திர வர்த்தக வளையம் பற்றிக் குறிப்பிட்டேன். அங்கு இடம் பெறும் உரிமை மீறல்களைப் பற்றி நான் குறிப்பிட்டபோது சபையிலிருந்து ஒருவர் “சுதந்திர வர்த்தக வளையம் பலருக்கு தொழில வாய்ப்புச் செய்து கொடுத்துள்ளது தேசிய பொருளாதாரத்திற்கு உதவியுள்ளது. இத்தகையதொரு கொள்கையை நீங்கள் ஏன் இப்படி விமர்சிக்கிறீர்கள்” எனக் கேட்டார். நான் எனது கருத்தினை மேலும் விளக்கினேன். அத்துடன் வேலையில்லாமை மிகவும் அதிகமாகவுள்ள இலங்கையின் சுதந்திர வர்த்தக வளையத்தில் 15,000 தொழிலாளர் பதவிகள் நிரப்பப்படாதிருப்பதையும், இந்த தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என இலங்கையின் முதலீட்டுச் சபையின் தலைவர் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விட்டுள்ளார் என்பதையும் கூறினேன். சுதந்திர வர்த்தக வளையத்தின் நிபந்தனைகளை பலர் ஏற்க தயாராகவில்லை அதைவிட அவர்கள் தங்கள் பெற்றோருக்கோ குடும்பத்தவர்க்கோ பாராமாயிருக்க விரும்புகிறார்கள். இவற்றையெல்லாம் கூறியபின் என்னிடம் கேள்வி கேட்டவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

“சுவீடனில் இலங்கையில் இருப்பது போன்ற ஒரு சுதந்திர வர்கத்தக வளையம் உருவாக்கப்படுவதை நீங்கள் ஆதரிப்பீர்களா? ” கேள்வி கேட்டவர் மட்டுமன்றி வேறு பலரும் அது சாத்தியமில்லை எனும் கருத்தையே வெளிப்படுத்தினர். அவர்களிடம் நான் மீண்டும் கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சுவீடன் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளமுடியாத உரிமை மறுப்புக்கள் மிகுந்த பொருளாதார நிறுவனத்தை ஏன் இலங்கைச் சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்? மனித உரிமைகள் சர்வதேசமானவை என்றால் இலங்கையில் இது இருப்பது எப்படி நியாயமாகும்?"

உலகரீதியில் உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டின் விளைவுகளை அவை இப்போது முன்பையும்விட தொழிலாளர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதிக்கின்றன என்பதை விளக்க மேற்கூறிய உதாரணங்கள் உதவுகின்றன. அதேவேளை இதே உதாரணங்களை தத்தமது நிலைப்பாட்டிற்குச் சாதகமாக நவதாராளவாதிகள் பயன்படுத்துவதைக் காணலாம். அவர்களின் பிரதான வாதம் பின்வருமாறு.

உதாரணமாக, சுதந்திர வர்த்தக வளையத்தில் கூலியாளராக உழைக்கும் பெண்களுக்கு வேறு வேலைவசதி கிடையாது. இந்த வேலையில்லாவிடில் அவர்கள் வேலையில்லாதோர் படையில்தான் இருப்பர். அப்போது அவர்களுக்கு ஒரு ஊதியமும் இல்லை. இப்போது அவர்கள் ஊதியம் பெறுகின்றார்கள். இதனால் அவர்களின் சுதந்திரம் கூடியுள்ளது. வேலையற்றிருக்கும் அவர்களின் சகோதரிகளைவிட அவர்கள் அதிஷ்டசாலிகள். இந்த வாதத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது நியாயமாகவே படுகிறது. சற்று ஆழமாகப் பார்த்தால் அதன் பலவீனங்கள் தெளிவாகின்றன. இங்கு பிரச்சனைக்குரிய விடயம் வேலையற்றிருந்த பெண்கள் கூலி உழைப்பாளர்களாக மாறியதல்ல. அவர்கள் கூலியாளராக இருக்கும் உற்பத்தி உறவுகளின் தன்மைகளும் அவர்களின் உரிமைகளும்தான் இங்கு வாதத்திற்குரியவை. அவர்களின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு முதலாளிகள் வைக்கும் முன்நிபந்தனைகளும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமும் அவர்கள் வேலைத்தளத்தில் கட்டுப்படுத்தப்படும் விதமும் அவர்களின் மனித உரிமைகளையும் தொழிலாளர் என்ற வகையில் அவர்களின் தொழிற்சங்க உரிமைகளையும் மீறுகின்றன.

வேலையற்று இருப்பதைவிட சுதந்திர வர்த்தக வளையத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கூலிபெறும் வாய்ப்பினை பெறுதல் நல்லதெனும் வாதம் இந்த நூற்றாண்டில் உலகமயமாக்கலுக்கு ஆதரவாகக் கேட்பது பலருக்கு ஆத்திரத்தை ஊட்டுவதில் நியாயம் உண்டு. ஏனெனில் அத்தகைய ஒரு தர்க்கரீதியான வாதம் அடிமைமுறையைத் தொடரக்கூடப் பயன்படலாம். அடிமை விடுதலை பெற்றால் உணவின்றி வீடின்றி வாடிச் செத்துமடிவதைத் தவிர வழியில்லை. ஆகவே உயிரைக் காப்பாற்றுவதற்காக அடிமை அடிமையாக இருப்பதைத் தவிர வழியில்லை. இத்தகைய வாதம்தான் அது. இது உலகமயவாதம் மனித சுதந்திரத்திற்கு எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொடுக்கிறதென்பதைக் காட்டுகிறது.

இங்கு மீண்டும் உலகமயமாக்கல் என்னும் வரலாற்றுப் போக்கிலிருந்து உலகமயவாதம் என்னும் கருத்தியலை, பொருளியல் கருத்துப்போக்கினை வேறுபடுத்திப் பார்த்தல் அவசியமென நினைவூட்டுதல் தகும். மூலதனத்தின் இயக்கத்திற்கு அதிகபட்ச சுதந்திரத்தை ஏற்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு செல்வந்த நாடுகளின் ஆளும் வர்க்கங்களும் TNCகளும் உலக பணமூலதனத்தின் நிறுவனங்களும் (குறிப்பாக பெரிய தனியார் வங்கிகள்), உலக வங்கி, சர்வதேச நாணய நிதி போன்றவையும் பல கொள்கைவழிகளைக் கையாண்டு வருகின்றன. இந்த வழிகளில் தொழிலாளர்களின் கூட்டுப் பலத்தினைத் தாக்கும் வழிகளும் அடங்கும். இதற்கு எதிரான போராட்டங்கள் இன்னும் போதிய தேசியமட்டப் பலத்தையோ சர்வதேசிய பலத்தையோ பெறவில்லை.



உலகமயமாக்கலும் அதற்குப் பயன்படும் தொழில்நுட்பமும் சர்வதேசிய தொழிற்பிரிவில் ஏற்படுத்தும் மாற்றங்களையும் கவனத்தில் எடுத்தல் அவசியம். அறிவு மூலதனத்தின் எழுச்சி பற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம். மூளைஉழைப்பு - உடலுழைப்பு வேறுபாடு பற்றியும் குறிப்பிட்டேன். தொழில்நுட்பத்தின் உதவியுடன் பல துறைகளில உடலுழைப்பாளர்களுக்கு நிரந்தரவேலை வழங்கும் வழக்கம் மாற்றப்பட்டு வருகிறது.

www.tamilarangam.net

இப்படிச் சொல்லும்போது உடல் உழைப்பின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது என்றாகாது. உடல் உழைப்பாளர்களைச் சுரண்டும் விதிமுறைகள் மாறி வருகின்றன. செல்வந்த நாடுகளில் உடலுழைப்பாளர் கூட்டத்தில் ஒரு கணிசமான பிரிவினராக மூன்றாம் உலகத்திலிருந்து வந்தோர் விளங்குகின்றனர். இவர்கள் இந்த நாடுகளில் மிகவும் மலிந்த ஊதியம் பெறுவோராக உள்ளனர். ஆகவே தொழிலாளரின் புவியியல் ரீதியான நகர்ச்சியையும் நாம் கணக்கிலெடுக்க வேண்டும். ஏற்கனவே கூறியதுபோல் இந்த நகர்ச்சி பல கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. சுமீப காலங்களில் ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்குச் சென்றவர்களில் பெரும்பாலானோர் சட்டவிரோத உள்வரவாளர்களாகவே கருதப்படுகின்றனர். இதனால் இவர்கள் உரிமைகளற்ற "கறுப்புச்சந்தை" தொழிலாளர்களாயிருக்கிறார்கள். சட்டபூர்வமாக குடியேறியுள்ள மூன்றாம் உலகத் தொழிலாளர்கள் உடல்உழைப்பாளர்களின் இன்னொரு பிரதான பகுதியாவர். வருமானத்தை அதிகரிக்க நீண்டநேரம் வேலை செய்வதும், ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலைச் செய்வதும் பல வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கையாளும் வழிகளாகும். அதேபோன்று உள்நாட்டு உடல்உழைப்பாளரும் கூடுதலான நேரம் வேலை செய்வது சகஜம். வடஅமெரிக்காவில் இந்தப்போக்கு வளர்ந்துள்ளது.

இன்னொரு சர்வதேசப்போக்கு வறிய நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் அரபுநாடுகளுக்கு செல்வதாகும். இந்நாடுகளில் இவர்கள் பெறும் ஊதியம் தமது சொந்த நாட்டு ஊதியமட்டத்துடன் ஒப்பிடும் போது உயர்வாக இருப்பினும் உரிமைகளைப் பொறுத்தவரை இத்தொழிலாளாகள் மிகவும் பலவீனமான அந்தஸ்தையே கொண்டுள்ளனர். குறிப்பாக வீட்டுப்பணியாளராகச் செல்லும் பெண்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளார்கள்.

தேசிய, சர்வதேசரீதியில் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை உலகமயமாக்கல் வலுப்படுத்தவில்லை. அதற்கு மாறாக பலவீனமாக்கியுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உண்டென்பதை மேற்குறிப்பிட்ட உதாரணங்கள் காட்டுகின்றன. குறிப்பாக வளர்முக நாடுகளில் உரிமை மறுப்புக்களும் மீறல்களும் அதிகரித்துள்ளன. மனிதஉரிமை மீறல்களைப் பற்றி சர்வதேச மன்னிப்பு சபை வருடந்தோறும் வெளியிடும் அறிக்கைகளும் வேறு பல அறிக்கைகளும் ஆய்வுகளும் இந்த முடிவுக்கு போதிய சான்றுகளைத் தந்துள்ளன.

சந்தை அடிப்படைவாதப் பொருளாதாரக் கொள்கை விவசாயிகளை, கிராமப்புறத்து தொழிலாளர்களை, வறியவர்களை பாதித்திருப்பதற்கான ஆதராங்கள் நிறைய உண்டு. சிறிய விவசாயிகளில் கணிசமானவர்கள் வறியவர்களாகியுள்ளனர். பொதுவாக நகர்ப்புறத்தைவிட கிராமப்புறங்களில் வறுமை அதிகம் என்பதை சர்வதேசரீதியான புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2001 ல் வெளியான IFAD இன் அறிக்கைகளின்படி இன்று 1.2 பில்லியன் மக்கள் "ஒரு நாளுக்கு ஒரு டாலர்" என உலக வங்கி வகுத்துள்ள வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்கிறார்கள். இவர்களில் 75 சதவீதமானோர் கிராமவாசிகள். 44 சதவீதத்தினர் தென் ஆசியாவிலும், 24 சதவீதத்தினர் கிழக்குஆசியாவிலும் 24 சதவீதத்தினர் சகாரவிற்கு கீழுள்ள ஆபிரிக்க நாடுகளிலும் வாழ்கின்றார்கள். இந்த வறுமையின் பெரிய சுமையைப் பெண்களே தாங்குகிறார்கள். வறுமைக்கோட்டின்படி எடுக்கப்பட்டுள்ள இந்தக் கணக்கு, வறுமையின் சில முக்கிய தன்மைகளை உள்ளடக்கவில்லை. குறிப்பாக, இந்தக்கோட்டிற்கு எவ்வளவு தூரம் கீழே ஒருவர் இருக்கிறார் என்பதையோ, பல்வேறுபட்ட மனிதர்களின் அடிப்படைத் தேவைகளின் வேறுபாடுகளையோ இத்தகைய மதிப்பீட்டினால் அறிந்துகொள்ள முடியாது. ஆயினும் இந்தக் கணக்கெடுப்பின்படி வறுமை ஒரு பெரிய பிரச்சனையாகத் தொடர்வது தெளிவாகிறது.

## கிராமிய வறுமைக்கான காரணங்களில் பிரதானமானவை

பல நாடுகளில் விவசாய நிலத்தின் பங்கீடு மிகவும் அசமத்துவமாக இருப்பதும், இதனுடன் இணைந்து நீர்வளங்களின் பங்கீட்டின் அசமத்துவமும் போதாமையும் - இந்த அசமத்துவம் கிராமிய அதிகார அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும்.

- கிராமிய உட்கட்டுமானங்களின் விருத்தியின்மை.

www.tamilarangam.net

- கல்வி சுகாதார வசதிகள் இல்லாமை அல்லது போதாமையும்,அவற்றின் உயர்ந்து வரும் விலையும்.
- மனித உரிமைகளும் தனி மனிதருக்கான பாதுகாப்பும் இல்லாமை.
- உற்பத்தியாளர்களுக்கு உள்ளீடுகள் பெறும் வசதியின்மையும் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைவீழ்ச்சியும்.
- இயற்கை வளங்களினதும் சூழலினதும் சீரழிவு.
- நிலமற்றவர்கள் பெருமளவில் தற்காலிக கூலி உழைப்பில் தங்கிநிற்றல். வேலைவாய்ப்பின்மை, பெண்தொழிலாளர்களின் குறைந்த கூலி.

வறுமையைப் போக்க வேண்டிய அடிப்படையான மாற்றங்களை சந்தைச் சீர்திருத்தம் இதுவரை வழங்கவில்லை. கிராமப்புறத்தில் அதற்கு மாறாக அது ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

நிலச் சொத்தின் அசமத்துவங்களை மாற்றியமைக்கவல்ல நிலச்சீர்திருத்தங்கள் இப்போது குறைவு. சந்தை சக்திகளுக்கூடாக நிலச்சீர்திருத்தத்தை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. தென்னாப்பிரிக்காவில் இந்தக் கொள்கையை அமுல்நடத்தி வருகிறார்கள். இந்தச் சீர்திருத்தத்தால் பணமுள்ள கறுப்பினத்தவர்கள் சிலர் நில உரிமையாளர்களாக ஆக்கியுள்ளனர். ஆயினும் உற்பத்தித்திறன் மிகுந்த விவசாய நிலங்களின் பெரும்பகுதி இன்னமும் ஒரு சில வெள்ளையர்களின் சொத்துக்களாகவுள்ளது.

கல்வி, சுகாதார வசதிகளின் சந்தைமயமாக்கல் சகல நாடுகளிலும் சமூகத்தின் கணிசமான பகுதியை ஓரப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக இந்தப் பகுதியினர், மலிந்த அல்லது இலவசமாகக் கிடைக்கும் தரம் குறைந்த கல்வி, சுகாதார சேவைகளில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் நீண்டகால விளைவு சமூக அசமத்துவங்களின் அதிகரிப்பாகும். உதாரணமாக, ஒரு தரமான பாடசாலையில் ஐந்து வருடம் கல்வி கற்றவருக்கும் ஒரு தரம் குறைந்த பாடசாலையில் அதேயளவு காலம் கல்வி கற்றவருக்கும் இடையிலான தராதரம் தன்மை ரீதியில் வேறுபடுகிறது. இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலமும் விஞ்ஞானமும் கற்றவருக்கும், தாய்மொழியில் கலைப்பிரிவில் கற்றவருக்கும் கிடைக்கும் தொழில் வாய்ப்புக்கள் சமமானவையல்ல. கிராமப்புறத்தில் இத்தகைய பல வேறுபாடுகள் அதிகரித்துவருகின்றன.

இதற்கு காரணம் பொருளாதார வேறுபாடுகளே.

கல்வி, சுகாதார வசதிகள் உணவு, உடை, உறைவிடம் போன்றவை அடிப்படை மனிதஉரிமைகள் எனப்படும் இக்காலத்தில், இச் சேவைகளின் தனியுடைமையாக்கலும் விலையேற்றமும் பலருக்கு தரமான கல்வியையும், சுகாதாரத்தையும் எட்டாக் கனிகளாக்கியுள்ளன.

உலகமயமாக்கலும் உலகமயமாக்கத்தின் நடைமுறைகளும் மக்கள் ஜனநாயகப் புரட்சியை இன்றைய நிலைமைகளுக்கேற்ப மீள்வியாக்கியானம் செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. இங்கு அரசு சிவில்சமூகம் அரசியல் இயக்கங்கள் பற்றிய கேள்விகள் எழுகின்றன. அதுபற்றிப் பார்கமும் முன் கலாச்சாரத்தின் உலக மயமாக்கல் பற்றி ஒரு சிறுகுறிப்பு.

## கலாச்சார உலகமயமாக்கல்

கலாச்சாரத்தின் பண்டமயமாக்கல் - (அதாவது சந்தைமயமாக்கல்)—புதிய நிகழ்வல்ல. ஆயினும் புதிய தகவல்புரட்சி கலாச்சாரத் தொடர்புகளையும் கலாச்சாரத்தின் சந்தைமயமாக்கலையும் மிகவும் வேகப்படுத்தியுள்ளது. கலாச்சாரங்களுக்கிடையிலான தொடர்புகள் மனித நாகரீகத்தின் ஆரம்பத்திலிருந்தே

www.tamilarangam.net

இடம்பெற்று வருவது, ஒரு கலாச்சாரம் மறுகலாச்சாரத்தின் செல்வாக்குக்கும் ஆதிக்கத்திற்கும் ஆளாவது வரலாற்று அனுபவம்.

இன்று கலாச்சார உலகமயமாக்கலில் பல போக்குகளைக் காணலாம். ஒரு பிரதான போக்கு, தொடர்பு சாதனங்களினூடாக பல்வேறுபட்ட விளம்பரங்கள், நிகழ்ச்சிகள் நம் மத்தியில் ஏற்படுத்தி வரும் நுகர்வு சம்பந்தமான விழுமிய மாற்றங்கள் ஆகும். உடை, உணவு, பொழுதுபோக்கு போன்ற அன்றாடத் தேவைகளின் நுகர்வு உலக சந்தையுடன் மேலும் பின்னிப் பிணையப்பட்டுள்ளது. ஒருபுறம் உற்பத்தி, மறுபுறம் நுகர்வு இவை இரண்டுமே கலாச்சார உலகமயமாக்கலுடன் ஒருங்கிணைகின்றன. கவர்ச்சிகரமான விளம்பரங்களை நுகர்வாளர்கள் பெறுகிறார்கள். இவ்விளம்பரங்கள் நுகர்வாளர்களின் கேள்வி பற்றிய முடிவுகளை நிர்ணயிப்பதில் பெரும் செல்வாக்குடையன. விளம்பரங்களின் மனோவியல்ரீதியான தாக்கங்கள், நுகர்வாளர் இறைமை (Consumer Sovereignty) எனும் தாராளவாதப் பொருளியல் கோட்பாட்டினை என்றோ காலாவதியாக்கிவிட்டன. ஆகவே நுகர்வாளர் தமது விருப்பின் அடிப்படையிலேயே சுதந்திரமாக தமது கேள்வியை சந்தையினூடாக வெளிப்படுத்துகிறார்கள் என்னும் கருத்து கட்டுக்கதையாகும். கடந்த சில பத்தாண்டுகளாக நுகர்வுவாதம் (Consumerism) உலகமயமாக்கப்பட்டு வருகிறது.



பண்டங்கள் பற்றி விளம்பரங்கள் தரும் தகவல்கள் பூரணமாக இருப்பதில்லை. குறிப்பாக மனித சுகாதாரத்தையும், சூழலையும் குறிப்பிட்ட பண்டங்கள் எப்படி பாதிக்கின்றன என்பது பற்றிய தகவல்களை வர்த்தக விளம்பரங்கள் முடிந்தவரை தவிர்த்துக் கொள்கின்றன. அதேவேளை நுகர்வுப் பொருட்களின் இரசாயண உள்ளடக்கம் பற்றிய, அவற்றின் உற்பத்தி சூழலைப் பாதிப்பது பற்றிய தகவல்களை நுகர்வாளர்கள் தேடும் மரபும் இப்போது வளர்ந்து வருகிறது. ஆயினும் இத்தகைய தகவல்களை வேறு வழிகளுனூடாகவே பெறமுடிகிறது. இன்று சூழல் பாதுகாப்பு பற்றி சமூக கலாச்சார விழுமியங்கள் பரவத்தொடங்கியுள்ளன. இதற்கு தகவல் தொழில்நுட்பம் உதவுகிறது. சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றிய உணர்வு உலகமயமாக்கப்படுகிறது. இது ஒரு அரசியல் கலாச்சாரப் போக்காகும். இதன் விளைவாக நச்சுப்படுத்தப்பட்ட சூழலைப் புனரமைக்கும் தொழில்நுட்பத்திற்கான கேள்வி வளர்வதைக் காணும் TNCகள் சூழல் தொழிநுட்ப உற்பத்தியிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளன. இலாபநோக்கினால் உந்தப்படும் மூலதனம் தனது இயக்கத்தின் விளைவாக வரும் வியாதிக்கான மருந்தினையும் இலாப நோக்கத்திற்காகப் பணிய வைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது ஒன்றும் புதிய கதையல்ல.

கலாச்சார சந்தையினூடாக, கல்வியினூடாக மேற்கத்திய, குறிப்பாக வடஅமெரிக்க கலாச்சாரத்தின் மேலாதிக்கம் பலம் பெற்றுள்ளது. பொழுதுபோக்கு சந்தைமயமாகியுள்ள நிலையில் மலிவான கலாச்சார உற்பத்திகளைச் செய்வதில் USA முன்நிற்கிறது. இன்று ஐரோப்பாவிலும் திரைப்படம், இசை போன்ற துறைகளில் அமெரிக்க செல்வாக்கும் ஆதிக்கமும் எழுவதைக் காணலாம். அமெரிக்காவின் கலாச்சார ஏகாதிபத்தியம் பற்றி தெற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் கேள்விப்படுகிறோம். கடந்த நூற்றாண்டிலிருந்து கலாச்சாரத்தைச் சந்தைமயமாக்குவதில் USA முன்னணியில் இருந்து வருகிறது.

கலாச்சாரத்தின் சந்தைமயமாக்கலும் மேற்கத்திய மேலாதிக்கமும் பிரதான போக்காயிருக்கும் அதேவேளை, கலாச்சாரங்களின் சங்கமிப்பையும் புதிய கலை இலக்கிய வடிவங்களின் கண்டுபிடிப்புக்களையும் காண்கிறோம். இப்போது இங்கிலாந்தில் Asian Rap பிரபல்யமாகி வருகிறது. உபகண்டத்திலிருந்து பிரித்தானியாவிற்குச் சென்று குடியேறியவர்களின் இளைய சந்ததியினர் Asian Rap இசையை உருவாக்கியுள்ளனர். சிலகாலத்திற்கு முன்னர் "Peter Brook" மகாபாரதத்தை ஒரு நீண்ட ஆங்கில நாடகமாக்கினார். இதில் உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் தமக்கே உரிய ஆங்கில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உச்சரிப்புடன் பேசி நடித்தார்கள். இந்த நாடகத்திற்குப் பரவலான வரவேற்பு இருந்தது. ரஷ்யாவில் பிறந்தவரும் பிரான்சில் வாழ்பவருமான Ariane Mnouchkive ஷேக்ஸ்பியரின் நாடகத்தை ஜப்பானிய கபுக்கி (kabuki) முறையில் பாரிசில் அரங்கேற்றியுள்ளார். பிரபல நோர்வேஜிய நாடகாசிரியர் இப்சனின் "மக்கள்விரோதி" எனும் நாடகத்தை வங்காள மொழியில் மேற்கு வங்கத்து நிலைமைகளுக்கு ஏற்ப உருவாக்கியுள்ளார் ஒரு வங்காளக் கலைஞர். இப்படியான பல முயற்சிகள் இடம்பெறுவதையும் காண்கிறோம். இவை வரவேற்கப்பட வேண்டியவையே. அதேபோன்று நவீன தொழில்நுட்பங்களை கலாச்சார ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பயன்படுத்தும் வாய்ப்புக்களும் கூடியுள்ளன.

ஆயினும் கலாச்சாரத்தின் சந்தைமயமாக்கல், விமர்சன மரபுசார்ந்த காத்திரமான கலை இலக்கியச் செயற்பாடுகளை மேலும் கடினமாக்கியுள்ளதென்பது வருத்தம் தரும் உண்மையாகும். மேற்கத்தைய நாடுகளில் இந்நிலையைப் பொதுவாகக் காணலாம். இலாபம் பெறமுடியுமாயின் விமர்சனக் கலாச்சார செயற்பாடுகளையும் சந்தைமயமாக்க பல நிறுவனங்கள் தயாராயிருக்கின்றன. எழுத்துத் துறையில் இதைக் காண்கிறோம். அதேபோன்று இடைக்கிடை ஒரு தரமான திரைப்படம் வெளிவருவதையும் காண்கிறோம். திரைப்பட உற்பத்தியிலும் ஐரோப்பா சுயபோட்டிச்சந்தைக் கொள்கைகளையே பின்பற்ற வேண்டுமென USA நிர்ப்பந்திப்பதால் ஐரோப்பிய நாடுகளில் முன்புபோல் திரைப்பட உற்பத்தியாளர்களுக்கு இப்போது அரசமானியங்கள் கிடைப்பதில்லை. அதேவேளை அமெரிக்கத் திரைப்படங்களுக்கு ஐரோப்பாவில் பெரிய கிராக்கி.

கலாச்சார ஏகாதிபத்தியதிற்கு எதிராக கலாச்சார சர்வதேசியத்துவமும், பல்கலாச்சாரங்களின் பெருக்கமும் குறிப்பிட்ட கலாச்சாரங்களின் செறிவான வளர்ச்சிக்கான சுதந்திரமும் தேவை என்பதையே இன்றைய உலகநிலை காட்டுகிறது. இதற்கு புதிய தகவல் தொழிநுட்பம் பயன்படும்.

## அரசும் சிவில் சமூகமும்

சந்தை அடிப்படைவாதம் 'குறைந்தபட்ச அரசு'வாதத்தை நியாயப்படுத்துகின்றது. இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல். அதேவேளை அரசின் ஆதிக்கம் குறைக்கப்படுவது, சிவில் சமூகத்தினை உண்மையான சுயாதீன சமூகமாக்க உதவுவதாகும், அதனால் மனித சுதந்திரம் வளரும், அடிப்புலம் விரிவுபெறும் என்றும் உலகமயவாதிகள் சொல்கிறார்கள். இவர்களில் ஒரு குழுவினர் உலகமயமாக்கல் தேசிய எல்லைகளையும் அரசுகளையும் காலாவதியாக்கிவிட்டது அல்லது காலாவதியாக்கி வருகிறது எனக் கூறுகின்றனர். இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு பொதுமையாக்கல் என்பதற்கான சில காரணங்களை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். சுருங்கக்கூறின், மூலதனத்திற்கு தேசிய எல்லைகள் தடையில்லை. இயற்கை வளங்களின் ஏற்றுமதி இறக்குமதிக்கும் அவை தடையாக இல்லை. நுகர்வுப் பொருட்களின் நகர்ச்சிக்கும் அவை தடையில்லை. ஆனால் மனிதரின் நடமாட்டத்திற்கு, சுதந்திரமான நகர்ச்சிக்கு அவை பெருந்தடைகளாகியிருக்கின்றன. இங்கேதான் தேசிய அரசுகளின் அல்லது தேசிய அரசுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் தேசியத்துவத்தை நாம் நேரடியாகச் சந்திக்கிறோம். இது பற்றிப் பார்க்குமுன் தெற்கத்திய நாடுகளின் அரசு, சிவில் சமூகம் பற்றிப் பார்ப்போம்.

இன்று சிவில் சமூகம் பற்றி பேசாதவர்கள் இல்லை. ஒரு மீள்கண்டுபிடிப்பு போன்று அது முக்கியமாகிவிட்டது. சிவில் சமூகத்திற்கு முரண்பட்ட விளக்கங்களைக் காண்கிறோம். வரலாற்று நோக்கில் பார்க்கும் போது ஆரம்பகால தாராளவாதிகள் சிவில் சமூகத்தினை அரசிடமிருந்து தனிமனிதரைப் பாதுகாக்கும் ஒரு பகுதியாகக் கருதினர். தாராளவாதக் கோட்பாடுகளின்படி சிவில் சமூகமானது, மனித உரிமைகளும் சட்டத்தின் அமுலாக்கமும் இடம் பெறும் சமூகப்புலமாகும். இதன் இருப்பிற்கு அரசு உத்தரவாதம் கொடுக்கிறது. தாராளவாத தத்துவத்தினைச் சார்ந்தோராகவும் 18ஆம் நூற்றாண்டின் அறிவொளி (Enlightenment) யுகத்தின் அரசியல் பொருளியல் சிந்தனையாளராகவும் விளங்கிய அடம்

www.tamilarangam.net

ஸ்மித் போன்றோர் சிவில் சமூகத்தை நவீன பொருளாதார செயற்பாடுகளின் உறைவிடமாகவும், மனிதர் பகுத்தறிவின் உதவியுடன் தமது சுய நலனை சமூக விதிகளுக்கமைய அனுபவிக்கும் புலமாகவும் கருதினர். இந்தச் சிந்தனைமரபில் சிவில் சமூகத்தின் வருகை தனிமனிதரின் பொருளாதார சுதந்திரத்தையும் பகுத்தறிவுவாதத்தின் மேலாட்சியையும் நிரந்தரமாக்குகிறது. Hegel சிவில் சமூகத்தை அரசின் சர்வலோக தர்க்கவியலுக்கும் குடும்பத்திற்கும் இடையேயுள்ள ஒரு கட்டமாகக் கருதினார். மார்க்ஸ் சிவில் சமூகத்தினை சுயாதீனம் கொண்ட ஒரு புலமாகவும் அங்கு பண்ட உற்பத்தியின் விதிகளுக்கேற்ப பரிமாற்றங்கள் இடம் பெறுவதாகவும் குறிப்பிட்டார். இந்தக் கருத்தில் பொருளாதாரமும் அரசியலும் ஒன்றிணைந்த பழைய சமூகங்களின் நிலை மாறி, நவீன சமூகத்தில் பொருளாதாரம் பெற்றுள்ள சுயாதீனத்தின் பிரதிபலிப்பாக சிவில் சமூகம் விளங்குகிறது. கிராம்சியின் கருத்தில் சிவில் சமூகமானது அரசு தனது மேலாட்சியை (Hegemony) செலுத்தும் புலமாக இருக்கிறது.

இப்படியாக சிவில் சமூகம் பற்றிப் பலவிதமான விளக்கங்கள். இன்று சிவில் சமூகம் அரசிற்கும் குடும்பத்திற்கும் இடையே அமைந்துள்ள பகுதியாகவே பரவலாகக் கருதப்படுகிறது. இந்தப் புலமானது அரசுசாரா அமைப்புக்கள் இயங்கும் புலமாகவும், பலவிதமான சமூக இயக்கங்கள் செயற்படும் புலமாகவும் கருதப்படுகிறது.

இன்று புழக்கத்தில் இருக்கும் கருத்தின்படி சிவில் சமூகத்தை நோக்குவோமாயின், அங்கு அரசின் ஆதிக்கம் பலவகையில் இருப்பதை மட்டுமன்று, சிவில் சமூகம் பலவிதமான பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளையும் கொண்டிருப்பதையும் காண்கிறோம். இங்கே மரபுரீதியான சாதிய அமைப்புக்களால் தொடர்ந்தும் நசுக்கப்படுவோரைக் காண்கிறோம். வர்க்க வேறுபாடுகளையும் அவற்றின் அடிப்படையிலான அந்தஸ்து, மற்றும் அதிகார வேறுபாடுகளைச் சந்திக்கிறோம். இங்கு உரிமை அமைப்புக்கள், புதிய சமூக இயக்கங்கள், புரட்சிகர அரசியல் அமைப்புக்களை மட்டுமன்றி, மத அடிப்படையவாத அமைப்புகளையும், இனவாத, நிறவாத அமைப்புக்களையும் காண்கிறோம். இங்கே பெண்ணுரிமை இயக்கங்களைக் காணும் அதேவேளை, ஆணாதிக்கம் மிகுந்த நிறுவனங்களையும் காண்கிறோம்.

இவற்றையெல்லாம் மனதில் கொள்ளும்போது சிவில் சமூகம் மனித சுதந்திரங்களின் இயற்கையான உறைவிடம் என்றோ, அங்கு ஜனநாயக உரிமைகளுக்கான செயற்பாடுகள் மட்டுமே முக்கிய பங்கினை வகிக்கின்றன என்றோ கருத இடமில்லை. ஆயினும் பலர் சிவில் சமூகம் பற்றிய அத்தகைய சுலோகங்களை முன்வைப்பதைக் காண்கிறோம். நடைமுறையில் சிவில் சமூகம் ஒரு போராட்டக்களமே. சிவில் சமூகத்திலேயே தனிநபர்கள் தமது சமூகத்தன்மையைப் பெறுகின்றனர், உணர்கின்றனர். ஜனநாயக அரசு இல்லாத நாட்டின் சிவில் சமூகத்தில் ஜனநாயகம் இருப்பது சாத்தியமில்லை. ஆனால் அங்குதான் ஜனநாயகத்திற்கான போராட்டங்கள் இடம்பெற வேண்டும். சிவில் சமூகத்தை மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களின் புலமாக மாற்றுவது ஒரு அரசியல், சமூக கலாச்சார சவாலாகும்.

சிவில் சமூகத்தின் மீது தனது அரசியல் கலாச்சார ரீதியிலான மேலாட்சியை நிலைநாட்ட அரசு தொடர்ச்சியாக முயற்சித்த வண்ணமிருக்கிறது. ஆயினும் இன்று தேசிய அரசுகளை தமது அரசியல் கலாச்சார மேலாட்சிக்குள்ளாக்கவே USAன் தலைமையிலான மேற்கத்திய அணி விடாமுயற்சி செய்து வருகிறது. நவீன தொடர்புசாதன நுட்பத்தின் உதவியுடன் அரசின் அனுமதியின்றி மக்கள் மீது அரசியல் கலாச்சாரச் செல்வாக்கினைச் செலுத்தக்கூடிய நிலையில் உலக மூலதனம் இருக்கின்றது. அதேவேளை தேசியஅரசுகள் விரும்பாத கருத்துக்கள் சிந்தனைகள் மக்களைச் சென்றடையும் வாய்ப்புக்கள் கூடியுள்ளன. இந்த நிலையில் சிவில் சமூகம் மீதான தனது மேலாட்சியை நிலைநாட்ட சட்டங்களையும் அரச இயந்திரத்தின் கலாச்சார நிறுவனங்களையும் மேலும் பலமாகப் பயன்படுத்த அரசு முனைகிறது. சிவில் சமூகத்தின் சில அமைப்புக்களுக்கு அரசு உதவிகளைச் செய்வதையும் காணலாம். அரசின் தன்மையைப் பொறுத்து இந்த அமைப்புக்கள் தெரியப்படுகின்றன. அரசின் கருத்தியலை, அரசியல் கொள்கையை ஆதரிக்கும் அமைப்புக்களுக்கு உதவி கிடைக்கிறது. அரசுசாரா நிறுவனங்கள் அரசினால்

www.tamilarangam.net

உருவாக்கப்படுகின்றன. சுயமாக இயங்கும் நிறுவனங்களை பல உதவிகளைக் காட்டி தன்பால் ஈர்க்கிறது அரசு.

இன்று சிவில் சமூகத்தில் அரசின் மேலாதிக்கம் பற்றிப் பார்க்கும் போது ஏற்கனவே குறிப்பிட்ட உலகப் போக்குகளையும், அவற்றுடனான அரசின் உறவுகளையும் புரிந்துகொள்ளல் அவசியம். சிவில் சமூகத்தில் அரசின் மேலாதிக்கத்தை மட்டுமல்ல, மனித சுதந்திரத்தைப் பாதிக்கும் சர்வதேச போக்குகளின் மேலாதிக்கத்தையும் இனங்காணுதல் அவசியம். இந்த மேலாதிக்கத்தை எதிர்க்கும் போராட்டமும் அரசியல், சமூக, கலாச்சார பரிமாணங்களைக் கொண்டிருக்க வேண்டும். இன்று பல நாடுகளில் உலகமயமாக்கலின் எதிர்ப்புக்கள் பிற்போக்கான மதஅடிப்படைவாதிகளிடமிருந்து, கலாச்சார-தேசியவாதிகளிடமிருந்தே பலமாக எழுகின்றன. இவை மனித சுதந்திரத்திற்கான போராட்டங்களை மழுங்கடிக்கவே பயன்படுகின்றன. இப்படிச் சொல்வதால் இனங்களின் தனித்துவத்திற்கோ அல்லது அவற்றுக்கிடையிலான சமத்துவத்திற்கோ, சுயநிர்ணயத்திற்கோ எதிர்ப்பு என்ற முடிவுக்கு வருவது தவறு. இவற்றையெல்லாம் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கங்களாக மீண்டும் சிந்திக்க வேண்டும். உலகமயமாக்கலின் மனித சுதந்திர மறுப்புத் தன்மைகளை எதிர்த்து உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் போராடுதல் அவசியம். வேறுவிதமாகச் சொல்வதானால், உலகமயமாக்கலைப் பின்னோக்கிய குறுகிய கலாச்சார தேசியவாத நோக்கில் எதிர்ப்பது மனித விடுதலைக்கு உதவமாட்டாது. மக்கள் ஜனநாயகப் புரட்சியை உலகமயமாக்குதலே இன்றைய கடமையாகும். உள்ளூர், தேசிய மட்டத்திலான மக்கள் ஜனநாயகப் போராட்டங்கள், சர்வதேச இணைப்புக்களை தேடுவதன் மூலம் ஜனநாயகப் புரட்சியின் உலகமயமாக்கலுக்கு உதவமுடியும். இந்த இணைப்புக்கள் அயல் நாடுகளுக்கிடையே ஆரம்பித்து பிராந்திய இணைப்புக்களாக மேலும் சர்வதேசத் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

## உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும்

**சமுத்திரன்**



www.tamilarangam.net

# தீவிர மாற்றுக்கான தேவை

இஸ்த்வான் மெஸரஸுடன்

எலியாஸ் கனலிஸ்

*1 நவீன லட்சியப் பார்வை, மாபெரும் புரட்சிகள், நாஸி எதிர்ப்புப் போர், கிழக்கு ஐரோப்பாவில் சமூக உடைமை (சோசலிச) முறையின் தகர்வு, மீண்டும் சந்தை முறையின் முழு ஆதிக்கம் - இவையெல்லாம் நடந்தது இந்த இருபதாம் நூற்றாண்டில்தான். இந்த நூற்றாண்டை 'அதிதங்களின் நூற்றாண்டு' என அழைக்கிறார் ஹாப்ஸ்பாம். நீங்கள் இந்த நூற்றாண்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

○ இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இந்தக் கேள்வியில் எழுப்பப்பட்டுள்ள செய்திகள் அவற்றினும் கூடிய உட்பொருள் கொண்டவை. முதலில் புரட்சிகளைப் பற்றிப் பார்ப்போம். பாரிய நிலநடுக்கங்களுடன் அவற்றை ஒப்பிடுவது மிகச் சரியாக இருக்கும். அவை மேல்மட்டத்திற்குக் கொண்டுவரும் மலைத்தொடர்களை அப்படியே பெயர்த்தெடுத்து மறுபடியும் பாதாளத்துக்குள் தள்ளிவிட முடியாது. காட்டாக, அதிபர் கென்னடியின் ஆலோசனைக் குழுவின் முக்கிய உறுப்பினரான வால்ட் ரோஸ்டோவின் பழைமைவாத விருப்பக் கருத்தை எடுத்துக்கொள்வோம். 'முதல் உலகப்போர் நடந்திருக்காவிட்டால் அல்லது ஒரு பத்தாண்டு தள்ளி அது நடந்திருந்தால்கூட நிச்சயமாக ருசியா வெற்றிகரமாக நவீன மயத்துக்கு நிலைமாறியிருக்கும்; பொதுவுடைமைத் தத்துவம் அங்கு புகமுடியாதவாறு ஆகியிருக்கும்' என்று சொன்னதன் மூலமே ருசியப் புரட்சியை இல்லாமல் செய்துவிட ஆசைப்பட்டவர் அவர்.

'மெய்நடப்புக்கு மாறான விருப்பங்களால்' ஆன இத்தகைய வாதம், அடிப்படை மெய்யியலின் பாலபாடத்தில்கூட நல்ல மதிப்பெண் வாங்கித் தேறாது. ஆனால் மாபெரும் பிரச்சாரக் கண்ணோட்டமோ அதை ஆழ்ந்த ஞானமெனத் தூக்கிப் பிடிக்கிறது. ஆனால் உண்மையைச் சொன்னால், மாபெரும் புரட்சிகள் யாவும் அவற்றின் அடிப்படைக் காரணங்கள் திர்க்கப்படும் வரைக்கும் பல நூற்றாண்டுகளுக்கு எதிர்முழக்கம் செய்துகொண்டேதான் இருக்கின்றன. முதல் நிலநடுக்கத்துக்கு ஏறக்குறைய இணையான ஆற்றல் உடையனவாகவே தொடர் அதிர்வுகளும் இருக்க முடியும். மேலும் அவற்றின் பொருத்தமுடைமை, முதலில் அவை குமுறிய வட்டாரத்தோடு மட்டும் அடங்குவதல்ல. அப்படித்தான் 1789ல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியானது வட அமெரிக்காவையும் ஐரோப்பா முழுவதையுமே உலுக்கியது. அதன்பின் 210 ஆண்டுகள் கழித்து இன்னும்கூட அது எழுப்பிய கோரிக்கைகள் இன்னும் நிறைவேறாமலே உள்ளன என்னும் முறையில் அதன் வரலாற்றுப் பொருத்தப்பாடு பல வழிகளிலும் தக்கவைக்கப்பட்டே

## The Need for a Radical Alternative

Interview with
István Mészáros

by Elias Kanellis



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறது. விடுதலை - உடன்பிறப்புக் கொள்கை - சமத்துவம் ஆகியவற்றிற்கு என்னதான் நேர்ந்துள்ளது? ஒன்றா, அவை வெகுசன உணர்விலிருந்து அறவே அகற்றப்பட்டிருக்கின்றன; அல்லது ஒரு அதிகாரம்சார் / முறைசார் வெற்றுச் சட்டகமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. உண்மையைச் சொன்னால், பாரீசில் கூடிய பிரெஞ்சுப் புரட்சியின் இருநூறாம் ஆண்டுவிழாவில் பேசிய மார்கரெட் தாட்சர் தன் தரப்பின் வெல்லரிய தன்மையை ஆதரிப்பதற்காக பிரெஞ்சுப் புரட்சிக்கு எதிராக வசைமாரி பொழிந்ததை, கூட்டத்தில் கலந்துகொண்ட உலகின் முக்கிய அரசியல் தலைவர்கள் வெட்கம் கெட்ட முறையில் மரியாதையுடன் செவிமடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

**1917 அக்டோபர் புரட்சிக்குத் தூண்டுதலாக இருந்த சம உடைமை லட்சிய ஆர்வங்கள் மற்றும் அவற்றுக்கான தேவைகள் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றிலிருந்து இன்னும் மறையவில்லை.**

நிறைவேற்றி முடிக்கப்படாமலே பிரெஞ்சுப் புரட்சி புதைக்கப்பட்டமை, அச்செயலில் ஈடுபட்டவர்களின் மடத்தனத்தையும் அரசியல் ஒருசார்பையும் தெளிவாகக் காட்டுகிறது. அப்படியேதான் 1917ல் அக்டோபர்ப் புரட்சி நடந்த இடத்திலும் பத்தாண்டுகளுக்குப் பின் நடந்துவிட்ட நிகழ்ச்சிக்காகவே அப்புரட்சியைக் குழி தோண்டிப் புதைக்க முயல்வதும், அதே விதமான மடத்தனமும் அரசியல் ஓரவஞ்சனையுமே ஆகும். சமூக உடைமையை லட்சிய ஆர்வமாகக் கொண்டிருந்த புரட்சி அது. வரலாற்றிலிருந்து அதைத் துடைத்து அழித்துவிட முடியாது. 1919 ஹங்கேரிய மன்ற (கவுன்சில்) குடியரசு, முதல் உலகப்போரை அடுத்த ஆண்டுகளில் ஏற்பட்ட ஜெர்மானிய எழுச்சிகள், 1927 முதல் 1949 வரை நடைபெற்ற சீனப் புரட்சி, 1957ல் நடந்த கியூபப் புரட்சி, அந்நிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டி ஆப்பிரிக்காவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் நடந்த போராட்டங்கள், அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரில் பெரும் வல்லமையை வெற்றிகரமாக முறியடித்த வியட்நாம் மக்களின் வீரப்போராட்டம் ஆகிய அனைத்தும், 1917ல் அக்டோபர் புரட்சியின் எதிரொலிப்புகளே ஆகும். இந்நாட்களில் சீனாவில் அதன் மக்கள் நீண்டகால அந்நிய ஆதிக்கத்திலிருந்து தம் நாட்டை விடுவித்த தம் புரட்சியின் வெற்றியின் ஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருப்பதையும் நாம் நினைத்துப் பார்க்கலாம். இந்தப் பகுதிகளிலெல்லாம் எந்தவிதமான சிக்கல்களும் முரண்பாடுகளும் இருந்தாலும், 1917 அக்டோபர் புரட்சிக்குத் தூண்டுதலாக இருந்த சம உடைமை லட்சிய ஆர்வங்கள் மற்றும் அவற்றுக்கான தேவைகள் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றிலிருந்து இன்னும் மறையவில்லை.

உலகையே உலுக்கிய எழுச்சிகளை இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்த்தால், இருபதாம் நூற்றாண்டின் சித்திரம், பலரும் - குறிப்பாக இத்தாலியரால் i pentiti என அழைக்கப்படுவோர் பலரும் - இப்போது அதை சித்தரிப்பதை விடவும் எவ்வளவோ உடன்பாட்டுத் தன்மையதாகவே உள்ளது. இதே ஆட்கள்தான் கடந்த காலத்தில் இதே நிகழ்ச்சிகளைப் பற்றிய - நம்ப முடியாத அளவுக்கு - ஒளிமயமான சித்திரங்களைத் தீட்டுவதில் முனைப்பாக ஈடுபட்டவர்கள்.

**மனித லட்சிய ஆர்வங்களும் ஆற்றல்களும் ஒரு அடிப்படையான பண்பு மாற்றத்தை நோக்கி முனைந்து நிற்பதை, அந்தப் (புரட்சியின்) பின்னடைவுகள் -அவை எவ்வளவு பெரியதாயினும் மோசமானதாயினும்- முற்றிலுமாகத் தடுத்து விட முடியாது.**

மொத்தத்தில் நாம் நினைவில் நிறுத்த வேண்டியது: ஒரு சமூக ஏற்பாட்டிலிருந்து (அதாவது இந்த இடத்தில், சமுதாயத்தில் வளர்சிதை மாற்றங்களை ஏற்படுத்தும் மூலதனத்தின் மறுஆக்க முறையிலிருந்து) ஒரு தீவிரமான மாற்று ஏற்பாட்டை நோக்கி (நம் வரலாற்று வானில்

www.tamilarangam.net

சுமார் பத்தாண்டுகளுக்கு சற்று முன்னதாகத் தோன்றி நடந்தேறிய மாற்றத்தை நோக்கி) இயங்குவதென்பது, அளவுகடந்த சிக்கலும் அலைக்கழிப்புமுடைய சமூக நிகழ்முறையாகவே இருக்கிறது. முன்னோக்கி மட்டுமல்ல, மீண்டும் பெரிய பின்னடைவுகளை நோக்கியும் அந்த இயக்கம் நிகழ்கிறது. ஆனால் மனித லட்சிய ஆர்வங்களும் ஆற்றல்களும் ஒரு அடிப்படையான பண்பு மாற்றத்தை நோக்கி முனைந்து நிற்பதை, அந்தப் பின்னடைவுகள் (அவை எவ்வளவு பெரியதாயினும் மோசமானதாயினும்) முற்றிலுமாகத் தடுத்துவிட முடியாது.

**உலக மக்கள் தொகையில் பாதி தம் வாழ்க்கை நிலைமைகளை மறுஆக்கம் செய்து கொள்வது 'உலகமய சந்தைகளின் முற்றுரிமை' விதிகளுக்கு ஏற்ப அல்ல.**

'உலகமய சந்தைகளின் முற்றுரிமை'ப் பொருத்தவரை, அதற்குப் பல முகாமையான தகுதிகள் தேவைப்படுகின்றன:

1) அவற்றில் எல்லாம் அடிப்படையானது - என்னதான் முதலாளியத்தின் வெற்றிப் பெருமை உலகளாவியதாக இருந்தாலும் - உலக மக்கள் தொகையில் பாதி தம் வாழ்க்கை நிலைமைகளை மறுஆக்கம் செய்து கொள்வது 'உலகமய சந்தைகளின் முற்றுரிமை' விதிகளுக்கு ஏற்ப அல்ல. பெரும் மக்கள் தொகை கொண்ட இந்தியாவின் பெரும்பான்மை மக்களை நினைத்துப் பாருங்கள். அல்லது 125 கோடிச் சீனர்களில் 100 கோடிக்கும் மேலானோரை நினைத்துப் பாருங்கள். ஒப்பீட்டளவில் சீனாவின் சிறிய முதலாளிய ஆட்சிப் பகுதியையும் முதலாளியமல்லாத சீன அரசின் ஒட்டுமொத்த அரசியல் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பகுதியையும் பற்றி நாம் பேச முடியும். இத்துடன் ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதியையும் நாம் சேர்த்தாக வேண்டும். (எ.கா.: இந்தோனேசியாவில் பல கோடிக் கணக்கான மக்கள் தன்னிறைவுச் சாகுபடி செய்து வருகிறார்கள். எனவே 'சந்தை முறையின் முழு ஆதிக்கம்' பற்றி அவர்கள்முன் பேசும் பேச்செல்லாம் தரங்கெட்ட நக்கல் பேச்சாகவே தோன்றும்). இவற்றுடன் லத்தின் அமெரிக்காவின் புறக்கணித்துவிட முடியாத ஒரு பரப்பையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ருசியாவிலும்கூட, கோர்ப்பச்சேவின் தீவினைப்பட்ட பதினைந்தாண்டு முயற்சிகளுக்குப் பிறகும்கூட, குற்றக் கும்பல்கள் மலிந்த பெருநகரங்களைத் தவிர பிற இடங்களில் முதலாளியத்தை மீண்டும் கொணர்வதில் தோல்வியே ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். கோடிக்கணக்கான ருசியத் தொழிலாளிகள் மாதக் கணக்கில் ஊதியம் பெறாது இருக்கிறார்கள். அவர்களில் பலருக்கு ஒன்றரை ஆண்டுகளாகக்கூட சம்பளம் தரவில்லை. இப்படிக் கூலி தராமலே 'சந்தைப் பொருளியலை' நடத்திப் பாருங்கள், பார்ப்போம்!

இந்தக் காட்டுகளில் எல்லாம், ஒரு உலகளாவிய அமைப்பு என்னும் முறையில் தன் முழுமையான முதலாளிய வடிவை நிறைவு செய்வதில் முதலாளிய அமைப்பு மாபெரும் வரலாற்றுத் தோல்வி கண்டிருப்பதையே நாம் சந்திக்கக்கூடியதாய் உள்ளது. மேலும் முதலாளிய வளர்ச்சி முறையின் உள்ளார்ந்த, தாங்க முடியாத - தடுக்க முடியாத சூழலியல் நட்டம் / நாசம் உட்பட ஏராளமான கடுமையான காரணங்களுக்காக வருங்காலத்தில் 'முன்னேறிய முதலாளியம்' அதன் 'முற்றுரிமைச் சந்தை'யுடன் உலகளவில் முழுமை அடைவதை நினைத்துப் பார்க்கக்கூட

**ஒரு உலகளாவிய அமைப்பு என்னும் முறையில் தன் முழுமையான முதலாளிய வடிவை நிறைவு செய்வதில் முதலாளிய அமைப்பு மாபெரும் வரலாற்றுத் தோல்வி கண்டிருப்பதையே நாம் காண்கிறோம்.**

www.tamilarangam.net

முடியாதிருக்கிறது!

2) முதலாளிய மேற்கிலும்கூட 'சந்தை முறையின் முற்றான ஆதிக்கம்' என்பதை விமரிசன வரம்புகளோடு / திருத்தங்களோடு தான் அணுக வேண்டும். கிழக்கில் பல அரசியல் கிண்டல்கள் வழங்கி வருகின்றன. அவை எரவான் வானொலியிடம் கேட்கப் படும் கேள்விகளின் வடிவில் உள்ளன. அவற்றில் ஒன்று இப்படிப் போகிறது: 'சனிக் கிழமை அன்று மாஸ்கோ சதுக்கத்தில் வைத்து அமெரிக்க சொகுசுக் கார்கள் கொடுக்கப்படும் உண்மையா?' பதில் வருகிறது: 'ஆம் தோழர் - அது முற்றிலும் உண்மைதான். ஆனால் அதில் மூன்று திருத்தங்கள் (1) அவை அமெரிக்கா வுடையதல்ல, ருசியாவுடையது; (2) அவை கார்கள் அல்ல, சைக்கிள்கள்; (3) அவை கொடுக்கப்படுவதில்லை, எடுக்கப்படும்'.

நமது 'முற்றுரிமைச் சந்தைகள்' மற்றும் அவற்றின் 'முழுவீச்சான போட்டி' என்பது பற்றியும் ஏறக்குறைய இதேவிதமான திருத்தங்களைச் சொல்லியாக வேண்டும். மூன்று முக்கிய வரம்புகள்:

அ) ஒவ்வொரு முதலாளிய நாட்டிலும் ஒன்றை ஒன்று மீறும் முற்றுரிமையை நோக்கிய வளர்ச்சிகளையே நாம் காண்கிறோம். (இப்போக்கு சந்தையின் முழு ஆதிக்கத்துக்கு உதவுவதாக இல்லை, மாறாக அதன்மீது குறுக்கு ஆதிக்கம் செய்வதாகவே உள்ளது என் பது தெளிவு. இந்தப் போக்கு சந்தை முறையை எல்லா விதத்திலும் கீழறுக்கவும் இறுதியாக அதற்குக் கேடு சூழவுமே ஆகும்).

ஆ) நமது 'முற்றுரிமைச் சந்தைகள்' அரசின் பேரளவான பாது காப்பு நடவடிக்கை களைச் சார்ந்தே நிலவுகிறது. (இதற்கு 'சாதாரண விவசாயக் கொள்கை'களில் இருந்து 'ஏற்றுமதி உத்திரவாதங்கள்' வரை, முதலாளியத் தொழில் நிறுவனங்கள் தம் விருப்பப்படி பயன்படுத்த பெருமளவான ஆய்வுநிதிகளை இலவசமாக அனுமதிப்பது முதல் 'ராணுவ தொழில்துறையில்' பெருமளவான தொகைகளை கொட்டுவது வரை எடுத்துக்காட்டலாம்).

இ) தற்போது நிலவும் அதிகார உறவுகளுக்குத் தக்க 'நாடுகடந்த உலகமய' மானது பொருளியல் சந்தை உறவுகளை மேலாதிக்க வல்லரசாகிய அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கு ஆதரவாக பிரம்மாண்டமாகத் திரிக்கிறது. அய்க்கிய அமெரிக்கா தன்னிட முள்ள எல்லாக் கருவிகளைக் கொண்டும் அதன் 'நேரடிப் பொருளியல் தேசியத்தை' நடைமுறைப்படுத்தும் என்பதை மிகத் தெளிவான சொற்களில் வெளியிட அதிபர் கிளிண்டனின் முன்னாள் தொழில்துறைச் செயலர் ராபர்ட் ரீக் தயங்கவில்லை.

அய்க்கிய அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளியும், தானுமே ஒரு ஆதிக் கத் தொழில் துறை ஆற்றலுமாகிய பிரிட்டனே கூட, வெளிப்படையாகவே அநீதியான இந்த அதிகார உறவுகளின் தர்க்கத்தால் துன்புற நேர்கிறது. இதற்கு மார்கரெட் தாட்சரின் அரசாங்கத்திலுள்ள மிக முக்கிய உறுப்பி னர்களில் ஒருவராகிய மைக்கிள் கெசல்ட் டைன் - அவரது பதவிவிலகல் உரையில்தான் என்றாலும் - குறிப்பிட்டுச் சொல்லும் முறை யில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டி வந்தது: யு.எஸ்.ஸின் 'தொழில்நுட்ப பரிமாற்ற ஒழுங்குமுறைகள், அமெரிக்க பாதுகாப்புச் சட்டங்கள், பெண்டகன் மூலம் ஒருங்கி ணைக்கப்பட்டு பேராயத்தால் பாதுகாக்க படும் ஆட்சி எல்லைக்கு அப்பால்பட்ட கட்டுப் பாடுகள்' ஆகியவற்றில் பிரிட்டனுக்கு ஏற்படும் எதிரான விளைவுகளுக்கு அவர் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டி வந்தது. மேலும் 'உலகி லுள்ள மிகப்பெரிய - மிகப்பணக்கார குழுமங்களுக்குள் (யு.எஸ். ஸின்) நிதிகள் பெருமளவில் குவிக்கப்படுகிறது. இந்தப் போக்கு

**அய்க்கிய அமெரிக்கா தன்னிட முள்ள எல்லாக் கருவிகளைக் கொண்டும் அதன் 'நேரடிப் பொருளியல் தேசியத்தை' நடை முறைப்படுத்தும் என்பதை மிகத் தெளிவான சொற்களில் வெளியிட அதிபர் கிளிண்டனின் முன்னாள் தொழில்துறைச் செயலர் ராபர்ட் ரீக் தயங்கவில்லை.**

www.tamilarangam.net

தடையின்றித் தொடர்ந்தால் உலகின் முன்னேறிய தொழில் துறைகளை எல்லாம் ஒவ்வொன்றாக விலை பேசி அது வாங்கிக் கொண்டே போய்விடும்'. இந்த நடப்புக்கு எதிராகவும் அவர் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அப்படியானால் நமது தொழில்துறை மற்றும் அரசியல் ஆண்டைகள்தான் - குறிப்பாக, அமெரிக்கர்கள்தான் - 'சந்தை முறையின் முழு அதிகாரத்துக்கு' வரம்பிடுவது எவ்வாறு என்பதற்கான எரவான் வானொலி ஞானத்தின் பிறவிச் சீடர்களாக இருந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ●




*2 வரும் ஆண்டுகளில் மெய்யியலுக்கும் மெய்யியலார்க்கும் இடமுண்டா? அவர்களின் தற்காலப் பாத்திரத்தை எவ்வாறு நீங்கள் வரையறுப்பீர்கள்? மெய்யியலுக்கும் அரசியலுக்கும் தொடர்பு உள்ளதா?*

○ உள்ளது: சொல்லப் போனால் முன் எப்போதையும் விட அதிகமாகவே. ஏனென்றால் அறிவு உற்பத்தியானது - முதலின் அதிகார ஆணைகள் மற்றும் உறுதியான முடிவுகளின் அழுத்தத்தின் கீழ் - எண்ணற்ற சிறப்புத் துறைகளாக பிரிவுபடும் போக்கிலுள்ளது. இதனால் முழுமையான - அனைத்தளாவிய பரிமாற்றத்துக்கு பெரும் தீங்கு நேர்கிறது. ஆனால் முழுமையான - அனைத்துத் தழுவிய துறைகளில் ஈடுபடாமல் மெய்யியல் ஒதுங்கியிருக்க முடியாது. இப்போது மேலோங்கி நிற்கும் பாணிகளில் புறக்கணிக்கப்படுவதாலேயே அத்தகைய துறைகள் தாமே மறைந்து விடுவதில்லை. இந்தப் புறக்கணிப்பில் ஒரு வலுவான கருத்தியல் தீர்மானமும் இருக்கிறது. ஆளும் அமைப்பு தன்னை முற்றிலும் கேள்விக்கு இடமற்ற அதிகாரமாகக் கருதிக் கொள்கிறது. பெயரளவு திருத்தப்பாடுகளுக்கான வாய்ப்பை (மற்றும் நியாயப் பாட்டை) மட்டுமே அது ஏற்றுக் கொள்கிறது. ஆனால் முழுமையான - அனைத்துத் தழுவிய மாற்றுகளின் உயிர்ப்பாற்றலுக்கு ஒருபோதும் அது ஒப்புதல் தருவதில்லை. இந்த நிலைபாட்டை மட்டும் மெய்யியல் ஏற்றுக் கொண்டு விட்டால் அது மெய்யியலின் தற்கொலைக்கு ஒப்பாகும்.

மெய்யியலுக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பு தேவையான ஒன்றே. ஒவ்வொருவர் வாழ்வையும் அரசியல் பாதிக்கிறது. யாரும் அதற்கு அப்பால்பட்டு நிற்க முடியாது. இதனால்தான் 'அரசியல் மிக மிக முக்கியமானது, எனவே அரசியல்வாதிகளிடமே அதை விட்டுவிட முடியாது - அவர்கள் எவ்வளவு தொலைநோக்கு உடையவர்களானாலும்' என்றே என் மாணவர்களிடம் எப்போதும் நான் கூறுகிறேன். வரலாற்றின் போக்கில் முழுமையான - அனைத்துத் தழுவிய முடிவெடுக்கும் அதிகாரம் சமூகத் தனிமனிதர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு தொழில்முறை அரசியல்வாதிகளால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலை, மட்டுமீறிய அநீதியும் கண்டிப்பாக ஆதரிக்க முடியாததும் ஆகும். மெய்யியலார் - தொல் கிரேக்கரிலிருந்து இன்றுவரை - நிலைமையை சீர்திருத்தும் நிகழ்முறையில் செயலூக்கத்துடன் தலையிட முயன்றார்கள். எனவே மெய்யியலுக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவு மகிழ்ச்சியளிப்பதாக

**இந்தப் (மெய்யியலின்) புறக்கணிப்பில் ஒரு வலுவான கருத்தியல் தீர்மானமும் இருக்கிறது. ஆளும் அமைப்பு தன்னை முற்றிலும் கேள்விக்கு இடமற்ற அதிகாரமாகக் கருதிக் கொள்கிறது. பெயரளவு திருத்தப்பாடுகளுக்கான வாய்ப்பை (மற்றும் நியாயப்பாட்டை) மட்டுமே அது ஏற்றுக் கொள்கிறது.**

**இந்த நிலைபாட்டை மட்டும் மெய்யியல் ஏற்றுக் கொண்டுவிட்டால் அது மெய்யியலின் தற்கொலைக்கு ஒப்பாகும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதில்லை என்பதில் வியப்படைய ஒன்றுமில்லை. இந்தக் கருத்துக்கு விளக்கமாக பிளாட்டோ, கேம்பனெல்லா, ஜியார்த்தனோ, புருனோ, மாக்கியவல்லி, ஹோப்ஸ், ஸ்பினோசா, மார்க்ஸ், கிராம்சி, லூகாக்ஸ் ஆகிய பெயர்களை இங்கு குறிப்பிட்டாலே போதுமானது. இவர்கள் அனைவரும் அரசியலில் செயலூக்கத்துடன் தலையிட்ட தற்காகக் கடுமையாகத் துன்புறவே வேண்டியிருந்தது.

இவ்வகையில் இன்றுள்ள சவால் மிகவும் பெரியது - அதுவும் அரசியலுக்கே நேரிட்டுள்ள ஆழமான நெருக்கடிச் சூழலில் அது மிகவும் பெரியது. அரசியல் என்பது 'சாத்தியமாவதன் கலை' என்ற பழைய இலக்கணத்தை நாம் அறிவோம். ஆனால் அரசாங்க ஞானத்தின் எல்லா மட்டத்திலும் மாற்று என்பது கிடை யாது' என்று கூறப்படுவதையும் அதைவிட அடிக்கடி நாம் அறிய வருகிறோம். முகத்தைச் சுளிக்கும் அளவுக்கு அதை திரும்பத் திரும்ப மார்கரெட் தாட்சர் கூறுவது வழக்கம். அவர் அடிச்சுவட்டில் மிக்கேல் கோர்ப்பசேவும் அப்படியே கூறினார். மாற்று ஒன்று இருக்க முடியும், இருந்தாக வேண்டும் என்பதை அவர் கள் இருவரும் கண்டுபிடிக்க வேண்டி வந்த வரை அதையே அவர்கள் திரும்பத் திரும்பக் கூறினார்கள். எப்படியும் 'மாற்று என்பது கிடையாது' என்ற ஞானம் (இது 'சாத்தியமாவ தன் கலை' என்றால் 'சாத்தியமாவது அசாத்தியம்' என்று பொருள் என வலியுறுத்து கிறது) நம் காலத்தின் முடிவெடுக்கும் நிகழ் முறைகளை குற்றம் சாட்டுவதாகும். மனித ஈடேற்றம் என்ற இலக்கிலேயே மெய்யியல் கருத்து செலுத்துகிறது. எனவே அதைவிட குறைவான முன்னேற்றங்களை உருவாக்குவ தற்கான ஒதுக்கீடுகளைக்கூட முதல் குறுக்கி வருவதிலிருந்து எழுகிற - நடைமுறையில் பெரு வழக்காக உள்ள - ஞானத்தை அது எதிர்த்தே ஆக வேண்டும். உண்மையில் கடந்தகால வளர்ச்சித் திட்டங்களைக்கூட முதல் இன்று திரும்பப் பெறும் போக்கிலேயே உள்ளது. நல அரசின் மீதான அதன் தாக்குதல்கள் இதையே கண்கூடாகக் காட்டுகின்றன. இதனால் தான் இன்று மெய்யியலின் பங்கு, முன் எப்போதைக் காட்டிலும் கூடுதலாகவே உள்ளது எனலாம்.

●

**அரசியல் மிக மிக முக்கியமானது, எனேவே அரசியல்வாதிகளிடமே அதை விட்டுவிட முடியாது - அவர்கள் எவ்வளவு தொலைநோக்கு உடையவர்களானாலும்.**

---

*3 அதிக முனைப்பான ஒரு காலகட்டத்தில் Castoriadis செய்ததைப் போல் நீங்களும் Socialisme ou barbarie (சம உடைமை முறையா அநாகரிக நிலையா) என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உலகமய கால கட்டத்தில் சமூக சனநாயக ஐரோப்பாவில் அதன் 'மூன்றாம் பாதையில்' மாபெரும் வெகுசன இயக்கங்கள் மீண்டும் மலர வாய்ப்பிருப்பதாக கருதுகிறீர்களா?*

○ ஒரு காலத்தில் Castoriadis, Lyotard மற்றும் சிலர் சேர்ந்து *Socialisme ou barbarie* என்ற ஏட்டை நடத்தியது உண்மைதான். இருந்தாலும் அந்தப் பணியை அவர்கள் கைவிட்டது வருத்தத்துக்குரியது. மேலும் நிறுவன அமைப்புகளுடன் சமரசம் செய்து கொண்ட அவர்கள், அந்த அமைப்பிலிருந்து வெளியேற / அந்த அமைப்புக்கு வேறு வழியிருக்க முடியாது என்று மெய்ப்பிப்ப தற்கான கோட்பாடுகளை உருவாக்கித் தள்ளுவதில் போய் முடிந்தார்கள்.

ரோசா லக்சம்பர் கையாண்ட கருத்தைக் கவரும் சொல் தொடரை நான் கையாளும் விதம் முற்றிலும் வேறுவிதமானது. என் ஆய்வுக் கட்டுரையில் அதை நான் காட்டி இருக்கிறேன்: லக்சம்பரின் காலத்தில் அவரது எச்சரிக்கை இன்னும் தெளிவாக உருப்பெறாத தற்காலிகத் தன்மையையே கொண்டிருந்தது. இதற்கு நேர்மாறாக நம் நாட்களில் மாற்றுக்கு (இது முதல் முறையாக 1845 இல் மார்க்சால் முறைப்படி வகுத்துக் காட்டப்பட்டது) நிசமாகவே உடனடித் தேவையான அவசரம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து நடக்கும் உலகளாவிய வளர்ச்சியின் போக்குகள் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் (தெளிவாக இனம் காணத்தக்க) விதத்தைப் பார்க்கும் போது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றின் அழிவுப் போக்கை தடுத்து நிறுத்த நமக்கு சில பத்தாண்டுகள் ஆகலாம், ஆனால் உறுதியாக பல நூற்றாண்டுகள் ஆகாது. மாபெரும் தாராளவாத பொருளியல் அறிவ ரான ஸ்கம்பீட்டர் (Schumpeter) 'உற்பத்தியை அழிவு செய்யும்' ஒரு அமைப்பே முதலாளியம் என்று குறிப்பிட்டார்; இதை ஒரு கருத்திய லாகவே அவர் ஆக்கினார். முதல் ஏற்றம் பெற்று வந்த வளர்ச்சிக் கட்டத்தில் இந்த சித்தரிப்பு முழுக்கவும் உண்மையாகவே இருந்தது. இன்றோ, முதலானது 'உற்பத்தியை அழிவு செய்யும்' கட்டத்துக்குப் பதிலாக 'அழிவை உற்பத்தி செய்யும்' கட்டத்தை (நாள் தோறும் அதிகரித்துச் செல்லும் அளவில்) நாம் எதிர்கொண்டுள்ளோம். இந்தப்போக்கு அச் சுறுத்தும் அளவில் அதிகரித்துச் செல்கிறது.

உலகமய காலத்தில் ஐரோப்பிய சமூக சனநாயகத்தின் 'மூன்றாம் பாதை'யின் கீழ் மாபெரும் வெகுசன இயக்கங்கள் மீண்டும் மலர வாய்ப்பு இருக்கிறதா என நீங்கள் கேட்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் 'மூன்றாவது பாதை' என்பது ஒரு கற்பனையான விருப்பத்துக்கும் மேல் ஒன்றுமில்லை. நிறுவப்பட்ட, ஆனால் ஆதரிக்கத்தகாத ஒரு அமைப்பை ஆதரிக்கும் விருப்பம் அது. பலவித வகுப்புகளையும் சேர்த்து ஒரு 'நடுத்தர வகுப்பாக' ஒன்றி ணைத்தால் சிக்கல் தீர்ந்துவிடும் என்று ஒரு நூற்றாண்டாகவே மாக்ஸ் ஸ்கெலர் போன்ற சமூகவியலாளர் ஆரூடம் கூறி வந்திருக் கிறார்கள். எதன் நடுத்தரம் என நாம் வியக்கத்தான் முடியும். நடப்பில், சமூக வகுப்புமயமாக்கம் முன் எப்போதையும் விட நம் காலத்தில்தான் அதிகமாக நடக்கிறது. இது, 'முற்போக்கான வரிவிதிப்பின்' மூலமே ஏற்றத்தாழ்வை ஒழித்துவிடலாம் என்ற பழைய சமூக சனநாயகத்தின் எள்ளி நகையாடு வதாகவே உள்ளது. நிகழ்ச்சிகள் பிற்பாடு விளக்கமுற்ற வகையில், நேர் எதிரான நிலவரத்தையே நாம் கண்டோம்.

மிக அண்மைக்காலக் காட்சிகள் இரண்டை மட்டும் உங்கள் முன் வைக்கிறேன்:

1) யு.எஸ். பேராயத்தின் வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் புள்ளிவிவரமே ("மிகைப்படுத்தும் இடதுகளின்" புள்ளி விவரம் அல்ல) உச்சியில் உள்ள 1% பேரின் வருமானம், அடிமட்டத்தில் இருக்கும் 100 மில்லியன் பேரின் வருமானத்துக்கு சமமாக உள்ளது, அதாவது மக்கள் தொகையில் சுமார் 40% பேரின் வருமானத்துக்கு சமமாக உள்ளது என்று உறுதியாகக் கூறுகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இது 1%க்கு 49 மில்லியன் என்ற அளவில் "மட்டுமே", அதாவது யு.எஸ். மக்கள் தொகையின் 20%க்கும் குறைவு என்ற அளவில் "மட்டுமே" இருந்தது. அப்படியானால் இடைப்பட்ட காலத்தில் "சமன்படுத்தி நிரவுவதும்" "வகுப்புகளை ஒன்றிணைப்பதும்" ஓரளவுக்கு நடைபெற்றுத் தான் இருக்கிறது போலும்!

2) இங்கிலாந்தில் கடந்த 20 ஆண்டுகளில் வறுமைக்குட்படுத்தப்பட்ட குழந்தைகளின் அளவு மும்மடங்காக அதிக ரித்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டு களாக நடக்கும் "புதிய தொழிலாளர்" அரசாங்கத்தின் கீழ் இந்நிலை தொடர்ந்தும் அதிகரித்தே வருகிறது. "புதிய தொழிலாளர்" அரசாங்கம், வாயால் உள்ளீடற்ற "மூன்றாம் பாதை"யை போதிக்கிறது; நடப்பில் தொழிலாளர் எதிர்ப்பான நடவடிக்கைகளைக் கொண்ட அரசியலை முன்னிலும் கடுமையாக நடைமுறைப்படுத்துகிறது. திருமதி தாட்சர் கூட அறிமுகப்படுத்தத் தயங்கிய விதமான

**'உற்பத்தியை அழிவு செய்யும்' அமைப்பே முதலாளியம் என்று ஸ்கம்பீட்டர் குறிப்பிட்டார்; இதை ஒரு கருத்தியலாகவே அவர் ஆக்கினார். இன்றோ, முதலானது (capital) 'உற்பத்தியை அழிவு செய்யும்' கட்டத்துக்குப் பதிலாக 'அழிவை உற்பத்தி செய்யும்' கட்டத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உலகின் எல்லாப் பகுதிகளிலும், ஒரு தீவிரமான வெகுசன இயக்கத்துக்கு வருங்காலம் இருக்கிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அத்தகைய ஒரு இயக்கத்துக்கு எதிர்காலம் அமையாவிட்டால் மனிதகுலத்துக்கே எதிர்காலம் இருக்க முடியாது.**

கொள்கைகளைக் கூட நடைமுறைப்படுத்து கிறது. வாய்ப்பான எல்லா வழியிலும் நல அரசின் பயன்களை துண்டித்து வருகிறது. உடல் ஊனர்களுக்கான நிலையற்ற பிழைப்புதவியைக் கூட நிறுத்திவிட்டது. இப்படியே இது என்றென்றும் தொடரும் என்று ஒரு மூடன் மட்டுமே நினைத்துக்கொள்ள முடியும்.

ஆகவே உங்கள் கேள்விக்குப் பதிலாக நான் கூறுவது இதுதான்: ஒரு தீவிரமான வெகுசன இயக்கத்துக்கு வருங்காலம் இருக்கிறது - இங்கிலாந்தில் மட்டுமல்ல, உலகின் எல்லாப் பகுதிகளிலும் - என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அல்லது இதையே இன்னொரு விதமாகக் கூறுவதானால், அத்தகைய ஒரு இயக்கத்துக்கு எதிர்காலம் அமையாவிட்டால் மனிதகுலத்துக்கே எதிர்காலம் இருக்க முடியாது. ரோசா லக்சம்பரின் மணிமொழியை இன்று நான் சந்திக்கும் அபாயங்களின் அடிப்படையில் நான் மாற்றி அமைக்க வேண்டி வந்தால் - "சம உடைமை முறையா அநாகரிக நிலையா" என்பதுடன் "(அந்த அநாகரிக நிலையிலாவது உயிரோடிருக்கும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைக்குமானால்)" என்ற தொடரைச் சேர்ப்பேன். ஏனென்றால் மனித குலத்தை முற்றிலுமாக அழித்தொழிப்பதே முதலின் அழிவுகரமான வளர்ச்சிப்போக்கின் உடன் பிறந்த பிறவிக் குணமாக இருக்கிறது. மேலும் "சம உடைமை முறை அல்லது அநாகரிக நிலை" என்ற தேர்வுகளுக்கு அப்பாலுள்ள அந்த மூன்றாவது வாய்ப்புள்ள உலகம், கரப்பான் பூச்சிகள் மட்டுமே உயிர் பிழைக்கத் தக்கதாகவே இருக்கும். ஏனென்றால் அவைதான், சாகடிக்குமளவு அதிகப்படியான அணுக்கதிர் வீச்சையும் தாங்கிப் பிழைக்க முடியும் என்று சொல்கிறார்கள். முதலின் "மூன்றாம் பாதை"யின் ஒரே பகுத்தறிவுரீதியான முடிவு / பொருள் இதுதான். ●

*4 பண்பாட்டு உலகமயம் பற்றி உங்கள் கருத்து என்ன?*

○ சமூக - பொருளியல் - அரசியல் உலகமயத்துடன் தவிர்க்க முடியாமல் சேர்ந்து நடப்பது பண்பாட்டு உலகமயம். இதுவும் அதே முரண்களுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. முதலின் அமைப்பு முற்ற முழுக்க கோபுர வடிவுடையதாகவே இருக்கிறது. பலவீனமான அதில் எப்போதும் கையேந்தும் நிலையிலேயே இருக்கிறார்கள். இந்த "தகுதி வரிசை அமைப்பானது", நிலவும் சமூக - பொருளியல் - அரசியல் அதிகார உறவுகளால் தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பொருளில் "பண்பாட்டு உலகமயம்" என்னும் சிக்கல், சமகால வல்லரசியத்தின் முரண்பாடுகளில் இருந்து பிரிக்க முடியாமல் உள்ளது. அதன்படி, ஆதிக்கமான வல்லரசாட்சியாகிய அய்க்கிய அமெரிக்கா, உலகின் பிற பகுதிகள் மீது தன் பண்பாட்டு மேலாதிக்கத்தை திணிப்பதற்காக திண்ணமாக செய்ய முடியும் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறது. "சனநாயகம்" என்ற பெயராலும் "சுதந்திரமான பண்பாட்டுப் பரிமாற்றம்" என்ற பெயராலும்தான் இதை அது செய்கிறது என்பதும் இயல்பே. "சுதந்திரமான பண்பாட்டுப் பரிமாற்றம்" என்னும் பொருள்வகை வாகனமேறி வரும் அதிகார உறவுகள் அதன் அடியாழத்தில் மறைந்துள்ளன. அவை பல தரமாக உள்ளன: (ஆலிவுட்டின் கழிசடை தயாரிப்புகளைக்கூட அனைவர் மீதும் வலியத் திணிக்கும்) திரைப்பட விநியோக வலைப்பின்னல் முதல், மாபெரும் ஊடகப் பேரரசுகள் வரை, தொலைத் தொடர்பு மற்றும் துணைக்கோள் நிலையங்கள் வரை அவை உள்ளன; அமெரிக்க "அறிவுச் சொத்துரிமை"களின் பன்னாட்டுக் காவல் நாய்களாக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் வரை அவை உள்ளன.

முன்னாள் காலனி நாடுகளின் ஆட்சிகளைப் பற்றி 1957லேயே பால் பேரன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவை "அமெரிக்க வல்லரசியத்தின் இளைய பங்காளிகள்" என வருணித்தார். "பண்பாட்டு உலகமய" அரங்கிலும் அந்த வருணனையே பொருத்தமாக இருக்கிறது. "இளைய பங்காளிகள்" தம்மிலும் சிறிய நாடுகள் மீது தம் பண்பாட்டு நலன்களை சுமத்தவும் முயல்கின்றன. ஐக்கிய அமெரிக்காவின் விசுவாசமான இளைய பங்காளிகள் என்னும் தம் துணைநிலை பாத்திரத்துக்கு ஒத்துப்போகும் அளவுக்கே இந்த முயற்சிகளில் அவை ஈடுபடுகின்றன.

**வரம்பு மீறும் ஆதிக்கங்களுக்கு எதிரான நியாயமான தேசியப் பண்பாட்டு நலன்கள் தம் தற்காப்புக்கு முயலவே செய்யும். ஆனால் பெரும்பாலும் இது மிகவும் வேதனையான ஒரு நிகழ்முறையாகவே இருக்கப் போகிறது. ஏனெனில் வெற்றி வாய்ப்புகள் பொருளியல் - அரசியல் ஆதிக்க சக்திகளுக்கு சார்பாகவே மிக வலுவாக உள்ளன.**

கையேந்தும் நிலையிலுள்ள அனைவரின் நடுவிலும், இதெல்லாம் பெருத்த மனக் கசப்பை உருவாக்குவது இயல்பே. இந்த முறையில் வருங்காலம் கண்டிப்பாக குறிப்பிடுமளவுக்கு மோதல்களைக் கொண்டே வரும். வரம்பு மீறும் ஆதிக்கங்களுக்கு எதிரான நியாயமான தேசியப் பண்பாட்டு நலன்கள் தம் தற்காப்புக்கு முயலவே செய்யும். ஆனால் பெரும்பாலும் இது மிகவும் வேதனையான ஒரு நிகழ்முறையாகவே இருக்கப் போகிறது. ஏனெனில் வெற்றி வாய்ப்புகள் பொருளியல் - அரசியல் ஆதிக்க சக்திகளுக்கு சார்பாகவே மிக வலுவாக உள்ளன. ●

***5 உலகமயத்தை எதிர்க்க "தேசிய அரசு" என்னும் தீர்வு போதிய ஏற்புடையதாக உள்ளதா? கொசோவாவில் செர்பியரிடையே நடந்த "இனத் துப்புரவாக்கம்" என்ற கருத்தை நீங்கள் ஏற்பீர்களா?***

○ இல்லை. உலகமயம் என்னும் குழம்பிய குட்டையிலிருந்து வெளிப்பட்டு தேசியமயத்தில் தஞ்சம் புகுவதும் கண்டிப்பாக போதிய ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் முரண்பாடுகள் அடர்ந்த ஒரு நிகழ்முறையைப் பற்றி நான் பேசிக் கொண்டிருக்கிறோம். "தேசிய அரசுகள்" என்பவை உலகமயத்துக்கு வெளியிலுள்ளவை அல்ல. அதன் ஒருங்கிணைந்த பகுதியே அவை. எப்படி நாம் அரசியலில் இருந்து வெளியே(றி) இருக்க முடியாதோ அப்படியே "தேசிய அரசு"களும் பன்னாட்டு உலகமயத்திலிருந்து வெளிப்பட்டு நிலவ முடியாது. தாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதில் அவை செயலூக்கமான பங்கு பெறவே செய்கின்றன. முதலின் உலகளாவிய் படிவரிசையமைப்பில் அவற்றின் ஒப்பீட்டு தராதரத்துக்கு ஏற்ப இது நடக்கிறது.

இங்கு நாம் மனங்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான செய்தி என்னவென்றால், உண்மையில் தேசிய அரசே முதலின் மிக முழுமையான - அனைத்தளாவிய அரசியல் ஆணை அமைப்பாக இருக்கிறது என்பதுதான். ஏனெனில் முதலாளிய அமைப்புக்கான உலகளாவிய அரசு என்று ஒன்று உண்மையில் இல்லை. மாறாக பலம் மிகுந்த / பலம் குறைந்த தனித்தனி (தேச) அரசுகள் மட்டுமே உள்ளன. இது ஒரு மிகப்பெரிய முரணாகும். நாம் வாழும் காலத்தில் இந்த முரண் குறிப்பிடத்தக்க கூர்மை அடைந்து வருகிறது. மேலும் இதை வெல்லுவதற்கான வழியும் இருக்க முடியாது. பன்னாட்டு உலகமயமே முதலின் தவிர்க்க முடியாத தர்க்கத்தின் விளைவாக எழுவது தான். எனவே அது தானே முழுவதும் ஆடி அடங்கும் வரை அதை முடிவுக்கு கொண்டு வருதல் என்பது முடியாது. இந்த நிலவரத்தின் விளைவுகள் பெரும் துன்பம் தருவனவாகவே உள்ளன. பெரும் தேசிய அரசுகளில் ஒன்று தன் சொந்த அரசு அமைவை மற்றவற்றின் மேல் ஓங்கச் செய்ய முயன்றதன் விளைவாகவே நடந்த இரண்டு பேரழிவான உலகப் போர்களை நாம் கண்டிருக்கிறோம். இன்று உலகமயம் அதன் முழுவீச்சில் நடைபெறும் நிலையில், பேராற்றல் பெற்றுள்ள அரசானது பிற அனைத்து அரசுகளைக் காட்டிலும் தானே

www.tamilarangam.net

"உலகளவில் ஒப்புயர்வற்ற" அரசு என (யு.எஸ். அரசுத் துணைச் செயலர் ஸ்ட்ரோபே தால்போர்ட்டின் கூற்று) தன்னைத் தானே அவற்றின் மீது ஏற்றிக்கொள்ளும் முனைப்பு அந்த அளவுக்கு அதிகமாகவே உள்ளது. இதனால் விளையும் ஆபத்துகளும் அதே அளவுக்கு அதிகமாக உள்ளன. எனவே இங்கு நாம் ஒரு முரணை எதிர்கொள்கிறோம் - அது உலகமயமாக்கும் பன்னாட்டு முதல்களுக்கும் தேச அரசுகளுக்கும் இடையிலான முரண் ஆகும். ஒரு மெய்யான சம உடைமை மாற்றத்தால் மட்டுமே இந்த முரணை தீர்க்க முடியும். அதுவரை இந்த முரண் மென்மேலும் கடுமையடைய மட்டுமே முடியும். இது கூடிய விரைவில் ஒரு பேரழிவான மோதலுக்கான வாய்ப்பை முன்னிறுத்தும்.

"இனத் தூய்மைப்படுத்தல்" என்ற கருத்து ஒரு கொடுமையான கருத்தாகும். முதலின் ஆட்சியின் கீழ் இருக்கும்வரை இனங்களுக்கிடையிலான மற்றும் அரசுகளுக்கிடையிலான மோதல்கள், எவ்வளவு காலமானாலும் தீர்க்கப்படவே முடியாது என்பதையே அது பிரதிபலிக்கிறது. ஆனால் இது கொசோவாவுடன் மட்டும் அடங்குவது அல்ல. அமெரிக்காவின் மேற்பார்வையின் கீழ் க்ரஜினாவில் இருந்து 2,70,000 செர்பியர் "இனரீதியாக துப்புரவு" செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொண்டாக வேண்டும். இப்போது செர்பியரை கொசாவாவில் இருந்தே மிகப் பெருமளவில் துப்புரவுபடுத்தப்படுகிறார்கள்; அவர்கள் இன்னுமொரு 2,00,000 பேராக இருக்கலாம்.

தனிமனிதர்களுக்கிடையிலும் சமூகக் குழுக்களுக்கிடையிலும் உண்மையான - நிலையான சமத்துவத்தின் அடிப்படையிலான ஒரு உயிர்ப்பாற்றலோடு கூடிய தீர்வு வேண்டும் என்பதையே இந்த சிக்கல்கள் எல்லாம் உரத்துக் கூவுகின்றன. ஆனால் உண்மையான - நிலையான சமத்துவம் என்பதோ, முதலின் சமூகக் கட்டுப்பாட்டு முறையுடன் கட்டமைப்புரீதியாகவே ஒத்து வராத நிலைப்பாடாகும். ●

*6 மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அரசியல் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

○ மனித உரிமைகள் தொடர்பான ஐநா.வின் செயல்பாடுகள் வருந்தத்தக்க அளவுக்கு மோசமாகவே உள்ளன. இன்னும் சரியாகப் புரிந்துகொண்டால் அவை அப்படித்தான் இருக்கவும் முடியும். (இருந்தாக வேண்டும் என்பதில்லை). ஏனெனில் ஐநா.வை (யு.என்.) ஐஅ.வே (யு.எஸ்.) இதுவரை (இப்பவும்) கட்டுப்படுத்தி வருகிறது. ஆனால் அந்த ஐக்கிய அமெரிக்காதான் உலக முழுவதிலும் கணக்கற்ற மனித உரிமை மீறல்களை நடத்தி வரும் நாடு ஆகும். அதன் அளவற்ற மனித உரிமை மீறல்களின் நீண்ட வரலாற்றை நினைவு கூர்ந்தாலே போதுமானது: இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிலிப்பைன் சில் போருக்குப் பிறகு மார்க்கோசை பதவி அமர்த்தி இழைத்த கொடுமைகள்; குவாட்டமாலா தொமினிக்கன் குடியரசு, கிரனெடா ஆகியவற்றை ஆக்கிரமித்தது; வியத்நாம் போர்; இந்தோனேசியாவில் சுகர்த்தோவை அமர்த்தியது (சுகர்த்தோவின் அமெரிக்க ஆதரவு எதிர்ப்புரட்சியின் போக்கில் 5,00,000 சீன இன மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்); (Pinochet உட்பட) லத்தீன் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் சர்வாதிகார ஆட்சிகளைத் திணித்து நிலைநிறுத்தி வருவது; மற்றும் மத்திய கிழக்கையும் கிரீசில் படைத் தலைவர்களின் சர்வாதிகாரத்தையும்தான் மறந்துவிட முடியுமா?... இந்த பட்டியலுக்கு முடிவில்லை. இருந்தாலும் ஐநா.வும், மனித உரிமைகளின் பெயரால் பால்கன் பகுதிகளில் தாம் நடத்தும் ராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதிலேயே மிகவும் குறியாக இருக்கும் மேலை அரசுகளும் அத்தகைய அத்துமீறல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது இருக்கட்டும், அவற்றைக் கட்டுப்படுத்த தம் சுண்டு விரலைக்கூட

---

**உலகமயமாக்கும் பன்னாட்டு முதல்களுக்கும் தேச அரசுகளுக்கும் இடையிலான முரண் மென்மேலும் கடுமையடைய மட்டுமே முடியும். இது கூடிய விரைவில் ஒரு பேரழிவான மோதலுக்கான வாய்ப்பை முன்னிறுத்தும்.**

www.tamilarangam.net

**ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடித்த தடைகளின் விளைவாக, அவற்றுக்கு ஐ.நா. கண்ணை மூடிக்கொண்டு ஒப்புதல் அளித்ததன் விளைவாக, ஐ.அ.வின் நட்பு நாடுகளின் முற்றான அடிவருடித்தனத்தின் விளைவாக, ஈராக்கில் ஒரு மில்லியன் குழந்தைகள் சாகடிக்கப்பட்டன. ஐ.நா.வை மனித உரிமைகளின் காவலன் என்று யாரும் மனதார எடுத்துக்கொள்ள முடியாது.**

அசைக்கவில்லை.

மனித உரிமைகள் பற்றிய எல்சிங்கி உடன்படிக்கைகளை சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான வசதியான ஆயுதமான தாம் பயன்படுத்திக் கொண்டிருந்ததை இந்நாட்களில் அமெரிக்க அரசியலில் உள்ள முக்கியப் புள்ளிகள் கொஞ்சம்கூட வெட்கமின்றி ஒத்துக் கொள்கிறார்கள். இப்படித்தான் முன்பு நிக்சன் மற்றும் கிசிங்கரின் கீழ் சோவியத்துகளுக்கு எதிராக “சீன” துருப்புச்சீட்டை பயன்படுத்தினார்கள். வியத்நாம் போரில் சீனருக்கு எதிராக “ருசிய” துருப்புச்சீட்டை பயன்படுத்தினார்கள். வல்லரசு அரசியலின் இயல்பான மனிதநேய வெறுப்புத் தன்மை, இவ்வாறு பொய்யாக புனையப்பட்ட - மிகவும் தேர்ந்த - மனித உரிமை அக்கறை என்னும் ஆடைகளால் மூடி மறைக்கப்படுகிறது. காட்டாக, கொசோவாவில் நடந்த போர் மனித உரிமைகளின் பெயரால் ஆரவாரமாக நியாயப்படுத்தப் பட்டபோது, “மேலை சனநாயகங்கள்” எனத் தம்மை அழைத்துக் கொள்ள விரும்பும் நாடுகள், குர்தியருக்கு எதிராக சமயங்களில் மனித இனப்படு கொலையின் எல்லையையும் தொட்ட - துருக்கியர் இழைத்த மிகவும் கொடூரமான மனித உரிமை மீறல்களை எதிர்க்க எதுவும் செய்யவில்லை. அல்லது ருவாண்டாவில் ஏறக்குறைய ஒரு மில்லியன் மக்கள் பூண்டோடு அழித்தொழிக்கப்பட்ட போதும் எதுவும் செய்யவில்லை. மனித உரிமைகள் அப்பட்டமாக அத்துமீறப்பட்ட இன்னுமொரு வடிவமும் உள்ளது: ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடித்த தடைகளின் விளைவாக, அவற்றுக்கு ஐ.நா. கண்ணை மூடிக்கொண்டு ஒப்புதல் அளித்ததன் விளைவாக, ஐ.அ.வின் நட்பு நாடுகளின் முற்றான அடிவருடித்தனத்தின் விளைவாக, ஈராக்கில் ஒரு மில்லியன் குழந்தைகள் சாகடிக்கப்பட்டன. மனித உரிமை குறித்த அக்கறையை உலக அரசியலின் நிசமான அதிகார உறவுகள் கேலிக்கூத்தாக்கி வரும்வரை, ஐ.நா.வை மனித உரிமைகளின் காவலன் என்று யாரும் மனதார எடுத்துக் கொள்ள முடியாது. ●

*7 புதிய நிலைமைகளில் யு.எஸ்ஸின் பாத்திரம் என்ன? ஐரோப்பாவின் வருங்காலம் பற்றிய உங்கள் கருத்து என்ன?*

○ சோவியத் அமைப்பு உள்ளூர நொறுங்கிப் போனபின் மீதமிருந்த ஒரே ராணுவ மேல்நிலை வல்லரசான ஐக்கிய அமெரிக்காவே உலகளாவிய மேலாண்மை பெற்றது. 69 நாடுகளில் அது தன் ராணுவ தளங்களைப் பேணி வருகிறது. நேட்டோவை முழுமையாக ஆதிக்கம் செய்கிறது. (கடைசியாக நடைபெற்ற நேட்டோ உச்சிக்கூட்டத்தில் தனக்குத்தானே சட்டரீதி உரிமை வழங்கிக் கொள்ளும் ஆக்கிரமிப்புப் படை என நேட்டோ தன்னை மறுவரையறை செய்துகொண்டது). தூரக் கிழக்கின் ராணுவக் கூட்டணி நாடுகளையும், குறிப்பாக “யு.எஸ். - ஜப்பான் பாதுகாப்பு ஒப்பந்தத்தை”யும் முழுமையாக ஆதிக்கம் செய்கிறது: இதுவும் இப்போது அவ்வாறே “சட்டரீதியான வலுத்தாக்குதல் படை” என பெயர் மாற்றப்பட்டுள்ளது. போரை மறுக்கும் ஜப்பானிய அரசியல் சட்டத்தை முழுமையாக மீறுவதாகும் இது. இருந்தாலும் இதெல்லாம் ஒரு தாக்குப் பிடிக்கும் தீர்வாக கருதப்பட முடியாது. ஏனெனில் “யு.எஸ்ஸின் உலக ஆதிக்கம்” என்பது - அல்லது இதையே ஸ்ட்ரோபே தால்போட்டின் இதைவிட நயமான வார்த்தைகளில் சொன்னால், “உலக அளவில் யு.எஸ்ஸின் ஒப்புயர்வற்ற நிலை” என்பது - உள்ளார்ந்த வெடிப்புத் தன்மையுள்ள பகைநிலைகள் அடர்ந்தது ஆகும்.

இந்த புறநிலையான பகைநிலைகளின் மிக கவனிக்கப்பட வேண்டிய அம்சம்,

www.tamilarangam.net

சீனாவுடன் ஏற்பட இருக்கும் நேரடி மோதலாகும். எனெனில் 2020 வாக்கில் சீனப் பொருளியலானது யு.எஸ்ஸின் பொருளியலைப் போல் மும்மடங்கு பெரிதாக இருக்கும் என்று தாராளவாத பொருளியலார் இப்போதே அறிவித்துள்ளார்கள். அத்தகைய வாய்ப்புகளை எதிர்கொள்ளும் நிலையில் வாசிங்டனில் உள்ள பழைய "சீன சார்புக் குழு" முன் எப்போதையும்விட இன்று அதிக செயலூக்கத்துடன் உள்ளது. இந்நிலை, கடற்படையின் இரண்டாம் துணைத் தலைவரும் பாதுகாப்புத் தகவல் மையத்தின் தலைவரும் ஒரு தனிப்பட்ட கருத்து வெளியீட்டாளருமான யுஜேன் கெரோலை பின்வருமாறு கருத்துக்கூற தூண்டியுள்ளது: "சீனாவை ஒரு மஞ்சள் அபாயம், தீய ஆற்றல் என்று காட்ட இங்கு ஒரு திட்டமிட்ட முயற்சி நடைபெறுகிறது". சீனாவுக்கு எதிரான "வருமுன் தடுக்கும் தாக்குதல்" ஒன்றை நடத்துவதன் தேவை பற்றியும் நிறைய பேச்சு நடக்கிறது.

அதே நேரத்தில் வெளித்தோற்றம் எப்படி இருந்தாலும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான புறநிலையான பகைமைகளையும் கடுமையான நல முரண்களையும் நாம் மறந்துவிடக்கூடாது. அண்மைக் காலத்தில் ஐரோப்பாவின் மீது ஐக்கிய அமெரிக்கா தன் ஆதிக்கத்தை தொடர்ந்து நிலைநாட்ட முடிந்தாலும், மேற்சொன்ன முரண் இனிவரும் காலத்தில் கூடுதல் கடுமை பெறவே போகிறது. ஐரோப்பாவே தனக்குள் இருக்கும் முரண்களால் சீரழிந்து கொண்டுள்ளது. தற்போது அது, ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அரசியல் அமைப்பாக இருக்கும் நிலையை தகர்த்து அதை வெறும் பொது வணிக பகுதியாக மட்டும் (தக்க) வைத்துக் கொள்ளும் ஆங்கிலேய பழமைவாதக் கட்சியின் முயற்சியில் பளிச்சென வெளிப்படுத்துகிறது: இந்தக் கொள்கையே இங்கிலாந்தின் பெரும்பான்மையரின் நிலைபாடாக உள்ளது. அண்மைக்கால ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தல்களில் பழமைக்கட்சி பெற்றுள்ள வெற்றி இதைத்தான் காட்டுகிறது. இந்த நெருக்கடி இங்கிலாந்தில் மட்டுமின்றி பரவலாக வளரவே செய்யும். இருந்தாலும் ஐரோப்பிய சமூகத்தை உடைக்கும் முயற்சிகள் வெற்றி பெறாது. இங்கும், அமைப்பின் உடன்பிறந்த ஒரு முரணை நாம் எதிர்கொள்கிறோம். அதாவது தேசிய உறுப்பினர்களின் சிக்கலற்ற ஒருமைப்பாட்டு ஒத்துழைப்பு அல்லது கூட்டமைப்பு என்பதற்கும் வாய்ப்பில்லை, அல்லது எதிர்பார்க்கப்படும் உடைவிற்குப் பிறகு அவர்கள் தனியாகவே செயல்படுவது என்பதும் முடியாது. இந்த முரணைத் தீர்க்க தொடர்ச்சியான - தவிர்க்க முடியாத இக்கட்டுகளை ஏற்படுத்தும் முதல் அமைப்பு முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, தனித்தனி தேசிய சமூகங்கள் தமக்கிடையில் உறவு கொள்ளும் மிகவும் புதுவிதமான ஒரு அமைப்புமுறை தேவைப்படுகிறது. ●

**"சீனாவை ஒரு மஞ்சள் அபாயம், தீய ஆற்றல் என்று காட்ட இங்கு ஒரு திட்டமிட்ட முயற்சி நடைபெறுகிறது". சீனாவுக்கு எதிரான "வருமுன் தடுக்கும் தாக்குதல்" ஒன்றை நடத்துவதன் தேவைபற்றியும் நிறைய பேச்சு நடக்கிறது.**

*8 இறுதியாக, இது "பெருங்கதையாடல்"களின் முடிவுகாலம் என்கிறாரே லியோடார்டு, ஒரு சிறந்த உலகுக்கான மிகப்பெரிய இலட்சியப் பார்வைகளின் காலம் முடிந்தே விட்டதா?*

○ "பெருங்கதையாடல்"களையும் "குறுங்கதை"களையும் (grand narratives and little récits) பற்றிய லியோடார்டின் சொல்லாடல் பழைமைவாத சிந்தனையாளர்களின் அடியொற்றியே எழுகிறது. "சிறுக சிறுக" நிலைமாற்றுவதே இயலக்கூடியதும் சட்டரீதியானதுமான ஒரே முறை என நீண்டகாலமாகவே இவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இது, ஆதிக்க அமைப்புடன் அவர் சமாதானம் செய்து கொள்ளும் வழியாகும். சம உடைமை முறையா அநாகரிக நிலையா என்ற தன் கடந்தகால நிலைபாட்டுக்கு தானே புறமுதுகு காட்டுவதாகும். ஒரு விமர்சன கண்ணோட்டத்திலிருந்து இந்த கூற்றுகளை நாம் மதிப்பிடுவோமேயானால், அவை

www.tamilarangam.net

**"குறுங்கதை"களை பொருத்துவதற்கான முழுமையான - அனைத்து தழுவிய போர்த்தந்திர சட்டகம் ஏதும் இல்லாமல், சிறுக சிறுக எதைத் திரட்டினாலும் அவை சிறிதளவு பயனையாகிலும் விளைக்கும் என்பதற்கு எந்த உறுதியும் இருக்க முடியாது.**

---

தமக்குத் தாமே குழிபறிப்பனவாக இருப்பதை நாம் காண்போம். எனெனில் "குறுங்கதை"களை பொருத்துவதற்கான முழுமையான - அனைத்து தழுவிய போர்த்தந்திர சட்டகம் ஏதும் இல்லாமல், சிறுக சிறுக எதைத் திரட்டினாலும் அவை சிறிதளவு பயனையாகிலும் விளைக்கும் என்பதற்கு எந்த உறுதியும் இருக்க முடியாது. சிறிய பிரெஞ்சு நகரமான எவர்தோனில் (Yverdon) வட்டார நிர்வாக கணினியில் இருந்து ஒரு வாய்பாட்டை - அதைவிட, ஒரு புனைவை என்றே சொல்லலாம் - உருவாக்க முயன்று கொண்டிருந்தார் லியோடார்டு. அந்த கணினி, வட்டார மக்களின் கருத்துகளையும் விருப்பங்களையும் கணக்கில் கொள்வதாக கருதப்பட்டது. அந்த வாய்பாட்டு கணினியால் பிரான்சு நாட்டு மக்கள் இருக்கட்டும், எவர்தோன் நகர மக்களுக்கேகூட துளி நன்மையையும் செய்யவில்லை என்பதை கூறத் தேவையில்லை. எனெனில் ஒரு வட்டாரத்தின் கருத்துகளை பதிவு செய்வதற்கு ஏற்ற லட்சிய வழியை நீங்கள் உருவாக்கினாலும், அதைக் கொண்டு அந்த பகுதியைச் சேர்ந்த முடிவெடுக்கும் நடைமுறைகளைக்கூட உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அப்படி இருக்கும்போது பிரான்சின் பிற பகுதிகளுடன் அதற்குள்ள தேவையான தொடர்புகள் பற்றியோ, அந்த பிரான்சையுமே உட்கொண்ட அதைவிட பெரிய முடிவெடுக்கும் நடைமுறைகளை அது என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியோ சொல்லவே தேவையில்லை. முன் எப்போதையும்விட "உலகமய காலகட்டமாகிய" இன்று இது இன்னும் அதிக சிக்கலானது ஆகும்.

ஆக, சமூக மறு ஆக்கத்தின் "நுண்" மட்டங்கள் முதல், தேச / தேசங்கடந்த பரிமாற்றத்தின் உயர்மட்டங்கள் வரையான எல்லா மட்டங்களிலும் குறிப்பிட்ட செயல் முறைகளின் வாய்ப்பான இடையுறவுகளோடு கூடிய முழுமையான - ஒருங்கிணைந்த போர்த்தந்திரங்களுக்கான தேவையை அதிகப்படி என்று கூற முடியாது. இன்னும் ஒரு செய்தியையும் இங்கு வலியுறுத்துவது தேவை: நம் பார்வைக்குள் அகப்படும் அளவற்ற ஆபத்துகளைப் பற்றிய விழிப்போடு நாம் இருந்தாக வேண்டிய அதேபோது, நம் கைவசமுள்ள அனைத்து வழிகளாலும் அவற்றை எதிர்த்தாக வேண்டிய அதேபோது, எதிர்மறையான செயல்கள் மட்டுமே போதுமானதாகாது; அதற்கிணையாக உடன்பாடான மாற்றை முடிந்தவரை விரிவாக வெளியிடுவதும் தேவை. ஏனெனில் சமூக செயல்பாட்டுக்காக தேர்ந்தெடுத்த இலக்கானது உடன்பாடான முறையில் வரையறுக்கப்பட்டால் அது அதன் வெற்றிக்கு உயிருள்ள வழிகாட்டுதலாக இருக்கும். தன் வாழ்நாள் முழுவதும் எதிர்மறையான லட்சிய முடிவுகளின் கைதியாகவே இருந்துவிட்ட "யதார்த்தத்தில் நிலவிய சம உடைமை அமைப்பு" எனப்பட்டதன் வீழ்ச்சியிலிருந்து கிடைத்த வேதனையான பாடங்களில் இந்த ஒரு பாடத்தையாவது தெளிவாகத் தெரிந்தாக வேண்டும். மேலும் ஒரு "சிறந்த உலகுக்கான லட்சியப் பார்வைகள்" நிறைவு பெற இன்னும் நீண்டகாலம் இருந்தும்கூட இன்று வரலாற்று நிரலிலேயே அவை நீடிப்பதும் இதே காரணத்துக்காகத்தான். ●

*9 இன்றும் இனியும் 'இடது' என்பதன் பொருள் என்ன?*

○ இடது என்ற பெயர் வந்த விதம் வரலாற்றில் ஒரு தற்செயல் நிகழ்ச்சியாகவே அமைந்தது. இடது புறமே செல்க என்பதற்குப் பதில் இங்கிலாந்தின் சாலையின் வலது புறமாகவே வாகனங்கள் செல்வதை ஏறக் குறைய ஒத்ததே இது. இருந்தாலும், தாறுமாறான வாகன நெரிசலில் இருந்து தப்ப முடியாதவாறு சிக்கும் நிலை ஏற்படாமல் போக்குவரத்து எளிதாக நடக்க வேண்டுமானால் சாலையின் இரு திசையிலும் எந்த பக்கமாக நீங்கள் செல்ல வேண்டும் என்பது

www.tamilarangam.net

அலட்சியத்துக்குரிய விசயமாக இருக்க முடியாது.

"இடது", "வலது" என்பவற்றுக் கிடையில் இனிமேல் எந்த குறிப்பிடத்தக்க வேறுபாடும் இருக்க முடியாது என்று சிலர் வாதிட்டார்கள். (இன்றும் வாதிடுகிறார்கள்). இத்தகையவர்கள் (ஏறக்குறைய நகரவே முடியாத அளவுக்கு நெரிசல் மிகுந்த ஏதென்சிலும்கூட) போக்குவரத்து சீராக இயங்குவதற்கும், அர்த்தமில்லாமல் வலிய ஏற்படுத்திக் கொள்கிற முழுமையான போக்குவரத்து முடக்கத்துக்கும் இடையில் உண்மையில் எந்த வேறுபாடும் இல்லை என நம்மை நம்ப சொல்வார்கள்.

அளவுக்கு மிஞ்சிய தன்னல வேட்கை களாலேயே எல்லாவிதமான மருட்டல் வாதங்களும் உருவெடுக்கின்றன. "இடது" என்பது வரலாற்றில் ஏற்பட்டுவிட்ட ஒரு பிழை மட்டுமே, ஆனால் புதிய தாராளவாதத்தின் "தீவிர வலதோ" முற்றிலும் ஒத்திசைவான ஒரு பார்வை என தன்முரணாக நிறுவ அந்த தன்னலக்காரர்கள் விரும்புகிறார்கள். இந்த மருட்டல்கள் எல்லாமிருந்தும் இடதினர் (மேலும் சரியாக சொன்னால் பலவித இடதுகள்) இன்றும் நிலவவே செய்கிறார்கள். அண்மைக் காலத்தில் அவர்கள் சில குறிப்பிடத்தக்க பின்னடைவுகளை அனுபவித் திருக்கிறார்கள். இருந்தாலும் ஆதிக்க அமைப்புக்கு தொடர்ந்தும் ஒரு உறுத்தலாகவே அவர்கள் இருக்கிறார்கள். "புதிய தொழிலாளர்" அமைப்பின் கடந்த ஆண்டு மாநாட்டில் "வலது - இடது பழமை வாதத்துக்கு எதிராக" தான் போரிடப் போவதாக டோனி பிளேர் அறிவித்தார் - இதன் பொருள் இடதுக்கு எதிராக மட்டுமே என்பது வெளிப்படை. பின்னது இடதுசாரியில் இருப்பதற்காக யாரும் அதை குற்றம் சாட்ட முடியாது - அதன் உறுப்பினர்கள் பலரும் இப்போது முற்றிலுமாக ஓரங்கட்டப்பட்டு விட்டாலும், தற்போதைய தலைமையால் அதை எளிதாக ஒழித்துவிட முடியவில்லை. இந்நிலையில் அரசியலில் இடதுகள், முன்னாள் சமூக சனநாயகக் கட்சிகளில் நாம் காண்பதைவிட மிக அதிக பரவலாக காணப் படுவது இயல்பே. இன்றும்கூட "இடது" என்றால் "இருக்கிற நிலைக்கு மாற்றுகளை முன்வைப்போர்" என்றே பொருளாகிறது. அதன் இன்றைய பிரிவுகளும் பிளவுகளும், அரசியல் நிகழ்முறையில் அதன் வெற்றி கரமான குறுக்கீட்டுக்கு ஒரு முகாமையான தடையாகவே உள்ளது.

**எதிர்மறையான செயல்கள் மட்டுமே போதுமானதாகாது; அதற்கிணையாக உடன்பாடான மாற்றை முடிந்தவரை விரிவாக வெளியிடுவதும் தேவை.**

---

முதல் அமைப்பின் நெருக்கடி ஆழமடைந்து வருவதானது, எதிர்காலத்தில் ஒரு பெரும் வரலாற்று அறைகூவலுடன் இடதுகளை எதிர்கொள்ளவே போகிறது: நமது சமூக அமைப்பின் அழிவுகரமான வளர்ச்சிப் போக்கிலிருந்து வெளியேறும் வழியை காட்ட முடிகிற ஒருங்கிணைந்த - முழுமையான ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து நடைமுறைப் படுத்துவதே அந்த அறைகூவல். ஆனால் தான் இப்போதுள்ள அல்லது இனி அமைய வாய்ப்புள்ள எந்த ஒரு வடிவிலும் வலதுகள் அத்தகைய ஒரு திட்டத்தை ஒருபோதும் வழங்கப் போவதில்லை என்பதை மட்டும் முழு உறுதியுடன் சொல்ல முடியும்.

•

தமிழாக்கம்

**சிங்கராயர்**

---

*மன்த்லி ரெவ்யூ*

தொகுதி 51, எண் 8

சன.2000

www.tamilarangam.net

# உலக அரசாட்சியில் புனித ஆவிகளும் அடிப்படைவாத ஜின்களும்



இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த ஒரு விசாரணை

ஜமாலன்

*"Check your politics before you enter it"* என்கிற எட்வர்ட் சேத்-தின் குறிப்புடன் இதனைத் துவக்குகிறேன். இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து விவாதிப்பதற்கு முன்பாக எனது அரசியல் நிலையைப் பரிசோதித்துக் கொள்வது அவசியம். பிறப்பால் நான் ஓர் இஸ்லாமியன். இஸ்லாமுடன் எனக்கு இருக்கும் உறவு அதன் *ஈமான்* என்கிற நம்பிக்கை சார்ந்த ஒன்றல்ல. அல்லது *தீன்* என்கிற உலகியல் வழிமுறைகள் சம்பந்தப்பட்டதுமல்ல. இஸ்லாம் என்பது பிறப்பால் எனக்கிடப்பட்டுள்ள ஓர் அடையாளம். அதன் பொருட்டே நான் அது குறித்துப் பேசக் கடன்பட்டுள்ளேன். அல்லது, சைவ சித்தாந்தியான நண்பர் ஒருவர் 'நீங்கள் ஏன் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து எழுதுவதில்லை, பேசுவதில்லை?' என்று கேட்ட கேள்விக்கும் பதிலாக ஒருவேளை இதனை நான் எழுதக்கூடும். அல்லது, என்னைப் பேச அழைத்த தோழர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து நான் பேசுவதன் வழியாக, எனது பிறப்படையாளத்துடனான கையிருப்புச் சோதனையைக் கணக்கிட எண்ணியிருக்கக்கூடும். எப்படியோ, என்னை முறைப்படுத்திக் கொள்ள, அல்லது எனது அரசியலை பரிசோதித்துக் கொள்ள ஒரு வாய்ப்பாக இதனைக் கருதிக்கொள்கிறேன்.

பெரும்பான்மையான மக்களுக்கு மதம், சாதி, இனம் ஆகியவை பிறப்பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் முன்னரே தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. நம்பிக்கை சார்ந்த ஒன்று என்பதற்கு மாறாக, ஒருவரது பிறப்பை அடிப்படையாகக் கொண்டே அவரது மதம் தீர்மானிக்கப்படுகிறது. பெரும்பாலோர் ஏதேனும் ஒரு மதத்துடன் பிணைக்கப் பட்டிருக்கின்றனர். தனது பிறப்பின் அடிப் படையான மதத்திலிருந்து மாறினாலும், பிறிதொரு மதத்துடன் பிணைக்கப்படுவது தவிர்க்க இயலாத ஒன்றாகி உள்ளது. பிரச்சினை, மதத்தை நிராகரிப்பவர்கள் சேர்ந்தியங்கும் ஒரு தளம் இல்லை என்பது மட்டுமல்ல, மதம் ஒரு நினைவுள் நிலையாக அல்லது உள்ளார்ந்த நினைவுந்தமாக பெரும்பான்மையான மக்களிடம் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நினைவற்ற நிலையில் இவர்களுக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது.

பிராய்டு கூறியதைப் போல ஆதிச் சமூகத்தில் கொலை செய்யப்பட்ட தந்தை (murder of the primal father) பற்றிய நினைவு,குற்ற உணர்ச்சியால் மாற்றீடு செய்யப்பட்ட கடவுளின் இயக்கமாக ஆழ்மனதில் படிந்து கிடக்கலாம். இந்தக் கொலை மறக்கடிக்கப்பட்டு அல்லது ஒடுக்கப்பட்டு இருப்பதன் ஓர் அறிகுறிதான் மதங்கள். இந்நினைவை ஒரு சங்கேத மொழியில் இவை காத்து வருகின்றன. குறிப்பாக யூதம், கிறித்துவம் மற்றும் இஸ்லாம் இந்த 'உண்மை'யை (அல்லது இந்த வரலாற்று உண்மையை) வேறுவேறுவிதமான அறி குறிகளாக வடிவமைத்துக் கொண்டுள்ளன என்கிறது பிராய்டியம். அல்லது சமூக உளவியலாளரான யுங் கூறியதைப் போல, அது ஒரு தொல்மனப் படிவமாய் (archetype) எல்லோருக்குள்ளும் இயங்கி வரலாம். அதனால்தான் கடவுள் என்ற கருத்தாக்கம் எல்லா மதங்களிலும் ஒரு தந்தையாக உருவகப்படுத்தப்படுகிறது.

***இன்றைய மதங்கள் எல்லாம் தாய்வழி மதங்களை அழித்து அதன் மேல் கட்டப் பட்டுள்ள தந்தைவழி மதங்கள். தந்தை என்பவன் எப்பொழுதுமே அதிகாரத்தின் பிரதிநிதியாக இருப்பதால் மதங்கள் இன்று உலக அரசாட்சிக்கான போட்டியில் குதித்துள்ளன. மதங்களின் கருணை (தாய்மை) அழிக்கப்பட்டு வெறி (அதிகாரம்) மட்டும் எஞ்சிய நிலையே இன்று உள்ளது.***

அதிலும் குறிப்பாக பெரும்பான்மை - சிறுபான்மையாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒரு சமூகச் சூழலில், இரு மதங்களும் தமக்குள் முரண்படுகிற ஓர் அரசியல் நிலையில் இவ் ஆழ்மன இயக்கம் அல்லது மதவெறி முழுப் பிரக்ஞையுடன் வெளிப்பாடு கொண்டு விடுகிறது. இவ்வெறியின் தன்மை ஏற்ற - இறக்க அளவில், அல்லது மத உணர்வு என்கிற அளவில் ஒவ்வொரு உடலுக்குள்ளும் இயக்கம் கொள்ள முனைகிறது. இவ்வுணர்வுடன் பிரக்ஞைபூர்வமாக விலகி நின்று இயங்குவது என்பது மதச்சார்பற்றவர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது. இந்தியாவில் இயங்கும் மதச்சார்பற்ற அறிவுஜீவிகளிடம் ஏற்பட்டி ருக்கும் ஒரு மன நெருக்கடி என்றும் கூட இதனைச் சொல்லலாம். அதாவது பெரும் பான்மை மதத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான் மையாக அறுதியிடப்பட்டுள்ள மதங்களை நெகிழ்வுடன் அணுகுவதும், சிறுபான்மை மதத்தைச் சார்ந்தவர்கள் தங்களது தேசிய அடையாளத்தை அடித்துக் கூற வேண்டிய துமான ஒரு நிலை இருக்கிறது. அல்லது மதரீதியான பிரக்ஞையோ, அடையாளமோ ஒரு துணைப்பிரதியாக (sub-text) வாசிக்கப்படும் அவசியம் உருவாகியுள்ளது.

பொதுக் கருத்தியல்களுக்கு இந்நூற் றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட நெருக்கடி அல்லது *பிறராக்குதல்* (otherization) அல்லது *தனிமைப்படுத்துதல்* (ghettoization) என்பதான நிகழ்வுப் போக்கின் ஒரு துணை விளைவே இது. அல்லது அடையாள அரசியலுடன் (identity politics) உறவுடைய ஓர் அரசியல் நிகழ்வு. இதை ஒரு வகை அரசியல் வன்முறை அல்லது வன்முறையாக ஒவ்வொரு உடலுக்குள்ளும் உணர்த்தப்பட்டுள்ள ஒன்று எனலாம். இக்கட்டுரை இவ்வன்முறை பற்றிய நினைவு டனேயே எழுதப்படுகிறது.

www.tamilarangam.net

## 1 பொது விசாரணை

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த கருத்துக்களைத் தொகுப்பதற்கு முன்பாக, பொதுவாக மதம் மற்றும் அதன் அரசியல் கூறுகளைப் புரிந்து கொள்ள முயலலாம். மதங்களை மூன்றாக வகைப்படுத்தலாம்.

*1. பழங்குடி மதங்கள்*

பழங்குடியினரிடம் உருவான ஆதி மதங்கள். இன்றளவும் சில பழங்குடியினரிடம் இயங்கி வருபவை. இயற்கையுடம் இயைந்த சடங்குத் தன்மைகள் அதிகம் கொண்ட, மந்திர வாதத்தை அடிப்படையாகக் கொண்ட, நிலம் மற்றும் அதன் வளமைப் பெருக்குடன் உறவு கொண்ட ஒரு வகை பொருண்மைத் தன்மையான மதங்கள். பழந்தமிழர்களிடம் நிலவிய இயற்கையை வணங்கும் மதங்களைக் கூறலாம்.

*2. தேசியத் தன்மை கொண்ட மதங்கள்*

ஒரு குறிப்பிட்ட தேசிய எல்லைக்குள் உருவாகி இயங்கும் மதங்கள். இயற்கையைக் கையகப்படுத்தி, நிலத்தை நாடாக மாற்றி, பகுதி அளவு மந்திரம் மற்றும் சடங்கும், பகுதி அளவு கருத்தியல் வலிமையும் கொண்ட மதங்கள். சைவ, வைணவ மற்றும் திராவிட, பிராமண மதங்களை உள்ளடக்கிய இன்றைய இந்து மதத்தைக் கூறலாம்.

*3. சர்வதேசியத் தன்மை கொண்ட மதங்கள்*

ஒரு குறிப்பிட்ட தேசிய எல்லைக்குள் உருவாகி உலகு தழுவியதாகக் கிளைக்கும் மதங்கள். நில விரிவாக்கம் அல்லது நாடுகள் விரிவாக்கம் என்பதுடன் உறவு கொண்டவை. சடங்குகள் மற்றும் இயற்கை இவற்றை மீறிய அதிதக் கருத்தியல் வலிமை கொண்ட மதங்கள். இம்மதங்கள் ஒற்றைக் கருத்தியலையும் அதற்கான கற்பித நிலப்பரப்புகளையும், அதன் தோற்றமூலங்களையும் கொண்டவை. சான்றாக, ஜெருஸ்லேமை யூத, கிறித்துவ, இஸ்லாமிய மதங்கள் தங்களது புனித நிலமாக உரிமை கொண்டாடுவதைக் கூறலாம். பிரபஞ்சம் உள்ளிட்ட அனைத்து உலகிற்கு மான முறைப்படுத்தப்பட்ட ஒரு பார்வையை, அதற்கான நம்பிக்கையை, கருத்தியல் அடிப் படையைக் கொண்டவை. நிறுவனத் தன்மை யைக் கொண்டவை. இதற்குள் வரவும் வெளி யேறவுமான திறப்புகளைக் கொண்டவை. அதனால்தான் தேசிய எல்லைகளைத் தாண்டி விரிந்து செல்லக் கூடியவையாக இவை உள்ளன.

மேற்கண்ட வகைமை ஒரு வசதி கருதியதே. சில மதங்களுக்குள் இம்மூன்று தன்மைகளும் இருக்கலாம். சில முதலிரண்டு தன்மை மட்டுமே கொண்டதாக இருக்கலாம். இம் மூன்றாவது வகை மதங்களாக யூதம், கிறித்துவம், இஸ்லாம் மற்றும் பௌத்தம் இன்று உலகு தழுவிய மதங்களாகக் கிளை விட்டுள்ளன. அவை தோன்றிய சமூகத்தில் நிலவிய பல சிறு சிறு மதங்களை, அல்லது வழிபாட்டு முறைகளை, அல்லது சடங்காச் சாரங்களை மறுத்தும், உள்ளடக்கியும் அன்றைய சமூகத் தேவைக்கு ஏற்பச் செதுக்கியும் உருவானவை என்பதில் இரு கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை. யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவை இறையின் வெளிப்பாடுதான் என்று அவற்றின் தூதர்கள் வழியாக அறிவித்துக்கொண்ட போதிலும், அதன் தோற்றமூலங்களை ஆய்ந்தவர்கள் அதன் சமூகக் காரணிகளை சுட்டிக் காட்டத்தான் செய்கிறார்கள். இம்மதங்கள் அவை தோன்றிய காலத்தில் சமூகத்தின் முற்போக்குப் பாத்திரத்தை ஆற்றியவை. அல்லது மார்க்ஸ் கூறியது போல 'மனமற்ற உலகின் மனமாக இருந்தவை'.

பௌத்தம் தவிர்த்த மற்ற 3 மதங்களிலும் ஓர் அடிப்படை ஒற்றுமை உண்டு. அது அவற்றின் ஒற்றைத் தன்மை அல்லது ஏகத்துவம் எனலாம். அதாவது ஒற்றைக் கடவுள், ஒற்றை வேதம், அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேவதூதர் என்கிற அடிப்படை. இந்த அடிப் படைகள் மற்ற எல்லாக் காரணிகளையும் விட 1. உலகு தழுவிய ஒன்றாக 2. நில, மொழி, நிற, இன எல்லைகளைத் தாண்டி இம்மதங்கள்

www.tamilarangam.net

செயல்படக் காரணமாக அமைந்துள்ளன எனலாம். இக்காரணிகளே உலக அரசாட்சி பற்றிய கண்ணோட்டத்துடன் இம்மதங்கள் இயங்கக் காரணமாக அமைகின்றன.

உலகை அதன் அழிவிற்கு முன்பாக ஆளும் மதங்களாக இவை விரிவடையும் என்பது இவற்றின் மைய நம்பிக்கைகளில் ஒன்றாய் உள்ளது. அறியாமையின் விளைவாக பிற மதங்களை இவை குறியிடுகின்றன. அதனால், பிற மதத்தினருக்கு அறிவு ஒளியை ஏற்றுகின்ற கடமையைக் கொண்டதாகத் தங்களைக் கருதிக்கொள்கின்றன. மொத்த மனித குலத்தின் பிரதிநிதியாக அறிவித்துக் கொள்கின்றன. இதன் ஒரு நீட்சியே உலகை ஆள்வதற்கான போட்டி. குறிப்பாக இஸ்லாம் மற்றும் கிறித்துவத்துக்கு இது பொருந்தும்.

வரலாற்றை அணுகிப் பார்த்தால், இஸ்லாம் மற்றும் கிறித்துவ மதங்களைச் சேர்ந்த பேரரசுகள் உலகில் தம் தேசிய எல்லைக்கு அப்பால் ஆண்டிருப்பதையும், மதத்தைக் காக்கின்ற பெயரால் அப்பேரரசு கள் பெரும் போர்களில் ஈடுபட்டதையும் காண முடிகிறது. ஒரு புறம் உலகெங்கும் இம்மதங்கள் அவற்றின் பேரரசுகளுடன் பரப்பப்பட்ட தையும், மற்றொரு புறம் தங்களது நெகிழ்வுத் தன்மையற்ற அடிப்படை அடையாளங்களைக் காத்து வந்திருப்பதையும் காண முடிகிறது. இதனை இப்படிக் கூறலாம்:

வெவ்வேறு பண்பாடுகளிலும் இம்மதங் கள் தனது ஒற்றைக் குரலை அப்பாண்பாட்டி னது மொழி வழியாக மொழிமாற்றம் செய்து கொண்டு அவற்றை வென்றடக்கி வந்துள்ளன.

இம்மதங்கள் அடிப்படையில் உலகின் பன்முகத் தன்மையை மறுதலிப்பவையாகவும், முழு மனிதகுலத்திற்கான விடுதலை என்கிற கதை கூறலால் உலகப் பொதுவான கருத்தியலைக் கொண்டவையாகவும் உள்ளன. இம்மதங்களுக்குள்ள ஒரு பெரும் புனைவு *உலக அழிவு* அல்லது *பிரளயம்* பற்றிய கருத்தாக்கம். இவ்வழிவிற்கான அறிகுறிகளை வேத நூல்கள் அறுதியிட்டுள்ளன. அல்லது பிராய்டு கூறிய *உயிர்ச்சிதை உணர்வுடன்* (death instinct) உறவு கொண்ட சாவு விருப்பைக் கொண்டதாக இருக்கின்றன. *இறுதி அழிவு* பற்றிய கதையாடல் அற்ற நிலையில் எந்த ஒரு மத இருப்பும் கேள்விக்குரியதாகி விடும்.

மதங்களின் பேரழிவு பற்றிய கதை யாடல் ஓர் அடிப்படையான, பிரபஞ்சம் தழுவிய வாழ்வியல் தத்துவத்தைத் தந்து விடுகிறது. அடிப்படைவாதம் தன்னை நியாயப் படுத்திக் கொள்ள ஓர் உளவியல் களத்தைத் தந்திருப்பது இப்பேரழிவு பற்றிய கதை யாடல்தான். 'எல்லாம் அழியக்கூடியவை; இறைவனின் தீர்ப்பு இவ்வுலக அழிவுதான்'. அதற்குப் பல அடையாளங்கள், அவற்றைத் தழுவிய கதையாடல்கள் கட்டமைக்கப் பட்டுள்ளன.

ஏன் இந்தப் பேரழிவு பற்றிய கதையாடல் மதத்திற்கு அவசியப்படுகிறது; இக்கதையாடல் அற்ற நிலையில் மதங்களின் செயல்பாடு என்னவாக இருக்கும்? என்பது ஒரு முக்கியக் கேள்வி.

***மதங்களின் நினைவிலி தளத்தை கட்டமைத்திருக்கும் ஒரு முக்கியச் செயல்பாடு இப்பேரழிவு. மதம் மனிதர்களை ஒரு நிரந்தர அச்சத்தில் அல்லது பதற்றத்தில் வைத்திருக்க இது அவசியப்படுகிறது. மரணம் குறித்த பேரச்சத்தின் விளைவே மதங்களைத் தோற்றுவிக்கிறது.***

மதங்கள் ஒரு முடிவெல்லையை அறிவித்துவிட்டு, அவ்வழிவிற்கு முன்பாக அம்மதங்களே உலகை 'ஆளும் என்று கூறுகின்றன. இவ்வழிவிற்குப் பிறகு ஒவ்வொரு மனிதனின் இவ்வுலகச் செயல்பாடுகள் அனைத்தும் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்றும், அந்த இறுதி விசாரணைக்குப் பிறகு மனிதனின் பாவ - புண்ணியங்களுக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கப்படும் என்றும், அதன் பின் உள்ள கடவுளின் மறுஉலகில் சொர்க்க / நரக, இன்ப / துன்பங்கள் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளன. மனிதகுலம் முழுமையும் கடவுளின் கண்காணிப்பிற்கு

www.tamilarangam.net

உட்படுத்தப்பட்டுள்ளதாக நிச்சயப்படுத்தப் பட்டுள்ளன. இக்கண்காணிப்பிற்கு உட்படுத் தப்பட்ட ஒவ்வொரு மனிதச்செயலும் குறிக்கப் பட்டு பட்டியலிடப்படுவதாகத் தெரிவிக் கின்றன. மனிதனைச் சுற்றி, தப்பமுடியாத மர்மவலை அல்லது வெளி ஒன்று மதங்களால் உருவமைக்கப்பட்டுள்ளது. இந்த வெளிக்குள் கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையிலான பெரும் போர் ஒன்று நடந்து கொண்டி ருக்கிறது. இப்போரின் பகடைக் காய்களாய் மனிதர்களின் வாழ்வியக்கம் அர்த்தப்படுத்தப் படுகிறது. ***சாத்தான்களோ, அரக்கர்களோ, எதிர்ப்பாளர்களோ இல்லாமல் இம்மதங்கள் சாத்தியமில்லை. மதத்தின் அறவியல் என்பதே அதன் தடைசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பதிலிருந்துதான் உருவாகிறது.*** சாத்தான் என்பது கடவுளின் ஒரு கண்ணாடிப் பிம்பம் அல்லது ஒரு மாற்றுத்



தன்னிலை அல்லது கடவுளைக் கட்டமைப்பதற்கான ஓர் எதிர்மை எனலாம். அல்லது கடவுள் என்கிற Self-ஐ கட்டமைப்பதற்கான லக்கானியன் Other எனலாம். மதத்தின் தடைசெய்யப்பட்ட வெளியை ஆளும் ஒரு 'கடவுள்' எனலாம்.

கிறித்துவம் மற்றும் இஸ்லாம் மனித அறிவை அல்லது அறிதலை 'பாவம்' என்று அறிக்கையிடுகின்றன. அறிதல் என்பது கடவுளால் தடைசெய்யப்பட்ட சாத்தானின் கனி என்கின்றன. கனியை உண்டு பெற்ற அறிவு பாவமாகக் குறிக்கப்படுகின்றது. மனிதகுலம் முழுமையுமே 'ஆதிபாவம்' பற்றிய குற்ற உணர்ச்சிக்குள் ஆழ்த்தப்பட்டுள்ளது. இந்தப் பாவத்தின் சம்பளமாக மனித குலத்தின் மீது மரணம் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளது. ***மரணத்திலிருந்து தப்பமுடியாத மனித வாதையை இதப்படுத்திக் கொள்ள, 'பேரழிவு' என்கிற கதையாடல் நுட்பமாகப் புனையப்பட்டுள்ளது. ஆக, அறிவின் வளர்ச்சி என்பது ஒரு வகையில் மரணத்தை நோக்கிய பாய்வாக அறுதியிடப்பட்டுள்ளது.***

அறிவு மனித அழிவுக்கே இட்டுச் செல்லும் என்றவாறு முன்னரே வேத நூட்களில் தீர்க்கதரிசனப் படுத்தப்பட்டுள்ளதால், நவீன அறிவிலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றும் கடமையும் அதற்காய்ப் பிறரை அழிப்பதற்கான புனிதப்போர் உரிமையும் மதவாதிகளால் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. அறிவின் வளர்ச்சியாக உலகில் வெளிப்பட்ட பெரும் போர்கள், அணு ஆய்வுகள், உயிர்க்கொல்லித் தொழில் நுட்பங்கள், மழைதரும் காடுகளின் அழிவு, ஓசோன் படலச் சிதைவு, தட்பவெப்ப மாற்றம், எண்ணற்ற சக உயிரினங்கள் அழித் தொழிப்பு, மக்கட்தொகைப் பெருக்கம், எண்ணெய்க் கையிருப்பு குறைந்து வருதல், நீர் மற்றும் நிலப் பற்றாக்குறை ஆகியவை இந்த தீர்க்க தரிசனத்தின் மறு-உரைத்தலுக்கு (re-interpertaion) உட்பட்டு உலக அழிவிற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதாரமாகக் காட்டப்படுவதையும் மறுத்துவிட முடியாது. அவ்வகையில், நவீன விஞ்ஞானத்தின் பிறப்பு அல்லது அறிவின் வளர்ச்சி ஆகியவற்றின் எதிர்மறை விளைவு, இந் நூற்றாண்டில் மதமீட்புவாதம் தலையெடுத்தத்தற்கு ஒரு காரணம்.

ஆக, உலக அழிவு நிச்சயிக்கப்பட்ட பின் கடவுள் ஆட்சியின் வருகைக்கான அறிகுறிகள் வெளிப்பாடு கொள்வதாக, இன்றைய சமூகச் சிதைவுகள், மனித அழிவுகள் கண்டுணர்ந்து கதைக்கப்படுகின்றன. அழியப்போகும் இவ் வுலகில் மனிதன் என்கிற பொருண்மையான உயிர்ப்பு தன்னை அழிவற்றதின் அடையாளத்துடன் இணைக்கத் துடிக்கிறது. இத் துடிப்பின் விளைவாக இயல் உலகிலிருந்து மறு உலகிற்கான 'கூடுபாய்வு உடல்களாக' மத உடல்கள் தங்களைக் கருதிக்கொள்கின்றன. வாழ்வின் அர்த்தமின்மைக்கு எதிராக ஓர் அர்த்தம் ஏடுகளால் ஏலவே கற்பிக்கப் பட்டுள்ளது. அது, வாழ்தல் என்பதே இறையை அடைவதற்கான, அல்லது மறு உலகில் மரணமற்ற பெருவாழ்வைப் பெறுவதற்கான ஒன்று என்பதே. அவற்றின் அடிப்படையில் மத உடல்கள் தங்களை இலட்சிய உடல்களாக, கடவுளின் போர்ப்படையாகக் கருதத் துவங்குகின்றன. இஸ்லாமிய 'ஜிகாத்' எனப்படும் புனிதப்போரோ, அல்லது கிறித்துவத்தின் சிலுவைப்போரோ, இந்த உடல்களுக்கு ஒரு தத்துவ ஆன்மீக அந்தஸ்தைத் தருகின்றது. மதத்திற்காக இறப்பவன் ஓர் அமரனாக (Martyr) கருதப்பட்டு புகழுடம்பாகச் சிறப்பிக்கப்படுகிறான். இம்மதங்கள் தங்களது புனைவுகளுக்குள் வைத்திருக்கும் பெரும் வன்முறை, அவை உடல்களின் பொருண்மைத் தன்மைக்கு எதிராக ஆன்மீகத் தன்மை என்கிற 'ஆத்மா' சார்ந்த ஒரு தொழில்நுட்பத்தை உட்செரித்துக் கொண்டிருப்பதுதான். இதுவே மத அடிப்படைவாதம் உருவாகுவதற்கான தத்துவப் பின்புலத்தையும், அதன் இயக்க சக்திகளான உடல்களுக்கு உளவியல் பலத்தையும் தரும் ஒரு முக்கியமான அடிப்படையாகும்.

ரோமப் பேரரசுடன் கிறித்துவமும், உதுமானியப் பேரரசுடன். இஸ்லாமும் இப்படித்தான் உலக மதங்களாக வளர்ந்து வந்துள்ளன. இவை கூறும் உண்மை: மதம் அரசுடனும் சிலவேளை அரசாகவும் செயல் பட்டு வந்துள்ளது. ஆக, மதம் அரசியலுக்கு அப்பாற்பட்டதோ, சுயேட்சையானதோ அல்லது அதிகாரத்திற்கும், அரசிற்கும் வெளியே நிற்பதோ அல்ல. அது ஓர் அதிகார மையமாக இருந்து வந்துள்ளது. உலகின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மதம் என்கிற நிறுவனம்தான் உலகப் பார்வையை, அரசை, அரசியலை, வாழ்வை, ஏன் மனிதனைக்கூட உருவமைத்தது. ***இன்று மதமாக நாம் அறிந்திருப்பது சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அரசியல் நிறுவனமாக அல்லது இன்றைய நவீன அரசியல் மொழியில் கூறினால் ஒரு கட்சியாக இருந்துள்ளது என்பது மிகையானதல்ல.*** கட்சி என்பது வர்க்க உணர்வு பெற்ற முன்னணிப் படை என்கிறது மார்சிய - லெனினியம். இஸ்லாம் வளர்ச்சியுடன் வணிக வர்க்க வளர்ச்சியையும், கிறித்துவ வளர்ச்சியுடன் பண்ணை அடிமைச் சமூகம் சிதைந்து போனதையும் அரசியல் பொருளாதாரம் சுட்டிக்காட்டுவதை இதனுடன் இணைத்துக் காணலாம். ஒரு குறிப்பிட்ட வர்க்கத் தேவையுடன் உருவாகிய மதங்கள், தம் வர்க்கத்தன்மைக்கு அப்பால் மனிதம் தழுவியதாகக் கிளைக்கின்றன. அல்லது ஆளும் வர்க்க மேலாண்மைக் கருத்தியலாகச் செயல்பட்டு, உலகம் பற்றிய ஒரு பொதுப்புத்தியைக் கட்டமைத்துள்ளன. வர்க்கத் திசைவெளிப் பண்புகளைப் புதைத்து, ஒரு பொதுத் தன்மையை அல்லது பிரபஞ்சத்திற்கான பார்வையை தருவதாகத் தோற்றம் தருகின்றன.

எல்லா மதங்களும் தத்தமது அடிப் படையிலான ஒரு 'மனித முன்மாதிரி'யை அல்லது மனித சாராம்சத்தைக் கொண்டிருக்கின்றன. இந்த மனித முன்மாதிரிக்கு இணையான ஒரு மனித சாராம்சத்தை உருவாக்கியது நவீன சமூகம் என அறியப்படும் இன்றைய சமூகம். அது 'மதச்சாரமா'க இருந்த மனித நிலையில், 'தனி மனித சுயம்' என்கிற ஒவ்வொரு உடலுக்குமான தனித்துவமான

www.tamilarangam.net

சாரம் (essence) ஒன்று இருக்கிறது என்று, மனிதனின் அடையாளத்திற்குள் 'தனியன்' (individual) என்ற ஒரு பிளவினை உருவாக்கு கிறது. ஒரு மனிதன் மதம் சார்ந்தவனாக இருந்தாலும், அதே நேரத்தில் அவனுக்கு தனித் தன்மைகள் என்கிற சுயம் ஒன்று இருப்பதா கவும் சொல்லப்பட்டது. *மதத்தை ஒரு தனி மனிதத் தேர்வாக அதாவது, சாராம்சத்தின் மையத்திலிருந்து மாற்றி அதனை ஒரு தனிப்பட்ட வெளிக்குள் இருத்திய நவீன சமூகம் கண்ட ஒரு கருத்தியலே மதச்சார்பின்மை (secularism) என்பது.* இது, முற்றிலுமாக மதத்தின் 'ஆத்மா' தனிமனிதனின் 'சுயமா'க பதிலீடு செய்யப்பட்டு, தனிமனித சுதந்திரம் பற்றிய கதையாடலாக உருவாக்கப்பட்டது. இந்த சுயத்திற்கு ஒரு 'அப்பாலை'த் தன்மையும் தரப்பட்டது. 'ஆத்மா - உடல்' என்கிற எதிர்மை ஒரு புதிய அர்த்தத்தில் மீள உரைக்கப்பட்டது. மீண்டும் 'மனித சாராம்சம் - இருப்பு' என்கிற முரணமைவாக இது விரித்துரைக்கப்பட்டது. இதற்கு அறிவார்ந்த ஆய்வு அல்லது பகுத்தறிவு அடிப்படையிலான விளக்கம் தரப்பட்டது.

இந்த விரித்துரைப்பின் வழியாக மதம், அதன் ஆதி வடிவில் அல்லது அதன் மையமான முரண் வடிவில், புதிய வாழ்வியக்கத்தை (இருத்தலியல் நெருக்கடி களாக) பல புதிய சிந்தனைகள் வழி பெற்றது. இச்சிந்தனைகள் பகுத்தறிவிற்கு ஒப்பானதாக விளக்கப்பட்டன. உலகின் மைய சிந்தனைப் போக்காக பகுத்தறிவு அதாவது rationality எனப்படும் மேற்கத்திய மறுமலர்ச்சிக்காலக் கருத்தாக்கம் ஆதிக்கம் வகிக்கத் துவங்கியது. மனித அறிதலில் பகுத்தறிதலுக்கு உட்பட்டவை மட்டுமே ஏற்கத்தக்கவை என்பதான தர்க்கம் கட்டமைக்கப்பட்டது. அதற்குத்தக, மதப் பிரதிகளுக்கு பகுத்தறிவுக்கு உட்பட்டு மறுவிளக்கம் அளிக்கப்பட்டது. எந்த மதமும் விஞ்ஞானத்தை மறுப்பதில்லை என்றும், மாறாக, இன்றைய விஞ்ஞானம் அன்றே மதத்தால் முன்அனுமானிக்கப்பட்டதாகவும் அறிவித்துக் கொள்கின்றன. இதன் மூலம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஏற்படுத்தும் அழிவை நியாயப்படுத்துகின்றன.

மத எதிர்ப்பியக்கங்கள் அல்லது மதச் சார்பின்மை இயக்கங்கள், கடவுள் என்கிற கருத்தாக்கத்திற்கு செலுத்திய அக்கறையை, இந்த உடல் - ஆத்மா என்கிற கற்பிதக் கருத்தமைவுகளின் முரணியக்க விளையாட் டிற்கோ, அல்லது விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுத்திய அழிவிற்கு எதிராகவோ செலுத்தவில்லை. இதன் விளைவாக உரு வாக்கப்பட்ட மதச்சார்பற்றவர்கள் என்கிற அடையாளம் கூட இந்த ஆத்மாவின் வாதைக்கு உட்படத் துவங்கியது. 'மத உலகமும் மதச் சார்பற்ற உலகமும் நுட்பமாக வரையறுக்கப் பட்டு பிரிக்கப்படவில்லை. மதங்கள் முன்வைத்த தத்துவ, அறவியல் மதிப்பீடுகள் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பின்பற்றப்பட்டன. இது, மதஉலகிற்கு எதிரான சவாலை மதச்சார்பற்ற உலகால் சமாளிக்க முடியாமல் போகச் செய்தது' என்கிறார் மூஜன் மேமன் தனது ஆய்வில்.

*மனிதசாரம், மனிதனின் மையம், ஆத்மா, சுயம் என்பதான மதத்தின் மையம், மனித விடுதலை என்கிற வடிவில் வேறு உருவெடுத்து உலா வந்தது. 'பகுதிசார் மனித விடுதலை' என்பதிலிருந்து 'பொதுவான மனித விடுதலை' என்கிற பெரும் எடுத்துரைப்பின் வழியாக உலகம் அர்த்தம் கொள்ளத் துவங்கியபோது, மனித விடுதலை யைப் பேசும் தத்துவங்கள், இயக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெரும் நம்பிக்கை மையங்களாக மக்களை வழிநடத்திச் சென்றன. இந்த நம்பிக்கையில் ஒன்றுதான் மார்க்சியமும், அதன் வழிகாட்டுதலில் புரட்சிகர மாற்றமடைந்த சோவியத் ரஷ்யாவும். 20-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இம்மையங்கள் சிதையத் துவங்கின. இச்சிதைவுகள் உருவாக்கிய கருத்தியல் நெருக்கடிகளே மதமீட்புவாதம் உருவாக வழிகோலியது. இதன் அதிதீவிர வடிவமே மத அடிப்படைவாதம் என்பது.*

## 2 வரலாற்று விசாரணை

18-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு உலகின் முகம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையுடனும், நவீன விஞ்ஞானத்தின் பிறப்புடனும் முற்றிலுமாக மாற்றம் அடைகிறது. எந்தவொரு பொருளுற்பத்தி முறையும் அதற்கான கருத்தியல் கட்டு மானத்தைக் கொண்டிருக்கும். அக்கருத்தியல் கட்டுமானம், கிராம்சி கூறுவது போல அதற்கான பொதுப்புத்தியை (common sense) உருவமைக்கும். அப்பொதுப்புத்தியின் விளை வாக வெகுசன உலகப் பார்வையும், அதன் அடிப்படையிலான அன்றாடவாழ்வும் உரு வாகும். இவ் அன்றாடவாழ்வின் பிரச்சினைப் பாடுகள் பொதுப்புத்தியின் வழியாகப் புரிந்து கொள்ளப்பட்டு, தீர்வைக் கோரி நிற்கும். இத்தீர்வுகள் பொருண்மையாக (யதார்த்த பூர்வமாக) தீர்க்கப்படாத நிலையில், கற்பனார்த்தமான தீர்வுகள் ஒரு விடி வெள்ளியாகத் தோன்றும். பழையவகைப்பட்ட சமூகங்களில் இக்கற்பனார்த்தத் தீர்வுகளை மதம் தந்துகொண்டிருந்தது. 'நவீன சமூகமாக' அறியப்படும் காலங்களில், இத்தீர்வுகளைப் புதிய கருத்தியல்கள் தந்தன.

நவீன சமூகத்தின் முக்கியச் சிந்தனை களான

1. மனிதநேயவாதம் (Humanism)
2. தனிமனிதவாதம் (Individualism)
3. பகுத்தறிவுவாதம் (Rationalism)
4. மதச்சார்பின்மை (Secularism)
5. வரலாற்றின் முன்னோக்கிய வளர்ச்சி (Progressive history and progress)

ஆகியவை மனிதனை மையமானதாகக் கொண்டு, கடவுளின் இடத்தை மனிதனைக் கொண்டு மாற்றீடு செய்தது. மதங்களை அரசிடமிருந்தும் அதிகாரத்திடமிருந்தும் பிரித்தது. மதங்களை சமூக அதிகாரத்தின் பொதுத்தளத்திலிருந்து (public space) தனித்தளத்திற்கு (private space) நகர்த்தியது. இது, மதத்தை அதன் சமூக அதிகார பீடத்திலிருந்து நகர்த்துவதாகியது. 'மதம் அரசிலிருந்தும் அரசிடமிருந்தும் 300 ஆண்டுகளுக்கு முன்பே பிரிக்கப்பட்டது'. இப்பிரிவினையே நவீன அரசு, அரசியல் மற்றும் அதன் மதச்சார்பின்மை என்கிற கருத்தியல் ஆகியவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகியது. இக்கருத்தாக்கம்கூட 'சீஸரின் பொருட்கள் சீஸருடையவை, கடவுளின் பொருட்கள் கடவுளுடையவை' என்கிற கிறித்துவ மறையிலிருந்தே எடுத் தாளப்பட்டது.

மதமும் அரசும் பிரிக்கப்பட்ட நிலையில், மக்கள் தங்களது பிரச்சினைக்கான தீர்வுகளைப் பொது நிறுவனங்களிடம் அல்லது மதச்சார்பற்ற கருத்தியல்களிடம் எதிர் நோக்கும்படி ஆகியது. மதம் போன்ற 'அப்பாலை' உண்மைகளின் பொற்காலக் கனவுகளில் கட்டுண்டு கிடந்த நிலை மாறியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி வரை இத்தீர்வுகளுக்கான ஒரு சோதனைக்களமாக உலகில் பல இயக்கங்கள், நிறுவனங்கள், காலனியம், ஏகாதிபத்தியம், சோஷலிசம், உலகப்போர் முதல் பல்வேறுபட்ட புரட்சிகள் வரை நடந்தேறியது. இவை பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்கவியலாத நிலையில் பெரும் சரிவைக் கண்டன.

சமிர் அமீன் சுட்டிக்காட்டுவதைப் போல, ***'எல்லா நிறுவனங்களும் பகுதி அளவிலோ அல்லது முழு அளவிலோ தங்களது நியாயப்பாடுகளை இழந்தன. மக்கள் இனி எந்த அளவிலும் அவற்றை நம்பத் தயாரில்லை. இவற்றிற்குப் பதிலாக சூழலியல், பெண்ணியம், ஜனநாயகப் போராட்டங்கள், சமூக நீதி, இனரீதியான இயக்கங்கள் போன்றவை மையமான இடத்தைப் பிடித்தன'.***

புதியவகைப்பட்ட சமூக, அரசியல், பொருளியல் நெருக்கடிகளைச் சமாளிக்க ஜனநாயகம், மதச்சார்பின்மை உள்ளிட்ட முதலாளித்துவ எழுச்சி கொண்டு வந்த கருத்தியல்களும், சோஷலிஸம், மக்கள் ஜனநாயகம் போன்ற மார்க்சியம் முன்வைத்த

www.tamilarangam.net

கருத்தியல்களும், அமைப்புகளும், அவற்றின் விஞ்ஞான தர்க்கங்களும் பிரச்சினைக்கு உள்ளாயின. சமூகம் ஒரு குறிப்பிட்ட அச்சைப் பற்றி இயங்கிய நிலையிலிருந்து சிதைந்து மையமிழக்கத் துவங்கியது. இச்சிதைவுகளும், சிதறலும் உலகப்பார்வையின் ஒருமுகத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தின. மையமற்றதான சிந்தனைகள் வலுக்கத் துவங்கின. ***உலகளாவிய சிந்தனையோ, அல்லது எல்லாவற்றிற்குமான தீர்வைத் தரக்கூடிய ஒரு முழுமைப்படுத்தப்பட்ட கருத்தியலோ, அல்லது முழுமுதலான கருத்துப் போக்குகளோ இனி சாத்தியமில்லை என்கிற நிலை உருவாகியது. மனிதன் என்கிற மையமும், மனிதனுக்கான மையமும் சிதறத் துவங்கியது. 'மனித ஆத்மா' அல்லது 'சுயம்' சிதறடிக்கப்பட்ட நிலையில், புதிய சிந்தனை யாளர்கள் வர்ணிக்கிற 'பின்நவீனத்துவ சமூகம்'*** (Postmodem society) ***என்கிற ஒரு சமூகம் தோற்றம் கொள்கிறது. இதன் ஒரு இணைவிளைவாகவே மத அடிப்படைவாதமும் உருவாகுகிறது.***

'நவீனத்துவம் அநேகமாக அடிப்படை வாதத்திற்கு எதிரானது. அடிப்படைவாதம் (அல்லது அப்படி அழைக்கப்படுகிற) இஸ்லாமிய மரபு இலக்கியங்களை, பொதுவாக இஸ்லாமிய மரபார்ந்த வாழ்க்கை முறைகளை நவீனப்படுத்துவதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது நவீனம் மட்டுமல்ல, பின்நவீனத்துவப் போக்கிலும் செல்லக்கூடியது', என்கிறார் தன்னை ஓர் இஸ்லாமிய அடிப்படைவாதி என்று கூறிக்கொள்ளும் சூடானின் புரட்சிகர இஸ்லாமிய அரசின் அமைச்சரும் அரசியல் தலைவருமான ஹஸன் அல் துராபி. (அவர்கள் என்று அவரால் குறிப்பிடப்படுவது மேற்கத்தியர்களும், அமெரிக்கர்களும், நவீனத்துவவாதிகளும்).

***'இஸ்லாமிற்குத் திரும்புதல் என்பது ஒரு பின்நவீனத்துவ நிகழ்வு. இருபதாம் நூற்றாண்டின் பிந்தைய காலங்களில் நிகழ்ந்த தேசிய மற்றும் உலகளாவிய வளர்ச்சியின் விளைவால் உருவான அழுத்தங்களுக்கான பதிலே அது'***, என்கிறார் முக்தாதர் கான்.

நவீன சமூகமும் அதன் தத்துவங்களும் அரசுகளும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாத நிலை மட்டுமன்றி, தீர்ந்துவிடும் என்கிற நம்பிக்கையையும்கூடச் சிதைத்துவிட்ட நிலையில், மதங்களின் 'பொற்காலம்' பற்றிய கதைகூறல்கள் பெரும் நம்பிக்கை மையங்களாக மாறிவிடுவது இயல்பானதே. 'மதம் முறையான வழியில் அல்லது முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையே இதற்கான காரணம். அதனால் மதத்தை அதன் முழுவீச்சில் பயன்படுத்தி பழைய பொற்காலத்தைக் கட்டமைத்து விடலாம்' என்கிற நம்பிக்கையும், மனித குலத்தின் மீதான நவீன மறுமலர்ச்சிக் காலம் முன்வைத்த நம்பிக்கைக்குப் பதிலீடாக, கடவுள் மீதான பழைய நம்பிக்கையும் ஒரு தீர்வாகத் தோன்றத் துவங்குகிறது. எல்லா வற்றிற்கும் மதம் ஒன்றே பதில் என்கிற மத அடிப்படைவாத நிலைக்கு மக்கள் இப்படித் தான் தள்ளிச்செல்லப்படுகிறார்கள்.

மார்க்சியத்தின் வீழ்ச்சி, சுதந்திரத் திற்குப் பிந்தைய பின்காலனியச் சமூகங்களின் தேசிய அரசுகள் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது, உலகச் சந்தை உருவாக்கத்தில் மரபான படிமுறை அமைப்புகள் புதிதாக வந்த சக்திகளால் மாற்றீடு செய்யப்பட்டது, அதாவது *மண்ணின் மைந்தர்கள் - அந்நியர்கள்* என்கிற முரணாக மாறியது. மத அடிப்படைவாதம் இவ் அந்நியர்கள் அல்லது குடியேறியவர்களுக்கு எதிராகத் தனது மரபுகளை தூக்கிப் பிடித்தது. இந்த உள்ளார்ந்த முரண் ஒரு சர்வதேசிய தளத்திற்கு மத அடையாளத்தால் மாற்றீடு செய்யப்பட்டது. அந்தந்த சமூகத்தின் சிறுபான்மை மதங்கள் பிறராக, அந்நியராகக் குறிக்கப்பட்டனர். உள்ளிருப்பவர்களுக்கு ஒருமித்த அடையாளத்தைத் தருவதற்கு மதம் ஒரு காரணியாக மாற்றப்பட்டது. மதத்தின் போர்வையில் சமூக ஏற்றத்தாழ்வுகள், வர்க்கப் படிமுறை அமைப்புகள் மறைக்கப்பட்டன. வரலாற்றின் மிக அடிப்படையான

www.tamilarangam.net

விதிமுறையே இந்த 'தாம்' மற்றும் 'பிறர்' என்கிற முரண்தான். இம்முரணைத் தீர்ப்பதற்கான விதிமுறைகள் ஒவ்வொரு சமூகக் கட்டத்திலும் அச்சமூக அமைப்பின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். உலகமயமாகி வரும் இன்றைய பின்காலனிய சமூக அமைப்பில் இம்முரண் மரபான விதி முறையான மதத்தை அதன் கருத்தியலை எடுத்துக் கொண்டுள்ளது.

உலகமயமாக்கலின் ஒரு எதிர்விளைவே அடிப்படைவாதம் உருவாக பிறிதொரு



காரணம். உலகமயமாக்கலின் விளைவாக ஏற்றுமதி செய்யப்படும் மேற்கத்திய பண்பாடும் அதன் தாக்கமும் தேசிய சுய பொருளாதாரத்திற்குள் ஏற்படுத்தும் விளைவுகளும் சேர்ந்து அடிப்படைவாதத்தை அல்லது மதத்தை அரசியலுக்கான காரணியாக மாற்றியுள்ளது. ***பொருளாதார உலகமயமாக்கல் மற்றும் பன்னாட்டுத் தொழிற் குழுமங்களின் வளர்ச்சி ஆகியவை பல-பண்பாட்டுக் கொள்கை என்கிற பெயரில் எல்லா நாடுகளிலும் அந்நாட்டின் சுயப் பண்பாட்டை நீர்த்துப்போகச் செய்து மேற்கத்தியமாதல் என்பது நிகழத் துவங்கியுள்ளது. இதிலிருந்து விலகி நிற்பதற்கு மதம் என்பது ஒரு அரசியல் புகலிடமாக ஆகியுள்ளது. ஒரு வகையில் சமூகங்களில் தேசிய எழுச்சியாக இருந்தவை, பின்-காலனியச் சமூகங்களில் மத எழுச்சியாக வடிவம் கொண்டுள்ளன. தேசியக் கருத்தியலின் வீழ்ச்சியும், தேசிய அரசுகளின் தோல்வியும் இதற்கு ஒரு காரணம் எனலாம்.***

ஆக, மத அடிப்படைவாதம் அதன் தத்துவ வேர்களைவிட அரசியல் நோக்கையே ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது. அல்லது அதிகாரத்திற்கான ஒரு போட்டியாளனாக சர்வதேச அளவில் உருவாகி உலக அரசாட்சி பற்றிப் பேசுகிறது. இதில்தான் ஏகாதிபத்தியங்களும் மேற்கத்திய நாடுகளும் உடனடியாக பயமும் கவலையும் கொள்கின்றன. உலகை ஆள்வதற்கான அதிகார பீடத்தை அடிப்படைவாத அமைப்புகள் அசைக்கத் துவங்கின. அரசியல் படுகொலைகள் இடத்தில் மதவெறிப் படுகொலைகள் மாற்றீடு செய்யப்பட்டன. அரசியல் பயங்கரவாதங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மத பயங்கரவாதம் பிரச்சினைக்கு உரியதாகக் கவனம் குவிக்கப்பட்டது. இந்த மத பயங்கரவாதத்தைத் தங்கள் நலனுக்காக நீரூற்றி வளர்த்தவைதான் மேற்கத்திய ஏகாதிபத்திய அரசுகள்.

சான்றாக, கென்யாவில் நடந்த அமேரிக்கத் தூதரக குண்டுவெடிப்பிற்குக் காரணம் சூடானிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புதான் எனக்கூறி, சூடான் மீது அமேரிக்க விமானப்படை தாக்குதல்

www.tamilarangam.net

தொடுத்தது. சூடானிய அரசு பின்லாதனுக்கு உதவுவதாகக் கூறி, அமேரிக்கா சூடானை பொருளாதாரத் தடை விதிப்பதாக மிரட்டியது. ஆனால், சூடானில் இஸ்லாமிய 'பயங்கரவாத' அரசை வளர்த்ததில் அமேரிக்கவிற்கு முக்கியப் பங்கு உண்டு என்கிறது Islamic Fundamentalism Update என்கிற செய்தி இதழ். 'கும்மி அராபிக்காம்' (Gummy Arabicum) எனப்படும் பழச்சாற்றை வீழ்படிவு இல்லாமல் காப்பதற்கான ஒரு கூட்டுப்பொருள் உலகிலேயே 90 சதவீதம் சூடானில்தான் உற்பத்தி ஆகிறது. இதற்கான அகாசியா எனப்படும் மரம் சூடானில்தான் அதிகம் உள்ளது. இப்பொருள் இல்லாமல் பழச்சாறு உற்பத்தி செய்யமுடியாது. இக்கூட்டுப்பொருளிற்காக அமேரிக்கா வருடத்திற்கு 9 பில்லியன் டாலர் செலவழிக்கிறது. இதன் பொருட்டே சூடான்மீது அதிக வாஞ்சை காட்டி வந்தது மட்டுமன்றி, சூடானிற்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து வந்தது. தங்களது நலனுக்காக எச்செயல்களையும் செய்வது ஏகாதிபத்திய வழக்கம்தான். ஆனால், தாங்கள் தீட்டிய அடிப்படைவாதம் என்ற கூர்வாளிற்குத் தாங்களே பலியாகிவிடும் அபாயநிலை உருவாகிவிட்டதுதான் இதில் நகைமுரணான விஷயம்.

***மத அடிப்படைவாதத்தின் மிக அடிப்படையான நோக்கம் மதத்துடன் அரசியலையும், அரசையும் இணைப்பது, கற்பிதம் செய்யப்பட்ட கடவுள் ஆட்சி என்கிற பொற்காலக் கனவுகளைக் கொண்ட அல்லது புனிதப் பிரதிகள் அடிப்படையிலான ஆட்சியை, அரசை உருவாக்குவது. அதன் பொதுவான பண்பு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி மத ஆட்சியை நிறுவுவதே.***

1. இஸ்லாமியக் குடியரசாக மாறிய 'வளர்ச்சியற்ற' சமூகமான சூடான் முதல் பத்து வலிமைமிக்க நாடுகளில் ஒன்றாக மாறும் என்று கூறுகிறார் துராபி. இன்று அமேரிக்க அரசிற்கும் அதன் உளவுத் துறைக்கும் முக்கிய எதிரியாக வர்ணிக்கப்படும் ஒஸமா பின் லாதன் உலக இஸ்லாமியர்களை ஜிகாத்திற்கு அழைக்கிறார். இஸ்லாமியப் புனித இடங்களைக் காப்பதற்கும் உலகம் இஸ்லாமைப் பின்பற்றும் வரையும் போரிட அழைக்கிறார். 'அல்லா கூறுகிறார், அவர்கள் நம்மைப் பின்பற்றாத வரை நமக்கு நண்பர்கள் இல்லை. எனவே அவர்களுக்கு எதிராக புனிதப்போரைத் துவக்குங்கள்' என்கிறார்.

2. கிறித்துவ சுவிசேஷத் தலைவர்களில் ஒருவரான Francis Frangipane, 'இந்தப் போரின் முடிவு புவியில் Lord's Kingdom என்கிற கிறித்துவ மடாலயங்களின் ஆட்சியை நிறுவுவதுதான்' என்கிறார். கத்தோலிக்க ஆய்வாளரும் எழுத்தாளருமான Yves DuPont எழுதுகிறார், 'நாங்கள் புதிய சமூக அரசியல் முறைமையின் வெளித்தோற்றத்தைக் காண்கிறோம் .... அரசு நீண்டநாளைக்கு கிறித்துவ மடாலயத்திலிருந்து பிரிந்திருக்க முடியாது'.

3. இந்தியாவில் இந்து அடிப்படைவாத அமைப்பான RSS ராமராஜ்யம் என்கிற இந்து அரசை அமைப்பதே இறுதி லட்சியம் என்கிறது.

4. சியோனிஸம் என்கிற யூத அடிப்படைவாதம், உலகை ஆளப்பிறந்த ஒரே இனம் மற்றும் கடவுளின் இரட்சிப்பிற்குள்ளான ஒரே மதம் யூத மதம், ஒரே மக்கள் யூதர்கள் என்கிறது.

***மனிதகுல வளர்ச்சியில் ஒருவகை 'உச்ச விளைவுகளை'ச் சந்தித்த இந்த நூற்றாண்டின் இறுதியில் பிறந்ததே மத அடிப்படைவாதம். பகுத்தறிவின் உயர்ந்த பட்ச எல்லையாக அறுதியிடப்பட்ட மத - அரசியல் பிரிவினை அல்லது மதச் சார்பின்மை என்கிற கருத்தியலின் தோல்வியே அல்லது மதச்சார்பின்மை என்ற பெயரில் மேற்கத்திய ஐரோப்பிய அமேரிக்க நாடுகளின் அரசியல் விளையாட்டே மத அடிப்படைவாதம் உருவாகக் காரணம்.***

குறிப்பாக இஸ்லாமிய அடிப்படைவாதம் உருவாக்கப்பட்ட பின்னணியைப் பார்த்தால்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனைப் புரிந்து கொள்ளலாம்.

1. எகிப்திய, ரோமப் பேரரசுகளின் தொடர் யுத்தங்கள், சிலுவைப்போர்கள் வழியாக இஸ்லாம் ஒரு நிரந்தர எதிரியாக மேற்கத்திய சமூகத்திற்குள் பதிவுறுத்தப்பட்டது. இஸ்லாம் யூத - கிறித்துவ மூலத்திலிருந்து தோன்றி தனது புதிய பார்வையால் அரேபியப் பழங்குடிகள் இனத்தை ஒருங்கிணைத்து ஒரு அரசை உருவாக்கி மேற்குலகை வென்றடக்கி ஆண்டது. யூத - கிறித்துவ அடிப்படையை எதிர்த்து தத்துவார்த்தரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஒரு சவாலாக நின்றது.

2. சிலுவைப்போரில் ஈடுபட்டு வென்ற ரோமப் பேரரசின் அரசுமதமான கிறித்துவம் இஸ்லாமை அரசியல்ரீதியான எதிரியாக உருவகப்படுத்திக் கொண்டது. காரணம் இஸ்லாம் இதர மதங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட பண்புரீதியான வேறுபாட்டைக் கொண்டது. அது அதன் அரசியல் உள்ளடக்கம். இஸ்லாம் 'உம்மா' என்கிற அரசு அமைப்பையும், அதற்கான வாழ்க்கைத் திட்டத்தையும் கொண்டது. மற்ற மதங்களைவிட இஸ்லாம் அதிகாரத்தின்மீது அதிகப் பற்றுறுதி கொண்டது. சமூக வாழ்வை அரசியலிலிருந்து பிரிப்பதில்லை. அதிகாரம் என்பதே இஸ்லாத்தில் மதத்தைப் பாதுகாப்பதற்கானதுதான். இதன் ஒரு விளைவே இஸ்லாம், மதச்சார்பின்மை என்கிற கருத்தாக்கத்தை எதிர்மறையாக அணுகுவதற்குக் காரணம். மேற்கத்தியம் இஸ்லாமின் இந்த அரசியல் உள்ளடக்கத்தின் மீதே பயம் கொள்கிறது.

3. ஐரோப்பியக் காலனியம் அதன் தொடர்ச்சியான முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், இவற்றின் வெற்றிகளால் உருவான வல்லரசுகள் இரண்டும் தங்களது கருத்தியல் போட்டிக்கான தேர்வாளர்களாக இஸ்லாமிய மக்களைத் தேர்ந்தெடுத்து, ஏதேனும் ஒரு பக்கத்தில் அவர்களைச் சார்ந்து நிற்கும்படி அவர்களை நிர்ப்பந்தித்தது. இவை இரண்டினாலும் பாதிப்பிற்குள்ளானவர்கள் இஸ்லாமியர்களே. ஈரான், ஈராக், ஆப்கான், மத்திய ஆசிய நாடுகள் போன்றவை இவ்விரண்டு வல்லரசுகளின் பந்து விளையாட்டிற்குள் சிக்கிச் சிதறடிக்கப்பட்டவை. இந்நாடுகளே இன்று அடிப்படைவாதத்தினை ஏற்றுக் கொண்டுவிட்ட நாடுகளாக உள்ளன.

4. இவ்விரண்டு வல்லரசுகளின் எந்த மதிப்பீடுகளும் இஸ்லாமிய அடிப்படை மதிப்பீடுகளான மத நம்பிக்கை, சடங்குகள் ஆகியவற்றுடன் ஒத்துப் போகக்கூடியதாக இல்லை. ஏகாதிபத்தியம் தனது நாகரீகம், வளர்ச்சி என்ற பெயரால் நுகர்வுப் பண் பாட்டின் மீதே கட்டப்பட்டிருந்தது. இந்நுகர்வுப் பண்பாடு இஸ்லாமிய மதிப்பீடுகளுக்கு எதிரானதாகவும், இஸ்லாமியப் பண்பாட்டை அச்சுறுத்துவதாகவும், அதனை அழித்துவிடக் கூடியதாகவும் இருந்தது. அதனால், ஏகாதிபத்தியம் முன்வைத்த வாழ்க்கை மதிப்பீடுகளுக்கு எதிராக தனது மரபான வாழ்க்கையையே உயர்த்திப் பிடிக்க வேண்டிய தேவை உருவானது.

5. ஒருவகை சமதர்மப் பண்பு இஸ்லாம் தோன்றிய காலத்தைய வணிக வர்க்கத் தன்மையுடன் அதற்குள் ஊடுருவியிருந்தது. இஸ்லாமிய அரச அமைப்பான 'உம்மா'வின் அடிப்படைக் கருத்தியலே சகோதரத்துவம் தான். மனிதர்களுக்குள் அது பிரிவினையைப் பார்ப்பதில்லை. இவை மேற்கத்திய மதிப்பீடு களை அதன் உள்ளார்ந்து ஊடுருவியிருக்கும் இனவாதத்தை, அதன் ஏற்றத் தாழ்வுகளை கேள்விக்கு உட் படுத்துவதாக இருந்தது. மனிதத் தன்மையற்ற தீண்டாமையைப் பேணும் இந்து மதத்திடையே இந்தியாவில் இஸ்லாமின் வளர்ச்சி இப்பண்பினாலேயே அதிகரித்தது. மேற்கத்திய நாடுகளின் இன வாதத்திற்கு எதிராக இஸ்லாமின் வளர்ச்சி என்பது அதிகரித்து வருவதற்கும் இது ஒரு காரணமாக இருப்பதால், மேற்குலகிற்கு இஸ்லாம் ஒரு அச்சமூட்டும் சவாலாக இருக்கிறது. அதனால், தொடர்ந்து மேற்குலகம் இஸ்லாம் பற்றிய ஒரு பயமூட்டும் பிம்பத்தைக் கட்டமைத்தது. இது இஸ்லாமிய சனநாயக சக்திகளுடன் ஆன உரையாடலை முற்றாக

www.tamilarangam.net

அழித்ததுடன், அடிப்படைவாத சக்திகளுக்கு எதிர்மறையாக பலம் ஊட்டுவதாக அமைந்தது.

6. மேற்கத்திய பணக்கார நாடுகள் விலை மலிவான எண்ணெய்க்காக அரேபிய உலகின் சுய வளர்ச்சியை, அறிவுத்தேடலை மறுத்து அரசியல்ரீதியாக தன்னாட்சி பெற முடியாமல் அல்லது ஜனநாயக அரசுகளை உருவாக்க முடியாமல் செய்து தங்களுக்குச் சாதகமான பொம்மை அரசுகளை உருவாக்கின. அவற்றிற்கான நிதி மற்றும் இராணுவ உதவிகளை முன்வந்து செய்தன. இராணுவத் தொழிற்கூடங்களுக்குப் பதிலாக ஆயுதங்களைத் தந்துதவின. அந்நாடுகளின் சுயப் பொருளாதார வளர்ச்சி தடுக்கப்பட்டது. மேற்கத்திய மதிப்பீடுகள் கேள்விக்கு உட்படுத்தப்படாமல் நடைமுறைப் படுத்தப்பட்டன. இவ்வரசுகள் மேற்கத்தியத்தின் கைப்பாவையாகச் செயல்பட்டதன் விளைவு ஒட்டுமொத்த எஜமானர்களின் நலன்களையும் பேணியதே தவிர மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. மாற்றுத் திட்டமாக முன்வைக்கப்பட்ட அரேபிய தேசியவாதம், பான்-அரேபியவாதம் (Pan-Arabism), அரேபிய-சோஷலிஸவாதம் ஆகியவையும் துருக்கி மற்றும் அல்பேனியா போன்ற நாடுகளின் வழியாக வளர்ந்த மார்க்சியம் அல்லது கம்யூனிஸம் ஆகியவற்றை முறியடிக்கவும், பொம்மை அரசுகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைக்கவும் அரேபிய நாடுகளின் உள்ளார்ந்து கிடந்த எதிர்ப் புணர்வை மதப்போர்வையில் தூண்டி அடிப்படைவாத இயக்கங்களுக்கான அடிப் படைகளைப் போட்டுத் தந்தன மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள். இதன் விளைவு சர்வாதிகாரம், வறுமை, ஊழல், மனித உரிமை மீறல்கள் ஆகியவை இஸ்லாமிய மத அடிப்படைவாதத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றி எஜமானர்களுக்கு எதிராகவே வளர்த்து விட்டன.



***இன்று 'மேற்குலகம் எதை இஸ்லாமிய அடிப் படைவாதம் என்கிறதோ, அது அதன் பொருளாதார மற்றும் அரசியல் வன் முறையின் ஒரு பின் விளைவே' என்பதைச் சுட்டிக்காட்டுகிறது** Global Vision **என்கிற வலைத் தளம்.***

மேற்கத்திய எதிர்ப்பு என்பது ஒரு அரசு எதிர்ப்பு வடிவமாக உருவாகியது. குறிப்பாக ஈரானின் கலாச்சாரப் புரட்சியைக் கூறலாம். இஸ்லாமிய மத நம்பிக்கைகளைக் கொண்டே முல்லாக்களின் ஆதரவுடன் மசூதிகளைப் பயன்படுத்தியே அரசு அதிகாரம் ஷாவின் பொம்மை ஆட்சிக்கு எதிராக கோமேனியால் கைப்பற்றப்பட்டது.

7. இவ்வரசுகள் ஆளும் வர்க்கத்தினரையும் அவர்களது மேற்கத்திய

### 3 அரசியல் விசாரணை

அடிப்படைவாதம் என்று இன்று வரையறுக்கப் படும் மதத்தின் புனிதத்தைக் காக்கும் குரல் என்பது மதத்துக்கு ஏற்பட்ட அதிகார நெருக்கடியின் விளைவே. மதம் அரசியலுடன் முற்றாகப் பிரிக்கப்பட்டு மதச்சார்பின்மை அரசியல் என்பது நவீன முதலாளித்துவ சமூகத்துடன் தோன்றுகிறது. சமூக அதிகாரத்தில் தங்களது பிடிப்பை

www.tamilarangam.net

இழந்த இம்மதங்கள் சமூகத்தின் நவீன பார்வைகளுடன் அல்லது நவீன காலம் எனப்படும் ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்துடன் முரண்பட்டு நிற்கத் துவங்கின. நவீனகாலம் எனப்படும் வெள்ளை

ஐரோப்பியக் கண்டுபிடிப்பிற்குப் பிறகு அதிகாரம் தளமாற்றம் அடைந்ததால், மதங்கள் தமது பழைய அதிகாரநிலையைக் கைவிட்டு சமரசப்போக்கைக் கைக்கொண்டு அரசுடன் அதிகாரப் பகிர்வைச் செய்து கொள்ள தமது அடிப்படைகளை மறுவரையறை செய்ய முற்பட்டன. இச்செயல், மதங்களை நவீனப் படுத்தவும், நவீன கருத்தியல்களை உள்வாங்கி புத்தாக்கம் செய்யவேண்டிய நிலைக்கு மதங்களின் அதிகார பீடங்களை நகர்த்தியது. இச்சூழலில் ஒரு கருத்தியல் நெருக்கடியை மதங்கள் சந்திக்கின்றன. இந்தக் கருத்தியல் நெருக்கடியின் விளைவாக, மதங்களின் புனிதங்களைக் காக்கும் மதவாரிசாகப் பிறந்ததே அடிப்படைவாதம் என்கிற மதக்காப்புரிமைக் கழ(ல)கங்கள்.

குறிப்பாக, கிறித்துவத்தில்தான் இந்த அரசியல் நெருக்கடி உருவாகிறது. அதற்கு டார்வினின் பரிணாமக் கொள்கையும், கொபர்நிகஸின் சூரியமையவாத (Heliocentric) கோட்பாடும் ஒரு முக்கியக் காரணம். இவ்விஞ்ஞான விதிமுறையானது பைபிளின் மனிதத் தோற்றம் மற்றும் புவியின் சுழற்சி பற்றிய கருதுகோளை அசைக்கத் துவங்கியது. பைபிளின் அடிப்படைகள் மீது ஏற்பட்ட இந்நெருக்கடியைத் தீர்க்க மீண்டும் கடவுள் ஆட்சி அல்லது ஏசுவின் வருகை என்கிற அடிப்படையுடன் (இஸ்லாத்துடன் மட்டுமே அடையாளம் காட்டப்படும்) அடிப்படைவாதம் என்கிற கருத்து முதன்முதலாக உதயமாகிறது. இது ஐரோப்பிய வெள்ளை பகுத்தறிவு வாதத்துடன் ஏற்பட்ட முரண் மட்டுமன்றி ஒரு எதிர்ப்புக்குரலாகவும் வெளிப்பாடு கொள்கிறது. ‘புனித ஆவி’களை வெள்ளைப் பகுத்தறிவிலிருந்தும் அதன் மதச்சார்பின்மை என்கிற கருத்தாக்கத்திலிருந்தும் காக்க முற்பட்ட முதல் எதிர்ப்புக்குரல் இது எனலாம்.

இவர்களே முதன்முதலாகத் தங்களை அடிப்படைவாதிகள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

இச்சொல்லாடலானது 1920ல்தான் முதன்முதலாக அமெரிக்க மற்றும் பிரித்தானிய கிறித்துவ மீட்பியக்கத்தைக் குறிப்பிடும் சொல்லாக வெளிப்படுகிறது. 1870ல் உருவான புரொடஸ்டன்ட் கிறித்துவ இயக்கத்திற்கு எதிராக கிறித்துவ அடிப்படைகளைக் காக்கவென 1910 - 15ல் ***‘அடிப்படைகள்’*** (The Fundamentals) என்ற தலைப்பில் 12 புத்தகங்கள் அமெரிக்க மற்றும் பிரித்தானியக் கிறித்துவப் பிரச்சாரகர்கள், ஆய்வாளர்களால் எழுதப்பட்டு 30 லட்சம் பிரதிகள் உலகெங்கும் விநியோகிப்பட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஐரோப்பாவை இருண்டகாலத்திலிருந்து மீட்க கிறித்துவ மடாலயங்களுக்கு அதிகாரம் தேவை எனக் கோரி வெளிவந்த இவ்வியக்கம், 1920ல் உலக கிறித்துவ அடிப்படை இயக்கம் (World Christian Fundamentals Associtaion) என்கிற ஒன்றைத் துவக்கியது.

1925ல் ஜான் தாமஸ் ஸ்கோப்ஸ் என்கிற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர் பள்ளியில் பரிணாமக் கோட்பாட்டை நடத்த மறுத்ததை ஒட்டி அவ்வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. அதற்கான ஆதரவு, எதிர்ப்பியக்கமாக கிறித்துவ அடிப்படைவாதம் அமெரிக்க சமூகத்தின் வழியாகவே உலகில் ஆழமாகக் காலூன்றியது. இவ்வடிப்படைவாதம் 3 முக்கியக் கட்டங்களைக் கொண்டது என்கிறது கத்தோலிக்க வலைத்தளம் ஒன்று (Catholic Answers Inc.)

1. 1890ல் துவங்கி 1925ல் நடந்த பரிணாமவாத எதிர்ப்பு வழக்குவரை அடிப்படைவாதம் உருவாகிய கட்டம்.

2. இது பொதுமக்கள் பார்வைக்கு வந்து தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை வாயிலாகப் பரவலானது இரண்டாவது கட்டம்.

www.tamilarangam.net

3. இது அமேரிக்க தேசத்தின் கவனத்தைப் பெற்று, அரசியல்ரீதியாக அரசைத் திர்மானிப்பதாக மாறியது மூன்றாவது கட்டம்.

கிறித்துவ அடிப்படைவாதிகளின் வாக்குகள் இல்லாமல் இன்று எந்த அமேரிக்க அரசும் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிவிட முடியாது. Moral Majority என்கிற கிறித்துவ அடிப்படைவாத இயக்கம் ரீகனின் வெற்றியில் பெரும் பங்கு செலுத்தியது. 1994ம் ஆண்டு நடந்த அமேரிக்கத் தேர்தலில் 60 சதவீதம் வேட்பாளர்கள் கிறித்துவ மத ஆதரவுடன் வெற்றி பெற்றவர்கள். ***'ரீகன் மற்றும் புஷ் ஆகியோர் கிறித்துவ அடிப்படைவாத ஆதரவு இல்லாமல் வெற்றி பெற்றிருக்கவே முடியாது' என்கிறது*** Global Vision ***ஆய்வு.***

1930களில் உருவான பொருளாதார பெரு-மந்தம் மற்றும் இரண்டாம் உலகப் போரின் விளைவாக இவ்வியக்கம் சற்றுத் தாழ்ந்தாலும் 1940களுக்குப் பின் பல இயக்கங்களாக ஒன்று சேர்ந்து 60களுக்குப் பின் தொலைக்காட்சி வழியாக பரவலான பிரச்சாரத்தையும் ஆதரவையும் பெற்று அமேரிக்க மக்களிடம் வேரூன்றியது. மேற்கத்திய நாடுகளிலிருந்து மிகப்பெரும் மத உணர்வு கொண்ட நாடு (பகுத்தறிவின், விஞ்ஞானத்தின் அதிஉச்சத்தில் இருப்பதாகக் கூறிக்கொண்டு பிற நாடுகளையும் அவற்றின் பண்பாடுகளையும் காட்டுமிராண்டிகள் என அறிக்கையிட்டுக் கொண்டிருக்கும்) அமேரிக்காதான் என்கிறார் எஸ்.ஆர். ஸியரர்.

இஸ்லாம் பற்றிய அமேரிக்கா உருவாக்க விரும்பும் சித்திரம் அதன் கிறித்துவ மேலாண்மைக்கான அல்லது மதத் துவேஷத்திற்கான (religious prejudice) அடிப்படையைக் கொண்டது. ஜூலியா கிறிஸ்துவா ஒரு பேட்டியில் குறிப்பிடுகிறார், 'முழு ஐரோப்பிய மரபும் மரணநிலைக்கு ஒரு பதிலீடாக மதம் மற்றும் தத்துவங்களால் விவரிக்கப்படும் பைபிள், நற்செய்தி மற்றும் கிரேக்கத் தத்துவம் ஆகியவற்றுக்குத் திரும்புகிறது. இன்று ஐரோப்பிய மரபு இப்புதிய பயத்திற்குள் ஆட்பட்டிருக்கிறது'.

ஆக, அடிப்படைவாதம் என்கிற கருத்தாக்கம் கிறித்துவ மீட்பியக்கத்துடன் துவக்கப்பட்டு அது உலகெங்கும் ஒரு பொதுச் சொல்லாடலாக, அதிலும் அரசியல் சொல்லாடலாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இன்று அடிப்படைவாதமாகக் குறிக்கப்படும் சொல்லாடலை விரிந்த தளத்தில் பாவிக்க வேண்டியது அவசியம்.

***மத நூல்களை அடிப்படையாகக் கொள்வதும், அதன் திர்க்கமான, தவறற்றதான*** (inerrancy) ***போக்கிற்கு வாதாடுவதும், அதன் புனிதத் தன்மையைக் காப்பதாக அதனைத் திருத்துவதையோ, புத்தாக்கம் செய்வதையோ நிராகரிப்பதையும் மட்டுமே கொண்டு இன்று அடிப்படைவாதத்தை வரையறுத்துவிட முடியாது. இவ்வரையறை கிறித்துவ அடிப்படைவாதத்தையும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் விளக்குமே தவிர, பிற மதங்களது மதத் திவிரவாதத்தை உள்ளடக்காது.***

இஸ்லாமிய ஆய்வாளர்கள் திரும்பத் திரும்பத் தங்களது மதத்திற்குள் அடிப்படைவாதத்திற்கான தத்துவார்த்த அல்லது வரலாற்றுப் பிரிவுகள் எதுவும் இல்லை என்று வாதிடுவதும், தங்களை இஸ்லாமியவாதிகள் என்றும் அடிப்படை வாதிகள் இல்லை என்றும் மறுக்கின்றனர். காரணம், இஸ்லாமியப் புனிதநூலான குரானை அடிப்படையாக ஏற்றுக்கொள்வதும் அதன் தவறற்ற தன்மையை ஒத்துக்கொள்வதும் எல்லா முஸ்லிம்களுக்கும் பொருந்தும் என்றும் அடிப்படைவாதிகளை பாமர முஸ்லிம்களிடமிருந்து எப்படிப் பிரிப்பது என்பதும் அவர்கள் முன்வைக்கும் கேள்விகள்.

அதேபோல் இந்து மதத்தில் ஒற்றை வேதமோ அல்லது ஒரிறைக் கொள்கை போன்ற அடிப்படைகள் எதுவும் இல்லை. அதனால் இந்து அடிப்படைவாதம் என்பது ஒரு தவறான பிரயோகம் என்கின்றனர் இந்துத்துவ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதரவாளர்கள். இவை எல்லாம் மத அடிப் படைவாதம் பற்றிய வரையறை பிரச்சினை தானே தவிர, மத அடிப்படைவாதம் என் மதத்தில் இல்லை என்று வாதிடுவது அடிப்படைவாதப் போக்கை நிராகரிப்ப தாகிவிடாது. மத அடிப்படைவாதம் என்பது இன்றைய உலக அரசாட்சியில் அதிகாரப் போட்டிக்கு மதத்தைக் கருவியாக்கும் ஒரு பிரிவு. மத அடிப்படைவாத சக்திகள் பல பொதுவான பண்புகளைக் கொண்டி ருக்கின்றன. அப்பண்புகள் அடிப்படையி லேயே மத அடிப்படைவாதம் வரையறுக்கபட வேண்டுமே தவிர, பழைய வகைப்பட்ட வரையறைகளைக் கொண்டு மத அடிப் படைவாதத்தை மதவாதம் என்று கூறி நிராகரித்துவிடவோ அல்லது மதங்களின் நம்பிக்கை சார்ந்த பாமர மக்களின் மத உணர்வை மத அடிப்படைவாதத்துடன் போட்டுக் குழப்பிவிடவோ கூடாது.

***மத அடிப்படைவாதத்தின் பொதுவான பண்புகள்:***

1. சமூக வாழ்வியக்கத்திற்கு மதத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மதத்தைப் பயன்படுத்தி அரசியல் அதி காரத்தைக் கைப்பற்ற எண்ணுவது.

2. மதங்களின் கற்பிதமான பொற்காலக் கனவுகளுக்கு ஒட்டுமொத்தச் சமூகத்தையும் திரும்ப அழைத்துச் செல்ல முனைவதும் அதற்கான கற்பிதங்களையும் வெளிகளையும் உருவாக்கி மக்களை ஒன்றுதிரட்டுவது. அதற்காக தீவிர அரசியல் இயக்கத்திற்கு மத உணர்வைப் பயன்படுத்துவது.

3. மதத்தை அரச அதிகாரத்திற்கான கருவியாகப் பயன்படுத்துவதும், மதரீதியான ஆயுதபாணி அமைப்புகளை உருவாக்கி பயங்கரவாதசெ செயல்களில் ஈடுபடுவதும் இச்செயல்களுக்காக மதக் கருத்தியலை மறுவரையறை செய்துகொள்வது.

4. மரணத்தை ஒரு பெருவாழ்விற்கான தாக சிதைச்சங்கேதப்படுத்தி, மத உடல்களாக போரிட்டு மடிவது அமரவாழ்வை (martyrdom) தரும் என்கிற பிம்ப உடல்களைக் கட்ட மைப்பது.

5. சமூகப் பொருளியல் வலைப்பின்னல் பற்றியோ அல்லது யதார்த்த ரீதியாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்த காத்திரமான திட்டமும் இல்லாமல் மத நூல்களின் அடிப்படையில் பொருளாதாரத் திட்டமிடலை முன்வைப்பது. மதம் ஒன்றே எல்லாவற்றிற்குமான தீர்வு என மாற்றுச் சிந்தனைத் தளங்களை மறுப்பது.

6. மதத்தின் நம்பிக்கைக்கு மாற்றாக மதக் கருத்தியலை உயர்த்திப் பிடிப்பது. மதக் கருத்தியலுக்காக பிற மதத்தினரைக் கொல்வது. இறையின் கட்டளை எனக் கூறி மதப்படுகொலைகளை நியாயப்படுத்துவது. தனது மதம் மட்டுமே உயர்ந்தது என்றும் தனது மத உடல்களே புனிதமானவை என்றும் கூறுவது.

7. பிற மதத்திற்கான வெளியை மறுப்பது. அவர்களது வரலாற்றை மறுப்பது. அவர்களது இருத்தலை அச்சுறுத்தலாகப் பாவித்து அவர்களுக்கு எதிராகத் தனது மதத்தினரைத் திரட்டுவது. மதச் சட்டங்களை உயர்த்திப் பிடித்து, அவற்றின் அடிப்படையிலான தண்டனை முறைகளை நடைமுறைப்படுத்த முனைவது. சமூக ஜனநாயக அமைப்பிற்குப் பதிலாகத் தனது மதம் சார்ந்த அமைப்பையும் வாழ்வையும் நிர்ப்பந்திப்பது.

இஸ்ரேலில் யூத அடிப்படைவாதமும், இந்தியாவில் இந்து அடிப்படைவாதமும், ஆப்கானில் இஸ்லாமிய அடிப்படைவாதமும், ஈழத்தில் பௌத்த அடிப்படைவாதமும், மத்திய ஆசியாவில் கிறித்துவ அடிப்படைவாதமும் இன்று அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சியில் இருப்பது இந்த அடிப்படைவாதக் கருத்தியல் ஒற்றுமையிலும், மக்களின் பிரச்சினைக்கு ஒரு மாற்றுத் தீர்வாகுமா என்கிற முயற்சியிலும்தான். இந்நாடுகளின் பொருளியல் சிக்கல்கள் மக்களை மீண்டும் இந்த பொற்காலம் என்ற கற்பனார்த்தமான

www.tamilarangam.net

திர்வு நோக்கித் தள்ளியிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

## 4. தத்துவ விசாரணை

காலனிமயமாக்கலுடன், காலனிய நாடுகள் பற்றிய ஆய்வுகள் நிறுவனங்களாலும், தனிமனிதர்களாலும் அரசு அல்லது ஆதிக்க நிறுவனங்கள் உதவியுடன் துவக்கப்பட்டன. காலனிய நாடுகளின், குறிப்பாக, கீழைத்தேய நாடுகளின் அறிதல் மற்றும் நடைமுறைகள் இவ்வாய்வுகள் வழியாக முறைப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டன. இவ்வொழுங்க மைத்தலில் கீழைத்தேயச் சிந்தனைகள் என்கிற ஒரு அறிவாய்வுமுறை மேலைத்தேய அறிவாய்வுக்கு உட்பட்டதாக ஒன்றாக அல்லது கிழைத்தேயம் மேலைத்தேயத்தால் வென்றெடுக்கப்பட்ட ஒன்றாக உருவமைக்கப்பட்டது. 'கிழைத்தேயச் சொல்லாடலின் நோக்கம் மேற்கின் தோற்றம் பற்றியதே தவிர, கிழக்கின் தோற்றம் பற்றியது அல்ல', என்கிறார் பிரயான் டர்னர்.

***மேற்கத்திய ஆய்வுமுறை வழியாக இஸ்லாமைப் புரிந்துகொள்ள முனைந்த ஆய்வாளர்கள் அதனைத் தங்களது மேற்கத்திய மற்றும் அதன் அடிப்படை அறிதல் முறைக்கான பின்புலத்தைத் தந்த கிறித்துவ இறையியலுடன் இணைப்படுத்தி விளக்கத் துவங்கினர்.*** மேற்குலகிற்கு இஸ்லாம் பற்றிய அறிமுகம் செய்தவர்களது அறிதல் மற்றும் அரசியல் பற்றி மிக அதிகமாக எட்வர்ட் சைத்தால் விளக்கப்பட்டுள்ளது. கீழைத்தேயம் என்கிற கருத்தாக்கம் எப்படி மேற்கத்தியத்தைக் கட்டமைத்தது என்பதை விளக்கும் எட்வர்ட் சைத் மேற்கத்தியர்கள் இஸ்லாமை தொடர்பு சாதனங்கள் வழியாக 'பகுதியளவு புனைவும், பகுதியளவு கருத்தியல் முத்திரை குத்துதலும், மதம் என்கிற ரீதியில் மிகவும் குறைவான மதிப்பீடும்' கொண்டே விளக்கியதைச் சுட்டிக்காட்டுகிறார். இஸ்லாம் பற்றிய ஆய்வுகள் கிறித்துவ மற்றும் ஏகாதிபத்திய மேற்கத்தியக் கருத்தாக்கத்தை நியாயப் படுத்தும் வண்ணமே செய்யப்பட்டிருப்பதை விவரிக்கிறது சைத்தின் *ஓரியண்டலிஸம்*. இவ்வாய்வுகள் ஒரு 'கலாச்சார நிறுவனமாக' (cultural enterprise) அதிகபட்சம் தங்களது எதிரியைப் புரிந்துகொள்ளும் நோக்கில் (Know thy enemy) செய்யப்பட்டவையே என்கிறார்.

ஸ்விஸ் பத்திரிகையாளரான Roger Du Pasquier, 'பல மேற்கத்தியர்களுக்கு இஸ்லாம் என்பது மதவெறி, விதிவாதம், பலதார மணம் என்கிற 3 கருத்தாக சுருக்கப்பட்டுள்ளது'. 'ஆசிய நம்பிக்கைகளான பௌத்தம் மற்றும் இந்துயிஸம் போன்றவற்றிடம் காட்டிய வெளிப்படையான பரிவுணர்ச்சியை மேற்கத்திய ஆய்வாளர்கள் யூதம் மற்றும் கிறித்துவத்திற்கு நெருக்கமான, ஒரே ஆப்ரஹாம் மூலத்தில் உருவான இஸ்லாமிடம் காட்டவில்லை'.

அமெரிக்காவின் பல வரலாற்றுப் பாடநூல்களில் இஸ்லாம் பற்றிய அறிமுகம் என்பது வன்முறையுடன் தொடர்புபடுத்தியே செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறார் எலிஸபெத் பார்லோவ் என்கிற ஆய்வாளர். இஸ்லாமிய ஆன்மீகம், தத்துவம், அரசியல் மற்றும் பண்பாடு ஆகியவற்றை முற்றிலுமாக மறைத்து வரலாற்றைத் தனது கருத்தியலுக்கு ஏற்ப உருவமைக்கும் பணி மேற்குலகின் அடிப்படை ஆய்வுப்பணியாக உள்ளது.

இவ்வாறாக, இஸ்லாம் மற்றும் இஸ்லாமியர் பற்றிய ஒருபடித்தான (stereotype) கருத்தமைவு தொடர்ச்சியாகக் கட்டமைக்கப் படுகிறது. இக்கட்டமைவு சிறிய ஒருபடித்தான கட்டமைவுகளான 'முரட்டுத் துருக்கியர், கூடாரங்களில் வாழும் பதோயின்கள், செமைட்டிக்கிற்கு எதிரான செமைட்டுகள், மற்றும் பழியுணர்ச்சியுள்ள அயத்துல்லாக்கள்' போன்றவற்றிலிருந்து கட்டமைக்கப்படுகிறது. 'முஸ்லிம்கள் மற்றும் அரபியர்கள், ஒன்று எண்ணை வியாபாரிகள், அல்லது மோசமான பயங்கரவாதிகள் என்பதுவே விவாதங்களின் வழியாக வந்தடையும் முக்கிய முடிவாக இருக்கிறது'.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கத்திய உண்மையின் இருண்ட பக்கத்தைப் பற்றியது மட்டுமல்ல சைத்தின் ஆய்வுகள், ஒரு சுய படிமம் (self-image) உருவாக வேண்டும் என்றால், அதற்கு எதிரான ஒரு மாற்றுத் தன்னமைவு (alter ego)கட்டமைக்கப்படாமல் சாத்தியமில்லை என்கிற ஒரு மங்கலான ரகசியத்தை அவ்வாய்வுகள் பகிரங்கப்படுத்தியுள்ளன', என்கிறார் பர்வேஸ் மன்சூர். இவ்வாறாகவே கீழைத்தேயம் என்கிற ஒருபடித்தான மனிதன் உருவமைக்கப்பட்டு, அவனுக்கு எதிரான மனிதனாக மேலைத்தேயனும் அவனது மதமான கிறித்துவமும் உலக மேலாண்மையாக நிறுவப்பட்டது.

ஆக, மேற்கத்தியன் எப்படி தனது படிமத்தை உருவாக்கக் கீழைத்தேயத்தைக் கட்டமைத்ததோ, அப்படித்தான் அமேரிக்கா தனது புவிசார் பாதுகாவலன் (global policeman) படிமத்தை உருவாக்க இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் கட்டமைக்கிறது - தனக்கு எதிரான ஒரு தன்னமைவாக.

அமேரிக்க மற்றும் மேற்குலகம் கட்ட விரும்பும் கருத்தியல் மற்றும் அடிப்படைவாதக் கருத்தியல் ஆகியவற்றின் தன்மையை, அது உருவாக்கும் மனிதர்களை, கருத்தியல் (ideology) பற்றிய அல்தூஸரின் கருத்தாக்கம் விளக்கும். அல்தூஸர் கூறுகிறார், 'கருத்தியல் என்பது சிந்தனைகள் மற்றும் கருத்துக்களின் தொகுப்போ அல்லது உலகம் பற்றிய பார்வையோ அல்ல; புழங்கிவரும் சமூகம்தான் ஒரே சாத்தியமான மற்றும் அறிவார்ந்த சமூகம் என்பதை அங்கீகரிக்கும் தன்னிலைகளை உற்பத்தி செய்வதே.' இரண்டு கருத்தியல்களுமே அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று பொருந்தக்கூடிய ஒரு எதிர்முரண். அல்லது ஒன்றை ஒன்று பதிலீடு செய்து கொள்ளும், அல்லது நிறைவு செய்து கொள்ளும் எதிரிகள் (complementary antogonist) இவை ஒன்றை ஒன்று நியாயமற்ற, மனிதத் தன்மையற்ற எதிரிகள் என்றும் தங்களது உலகப் பார்வையே சரியானது என்றும் கூறிக் கொள்கின்றன.

### *இஸ்லாமிய அடிப்படைவாதம் - உலக ஊடகங்களின் 'கட்டமைவு*

இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது 70களுக்குப் பின்பான ஒரு நிகழ்வே. குறிப்பாக 1976ல் ஈரானில் அயத்துல்லா ரொகுல்லா கொமேனி தலைமையில் நடந்த கலாச்சாரப் புரட்சி வழியாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவதில் தொடங்குகிறது. உடனடியாக மேற்கத்திய அறிவுஜீவிகள் மற்றும் திட்ட ஆய்வாளர்கள், யுத்த தந்திர ஆலோசகர்கள் இக்கலாச்சாரப் புரட்சியை வரையறுக்கவும் வர்ணிக்கவும் அதன் வரலாற்றுத் தத்துவ வேர்களை ஆராய்ந்து விளக்கவும் முற்படும் போது உருவமைக்கப்பட்ட சொல்லாடலே இஸ்லாமிய அடிப்படைவாதம். எந்த ஒரு அரசியல் சொல்லாடலும் உலக அளவில் உருவமைக்கப்படுவது மேற்குலக அறிவு ஜீவிகளால்தான். இவர்களால் எப்படி எந்த ஒரு 'உலக அபாயமும்' திட்டமிட்டு உருவமைக்கப்படுகிறது என்பதை *ஜெருசலம் போஸ்ட்டின்* தலைவரும் Cato Institute- ன் ஆய்வாளருமான லியொன் டி ஹாதர் விவரிக்கிறார்.

1. முதலில் மர்மமான மூலங்களிலிருந்து பெயரிடப்படாத நிறுவனங்களிடமிருந்து அபாயம் பற்றிய குறிப்புகள் செய்தியாகக் கசியவிடப்படும். அதன்பின் ஒரு சோதனைப் பலூனைப் போல பறக்கவிடப்படும். அதில் வரவிருக்கும் அபாயம் பற்றிய எச்சரிக்கை பொதிந்திருக்கும்.

2. இம்மூலங்கள் உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அரசு இவ் விவாதங்களைக் கவனப்படுத்தித் தனக்குள் உள்ளடக்கிக்கொள்ளும்.

3. உடனடியாக இவை சதித்திட்ட பயங்கரவாதிகள் பற்றிய வண்ண வண்ண விரல்நுனி விவரங்களுடன் ரகசிய அறிக்கைகளாக அறிவாளிகள் மற்றும் ராணுவ ஆலோசகர்களிடமிருந்து பெரிதுபடுத்தப்பட்டு வெளிப்படும்.

www.tamilarangam.net

4. பத்திரிகையாளர்கள் உடனடியாகத் தேடி இதற்கு ஒரு பெயரிட்டு மற்றைய வில்லன்களுடன் ஒப்பிட்டு எழுதத் துவங்குவார்கள்.

5. இறுதியாக அமெரிக்க அரசின் செய்திமூலங்களாக உள்ள அந்நிய செய்தி நிறுவனங்கள் இதனைக் கண்டுபிடித்து பத்திரிகைகளின் உதவியுடன் அம்பலப் படுத்தும். புதிய கெட்டவர்களிடமிருந்து இந்த அபாயம் வருவது அறிவிக்கப்பட்டுவிடும்.

6. கூடுதலாக சிந்தனைச் சிற்பிகள் மற்றும் ஆய்வாளர்களது கருத்து உதிர்ப்புகள், மாநாடுகள், அறிக்கைகள், விசாரணைகள் ஆகியவை இவற்றை நிறுவனமயப்படுத்தி விடும்.

7. அரசின் விவாதங்கள், ஆய்வுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கொள்கைகள் என திட்டங்கள் வகுக்கப்படும். தற்பொழுது புதிய வில்லன் தயார். அதன்பின் வெகுசனப் பண்பாட்டில் அவரைக் கலந்துவிட்டு புதிய பனிப்போருக்கான பொதுமக்கள் ஆதரவு திரட்டப்படும்.

இவ்வாறே இஸ்லாமிய அடிப்படை வாதம் உலகின் மிக முக்கிய பேசுபொருளாக 'பச்சை பயங்கரமாக' ஆக்கப்பட்டது என்கிறார் லியொன் டி ஹாதர்.

ஆப்கானிஸ்தான் மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகளில் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பிற்கான பயிற்சி பெஷாவரில் அமெரிக்க உளவுப்படையான 'சி.ஐ.ஏ. நிதி உதவியால் கொடுக்கப்பட்டது. சி.ஐ.ஏ. 3 பில்லியன் டாலர் நிதியுதவி செய்து ஆப்கானின் வலதுசாரி இஸ்லாமிய அமைப்பை (Gulbuddin Hekmatyar's Party of God) ரஷ்யாவிற்கு எதிராக வளர்த்தது', என்கிறார் முன்னாள் பாகிஸ்தான் அதிபரான பெனாசிர் பூட்டோ.

ஈரானில் அமெரிக்கா உருவாக்கிய பொம்மை ஆட்சி இஸ்லாமியக் கலாச்சாரப் புரட்சியால் கவிழ்க்கப்பட்ட வுடன், மேற்கத்திய ஆதரவான துருக்கியை ஈரானுக்கு எதிராகத் தூண்டிவிட்டது ஜார்ஜ் புஷ் ஆட்சி. அதே நேரத்தில், 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்பது செய்திக் கசிவுகளாக, அறிகுறிகளாக செய்தி ஊடகங்களில் பரப்பப்பட்டது.

துருக்கி, சவுதி, எகிப்து, இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அமெரிக்கா உருவாக்கிய இந்த அடிப்படை வாதப் பயத்திற்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர். அமெரிக்க சோவியத் பனிப் போருக்குப் பிறகு அமெரிக்காவின் இராணுவ ஆதரவு, பொருளாதார உதவி ஆகிய வற்றிற்காக அமெரிக்காவின் அரசியல் திட்டத்துடன் தங்களது திட்டங்களையும் இணைத்துக் கொண்டன இந்நாடுகள். வளைகுடாப் போரில் இச்செயலானது தெளிவாக வெளிப்பட்டது. அதாவது இஸ்லாமிய நாடுகளான துருக்கி, சவுதி, எகிப்து, இஸ்ரேல் ஆகியவை ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கத் தலைமையின் கீழ் ஒன்றிணைந்து நின்றன. போருக்குப் பின் ஈராக் பயம் ஒழிந்தவுடன் அடிப்படைவாதப் பயத்தை இவை தூக்கிப் பிடித்தன.

பாகிஸ்தான் மற்றும் இந்தியா இந்த அடிப்படைவாதச் சொல்லாடலுக்கு ஆட்பட்டு ஒரு அடிப்படை வாதத்திற்கு எதிராக மற்றொரு அடிப்படை வாதத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு உடனடியாக அணுகுண்டு சோதனைகளை நடத்தி இந்து குண்டு, இஸ்லாமியக் குண்டு என மார்தட்டிக் கொண்டன. மூன்றாம் உலக நாடுகள் பெரும்பாலானவை அமெரிக்க ஆதரவைப் பெற 'தேசம்கடந்த எதிரியான' (trans-national enemy) இஸ்லாமிய அடிப்படைவாதம் என்கிற துருப்புச் சீட்டையே பயன்படுத்தின என்கிறார் ஹாதர்.

சூடான் அமெரிக்கக் கட்டுப்பாட்டி லிருந்து விலகி ஈராக்கை ஆதரித்தவுடன் அதற்கு எதிராக எகிப்தைத் தூண்டியது அமெரிக்கா. அதற்கான வெகுமதி எகிப்தின் 7 பில்லியன் கடன்களை உடனடியாக ரத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ததுதான். சூடானுக்கு எதிராக அமேரிக்கா, சிரியா, லிபியா போன்ற அருகமைந்த நாடுகளில் பயங்கரவாதத்தை வளர்த்தது. அமேரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு முறை கூறியதைப் போல, 'சவுதிகள் இஸ்லாமிய அடிப்படைவாதிகள்தான்; ஆனால் அவர்கள் நமது இஸ்லாமிய அடிப்படை வாதிகள்'. இதுதான் அமேரிக்காவின் நிலை. அதற்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் எதிரி இல்லை; மாறாக, அதன் கட்டுப்பாட்டிற்குள் வர மறுக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதம்தான் எதிரி. அதே போல், 'இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரி மேற்குலகமோ கிறித்துவமோ அல்ல; மாறாக, அமேரிக்காவின் திட்டங்களும், அது அரேபிய அதிகார வர்க்கத்துடன் கொண்டுள்ள உறவும் தான்' என்கிறார் ஹாதர்.

பச்சை பயங்கரவாதம் என்பதே அமேரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகள் தமது சுயலாபத்திற்காகக் கட்டியது என்கிறார். இவரது அணுகுமுறை நெகிழ்வான தன்மையைக் கொண்டிருந்த போதிலும், அமேரிக்க அரசின் மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவில் உள்ள அரசியலை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டுகிறார். அமேரிக்க எதிர்ப்பு என்பது மட்டுமே இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நியாயப்படுத்திவிட முடியாது. எந்தவொரு அடிப்படைவாதமும் முதலில் மதரீதியாக மனிதர்களைப் பாகுபடுத்துவதும், பிறகு பிறரை அழிப்பதை நியாயப்படுத்துவதையும் அடிப்படை அபாயமாகக் கொண்டிருக்கிறது என்பது கவனப்படுத்த வேண்டிய ஒன்று.

அடுத்து இஸ்லாமிய அடிப்படைவாதம் அரசியல்ரீதியாக ஜனநாயகத்தை மறுப்ப தாகவும், தாம் மட்டுமே ஜனநாயகக் காவலர்கள் என்றும் அமேரிக்காவும் மேற்குலக நாடுகளும் பேசுவது எவ்வளவு கேலிக்கூத்தானது என்பது ஈரானில் 1953ல் ஷாவின் மன்னராட்சியை இந்நாடுகள் கொண்டுவந்ததிலிருந்து புலப்படும். 1957ல் ஜோர்டானில் மன்னர் உசேனின் ஆட்சியைக் கொண்டு வந்தது. 1992ல் அல்ஜீரியாவில் நடந்த தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று வெற்றி பெற்ற இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பான FIS (Islamic Salvation Front) ஆட்சி அமைக்க முயன்றபோது இராணுவம் அரசைக் கைப்பற்றி ஜனநாயக அமைப்பை ஒழித்து இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதை அமேரிக்கா வரவேற்றது.

*தனது மேலாண்மைக்காகவும், இராணுவ உதவிக்காகவும் அரேபிய நாடுகளில் அதிகார வர்க்க ஆட்சி நடப்பதை அமேரிக்கா ஊக்குவித்துக் கொண்டு, உலகில் ஜனநாயகம் பற்றிப் பேசுவதும் அதன் காவலனாக வேடம் போடுவதுமான இரட்டை நிலையை எடுக்கிறது. 'அமேரிக்கா வின் இந்த ஜனநாயகக் காவலன் நாடகத் திற்கு ஒரு எதிரி தேவைப்பட்டபோது அது இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அடை யாளம் காட்டியது' என்கிறார் ஹாதர்.*

இஸ்லாமிய அடிப்படைவாதம் பயங்கர வாதச் செயல்களைச் செய்கிறது எனக் கூறும் மேற்கத்திய அமேரிக்க அரசுகள் பால்கன் நாடுகளில் நடைபெறும் ஒடுக்குமுறை களுக்கும், மனித அழிவுகளுக்கும், இனச் சுத்திகரிப்பிற்கும் (ethnic cleansing) தலை விரித்தாடும் பழமைவாதம் மற்றும் கிறித்துவ அடிப்படைவாதம் ஆகியவற்றிற்கும் துணை போவதுடன் அவற்றை நியாயப்படுத்தியும் பேசுகின்றன. மனித இனத்தின்மீது நடத்தப் பட்ட பேரழிவுகளில் ஒன்று வதை முகாம்களில் போஸ்னிய முஸ்லிம் பெண்கள் கூட்டம் கூட்டமாக பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு கட்டாயக் கருத்தரிப்பின் மூலம் இஸ்லாமின் தூய்மையை அழிப்பதாகக் கூறியபோது அதைப் பார்த்து மௌனம் சாதித்தவைதான் இவ்வரசுகள். பால்கன் நாடுகளின் பழமைவாத மற்றும் அடிப்படை வாத கிறித்துவத்தை ஆதரிப்பதும், அரபிய நாடுகளில் உள்ள இஸ்லாமிய அடிப்படை வாதத்தை அமேரிக்க அணு மற்றும் உயிரியல் ஆயுதங்களைவிட அதிக பயங்கரமானதாகவும் கட்டமைக்க முயலுகின்றன.

www.tamilarangam.net

கம்யூனிஸத்தை விரட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் அதிகாரத்துவ ஆட்சியாளர்களுக்கும் பிறந்த இராட்சசக் குழந்தைதான் அடிப்படைவாதம். 'அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்ட நிலையில் மசூதிகள்தான் மக்கள் கூடும் இடம். அங்குதான் அரசியல் எதிர்ப்புணர்வு என்பது ஒன்றிணைக்கப்படுகிறது. மக்களின் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அதுவே அடிப்படைவாதம் வளர்வதற்கும் வழி வகுக்கிறது', என்கிறார் முன்னாள் பாகிஸ்தான் அதிபரான பெனாசிர் புட்டோ. பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் இராணுவ ஆட்சி நடைபெறுவதற்கும், சர்வாதிகார ஒடுக்குமுறைக்கும் மேற்கத்திய, அமேரிக்க அரசுகளே காரணம். இவ்வரசு எதிர்ப்பிற்கான குரலாகவே அடிப்படைவாதம் வளர்கிறது அங்கு.

தலிபான் புரட்சிக்குப் பிறகு அடிப்படைவாத நாடாக மாறியிருக்கும் ஆப்கானிஸ்தானை எடுத்துக் கொள்வோம். அங்கு என்ன நடந்தது?

1. ஆப்கானிஸ்தான் புவியியல்ரீதியாக பிரச்சினைக்குரிய ஒரு எல்லைப் பகுதியில் இருக்கிறது. அது ரஷ்யாவின் கீழைத்தேய நாடுகளின் தொடர்பிற்கான ஒரு முகத்துவாரம். ஆப்கானிலிருந்து அரேபிய இஸ்லாமிய நாடுகள் அனைத்தையும் சங்கிலித்தொடர் போல் தொடர்பு கொள்ள முடியும். ஆப்கானில் இராணுவ தளத்தை அமைப்பதன் மூலம் அரேபிய நாடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியும். அரேபிய நாடுகளைக் கட்டுக்குள் வைக்க இஸ்ரேல் எப்படி பிறிதொரு மையமோ, அதைப்போல ஆப்கான் ஒரு மையம். அதனால் அமேரிக்கா மற்றும் ரஷ்யாவின் உலக ஆதிக்கப் போட்டியில் அந்நாடு சிக்கியது.

2. ரஷ்யா தனது எல்லைப் பாதுகாப்பிற்காக எனக் கூறி அதனைக் கைப்பற்றியது. உடனே அமேரிக்கா முஜாகிதீன்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து ரஷ்ய எதிர்ப்பை வளர்த்தது.

3. வல்லூறுகளின் பனிப்போரானது பல இனரீதியான இயக்கங்களை ஒன்றுக்கு எதிராக ஒன்றைத் தூண்டிவிட்டன. லட்சக்கணக்கான இராணுவ வீரர்கள், பொது மக்கள் கொல்லப்பட்டனர். 45 ஆயிரம் பெண்கள் விதவைகளாகவும், 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் அனாதைகளாகவும் ஆக்கப்பட்டனர். லட்சக்கணக்கான அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். எண்ணற்ற நகரங்கள் அழிக்கப்பட்டன. 10 மில்லியன் கண்ணி வெடிகள் 80 சதவீதம் மக்கள் வாழும் கிராமங்களில் புதைக்கப்பட்டுள்ளன. பள்ளிகள் மூடப்பட்டன. அரசு இயங்கவில்லை. வியாபாரம் படுத்தது. வாழ்க்கை என்பது மிகவும் கடினமாகியது.

இச்சூழல் போதும் மனிதனை மன நோய் நிலைக்குத் தள்ளிச் செல்ல. இவைதான் அங்கு அடிப்படைவாதத்தை வளர்த்தவை. எளிமையாக அது ஆட்சிப் பொறுப்பை ஏற்க வழி செய்தது. இந்நாடு ஒரு அடிப்படைவாத நாடாக ஆனதற்குக் காரணம் ஏகாதிபத்தியம், காலனியம், சுரண்டல், ஒடுக்குமுறை மற்றும் அநீதி ஆகியவையே என்கிறது Global Vision ஆய்வு.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தைவிட மோசமான அடிப்படைவாத சமூகமாக அமேரிக்கா மாறியிருப்பது செய்தி ஊடகங்களால் முற்றிலுமாக மறைக்கப்பட்டு வருகிறது. அமேரிக்காவில்தான் கிறித்துவ அடிப்படைவாதம் உருவாகியது. இன்று அது ஆட்சியைத் தீர்மானிக்கும் அளவிற்கு வலுவானதாக மக்களிடம் வேரூன்றி இருக்கிறது. எதிர் அணியில் நின்ற கத்தோலிக்க மற்றும் சுவிசேஷ கிறித்துவ இயக்கங்களுக்கிடையில் வேர்க்கால் மட்டங்களில் ஒருங்கிணைப்பு நடைபெற்று வருகிறது. பெரும் நிறுவனங்கள் இவ்வமைப்புகளுக்கான நிதி உதவிகளைச் செய்து வருகின்றன.

*இஸ்லாமிய அடிப்படைவாதம் மட்டுமே கண்ணுக்குக் கண் என்கிற தண்டனை முறையைக் கொடூரமாக நிறைவேற்றுவதாகப் பரப்பும் தொடர்பு*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***சாதனங்கள் அமேரிக்க கிறித்துவ அடிப்படை வாதிகளின் கருத்துக்களைப் பற்றிக் கவலை அடைவதில்லை.***

கிறித்துவ புனித ஆவிகளுக்காக அதன் காவலர்கள் வெளியிடும் நற்செய்திகளைப் பாருங்கள்: நற்செய்திக்கான தேசத்தை உருவாக்க வாளையும், பேனாவையும் பயன்படுத்த வேண்டும். விவாகரத்துப் பிரச்சினை அச்சமூகத்தில் இருக்காது. வழிதவறியவருக்கு மரண தண்டனை வழங்கிவிட்டு மற்றொருவருக்கு மறுமணம் செய்து வைக்க வேண்டும். பெற்றோர்களால் திருத்த முடியாத பிள்ளைகளை நீதிபதி முன் கொண்டு வந்து சாகும் வரை கல்லால் அடிக்க வேண்டும். பிற கடவுளை வணங்குபவர் களுக்கு மரண தண்டனை தர வேண்டும்.

அடிப்படைவாதம் எல்லா மதங்களிலும் மனிதனைத் தண்டிப்பதற்கும், கொல்வதற்கு மான உரிமையை கடவுளின் வாரிசுகள் என்ற ரீதியில் எடுத்துக் கொள்கிறது. அடிப்படை வாதம் என்பது எல்லா மதங்களினது ஒரு அரசியல் நிகழ்வாக மாறியிருக்கிறது. இதன் அரசியல் பின்னணி ஏகாதிபத்தியங்களது உலக அரசாட்சி பற்றிய வேட்கையும் உலகை ஒற்றைக் கருத்துருவத்திற்குள் அடைக்க முயல்வதும் அதற்காய் உலகமயமாக்கல் என்கிற திட்டத்துடன் உலா வருவதுமே காரணம்.

***இறுதியாக, இஸ்லாமிய அடிப்படை வாதம் உருவான சமூகச் சூழலை விளக்கி யுள்ள பல ஆய்வாளர்களது கருத்துக்களை யும் தொகுத்தால்:***

1. இஸ்லாம் மேற்கத்தியர்களால் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள, தவறாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற ஒரு மதம்.

2. சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அமேரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் உலகளாவிய ஒரு எதிரியாக இஸ்லாமிய அடிப்படைவாதத்தை உருவாக்கின. அவை சிவப்பு பயங்கரத்தின் இடத்தில் பச்சை பயங்கரத்தை (செய்தி நிறுவனங்கள் மற்றும் மேற்கத்திய அறிவுஜீவிகளின் வார்த்தைகள் Green Menac, Green Peril) மாற்றீடு செய்தன.

3. மேற்கத்தியப் பண்பாட்டிற்கு ஒரு சவாலாக கிழைத்தேயப் பண்பாடும் அதிலும் குறிப்பாக இஸ்லாமியப் பண்பாடும் விளங்கு வதால் இஸ்லாமிற்கும் இஸ்லாமியப் பண்பாட்டிற்கும் எதிராக அதனை வீழ்த்த (subvert) உருவாக்கப்பட்டதே இஸ்லாமிய பயங்கரவாதம் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாதம்.

4. இஸ்லாமிய அடிப்படைவாதம் என்கிற ஒரு மதப்பிரிவு கிறித்துவத்தைப் போல இஸ்லாமில் இல்லை என்ற போதிலும் மேற்கத்தியத் தகவல் தொடர்பு வலைப் பின்னல் வழியாக அடிப்படைவாதம் இஸ்லாத்துடன் தொடர்ச்சியாக அடையாளப் படுத்தப்பட்டு வருவது ஒரு மேற்கத்திய சதி அல்லது மேற்கத்திய பயத்தின் விளைவு.

5. காலனிமயமாக்கலும், சமீபத்திய உலகமயமாக்கலும் உருவாக்கிய தனித்த தேசிய இனங்களுக்கான அடையாள நெருக்கடி ஏற்படுத்திய சிதறிய மனநிலையின் விளைவாக ஒரு மையமான அடையாளத்தைத் தேடும் செயலாக உருவானதே மத மீட்புவாதமும் அதன் உச்சமான மத அடிப்படைவாதமும்.

6. உலகம் ஒரு புவிசார் கிராமமாக (global village) மாறிய நிலையில் ஏற்பட்ட மேற்கத்திய கலாச்சாரமயமாக்கலுக்கான தீவிர எதிர்ப்பு நிலையே இஸ்லாமிய அடிப்படைவாதம் உருவாகக் காரணம்.

7. இஸ்லாமிய அடிப்படைவாதம் மத்திய கிழக்கு நாடுகளின் இரண்டு முக்கியமான காரணிகளுடன் உறவுடையது. 1. ஏகாதிபத்திய இராணுவ யுத்த தந்திரம் 2. எண்ணை வளத்தின் அரசியல் பொருளாதாரம். அமேரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகள் மிக மோசமான இராணுவ யுத்த தந்திர நோக்கில் சில பகுதிகளுக்குள் உருவான எதிர்ப்

www.tamilarangam.net

பியக்கங்களை வளர்த்தன. அந்நாடுகளின் உள் முரண்களைக் கையாளுவதும், அவற்றை புவிசார் அரசியலுக்குள் நிலைநிறுத்தி தங்களது செயல் திட்டங்களைத் திட்டியதும் ஒரு காரணம். அதேவேளையில் எண்ணை வளமிக்க நாடுகளுக்குள் போட்டிகளை உருவாக்கி அவற்றில் குளிர்காய முனைந்ததும் பிறிதொரு காரணம். ***எண்ணை வளமிக்க மத்திய கிழக்கு நாடுகளைத் தங்களது கைப்பாவையாக்க பல மோசமான பொம்மை அரசுகளையும் அவற்றின் உள் முரண்களையும் கையாண்ட விதமே இஸ்லாமிய நாடுகளின் மதமீட்பியக் கத்திற்கும், மத அடிப்படைவாதத்திற்கும் வழிகோலியது.***

ஆக, இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது ஒரு புவிசார் அரசியல் நிகழ்வாக, ஏகாதிபத்தியங்களின் மிக மோசமான ஆதிக்க வெறி மற்றும் பொருளியல் சுரண்டலின் பக்கவிளைவாக உருவான ஒரு எதிர்ப்பே. பின்காலனியச் சமூகங்கள் தங்களது வரலாற்றிலிருந்து ஏகாதிபத்திய உலக ஆதிக்கத்தை எதிர்க்கப் பெற்றுக்கொண்ட ஒரு திர்வே இது. ஒரு வன்முறைக்கு எதிர் வன்முறையாக உருவெடுத்த பூதம். இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் புரிந்துகொள்ள மேற்கண்ட குறிப்புகளைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

***மேற்கத்திய அமேரிக்க ஏகாதிபத்திய அரசு இஸ்லாமிய அடிப்படை வாதத்தைவிட உண்மையில் பயம் கொள்வது மத்திய கிழக்கு, மற்றும் அரேபிய நாடுகளின் ஜனநாயக அரசு உருவாக்கத்தின் மீதுதான். அரேபிய நாடுகளின் ஜனநாயக அரசு உருவாக்கத்தைத் தடுப்பதற்கு இச்சக்திகள் தந்த விலையே இஸ்லாமிய அடிப்படை வாதம்.***

உலக அரசாட்சிக்காக புனித ஆவிகளும், தமது இடத்தைக் காப்பாற்றிக் கொள்ள அடிப்படைவாத ஜின்களும் நடத்தும் ஒரு பெருவெளி நாடகத்தின் பார்வையாளர் களாக மாற்றப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிழுக்கப்பட்டு, இறுதியில் பங்கேற் பாளராக மாற்றப்பட்டுவிடும் அபாயத் திலிருந்து எச்சரிக்கையாக விலகி நிற்பதும், மதக் கருத்தியலின் அரசியல் உள்ளடக்கத்தை அம்பலப்படுத்துவதும், மதச்சார்பற்ற அணி களையும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் ‘வழக்கம் போல்’ ஒருங்கிணைப்பதும் அவசியமானதும் அவசரமானதுமான - கட்சிகளுக்குள்ளும், கட்சி சார்பற்றும், கட்சிகளுக்கு வெளியேயும் நாமும், நமக்குள்ளும் செய்ய வேண்டியதுமான - ஒரு சமூகப் பணி.

---

பிரான்சிலிருந்து வெளிவரும் *உயிர்நிழல்* பத்திரிகை நண்பர்களான லக்ஷ்மி, கலைச்செல்வன், புஷ்பராஜ் மற்றும் அசோக் ஆகிய நண்பர்களின் ஆலோசனைக்கு ஏற்ப பாரிஸில் நடந்த இலக்கியச் சந்திப்பில் வாசிப்பதற்காக எழுதப்பட்ட கட்டுரை. சூழ்நிலை காரணமாக வாசிக்க இயலாமல் போனது. இக்கட்டுரை இந்நண்பர்கள் என்மீது கொண்டுள்ள நட்பினாலும் நம்பிக்கை யினாலும் உருவானது. சவூதி அரேபியாவில் பணிபுரியும் எனக்கு இத்துறை பற்றி அறிவது சிரமமான ஒன்று. அதிலும் இத்துறை சம்பந்தப்பட்ட நூட்களை இந்தியாவிலிருந்து தருவித்துப் பெறுவதும் சாத்தியமில்லை. அதனால் இக்கட்டுரை முழுக்கவும் இணையத் தளத்தின் வழியாகப் பெற்ற ஆய்வுகள் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது.

***ஜமாலன்***

(07.12.2000 - 05.05.2001)

---

இக்கட்டுரையின் சில பகுதிகளிலுள்ள எழுத்துச் சாய்வாக்கம் *அசையினால்* செய்யப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீட்ஷேயின் மூலங்கள்



தமிழரசன்

## நீட்ஷே சிந்தனையின் தோற்றம்

1848 இல் ஜெர்மனியப் புரட்சி தோற்கடிக்கப்பட்டு மக்களின் எழுச்சி நிர்மூலமாக்கப்பட்டது. போராட்ட சக்திகள் மீதான அடக்குமுறைகள், படுகொலைகள், பழிவாங்கல்கள், யுத்தம் ஏற்படுத்தி விட்டுச் சென்ற சமூக அவலங்கள், பசிபட்டினி என்பன ஜெர்மனி தழுவிய தோல்விப் புலம்பலையும் எதிர்காலம் மீதான அவநம்பிக்கையையும் படைத்தன. மக்கள் தழுவிய உறுதி மிக்க போராட்டச் சிந்தனைகள் மறைந்து, தனிமனித வாதமும் துன்பியல் முறையீடுகளும் கருத்து முதல்வாத அழுகைகளும் எழத்தொடங்கின. மனிதர்கள் மேல் வெறுப்பும், 'தீய அம்சங்கள் நிரந்தரமானவை, யுத்தம் தரும் மனித அவலங்கள் தவிர்க்க முடியாதவை' என்ற தோல்விக்கால சிந்தனைகள் கருக் கொண்டன. மகிழ்ச்சி நிறைந்த மனித துயரமற்ற, புராதன பொற்காலம் அதன் இயற்கை வாழ்வு பற்றிய ஏக்கங்களும் கெகலுக்கு முந்திய கருத்து முதல்வாதத்துக்கு மறுபிறவி வழங்கும் போக்குகளும் எழுந்தன. அரசியல் இடைவெளியை தாம் இட்டு நிரப்ப முயன்றன. நீட்சேயிடம் பிற்காலத்தில் குடிகொண்ட "நவகாண்டியம்", "புலனறிவுக்கு அப்பாற்பட்ட அதனால் அறிய முடியாத உண்மை" என்ற பழஞ்சரக்குகள் மீள்படைப்புக்குள்ளாயின. தத்துவம், பகுத்தறிவு இவைகளை வெறுத்து அதன் இடத்தில் அறியொணா வாதத்தையும் ஊகச்சிந்தனைகளையும் இருத்தி விடப்பட்டன. இவைகளை நீட்சேயின் ஆசான்களில்

www.tamilarangam.net

ஒருவரான சோப்பன் கோவர் (Arthur Schopenhauer) பிரச்சாரப்படுத்தினார். ஜெர்மனிய அரசியல் சமூகவாழ்வுத் தோல்விகளிலிருந்து தப்பித்து தனிமனிதத்துள் பதுங்கிடம் தேடிக் கொண்டார். சோப்பன் கோவர் கெகலியவாதியாக இருந்து பின்பு சமயவாத ஆன்மீகம் தேர்ந்தெடுத்துக் கொடுத்த தனிமனித வாதத்துள் பொறிந்தமையைக் காண்பது அவசியம். பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் மேலான ஆதிக்கம், தொடர்பு, அதன் மூலமான புதிய பொருளாதார பலம் என்பன ஐரோப்பிய நாடுகளில் கீழைத் தேச மக்களின் வாழ்வியல் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் ஆர்வங் களைத் தூண்டி விட்டன. அம்மக்களை கொள்ளையிட வாய்ப்பானதும் மற்றும் அவர்களின் கலாச்சாரம், மொழி, வாழ்க்கை முறை பற்றிய பல நூல்கள் எழுதப்பட்டன. பவுல் டொய்சன் (Paul Deussen) எனும் ஆய்வாளர் வேதம், உபநிடதம், மனுதர்மசாஸ்திரம், சமஸ்கிருதம் போன்றவைகளை ஆராய்ந்தார். பிரிட்டிரிச் ருக்கேர்ட் (Friedrich Ruckert) இந்தியமொழிகளை தமிழ்மொழி உட்பட ஆய்ந்ததோடு அரபுநாகரீகம் மொழி என்பவைகளையும் குறித்து எழுதினார். இவர்களின் ஆய்வுகள் ஜெர்மன்மொழியில் வெளியிடப்பட்டன. இவைகளில் சோப்பன்கோவர் ஆழமாய் ஈடுபட்டார். இந்து மற்றும் பௌத்த சித்தாந்தங் களில் இந்திய மாயாவாதப் போக்குகளில் இறக்கிவிடப்பட்டு ஆன்மீகம், சுயம், பரி நிர்வாணம் ஆகியவை களைப் பேசினார். "ஆசையை ஒறுப்பது பற்றிய" இந்திய கருத்து முதல்வாதத்தை எதிரொலித்தனர்.

"உண்மையை அறிய ஆசைகள் தடையாகவுள்ளன. ஆசைகள் கேடானவை, இழிந்தவை என்பதற்காக வெட்கப்படத் தேவையில்லை. அது அப்படியே நிலவட்டும். எம் வாழ்வே ஒரு குற்றம்" என்று மனிதவாழ்வை சமயவாதியையொத்து மறுத்து நிலையாமைக் கொள்கை போதிக்கின்றார். இவரின் வாழ்வே ஒரு குற்றம் என்பதை நீட்சே "மனிதப் பிறப்பு பெருமைக்குரியதல்ல" என்கின்றார். புத்தரின் "எல்லாத் துயரங்கட்கும் ஆசையே காரணம்" என்பதை சோப்பன் கோவர் "எல்லாத் துயரங்கட்கும் விருப்புறுதியே காரணம்" எனப் பேசுகின்றார். "உலகம் ஆடம்பரமும் ஆசையும் நிறைந்தது பகுத்தறிவின்மையும் மூடத் தனமும் கொண்டது. எதையும் கண்மூடித்தனமாக நம்புவது. தத்துவம் அழிவை மட்டுமே தரும். யுத்தம், பசி, கொடுமை என்பவை மாற்ற முடியாத இயற்கை விதி"என்று இந்திய சமயவாதியை ஒத்துப் பிரசங்கம் செய்கின்றார். அன்றைய ஜெர்மனிய மக்களின் ஆன்மீக நெருக்கடிகளை இது கருத்து முதல்வாத அடிப்படையில் பிரதிபலிக்கிறது. நீட்சே சோப்பன் கோவரின் செல்வாக்குள் மட்டுமல்ல, ரிச்சர்ட் வாக்னர் (Richard Wagner - 1813-1883) உடன் 30 வயதிலேயே தொடர்பு கொண்டு இருந்தான். ரிச்சர்ட் வாக்னர் நீட்சேகால ஜெர்மனிய தேசியவாதத்தின் முக்கியமானவராகும். அவர் "ஜெர்மானியம்" (Germanentum) எனும் அமைப்பை நிறுவினார். ரிச்சர்ட் வாக்னர், சோப்பன் கோவர் இருவரும் கடைந்தெடுத்த யூத மற்றும் பெண் விரோதிகளாவர். சோப்பன் கோவரை ஜெர்மன் பெருந்தேசிய வெறியர்கள் ஜெர்மனிய மக்களின் ஆன்மீகத் தலைவர் (Geistiger Fuhrer des deutsche volks) என்று பாராட்டிய போது நீட்சே ரிச்சர்ட் வாக்னரையும் சோப்பன் கோவரையும் "ஜெர்மனிய வீரர்" (Germanische Helden) என்று புகழ்கின்றார். சோப்பன் கோவர் "யூதர்களும் பெண்களும் இழிந்தவர்கள்" என்று கூறினார். ரிச்சர்ட் வாக்னர் யூதர்கள் எம்மொழியைப் பேசுகின்றனர். ஆனால் எம்மவர்களாக இல்லை. அவர்களின் சொத்துக்களை பறித்து விட்டால் அவர்கள் அதிகாரம் இழந்து விடுவர் என்று ஆலோசனை சொன்னார். இதையே பின்பற்றி பிற் காலத்தில் நாசிகள் யூதர்களிடம் இருந்து சொத்தைப் பறித்தது மட்டுமல்லாமல் அவர்களையே கருவறுத்த னர். முழு யூத மக்களையும் அழித்தனர். ஜெர்மனிய உயர் இனம் என்ற மேலாண்மைக் கருத்தியலைப் படைத்ததிலும், அந்நியர்கள், யூதர்கள், சிந்தி, ரோமா இனமக்கள், பிறீசன் (Friesen) சோர்பன் (Sorben) போன்ற ஜெர்மானிய சிறுபான்மை இனங்கள் மேலான அழிவுகளை தத்துவமயப்படுத்தலிலும் சோப்பன் கோவர் ரிச்சர்ட் வாக்னர் இருவரும் முதன்மையானவர்கள். சோப்பன் கோவர் ஜெர்மனிய ஆரியரின் பெருமையின் மூலங்களை இந்தியாவின் பழம் பெருமைகளில் கண்டெடுத்தார். பிராமணியக் கருத்தியலின் சாதிப்பாகுபாடு நால்வருணக் கோட்பாடுகளை ஆதிஜெர்மனியருக்கு உரிய அடையாளமாய் காண்பிக்கின்றார். இந்தப் போக்குகளை நீட்சே வரி தவறாமல் உள்வாங்கினான். நீட்சேயின் "அதிகாலைச் செவ்வானம்" (Morgen Rote) எனும் நூலின் தலைப்பு ருக்வேதத்தின் ஒரு அடியாகும். அந்த நூலின் தொடக்கத்திலேயே "இன்னமும் ஒளிராத ஏராளமான அதிகாலைச் செவ்வானங்கள் உண்டு" (Es gibt so viele morgen Roten. Die Noch Night-geleuchtet haben) என்ற ருக்வேத வாக்கியம் இடம் பெறுகிறது.

அத்தோடு நவகாண்டியச் சிந்தனைகள், டார்வினியச் சிந்தனைகள், ஜெர்மனிய மற்றும் புராதன ஐரோப்பிய பொற்காலம் இவைகளாலும் நீட்சே ஆளப்பட்டான். மனிதர்களை சமூகஜீவியாய் காண்பதற்குப் பதிலாக உடலியல் உயிரியல் தேவைகளால் இயக்கப்படும், அதற்காகவே அலையும், அதன் தேவைகளால் மட்டும் அலைக்கழிக்கப்படும் பிறவிகள் ஆக உருவகித்தான். அவனின் நண்பர்களாக

www.tamilarangam.net

இருந்த ஸ்பிரிங்கர் (A.Springer) எனும் கலைகள் பற்றிய ஆய்வாளன். ஜான் (Jahn) எனும் புதை பொருள் ஆய்வாளன். ரிட்சல் (F.Ritschel) எனப்படும் மதவியல் ஆய்வாளன். பவுல் ரீ (Paul Ree) எனும் உளவியலாளன் இவர்களோடு 1869 இல் நீட்சேயுடன் நெருக்கமான கிறிஸ்தவ சமய ஆய்வாளனும் அதி தீவிர யூத விரோதியுமான பிரான்ஸ் ஓவர்பெக் (Franz Overbeck) ஆகியோர் நீட்சேயின் சிந்தனைகளை வடிவமைத்தனர். பிரான்சுத் தத்துவவாதியான விக்டர் கூகோ (VictorHugo)வின் இசை ஒருமொழி என்ற கொள்கையும், ரிச்சர்ட் வாக்னர் மூலமாய் அவனிடம் சேர்ந்து கொண்டது. நீட்சே ஜெர்மனியர்களின் ஆதியான பொற்காலம் மட்டுமே,. புராதன இயற்கை வாழ்வே சிறந்தது என்ற கருத்து கொண்டு இருந்தான். இக்கருத்தானது மனிதர்களின் ஆதிவாழ்வே மேலானது அதற்குப் பின்னர் வந்த வரலாறு முழுவதும் மனிதர்கள் கீழ்நோக்கி, இழிவை நோக்கி செல்லும் நிகழ்ச்சியே நடைபெறுகிறது என்ற மனித இனத்தின் தொல்கதைகளோடு சம்பந்தப்பட்ட கருத்துக்களை அவன் நம்பினான். மனித இனத்தின் தொலைந்து போய் விட்ட பொற்காலம் பற்றிய கருத்தியல்கள் உலகில் சகல மக்களினங்களிடமும் உள்ளவை தான். இவை மனிதர்களின் இனக்குழு வாழ்விற்கு முந்திய ஆதியான பொதுவுடமைச் சமூக வாழ்வின் நினைவுகளின் மிச்சமீதியாகும். கிரேக்கத்தின் கவியான கீ சியாட் (கி.மு.3 நூற்றாண்டு) பொற்காலம் பற்றிப் பேசினான். இந்தியாவில் இன்று வரை சமய செல்வாக்கு மிக்க மக்கள் மத்தியில் இக்கருத்தியல் நிலவி வருகிறது. இன்பமும் அன்பும் நிறைந்த கொடுமையும் பசிபிணியும் அற்ற மரணமற்ற உலகு முன்பு இருந்தது என்ற கோட்பாடு உண்டு. அதன்பின்பே யுத்தமும் தீமையும் கொண்ட பிணி நிறைந்த இன்றைய உலகு பிறந்தது என்ற துன்பியல் கோட்பாடுகள் நிலவுகின்றன. "ஜகோவா" போன்ற இன்றைய சமயக் குழுக்கள் கூட யூதர்களின் கொடூரமான யுத்தக் கடவுளான "ஜகோவா" வை அன்பே உருவான சிறந்த பொற்காலத்தின் கடவுளாகச் சித்தரிப்பதை நாம் காண முடியும்.

பிரிட்டனில் வரலாற்று அறிஞரான "அர்னால்ட் டாயின்பி" என்பவர் "நாகரீகங்களின் சுழற்சி" என்ற கருத்தை உருவாக்கினார். மனித குலம் தாம் கடந்து வந்த வரலாற்றால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பழைய தொல்வாழ்வு திரும்ப வரும் என்ற கற்பனையாக அது அமைந்தது. பிரான்சில் "ரூசோ" மனிதர்களின் இழக்கப்பட்டு விட்ட இயற்கை வாழ்வைத் தேடினார். ஜெர்மனியில் "மக்ஸ் ஸ்ரேனர்" மற்றும் புருத்தோன், பக்கூன் போன்றோர் தன்னிச்சை வாதத்தை இயற்கை வாழ்வின் அம்சமாய்க் கண்டனர். பேர்க்சன் (Bergson) டில்த்தி (Dilthey) சிம்மெல் (Simmel) போன்ற கருத்து முதல்வாதிகள் கூட நீட்சேயைப் போன்று முதலாளியத் தொழில்நுட்பம் விஞ்ஞானம், நாகரீகம் என்பன மனிதர்களின் அகஅம்சங்களை ஐரோப்பியப் பாரம்பரியங்களை சிதைத்து விட்டதாய் முறையிட்டனர். முதலாளியத்தின் தவிர்க்கமுடியாத வளர்ச்சிக் கட்ட நிலைமைகளைக் கண்டு ஒப்பாரியிட்டனர். இப்படியே நீட்சேயும் இயற்கை வாழ்வுப் பிரேமைகளில் விஞ்ஞான உலகையும் முதலாளிய வளர்ச்சியையும் கண்டு மிரண்டான்.

"விஞ்ஞானம் அலுப்பூட்டுவது, வறண்டது, அழகற்றது, கடினமானது. அதனால் எங்களைத் தத்துவம் என்று சொல்லப்படுவதால் அழகு படுத்த விடுங்கள்" என்று புலம்பினான். "விஞ்ஞானத்தில் இருந்து இயற்கைக்குத் திரும்புதல், இயற்கை மற்றும் இயற்கையான விஞ்ஞானத்திற்குத் திரும்புதல்" பற்றியும் பழம் பெருமை கொண்ட ஜெர்மனிய மற்றும் கிரேக்கத்தின் வாழ்வை வெறியுடன் தேடுகின்றான். விவசாய சமூகங்களின் சுரண்டலும் அதீத ஒடுக்குமுறையும் அடிமைத்தனமான முதலாளித்துவத்துக்கு முந்திய மனித வாழ்வு அவனை உறுத்தவில்லை மாறாக இயற்கை பற்றிய புலம்பல்கள் அதிகரிக்கின்றன. "இயற்கை பெருமை நிறைந்தது. இயற்கையுடன் இணைந்த கடமைகள் உரிமைகள் உண்டு. என்ன நிலையாகவும் மாற்ற முடியாததாகவும் உள்ளதோ? அப்படியே நிலைத்திருக்கும்." என்று சோப்பன கோவரின் கருத்தை பேசுகின்றான் நீட்சே. இயற்கைவிதிப்படியே எல்லோரும் எல்லோருடனும் போரிட விரும்புகின்றனர். வறுமை, சோகம், பயம், சர்வவியாபகமானது வேதனையும் நோயும் மனிதர்கட்கு நிரந்தரமானது என்று சமூக அநீதிகளையும் சமபங்கீடு இன்மை காரணமாய் எழும் மனித துன்பங்களையும் இயற்கை விதியாக்கி சாதாரண மக்களை இவைகட்கு எதிரான செயலின்றி வாளா இருக்கக் கோருகின்றான். "விஞ்ஞானம் ஆழுமை செலுத்தும் வாழ்வு பெறுமதியற்றது. அதில் நம் எதிர்கால வாழ்விற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. எம்முன்னோர்களது வாழ்வு அறிவால் அல்ல இயற்கையால் படைக்கப்பட்டது." கடந்த காலம் பற்றிய கனவைப் படைத்து விட்டு நிகழ்காலத்தை அதற்குப் பலியிடச் செய்ய முயல்கின்றான். "விஞ்ஞானத்தை விட பரம்பரைக் குணமும் பண்பாடும் பலம் வாய்ந்தவை" என சமூக முன்னேற்ற விதிகளை மறுக்க பிரயத்தனம் செய்யப்படுகின்றது.

www.tamilarangam.net

## நீட்சேயின் கடவுள் மறுப்பு

நீட்சேயின் யூதவிரோதத்தை அடியாய்க் கொண்ட கிறிஸ்தவ மறுப்பை அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள எல்லா மதங்கள், கடவுளருக்கும் எதிரான மறுப்பாய் அ.மாக்ஸ் போன்ற நீட்சேயிச விசுவாசிகளால் கட்டுக்கதையாடல்கள் பரப்பப்பட்டுள்ளன. நம்பும்படி நிர்ப்பந்தங்கள் செலுத்தப்படுகின்றன. கடவுள் இறந்து விட்டான் எனும் நீட்சேயின் வாசகத்தை வைத்து மாபெரும் கட்டவிழ்ப்பு நெருப்புக்கள் மூட்டப்படுகின்றன. இங்கு பின்நவீனத்துவ கதம்ப வாதிகளின் ஊழிக்கூத்தைக் காணும் முன்பு நீட்சேயின் கிறிஸ்தவம் எனது "மரண எதிரி (Tod Feind)" என்ற பிரகடனத்தைப் பேசுமுன்பு அன்றைய நீட்சே கால 1870 வருடத்திய ஜெர்மனியின் அரசியல் அபிவிருத்திகளையும் அது படைத்த கருத்தியல் மூலங்களையும் மதிப்பிடவேண்டும். நீட்சே கால ஜெர்மனியானது ஒன்றிணைக்கப்பட்ட பலம் பொருந்திய பெரும்படைப்புச் சக்தி கொண்ட நாடாக வளரத் தொடங்கியது. முதலாளிய வளர்ச்சி இயந்திரவியல், பௌதீகம், இரசாயனம், மருத்துவம், உயிரியல், மானுடவியல், புதைபொருள் ஆய்வு, மொழியியல், வரலாறு என்பன திட்டவட்டமான தனித்தனி அறிவுத்துறைகளை வளர்த்தெடுத்தது. இதுவரை சமயம் சார்ந்த ஆன்மீகம் ஊடாக சகல அறிவியல் துறைகளையும் விளக்கி வந்த காலம் தகரத் தொடங்கியது. முதலாளிய எல்லைக்குட்பட்ட அறிவியல், ஜனநாயகம், மனித உரிமைகள் என்பன தம்மை வளர்க்கப் போராடி வந்தன. ஐரோப்பாவில் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பையும் சமூக அரசியல் ஆதிக்கத்தையும் கொண்டிருந்த கிறிஸ்தவம் மற்றும் தேவாலயங்கள் தம் முதன்மையிடத்தை முதலாளிய வல்லமைக்கு விட்டுக் கொடுக்க வேண்டி வந்தது. மறுபுறம் ஜெர்மனியின் மாட்டின்லூதர், மற்றும் கால்வின் இருவரும் ரோம் மற்றும் கத்தோலிக்கத்தை எதிர்ப்பது என்ற போர்வையில் கிறிஸ்தவத்தின் அடிப்படைகளை ஏற்கனவே தகர்த்திருந்தனர். இதன் விளைபயனாக ஜெர்மனிய நாகரீகம், தொல்பெருமைகள், பழம் புராணங்கள், இசை இவைகளை மீட்க மூலகாரணிகளைத் தோற்று வித்தனர். மறுபுறம் கோப்பர் நிக்கல்ஸ், கலிலியோ, புருனோ போன்றோர் பிரபஞ்சத்தின் எல்லையில்லாப் பெருவெளியில் பூமி ஒரு துகளாக அறிவித்தனர். டார்வினின் பரிணாம வளர்ச்சியின் கோட்பாடும், மார்க்ஸின் பொருள் முதல்வாதமும் சமூக இயக்கவியலும் பைபிளைத் தகர்க்கத் தொடங்கியிருந்தன. இவ்வாறாக நீட்சேக்கு முன்பாகவே கிறிஸ்தவம் தன் உயிர்வாழ்வுக்கு போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

நீட்சேயைப் போன்று யூதவிரோதத்துள் கிறிஸ்தவ மத எதிர்ப்பை சாகடித்து விடாத மனிதகுல அறிவியலின் கோரிக்கைக்கு முன்பு கடவுள் மறுப்பை வெளியிட்ட பல சிந்தனையாளர்கள் இருந்தனர். ஜெர்மனியக் கவிஞரான சில்லர் (Schiller) கடவுள் மறுப்பைப் பேசினார். யூத அடியைச் சேர்ந்த கைன்றிச்கைன (Heinrich Heine) "அறிவின் வெற்றி கடவுளின் மீதான வெற்றி" என்று அறிவித்தார். இவரின் நூல்கள் போப்பாண்டவர் கிறிகோர் 16 (Papst Gergor 16)ஆல் தடை செய்யப்பட்டது. சகலத்துக்கும் மேலாய் கடவுள் இறப்பு அறிவித்தலுக்கு முன்பே இல்லாத கடவுளின் மரண அறிவித்தலை நீட்சே பேசுமுன்பே மாக்ஸ் "மதம் மக்களுக்கு அபின்" என்று எழுதினார். "ஏங்கெல்ஸ்" தம் இறுதிக் காலத்தில் "தொல் கிறிஸ்தவம்"பற்றி ஆராய்ந்துள்ளார். இளம் கெகலியவாதியான புருணோ பவர் (Bruno Bauer) கிறிஸ்தவம் பற்றி அறிவியல் பூர்வமாக ஆராய்ந்துள்ளார். பிரிட்டனில் "தோமஸ் காப்ஸ்" கடவுளையும் ஆன்மாவையும் மனித அறிவியல் முன்பு செத்தொழிந்து போகவேண்டியவையாய் அறிவித்தார். பிரான்சில் பிளாங்கியவாதிகளும் ரஸ்யாவில் நரோடினிக்குகளும் தீவிரமான இறை எதிர்ப்பைப் பேசினர். தத்துவாதியான "பொயர்பாக்" காதலையும் பாலியலையும் கடவுளதும் மதத்தினதும் இடத்தில் இருத்தும்படி கோரினார். இந்த வளர்ச்சிப் போக்கின் தொடர்ச்சியாய் நீட்சே துலங்கவில்லை. எனவே அறிவியலுக்குக் கட்டுப்படாத பாசிசத் தான்தோன்றியான நீட்சேயின் கிறிஸ்தவ மறுப்பை அதன் ஆதி மூலங்களை நாம் தேடவேண்டும். யூத எதிர்ப்பின் கருத்தியல் கூறுகளை வேர்களைக் காண வேண்டும். நீட்சே கால ஜெர்மனியில் யூத எதிர்ப்பு கிறிஸ்தவ எதிர்ப்பாகவும் புராதன ஜெர்மனியின் பெருமைகளால் அலங்கரிக்கப்பட்ட பாசிச மற்றும் பெருந்தேசிய வெறி ஆக்கிரமிப்புகள் நிரம்பியதாகவும் காணப்பட்டது. யூத கடவுளான கிறிஸ்துவையும் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றும் எவருக்கும் தூய ஜெர்மனியராக இருக்கும் அருகதையும் தகுதியும் கிடையாது என்று அடொல்வ் ஸ்டோக்கர் எனற பாசிசத் தொழிற்சங்க வாதி அறிவித்தான். அரசு மற்றும் பொதுத்துறைகளில் இருந்தும் அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களி லிருந்தும் யூதர்களை வெளியேற்றவேண்டும். அவர்களது பிரசா உரிமையை பறிக்க வேண்டும் என்று பல பத்தாயிரம் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு 1881 இல் ஜெர்மனிய மன்னனுக்கு அனுப்பப்பட்டது. 1880, 1881களில் யூதஎதிர்ப்பு உச்சகட்டத்தை அடைந்து யூத வழிபாட்டு இடமான சினகோகன் (Synagogen), உட்பட யூதர்களின் இருப்பிடங்கள், கடைகள், தொழிற்சாலைகள் என்பன தாக்கப்பட்டன, தீயிடப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யூதர்களின் மேல் வன்முறை கொலை சூறையாடல் என்பன திட்டமிட்டு நடத்தப்பட்டன. யூதர்களைத் தாக்கும் பல பாசிசக் குழுக்கள் Berlin உட்படப் பல இடங்களில் இயங்கின. 1882 இல் டிரெஸ்டன் (Dresden) நகரிலும் 1883 இல் கெமினிட்ஸ் (Chemnitz) நகரிலும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கூடிய யூதஎதிர்ப்புக் கும்பல்களால் "சர்வதேச யூதஎதிர்ப்பு மாநாடு" Internationaler Antisemitischer Kongress) நடத்தப்பட்டது. இத்தகைய யூத கிறிஸ்தவ எதிர்ப்பின் உச்ச நிலையிலேயே நீட்சேயின் கிறிஸ்து எதிர்ப்பு (Der Antichrist) நூல் வெளிவருவதைக் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பு கருணை மனிதாபிமானம் என்பவற்றை "கிழக்கின் நஞ்சு" என்று புறம் தள்ளுகின்றான் நீட்சே. நீட்சேயை ஒத்த கிறிஸ்தவ மதம் ஊடான யூத விரோதம் ரஷ்யா போன்ற நாடுகளிலும் நிலவியது. உதாரணமாய் 1869 இல் நிக்கலாய் டானிடென்ஸ்கி (Nikolai Danilenski) வெளியிட்ட "ரஷ்யாவும் ஐரோப்பாவும்" எனும் நூலில் ரஷ்யமரபு வழிக் கிறிஸ்தவத்தை எதிர்த்து அதை யூத ஆதிக்க கருத்தியல் என்றார். விளாடிமிர் சொலோஜோவ் (Wladimir Solowjew) நீட்சேயின் "மாமனிதக் கருத்தியலை" ஆதரித்து எழுதுகையில் மாமனிதச்சிந்தனை ரஷ்யாவிலும் கிறிஸ்தவ யூத கருத்துகட்கு அவைகளின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு துணைசெய்யும் என்றார். மிகப் பழமையான யூதவிரோதம் கொண்ட கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து மதம், மரபுவழிக் கிறிஸ்தவம் என்பனவற்றின் யூதவிரோதத்தை முதலாளியத்தின் வளர்ச்சியோடு ஆக்கிரமிப்பு நிறைந்த பெருந்தேசிய வாதங்கள் தாமே தத்து எடுத்துக் கொண்டன.

ஜெர்மனியில் கிறிஸ்தவப் பண்பாட்டுக்கு எதிரான ஜெர்மனியப் பழம்பெருமைகள் தேடப்பட்டன. ஜெர்மனியப் புராதன கடவுளர் மறு கண்டுபிடிப்புச் செய்யப்பட்டனர். யுத்தக் கடவுளான ஓடின் (Odin) மின்னற்கடவுளான தோர் (Thor) சூரியக் கடவுளான பிறைர் (Freyr) பெண்காதற்கடவுளான பிறையா (Freya) நீதிக் கடவுளான போர்சற்றி (Forseti) இறப்புக்கான பெண்கடவுளான கெல் (Hel) குளிர்காலக் கடவுளான கேடர் (Hoder) பொன்நிறக் கூந்தலுக்கான பெண்கடவுளான சிவ் (Sif) போன்றோர் பற்றி ஆய்வுகள் தேடல்கள் தொடங்கப்பட்டன. யுத்தக்கடவுளான ஓடின் ஜெர்மனிய பெருந்தேசியவாதிகளால் உயர்த்தப்பட்டான். ஜெர்மனிய மன்னனான கெய்சர் வில்கெம் 1 (Kaiser Wilhelm 1) ஜெர்மனிய பழைய இனக்குழுத் தலைவனான கெர்மான் (Hermann) பெயரில் நினைவிடம் அமைத்தான். மற்றொரு இனக்குழுத் தலைவனான ஆர்மினியுஸ் (Arminius) போன்றோரும் நினைவு கூரப்பட்டனர். இந்த வரலாற்றுச் சூழலிலேயே நீட்சே யூதக் கடவுளான கிறிஸ்துவைக் கொன்று விட்டு ஜெர்மனிய மற்றும் புரதான கிரேக்கக் கடவுளிடம் ஓடுகின்றான். பழம் கிரேக்கக் கடவுளான "டியோனிசஸ்" (Dionysos) "அப்பலோ" ஆகியோரிடம் ஈடுபாடு காட்டுகின்றான். வலிமைக்குரிய கடவுளான வெள்ளாட்டின் உடலும் மனிதத்தலையும் கொண்ட டியோனிசஸ் ஆகத் தன்னைக் கற்பனை செய்கின்றான். சிலசமயம் பெயரைக்கூட டியோனிசஸ் என்று கையெழுத்திடுமளவு அவன் வெறிகொண்டவனாயிருந்தான்.

"பழம் கிரேக்கத்தில் மதஉணர்வு நன்னெறியை அபிவிருத்தி செய்தது. மதம் சிறப்பாகவிருந்தது. அங்கு இறைபக்தி இயற்கையை அழகு படுத்தியது. கலைகளை வளர்த்தெடுத்தது. பிற்காலத்தில் கீழ் மக்கள், கிறிஸ்தவம் இவைகளின் எழுச்சி சகலத்தையும் அழித்து விட்டது." என்று நீட்சே "நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்" இல் எழுதினான். "கடவுள் முன்பு அனைவரும் சமம்" என்ற கிறிஸ்தவ சமயக் கோட்பாடு வெறிகொண்ட ஏகாதிபத்தியசகாப்தத்தை நோக்கி வளரும் ஜெர்மனிக்குப் பொருத்தமற்றதா யிருந்தது. ஏனவே ஆக்கிரமிப்புச் சிந்தனை கொண்ட மாமனிதனைப் படைத்து விடுகின்றான். கிறிஸ்தவம் அச்சம், பணிவு, தாழ்வு மனப்பான்மை இவைகளைக் கற்றுக் கொடுத்து சுயபலத்தையும் அறிவையும் மறுக்கிறது எனும் நீட்சே இந்தக் கருத்து சகல மதங்கட்கும் பொதுவானதே என்பதைப் பேச மறுக்கின்றான். "கிறிஸ்தவம் மூலம் பலவீனர்கள் இயற்கைக்கு விரோதமாய் பலம் பொருந்தியவர்களை தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டனர். இதுவே மனித இனத்தின் வளர்ச்சியின்மைக்கும் தேக்கத்துக்கும் காரணம்."என "நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்" என்ற நூலில் குறிப்பிடுகின்றான் நீட்சே. "மோசஸ்", கிறிஸ்து போன்ற யூத கடவுளர் மற்றும் தீர்க்க தரிசிகளை வெறுத்து விட்டு அவர்களைப் போன்றே கருத்துக் கொண்ட சமயதீர்க்கதரிசியான பேர்சியாவைச் சேர்ந்த கி.மு.6-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சாராதூஸ்ராவிடம் (Zarathustra) நீட்சே போகின்றான். இந்த சாராதூஸ்ராவே நன்மை, தீமை போன்ற நீட்சேயின் கருத்துக்களின் தந்தையாவார். டியோனிசஸ் போலவே இவரிடமும் நீட்சேக்குப் பிரமிப்பு இருந்தது. பலதடவை சாராதூஸ்ராவின் பெயரில் நீட்சே கையொப்பம் இடுகின்றான். தன் இலக்கியத்துக்கு அவரை முதன்மையான கருப்பொருள் ஆக்குகின்றான். மறுபுறம் சோப்பன் கோவரால் அறிமுகம் ஆன இந்திய சமயக் கருத்தியல்களை ஆராதிக்கின்றான். புத்தரின் "பரிநிர்வாணம்" முதல், வேதம், உபநிடதம், மனுதர்ம சாஸ்திரம் இவைகளில் வெறித்தன்மான ஈர்ப்புக் காட்டுகின்றான். இந்துசமயத்தின் உபநிடதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனுதர்ம சாஸ்திரம் இவைகளின் மனிதவிரோதங்களை ஜெர்மனிய பாசிசத்துக்கு அதன் உருவாக்கத்துக்கு உதவுமுகமாக கருத்தியல் மொழிபெயர்ப்பு செய்து தருகின்றான். "நாம் எப்படி சிந்திக்கின்றோமோ? அப்படியே காட்சி தருகிறது" என்ற இந்து கருத்து முதல்வாத மோசடியைப் பேசும் நீட்சே, "அடிமை அடிமையாகவும் செல்வன் செல்வனாகவும் இருக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்த உலகில் எல்லா மனிதர்களும் ஒருபோதும் மகிழ்ச்சியை அடைய முடியாது" என்கின்றான் இக்கருத்து "தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப என்னால் படைக்கப்பட்டவையே இந்த நான்கு சாதிகளும்" எனும் கீதையின் வாக்கோடு நெருங்குகிறது.

"கீழ்நிலை மனிதர்களிடமிருந்து ஊற்று நீரையும் கணப்புத் தீயையும் கனிகளையும் பகிர்ந்து கொள்ளாது விலக்கிவிட வேண்டும் அவர்கள் ஊற்று நீரை நஞ்சாக்கி விடுவர்" என்று மனுதர்ம சாஸ்திரத்தை வரிவரிக்கு மனித விரோத மொழியாக்கம் செய்யும் நீட்சே மறுபுறம் கிறிஸ்தவத்தை தாக்குகின்றான். "அயலானை நேசி என்பது அயலானிடம் பயப்படு என்பதே. அயலானின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் இது ஆபத்தானது" சாதாரண மனிதநேய போதனையைக் கூட சகல மனிதப் பண்பாடுகளையும் மீறும் உயர் மனிதம் மற்றும் பாசிச இன மேன்மைக்கு ஏற்ப விளக்குகின்றான் நீட்சே. இந்தியப் பிராமணியம் போலவே அறிவை ஞானத்தை அடையும் அதிகாரத்தை உயர்வர்க்க, உயர்இன மாமனிதர்கட்கே நீட்சே ஒதுக்குகின்றான். "நான் நாத்திகன் அல்ல" எனும் நீட்சே மாமனிதர்களின் அதிகாரத்தின் கீழ் உயர் இனத்திற்கு மதம் உதவுமெனில் அதை ஏற்கலாம். மதத்தைக் கொண்டு அதைக் கருவியாக்கி கீழ்நிலை மனிதர்கள் மேல் ஆட்சி செய்து எதிரிகளை ஒடுக்கலாம் என்கின்றான். ஆளும் உரிமை கொண்ட இனத்தின் அறிவும் கலையும் சிறக்க மதம் உதவலாம் எனத் தீர்ப்புக் கூறுகின்றான்.

இங்கு தமிழ் நாட்டு பின்நவீனத்துவ மேதைகள் நீட்சேயிச நோய் முத்திய நிலையில் நீட்சேயின் கிறிஸ்தவ மறுப்பின் பாசிச பிரகடனங்களை மனித விரோதகூறுகளைப் பேசுவதில்லை. பன்முக வாசிப்பின் தனிப்பெரும் உடமையாளர்கள் கட்டுடைப்புக் கலையின் புதிய நாயகர்கள். சகலத்தையும் மாயையாக்கி தம் விருப்பங்களை அதிசொற்பனங்களை தம்மைச் சூழவிட்டு நிற்கின்றனர். ரஷ்யப் புரட்சியின் எதிரிகளான "கறுப்பு நூற்றுவர்"கள் கூட கடவுள் விரோதிகள் தான். பிஸ்மார்க் கூட கத்தோலிக்க மதத்தை கடைசிவரை எதிர்த்தவன் தான். கி.மு.530 - 470 இல் வாழ்ந்த "கிராக்கிளிட்ஸ்" உலகம் கடவுளால் அல்ல நெருப்பால் படைக்கப்பட்டது என்றார். கி.மு.460-370 இல் மற்றொரு கிரேக்க தத்துவஞானி பூமி கடவுள் கிருபையால் அல்ல அணுக்களால் படைக்கப்பட்டது என்றார். கி.பி.980-1037 இல் வாழ்ந்த மத்திய ஆசியத்தத்துவஞானியான "இபின் சினா" பூமி இயற்கையின் படைப்பு என்று கடவுளை மறுத்து வர்திட்டார். ஆங்கில அறிவுத்துறைத்தனத்துக்கும் ஐரோப்பிய மையவாத சிந்தனைச் சீரழிவுக்கும் ஆட்பட்டுப் போன தமிழ்நாட்டுப் பின்நவீனத்துவ குண்டுச்சட்டி ஆசான்கள் இந்திய தேசத்தின் பிராமணிய எதிர் மரபுகளை கடவுளர் எதிர்ப்புச் சிந்தனைகளைக் கூட கோட்டை விட்டு பிராமணியத்தால் ஊட்டம் பெற்ற நீட்சேயிசத்தின் பாதார விந்தங்களைச் சரணடைந்திருப்பது பெரும் பகிடியாகும். இந்தியத் தத்துவ மரபில் கபிலர், குமரிலர், கடவுளை எதிர்த்தவர்கள், சாங்கியம் நியாயவைசேகிகம், கடவுளை மறுத்து கலகம் செய்து இயற்கைக்கு முதன்மை தந்தவர்கள், புத்தர் யாகங்களையும் வேதத்தையும் கற்பனைக் கடவுளையும் நிராகரித்தவர். இயற்கையை எதிர் கொள்ளும் போரில் மனிதர்கள் கடவுளைப் படைத்தனர். மனிதர்களின் பல ஆயிரமாண்டுகால வரலாற்றில் அவர்கள் காலத்துக்குக்காலம் தாம் வழிபட்ட கடவுளை, கோடிக்கணக்கான தெய்வங்களை அம்மக்களே கைவிட்டனர், அழித்தனர், கொன்றனர். இது இன்று வரலாற்று மற்றும் மானுடவியல் அறிஞர்கள் மட்டுமே அறிந்த கடவுள்களாக உள்ளனர். வரலாற்றைப் பெருங்கதையாடல் என மறுத்து சூனியங்களில் சீவிக்கப்போய் விட்டவர்கள் நீட்சே கடவுளைக் கொன்று விட்டான் என்பதை ஊதிப்பெருக்கவைத்து புதிய பெருங்கதையாடல்களை சிருஷ்டிக்க மட்டுமே முடியும்.

## மாமனிதன் - பாசிசமனிதனே

நீட்சேயின் எழுத்து முழுவதும் திரும்பத் திரும்ப மாமனிதன் உயர் மனிதன். பெரும் மனிதன் கலாச்சாரம் நிறைந்த மனிதன், தந்தையின் இனம், உலகில் சிறந்தவன், மாமனிதத்தரம், மாமனிதமாதிரி, புதிய மனிதமாதிரி என்று சாதாரண மக்களோடு தொடர்பற்ற அவர்கட்கும் மேலான அதிமனிதனைப் பேசுகின்றான். "புதிய இனத்தின் விடிவுக்குத் தம்மைத் தயாரிக்கும் சுதந்திரமான சுயங்கட்காக" தான்

www.tamilarangam.net

எழுதுவதாய் சொல்லும் நீட்சே தன்னை உயர்ந்த ஐரோப்பியன் மேம்பாடு மிக்க ஜெர்மனியன் நான் ஜெர்மனியின் போர் வீரன் என்கின்றான். தூயபலம் பொருந்திய பொன்நிறத் தலைமுடியுடைய அடிமையினங்களோடு தொடர்பற்ற மாமனித இனம், மாமனிதவாழ்வு பற்றிய கருத்தியல்கள் அவனின் சகல எழுத்திலும் நிறைந்துள்ளது. அடிமையினங்கள், அந்நியர்கள், யூதர்கள், பலவீனர்கள் பற்றிய வெறுப்பு நிறைந்த பாகுபாடும், ஜெர்மனிய உயர்இனக்கருத்தியல்கள் வெளிப்படையாகவும் இடம் பெறுகின்றன.

"வலிமையே அதிமுக்கியமானது வலிமைமிக்க மாமனிதனிடமே நன்மை இருக்கும். சக்தியற்ற கீழ்மக்களிடம் தீமையே நிறைந்திருக்கும் வலிமையே நீதியானது. வலிமையே உயர் மனித இன்பம், வலிமையே முடிவான அறம்"என்று பாசிசமாமனித நீதிக்குத் தத்துவ விளக்கம் நீட்சே தருகின்றான். "பிற உயிர்களைக் கொன்றுதின்று தங்களை வளர்த்துக் கொள்ளும் உயர்ந்த விலங்குகள்" பற்றிப் பேசும் நீட்சே, "தாவரங்கள் விலங்குகள் கூட இந்த விதிப்படியே இயங்குகின்றன. ஒவ்வொரு உயிரும் தம் இனத்தை உலகில் நாட்டிக் கொள்ளப் போரிடுகிறது. வெற்றி பெறுபவர்களே தப்பி வாழ முடியும். அவ்வாறே உயர் இனமும் பலத்துடனேயே வாழ முடியும்"மாமனித உயர் ஒழுக்கத்தைப் படைக்க எத்தகைய மனிதக் கொடூரத்துக்கும் நியாயம் வழங்கும் பாசிசக் கருத்துக்கள் வெளிப்படுகின்றன. இது டார்வினியத்தின் "வலிமை மிக்கவை தப்பிப் பிழைக்கும் என்ற கோட்பாட்டை மனித குலத்துக்குப் பொருத்தும் காட்டுமிராண்டித் தனமாகும். மாமனித இனம், மற்றைய மக்களுக்கு எதிராக உயர்த்தப்பட்டு ஏனைய மனிதர்களை இழிவு செய்யும் போக்கில் மாமனிதனை விமர்சனத்துக்கு அப்பாலான தனிமனித வழிபாட்டு முறையில் அறிமுகம் செய்வதும் பாசிசமே.

"கலாச்சாரத்தைக் காக்க வளர்க்க ஓர் பரந்த ஆழமான செழிப்பான மண் தேவை. பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குக் கட்டுப்பட்டு சேவைசெய்யும் கட்டாயம் இருக்க வேண்டும்" என்று "கிரேக்க அரசு" பற்றிய தனது கட்டுரையில் குறிப்பிடும் நீட்சே. மனிதர்களின் ஒழுக்கத்தை "அடிமை ஒழுக்கம்" , "உயர் மனித ஒழுக்கம்" என்று பிரிக்கின்றான். வாழ்வு சக்தி படைத்தவர்கட்கே உரியது. உயிரினங்களிடம் பலம் இருப்பது தற்காப்புக்கு அல்ல பலப்பரீட்சைக்கே ஒன்றை ஒன்று தோற்கடிக்கும் போட்டிக்கே. எனவே அன்பு, கருணை, இரக்கம், நீதி, மானுடநோக்கு, மானிடப் பண்புகள் பயனற்றவை இவைகளால் மனிதர்கள் பலம் குன்றுகின்றனர் என்று மனித குலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் போன்ற சமூக விதிகளையும் மானுடம் தழுவிய பார்வையையும் இழிவு செய்கின்றான். வெறுப்பும் பொறாமையும் பேராசையும் நாளாந்த வாழ்வுக்குரியதாயும் நீதி என்ற கருத்தே தவறான எண்ணத்துக்கு உரியது மாமனித சக்திக்கு எதிரானது என்பது பாசிச மாமனிதனுக்கு எதிரான மனித ஒழுக்கவிதிகளை இதுவரை மனிதகுல அறிவியல் வளர்ச்சியும் நாகரீகமும் படைத்த மனிதக் கூறுகளை நிராகரிப்பதாகும்.

"அடிமை ஒழுக்கமானது அடங்கிப் போகும் இனங்களின் ஒழுக்கமே. இவர்களிடம் நீதி, நேர்மை, அன்பு, அனுதாபம், பாவபுண்ணியநோக்கு, பயம், மேல் உலகு பற்றிய நம்பிக்கை என்பன இருக்கும். எதற்கும் உடனே பணியும் போக்கும் எளிதில் திருப்தியடையும் குணமும் தாழ்வு நிலையிலும் மனஅமைதி கொள்ளும் நிலையும் கீழ்நிலை மனிதர்களின் ஒழுக்கமாகும்" என்று மற்றைய இனமக்களை மட்டுமல்ல ஜெர்மனிய உழைக்கும் மக்களையும் கேவலப்படுத்துகின்றான் நீட்சே. மறுதலையாய் மாமனித ஒழுக்கத்தை பின்வருமாறு வரையறுக்கின்றான். "துணிவு, வலிமை, முன்னேற்றம் குறித்து அதிருப்தி, ஆண்வம், தன்னம்பிக்கை, திடசிந்தை, சாகசவிருப்பு, எதையும் அனுபவிக்கும் ஆசை இதுவே ஆளும் உயர் இனத்தின் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கமானது நன்மைதீமைகட்கு அப்பாலானது. எதற்கும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதது. இந்த ஒழுக்கம் உடையோரே இயற்கையின் பரிணாம வளர்ச்சிக்கும் புதிய மனித வளர்ச்சிக்கும் பொறுப்பு" இங்கு நீட்சேயின் மாமனித ஒழுக்கம் புதிய ஏகாதிபத்தியமாய் வேர்விடத் தொடங்கியுள்ள ஜெர்மனிய பாசிச மூர்க்கத்துக்கு சகல மனித வளர்ச்சி விதிகளையும் நாகரீக கருத்தியல்களையும் வழிவிடக் கோருகின்றான். "அதிகாரத்துக்கான விருப்பு" எனும் நூலில், "கிரேக்கர்கள் அடிமைமுறையால் அழிந்தனர் என்பது உண்மையே. ஆனால் நீண்டநாட்களாக அடிமைமுறை இல்லாமல் வாழ முடியாது. நாம் அழிவோம் என்பது அதைவிடப் பெரிய உண்மையாகும்" என்பதோடு மனுதர்மசாஸ்திரத்தின் சாதியக் கோட்பாடுகளை பாசிசகருத்துகட்குப் பலம் சேர்க்க உதவுகின்றான். மனித அநாகரீகத்தை மறுபதிப்புச் செய்கின்றான்.

www.tamilarangam.net

"அடிமைத்தனத்தை ஒழிக்கக் கூடாது. அது அவசியமானது. யாருக்கு வேலை செய்ய அவர்கள் தோன்றினார்கள் என்பதை மட்டுமே பார்க்க வேண்டும்""அடிமைத்தனம் சூத்திரனுடன் கூடவே பிறந்தது. பிறவியிலேயே அவன் அடிமை" "கடவுள் சூத்திரனுக்கு விதித்துள்ள ஒரே தொழில் மற்றைய மூன்று வர்ணத்தாருக்கும் பணிந்து தொண்டு செய்வதே" போன்ற மனுவின் பிராமணிய மேலாண்மைக் கொள்கையின் மொழிபெயர்ப்பாய் நீட்சேயின் கருத்துக்கள் அமைவதைக் காண முடியும்.

நீட்சேயின் நிதானபுத்தியுள்ள கடைசி 5 வருடங்களும் மக்களைத் தூசித்தான். திட்டிக் கொட்டினான். மனித சமத்துவத்துக்கும் பின் தங்கியுள்ள மக்களுக்கும் எதிராய் எழுதிக் குவித்தான். மனிதாபிமானம், மனித உரிமைகள் இவைகளைத் தாக்கி இவை மாமனிதர்கட்கு எசமான இனங்கட்கு மட்டுமே உரியவை என்கின்றான். அடிமைத்தனம் சுரண்டல் இவை இயற்கையின் விதிகள் என்று தீர்ப்புக் கூறி மனிதர்களை மனிதர்கள் அடிமை கொள்வதையும் மேலாதிக்கம் செலுத்துவதையும் நியாயம் கொண்டாடுகின்றான். இது அவனது ஜெர்மனிய பாசிசத்துடன் கூடியுள்ள மேல்வர்க்கம் சார்ந்த நலன்களே.

"மற்றவர்களை வெறுத்தலும் மற்றையோரின் துன்பத்துக்கு மகிழ்வதும் மற்றவர்களைக் கொள்ளையிடல், அடக்கியாழ்தல் போன்ற தீய நடவடிக்கைகளே மனித இனத்தை அழியாமல் பாதுகாக்க சிக்கனமான நடவடிக்கையாகும்" என்று சாராதூஸ்ராவில் குறிக்கும் நீட்சே "எஜமான மற்றும் அடிமை இனங்கள் கலந்தால் உயர்இன மேன்மை களங்கப்பட்டு விடும்" என "நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்" எழுதுகின்றான். தொடர்ந்து அதே நூலில் "ஜெர்மனியர்கள் கலப்புத் திருமணம் செய்யாது தம் இனத்தூய்மையைப் பேணினால் மட்டுமே ஐரோப்பிய ஆளும் இனமாக வரமுடியும்" நீட்சேயால் ஈர்க்கப்பட்ட கிட்லர் தன் "என்னுடைய போராட்டம்" (Mein kampf) நூலில் "கறுப்பு மயிர் கொண்ட தீய நோக்கம் உடைய யூத இளைஞன் வெள்ளைப் பெண்ணுடன் உறவு கொண்டு இனத்தூய்மையைத் திருடுகின்றான்" என்று நீட்சேக்கு மறுவிளக்கம் தருகின்றான். நீட்சே "சோக்கிரட்டீசின் துன்பியலின் தோற்றத்தில்" எழுதும் போது "அழகற்றவர்கள் கலப்புத் திருமணத்தின் மூலம் உருவாகின்றனர். கலப்புத் திருமணம் அழகுத் தன்மையை அழித்து விடுகிறது. எனவே அழகற்றவர்கள் தோன்றுகின்றனர்." என ஜெர்மனிய உயர் இனத் தூய்மையை வலியுறுத்தியவன் "ஐரோப்பாவில் ஆரியருக்கு முந்திய குடியேறிகள் பழிக்கு பழிவாங்கும் குணமுடையவர்களின் வழிவந்தவர்கள். மனித நாகரீகத்தைப் பின்தள்ளியவர்களின் பிரதிநிதிகள் என்று ஆரியரல்லாத மக்கள் மேல் ஆரிய இனவாதப் பழி தூற்றுகின்றான். 1887 இல் இத்தாலியில் உள்ள லத்தீன் "மாலூஸ் இனத்து கறுப்பு இனமக்களை முக்கியமாய் கறுத்ததலைமுடி உடையவர்களை சாதாரண கீழ்நிலை மனிதராக்கி அங்கு குடியேறிய பொன்னிறத் தலைமுடியுடைய ஆரியர் வெற்றிவாகை சூடிய இனமாக உள்ளனர்." என்று பெருமைப் படுகின்றான். 1886 இல் "இனங்களைத்தூய்மைப்படுத்தல்" எனும் தலைப்பில் ஆழசபநெ சுழவந (அதிகாலைச் செவ்வானம்) இல் தூய இனங்கள் மற்றைய இனங்களை விட உடல் அமைப்பில் கண்கள், வாய், மூக்கு போன்ற அம்சங்களில் கூட வேறானவையாய் சிறப்புக்குரியனவாயுள்ளன என்கின்றான். இக்கருத்து அன்றைய ஜெர்மனிய பாசிச இனக் கோட்பாட்டாளரான ருடோல்வ் ஸ்டைனர் (Rudolf Steiner) இன் கருத்துக்களை ஒத்திருந்தது. ருடோல்வ் ஸ்டைனர் ஆரியர், ஆரியரல்லாதோர் என்ற சிந்தனைப் போக்கை விரிவுபடுத்தி ஆரியரையும் ஆறு பிரிவுகளாகப் பிரித்தான். ஆரியரல்லாத மக்களை கீழ்நிலை மனிதன் (Untermenschen) மிருகத்துக்குச் சமமான மனிதன் (Tiermenschen) அநாகரீகர் (Wilden) எனும் மனித விரோதக் கருத்துக்கள் ஜெர்மனியானது ஆபிரிக்க, ஆசியநாடுகளை பிடித்துக் கொண்டு இருந்தபோது அதன் போக்கை ஏற்கும் கருத்தியல்களாக இவை உருவாகின. ருடோல்வ் ஸ்டைனர் ஆபிரிக்க மக்களை கொழுத்த உதடுகள் கொண்ட வளர்ச்சி குன்றிய குழந்தை நிலையிலுள்ள இனங்களாகவும், யூதர்களை ஒட்டுண்ணி இனமாகவும் சீனர்களை ஐரோப்பாவரை மஞ்சள் அபாயத்தை (Gelben Gefahr) பரப்ப முயல்பவர்களாகவும் கட்டமைத்தான். இவைகட்கு எதிரான ஒன்றிணைந்த ஐரோப்பிய மக்களை அறைகூவினான்.

இத்தகைய வளர்ந்து கொண்டிருந்த பாசிசக்கருத்தியல்களையும் நீட்சே தாராளமாய் உட்கொண்டான். "தூய்மையான இனங்கள் பலமாயும் எழில் கொண்டவையாயும் உள்ளன. கிரேக்கம் எமக்கு முன்மாதிரியாகவுள்ளது. இனம், கலாச்சாரம் இவைகட்கு உரிய பெருமைகளை வழங்கியிருக்கிறது. எனவே ஐரோப்பாவில் மாமனித தூய இனக்கலாச்சாரம் பாதுகாக்கப்படும்." நீட்சேயின் இக்கருத்தை பாசிசம் பிற்காலத்தில் தமக்கேற்ப வளர்த்தெடுத்தது. கட்டற்ற அதிகாரம் மிருகத்தனமான இராணுவ வாதம், கேள்விக்கேட்கப்பட முடியாத புனிதர்கட்கே உரிய ஜெர்மனியின் மாமனித இனம் படைக்கப்பட்டது. ஆக்கிரமிப்பை தான் விரும்புவதாய் பேசிய நீட்சே "பலம் மிகுந்தவர்கள் எல்லோருக்கும் சத்துருவாகத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோன்றுவார்கள் வலிமைமிக்க இயற்கைக்கு ஏற்படும் நிலையே இது" என எழுதும் நீட்சே ஜெர்மனிய ஆசிய ஆபிரிக்க ஆக்கிரமிப்பை வரவேற்கின்றான்.

"பெருந்தொகையான ஆசிய, ஆபிரிக்க காட்டுமிராண்டிகட்கு நாகரீக ஐரோப்பா தலைமை தாங்குவது அந்த நாகரீகமற்ற உலகை எமக்குப் பணியச் செய்வது நினைக்கக் கூடியதே" இதைக் கிட்லர் பாசிச உரிமையோடு பின்வருமாறு பேசினான். "வலிமையுள்ளவர்களின் உரிமையினால் கொலனிகள் சொந்தமாக்கப் படுகின்றன. ஐரோப்பாவுக்கு மூலப்பொருட்களும் கொலனியும் அவசியம். வாழ்க்கை குறித்து வீரம் நிறைந்த கருத்தாக்கம் கொண்ட வெள்ளை இனம் ஆளுவதற்கு என்றே விதிக்கப்பட்டது."

ஜெர்மனிய பாசிஸ்டும் நாசிகாலத்தில் நீட்சேயை பிரபல்யப்படுத்தியவர்களில் ஒருவனுமான மார்டின் கைடேக்கர் (Martin Heidegger) முசோலினியின் நெருங்கிய சகாவும் பாசிசப் போதனையாளனும் ஆவான் முசோலினி "அமைதி கேடானது போரை வாழ்த்தி வரவேற்கின்றேன்" என்றான். "ஆபிரிக்காவை பண்பாட்டு வட்டத்துள் கொண்டு வரவேண்டும் என்று அறிவித்து அதைக் கீழ்ப்படுத்த முயன்றான். (ஜெர்மனிக்கு அடுத்ததாய் அதிகமாய் நீட்சேயிசம் பரப்பப்பட்ட இடம் இத்தாலியாகும்) "மனிதர்கள் ஏராளமாய் பிறக்கின்றனர். இவர்களில் பெரும் பகுதி அவசியமற்றவர்கள்" இந்தக் கீழ் மக்கள் உயிர் வாழ வேண்டியது அவசியம் தானா? இந்தக் கீழ்த்தரமானவர்களிடமிருந்து நாற்றம் வீசுகின்றது. இவர்கள்



கீழ்தரமான ஆவேசமும் அவசரமும் உடையவர்கள் என்று பாசிசத்தின் தந்தையான நீட்சே எழுதுகின்றான். இதையே "சக்திகுன்றியவர்களை அழித்து சக்தி படைத்தவர்களை வெற்றிபெறச் செய்வதே எம் இலட்சியம்" என்று "என்னுடைய போராட்டத்தில்" கிட்லர் எழுதினான்.

"அதிகாலைச் செவ்வானம்" நூலில் "நெடுங்காலம் முன்பே எகிப்த்தில் இழந்ததை யூதர்கள் ஐரோப்பாவில் சாதிக்க முனைகின்றனர். ஒவ்வொரு யூதனும் தன் தந்தையினது பாட்டனது இரண்டாயிரமாண்டு காலப் பண்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளனர்." எனவும் "இவர்கள் ஐரோப்பாவின் எசமானர்கள் ஆக முயல்கின்றனர்." இஸ்ரேலும் யூதர்களும் அவர்களின் கடவுளும் ஐரோப்பாவைப் பழிவாங்க முயல்கின்றனர். அதிகாரம் பழிவாங்கும் உணர்வு என்பன யூதர்களிடம் நிரம்பியுள்ளது. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என தம் இனத்தைப் பற்றி பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். எனப்பேசுபவன் ரோமானிய வரலாற்று ஆய்வாளரான "தாகிதுஸ்" (Tacitus) யூதர்களை அடிமைத் தனத்துக்கு என்றே பிறந்தவர்கள் எனக்கருத்துச் சொன்னதை நீட்சே சுட்டிக்காட்டி யூதமக்களை பழிக்கின்றான். "கீழ்மக்கள், அடிமைகள், செல்வர்கள், நாத்திகர்கள் இவர்களை ஒரேதரமக்கள் என்பதும் பிரபஞ்சமே சாபக்கேடு என்பதும் யூதர்களின் அடிமைத்தனமான சிந்தனைப்போக்கே இது அடிமைகளின் புரட்சி என்று யூதர்களின் சிந்தனைகளை சாடும் நீட்சே "ஜெர்மனியில் யூதர்களின் தொகை அதிகரித்து விட்டது எனவே அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று சொல்கின்றான்.

www.tamilarangam.net

"நாம் பல்வேறு கட்டங்களில் நிலைமைகளில் துன்பப்பட்டு இரவுபகலாக கடுமையாக உழைத்து புதிய இனமாகப் பரிமாணம் அடைந்துள்ளோம்" என நீட்சே ஜெர்மனிய பாசிச மேலாண்மைக்கு காவல் நாயாகின்றான். கிட்லர் பதவிக்கு வந்தபின்னர் தன்னை பாசிச மாமனிதனாக பின்வருமாறு அறிவித்தான். "மனித வரலாற்றில் இது ஒரு முக்கியமான நேரம் என அவர்களிடம் சொல்லுங்கள். இந்த நேரத்துக்குப் பொருத்தமான மனிதர் அடெல்ப்கிட்லர்தான்"

"நாம் கடுமையானவர்களாக இருந்திருக்கலாம். நாம் கொடூரமானவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் நாம் நல்ல ஜெர்மனியர்களாக இருக்கின்றோம்" நமது கத்தியிலிருந்து யூதர்களின் இரத்தம் சிந்தினால் நாம் இரு மடங்கு முன்னேறிச் செல்வோம் என்ற நாசிகளின் பிரகடனம் நீட்சேயின் யூத எதிர்ப்பின் தொடர்ச்சியே. மாமனித இனத்தின் சிந்தனைக் கோலமே. நீட்சே ஜெர்மனிய உயர் இனத்தின் பெயரால் மனிதகுலத்தின் சகல தார்மீக ஒழுக்கங்களையும் மீறினான். பிற்காலத்தில் நாசிகள் அவன் வழியில் சென்றனர். நாசிகளுடன் பாசிச சிந்தனையாளர்கள் மட்டுமல்ல திருடர்கள், கொலையாளிகள், மோசடியாளர்கள், சமூக ரீதியில் சீரழிந்தவர்கள் கூட இணைந்தனர். அதைப் பாசிச விலங்குப் படையாய் உருவாக்கினர். வார்சோ, அவுஸ்விட்ஸ் கொலைக் கூடங்களை உருவாக்கினர். "கைடேக்கர்" நாசிகளை நீட்சேயின் உயர் மனிதர்களாய் கண்டான். "கோரிங்" ஜெர்மனியில் மாமனிதர்கள் ஆட்சியிருப்பதாய் அறிவித்தான். "அல்பேர்ட் லிபேர்ட்" என்ற பெர்லின் பல்கலைக்கழக நாசி ஆதரவு தத்துவாதி நீட்சேயின் மாமனிதனைப் பிரச்சாரம் செய்தான். அறிவு, சக்தி, புனிதம் போன்ற கடவுளுக்கு உரிய அம்சங்களை நீட்சே மாமனிதனுக்கு உரிமையாக்கினான். அவனை இலட்சிய மயப்படுத்தி பாசிச வழிபாட்டை கட்டமைத்தான். அதன் இறுதி விளைவே கிட்லர்.

## அறிவு பற்றி நீட்ஷே

மதத்தைப் போலவே நீட்சே அறியாமையைப் போற்றி அறிவை எதிர்க்கின்றான். அவன் காலத்திய முதலாளித்துவ அறிவின் தன்மைக்கு மாற்றாய் அதைவிட பிற்போக்கான பழைய புராதன மற்றும் மத்தியகால அறிவை முன்மொழிகின்றான். அறிவு என்பது நடப்பு உலகின் மனித வாழ்வை, இயற்கையை, பொருட்களை அறிவது கற்பது என்ற நிலைக்கு மாறாக "அறிபவனையே அறிவது" அதாவது தன்னையே தன் சொந்த சுயத்தையே அறிவது என்பதாய் பழம் கருத்து முதல்வாதச் சக்கையாய் சுருங்கிப் போனது. ஆளும் வர்க்கங்களும் மதமும் அறியும் உரிமையை தம்மிடம் மட்டுமே வைத்துக் கொண்டன. உடல் உழைப்பில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அதை மறுத்தன. அறிவை தனிமனிதர்களின் சுயபரிசோதனைக்கு மட்டும் அகவாழ்வுக்கு மாத்திரம் உரியதாய் மட்டுப்படுத்தின. இங்கும் நீட்சேயும் அதே மேலாதிக்க மரபுகளைப் பின்பற்றி அறிவை மாமனிதர்கட்கு உயர் இனத்துக்கு மாத்திரமே உடமையாக்குகின்றான். சாதாரண மக்களுக்கு வாழ்வு பற்றிய அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் ஊட்டிவிட்டு உலகமே காரிருளில் தடுமாறுவதாய் முடிவற்ற குழப்பத்துள் வீழ்ந்துள்ளதாய் கற்பித்து எந்தக் கோட்பாடும் சிந்தனையும் வழிகாட்ட முடியாது தீர்வு காட்ட முடியாது என்று சகல மனித நம்பிக்கைகளையும் நல் வாழ்வுக்கான போராட்டத்தையும் கைவிடக் கோருகின்றான். மிகுதியாய் எதிர்காலம் பற்றிய முடிவற்ற சூனியமும் மாயாவாதமும் மட்டுமே மிஞ்சுகின்றது. சமூக சிந்தனையை மனிதர்களின் கூட்டு முயற்சிகளைக் கைவிடச் செய்து விட்டு மாற்றாக தனிநபரே தன் சொந்த அனுபவம் மட்டுமே உண்மை அறிவுக்குரியது. சுயம் மூலமே சகலத்தையும் தேட வேண்டும். தன் ஆர்வங்கள் மட்டுமே முக்கியம் என்று தனி மனித வாதத்துள் சிறை பிடிக்கப்படுகின்றனர். இது மனிதர்கள் அநீதியான சமூக அமைப்புக்கு எதிராய் கலகம் செய்யாமல் இருக்க அவர்களை உதிரிகளாக்கி உடைத்தெறியும் ஒருவரோடு ஒருவரை மோதவிடும் சுரண்டும் வர்க்கக் கருத்தியலாகும். தனிமனித சுயத்தை படைத்து இயக்கும் இயற்கை, சமூகம் அவை சார்ந்த அறிவு இங்கு பேசு பொருளாவதில்லை.

அறிவதன் மூலமே மக்கள் இயற்கையைப் புரிந்து கொள்கின்றனர். அதை மறு படைப்புச் செய்து தமதாக்கிக் கொள்கின்றனர். தம்மையும் புறஉலகையும் புரிந்து கொள்கின்றனர். சகலத்தையும் திட்டமிடுகின்றனர். அறிதல் பற்றிய விதிகள், கொள்கைகளிலேயே இன்று நவீன மனித செயல்கள் இயங்குகின்றன. நீட்சே இங்கு அறிவை மறுக்கின்றான். உலகைப் புரிந்து கொள்ள முடியாது என்று அறியொணாவாதம் பேசுகின்றான். இவை இன்று அறிவியலால் நிராகரிக்கப்பட்ட பழைய கருத்து முதல்வாத குப்பைகூளங்களே. சமயத்தின் மூலம் காலம் காலமாய் போதனை செய்யப்பட்ட கருத்தியலே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்று ரீதியாக எதையும் ஆராயும் அறியும் போக்கைத் தொடங்கியமைக்காக கெகலைத் திட்டும் நீட்சே, அறிவு சர்வாதிகாரமானது. பெரும் கேடுகளை விளைவிப்பது. முழு அறிவு பெற்ற உலகம் என்பது கேடு வெற்றி பெறுவதே என்கின்றான். மக்களிடையே கல்வி மூலமான அறிவுப் பரப்பலை எதிர்க்கும் நீட்சே அன்றைய சகல மக்களுக்குமான கல்வி என்பதை கடுமையாய் எதிர்த்தான். கல்வியும் அது சார்ந்த அறிவும் மேல்தட்டுகட்கு, உயர்வர்க்க மனிதர்கட்கு முடிவாக மாமனிதனுக்கு மட்டுமேயானதாக வரையறுக்கின்றான். சாதாரண மக்கள் கல்வியை இகழ வேண்டும். அது அவர்கட்கு தகுதியானதல்ல என்று கருதுகின்றான். நீட்சேயின் உயர் வர்க்க வஞ்சனைச் சிந்தனையானது அறிவைச் சாதாரண மக்களுக்கும் ஜெர்மனிய உயர்இனமல்லாதவர்கட்கும் பொருத்தமற்றதாக்குகிறது. அன்று கிரீசில் பிளாட்டோவை ஒத்த அறிவு கொண்ட மேன்நிலை மனிதர்களே ஆட்சி செய்தனர் என்று மேன்நிலை வர்க்க மனிதர்களின் அதிகாரம் செலுத்துவதற்கான அறிவை ஏற்றுக் கொண்டு மறுபுறம் நீட்சே தொடர்ச்சியான அறிவு மறுப்பு வாதத்தை வழி நடத்துகின்றான். நீட்சேக்கு முன்பே வரலாற்றில் அறிவு மறுக்கப்பட்டுள்ளது. அந்த மறுப்பானது பழைய அறிவை மறுத்து புதிய அறிவைப் படைக்கும் நிகழ்வுப் போக்கின் தொடர்ச்சியாகவே இது நடைபெற்றுள்ளது. "மறுப்பு என்பது நிகழ்வின் பணியே" பழையதின் இடத்தில் புதியதால் இட்டு நிரப்பல், ஒரு மறுப்பு மற்றொன்றை மறுக்கிறது, அடுத்து தொடரும் மறுப்பு முன்னதை மறுக்கிறது என்பதை மாக்சியம் காட்டும் அதேசமயம் அதை இயக்கத்தின் தொடர்ச்சியாய் மட்டுமே காண்கிறது. இங்கு நீட்சே அறிவு மறுப்பை சூனிய வாத போக்குடன் இணைத்து மாமனிதக் கருத்தியல் தேவைக்கு மட்டுமே ஏற்கின்றான். மனித அறிவின் இயக்கத்தை ஒருதலையாய் தன் வர்க்கத் தேவைக்கு மட்டுமே ஆட்படுத்துகின்றான். அறிவுச் செயற்பாட்டின் வர்க்கம் சார்ந்த அம்சங்களை மற்றும் நேர்மறை எதிர்மறை அம்சங்களை நீட்சே பேசுவதில்லை. அறியாமையிலிருந்து தான் அறிவு தோன்றுகிறது. பூர்த்தியடையாத முழுமையற்ற, சந்தேகமான நிலைகள் ஊடாகத் தான் தொடர்ந்து வளர்கிறது. தன் பிஞ்சுப் பருவங்களைத் தாண்டுகிறது. ஏற்கனவே முழுமைப்படுத்தப்பட்ட தயார் நிலையிலுள்ள அறிவு எதுவும் மனித குலத்துக்கு கிடைக்கவில்லை. அதைப்பெற அது பல்லாயிரமாண்டு போராடியே இன்றைய போக்கை எட்டியுள்ளது. முனித அறிவுக்கு தனக்குப் புறத்தேயுள்ள உலகை அறியும் சக்தி கிடையாது என்று அலட்சியப் படுத்துவது மனித ஆற்றலை மறுப்பது ஆகும். ஒரு சமயவாதியின் இருப்பிலிருந்து அறிவை வெறுத்து ஒதுக்கும் நீட்சே "உலகு ஆடம்பரமும் ஆசையும் நிறைந்தது. பகுத்தறிவு மூடத்தனமானது. தத்துவம் அழிவைத் தரும். அறிவு ஆபத்தானது" என்கின்றான். இங்கு இவனது கூற்று "எவனொருவன் அறிவைப் பெருக்கிக் கொள்கின்றானோ அவன் அதிக கவலைப்படுவான்" என்ற பைபிளின் வாசகத்தோடு அச்சொட்டாய் பொருந்துகின்றது. சமயவாதிகள் போலவே நீட்சேயும் புறப் பொருட்களை அது தரும் அனுபவ அறிவை மறுக்கின்றான். கல்லை, மண்ணை, மரத்தை, உலோகத்தை வேறுபடுத்திப் பார்க்கவும் அவைகளின் இயல்புகளை அறியக்கூட அறிவு தேவை என்பது எளிமையான உண்மையாகும். இங்கு பொருட்கள் பற்றிய நம் அறிவைக் குறிப்பதே உண்மையாகும். நீட்சேயால் குளறுபடியாய் புரிந்து கொள்ளப்பட்ட "காண்டின்" சிந்தனை கூட புற உலகை ஏற்றுக்கொண்டது. ஆனால் தத்துவ ரீதியாக அதைக் கண்டறிய முடியாது என்று விளக்கியதோடு "நிகழ்ச்சிக்கும் சாராம்சத்துக்கும் இடையே கண்டு பிடிக்க முடியாத இடைவெளி கடக்கமுடியாத பகுதி இருக்கிறது" என்று கருதுகிறது. ஆங்கிலேய தத்துவவாதி டேவிட் கியூம் "நடப்பை அறிய முடியாது நடப்பானது முற்றிலும் சந்தேகமானது நம் உணர்ச்சிகட்கு வெளியே எதுவும் இல்லை என்று தனிமனித அகங்களைச் சரண் புகுந்தார். இங்கு நடப்பின் பல்லாயிர முரண்பாட்டின் இயக்கத்தை விளக்கத்தெரியாத போது இலகுவாக தனிமனித சுயங்களில் புகுந்து தப்பிக் கொண்டனர். மனித உணர்ச்சிகளை நிர்ணயித்த புறஉலகு மறக்கப்படுகிறது, கைவிடப்படுகிறது. இங்கு நவகாண்டியத்தை சிதைந்த வடிவில் சேகரித்துக் கொண்ட நீட்சே "அறிவுக்கான உரிமையும் அறியாமைக்கான உரிமையும் சேர்ந்தே உள்ளன. அறிவுக்கான உரிமை பெற்ற சிறந்த உயர்ந்த மனிதர்கள் சாதாரண அறியாமைக்கான உரிமை பெற்ற மனிதர்களை விட்டு விலகித் தனியே இருப்பர். அவர்களே சுதந்திரமான சுயமும் அறிவுரிமையும் உடையவர்கள் என்கின்றான்.

அறிவொளிக்கால முரண்களைச் சுட்டிக்காட்டியவனாய் பின்நவீனத்துவ போக்குகள் நீட்சேயை மறுவார்ப்புச் செய்துவிட முயல்கின்றன. அவனின் சிந்தனை அறிவொளிக் காலத்தை பகுதியாயும் மற்றும் புராதன காலச் சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டது. அறிவொளிக்காலத்தை வரலாற்று நோக்கில் அவனுக்கு மதிப்பிட முடியவில்லை. மாறாக அறிவியல் வாழ்வுக்கு எதிரே மாமனித நலன்களை நிறுத்தியே யாவற்றையும் மதிப்பிடுகின்றான். பாசிச அறிவியலைக் கட்டமைக்கின்றான்.

www.tamilarangam.net

## உண்மை பற்றி நீட்ஷே

நீட்சே மாயாவாதக் குடிவெறியில் உண்மையை மறுத்தான். "அது அதிகாரத்தால் நிலை நாட்டப்படுவது. அதிகாரத்தால் இயக்கப்படுவது" என்று ஒற்றைக் கருத்தியல் விளக்கங்களால் நிரப்புகின்றான். உண்மை உலகைப் புரிந்து கொள்ள முடியாது. மனிதர்களால் அதைப் பிரதிபலிக்க முடியாது என்று இயற்கையின் மர்மங்களை விடுவிக்கத் தெரியாத ஆதி மனிதர்களின் மனப்பிராந்தியில் தொடங்கி சமயத்தின் கருத்து முதல்வாத அணிக்குச் சென்றது. உண்மையைச் சந்தேகிப்பது ஆதியானது என்பது மட்டுமல்ல உலகின் இருப்பைச் சந்தேகிக்கும் கருத்துமுதல்வாதத்தின் தொடக்கமுமாகும். கிரேக்கத்தில் சோக்கிரட்டீஸ் உண்மையைச் சந்தேகித்தார். எனினும் பகுத்தறிவுக்கு உண்மையைத் தேடும் பொறுப்பை வழங்கினார். ஒரு கிரேக்க தத்துவஞானி உண்மையை விளக்க முடியாது என்று கருதினார். அவர் பொருட்களின் பெயர்களைக் கூறவில்லை. அவர் அவற்றை தன் விரலால் சுட்டிக்காட்ட மட்டுமே செய்தார். வார்த்தைகளில் அடக்கி விட்டால் வார்த்தைகள் அதைவேறு ஒன்றாய் புரிய வைத்து விடும். உண்மைகளை விளக்க முடியாது எனக் கருதினார். பழைய சார்பு நிலைவாதிகள் (கிரேக்க) உண்மையை மறுத்தனர். "நீங்கள் ஒரு முறை கூட நதியில் இறங்க முடியாது. ஏனெனில் அது ஒவ்வொரு முறையும் புதிய தண்ணீரைக் கொண்டு வருகிறது" என்று வாதிட்டனர். புதிய தண்ணீரைக் கொண்டு வருவதால் நதியானது தன் தன்மையை இழப்பதில்லை என்ற உண்மையை மறுத்தனர். சார்பு நிலை உண்மைகளை வைத்துக் கொண்டு உண்மையை மறுக்கும் போக்கு பொருட்களை அதன் இருப்பை இயக்கத்தை மறுக்கும் பழைமையான பொருள் முதல்வாத எதிர்ப்புச் சிந்தனைகளே. இது இன்று வரையும் தாம் புத்தம் புதிதாய் பிறந்துள்ள அறிவியல் ஆய்வு என்று சங்கநாதம் செய்கிறது. அமைப்பியல் வாதம், பின் நவீனத்துவம் எனப்பலப்பல நாமங்களில் வாழ்வுதேடி அலைகிறது.

இந்தியாவில் வாத்சாயினர் உண்மையின் இக்கட்டான நிலை பற்றிப் பேசினார். "ஐயம்" என்பதை இரண்டு தத்துவப் போக்குகட்கு இடையேயான மோதலைக் குறிக்கப் பயன்படுத்தினார். "குமரிலபட்டர்" "எதிரே ஒரு தூண் இருக்கிறது என்ற அனுபவம் பொய். ஏனெனில் அது ஒரு அனுபவம். அனுபவம் எதுவுமே பொய்யானது மாயம்" என்கிறார். "வசுபந்து" "கருத்துக்கள் தவிர வேறு எதுவும் கிடையாது. நாம் பொருட்களைக் காணும் செயல் எல்லாமே வெறும் கருத்துக்களே அவைகட்கு பொருள் எதுவும் இல்லை. உண்மை இல்லை உலகறிந்த மாயம் ஏமாற்றும் தோற்றம்" என்கின்றார். "சங்கரர்" "கயிற்றை பாம்பெனக் கண்டு பிரேமை கொள்வது போல ஒரு பொருளை அதல்லாத வேறொரு பொருளால் மாயையாய் உணர்கின்றோம். இவைகளை நாம் அறிவுக்கு உண்மைக்கு ஆதாரமாய் கொள்ள முடியாது" என்கின்றார். இங்கு பொருளின்றி கருத்து, எண்ணம் உருவாவதில்லை என்ற எளிய உண்மை மறுக்கப்படுகிறது. பாம்பைக் காணும் மனிதர்கள் அஞ்சுகின்றனர். தப்பித்து ஓடுகின்றனர். எம் தாகத்துக்கு தண்ணீர் அருந்தி தாகம் தணிக்கின்றோம். பாம்பும் தண்ணீரும் பொய்யல்ல. அவை இல்லாவிட்டால் நாம் அவைக்கு பெயரிட முடியாது. பாம்பு தண்ணீர் என்ற கருத்தே உருவாக முடியாது. மனித அனுபவம், அறிவு, தோற்றம், விளைவு, உண்மை இவைகளை அன்றைய கருத்து முதல்வாதிகள் முதல் நீட்சே ஈறாக சந்தேகித்தமையானது பொருள் வகை உலகை அனுபவித்துக் கொண்டு உழைக்கும் மக்களுக்கு அந்தப் பொருட்களை அனுபவிக்கும் வாய்ப்பை கருத்தியல் ரீதியில் மறுத்து மாயாலோகங்கட்கு திசைதிருப்பி விடும் உயர்வர்க்கத் தந்திரமே. சங்கரர் பாம்மைப் பார்ப்பதாலும் கயிற்றைப் பார்ப்பதாலுமே பாம்பு, கயிறு என்ற கருத்து உருவாகின்றது என்பதையும் மாயத்தோற்றத்தையும் கனவையும் சான்றாய் கொண்டு நேரிடையான மனித அறிவின் அனுபவ உண்மை மறுக்கப்படுகிறது.

இங்கு நீட்சே உண்மை பொய்யானது, மாயம் நிறைந்தது என்பதை சமய வாதப் புதைகுழிகளில் இருந்து மீட்டு வருகின்றான். சார்பு நிலை உண்மை என்ற கருத்தைக் கூட அவன் எட்டுவதில்லை. புதிய சிந்தனை கலகச் சிந்தனை என்று நீட்சேயிச வாதிகள் கடைவிரித்த போதிலும் உண்மை எவ்வாறு மாயமானது பொய்யானது என்று தெளிவாக்குவதில்லை. அதிகாரத்துவக் கருத்தியல்களில் வர்க்கச் சார்பு எவ்வாறு உண்மைகளை தமக்கு ஏற்றாற்போல் கட்டமைக்கிறது என்ற சிறு கூறான விளக்கத்துக்கு அப்பால் அவர்கள் செயலற்று விடுகின்றனர். உண்மை என்பது முழுமையாகவும் சார்பு நிலையாகவும் இயங்குகிறது. இயக்கத்தின் போது மாறுகிறது. உண்மையை அதாவது பொருட்களை அறிந்து கொள்ளும் போக்கில் வளர்ச்சியில் பிழைகள், சரியற்ற நிலைகள், நிச்சயமின்மை, ஊகம் என்பன தோன்றுவது அந்த உண்மை அல்லது அறிவு பிழையானது என்பதால் அல்ல மாறாக மனித முயற்சியின் அளவை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சியை அறிதிறனைக் கட்டுப்படுத்தும் சமூக வளர்ச்சி நிலைகளில் இவைகள் தங்கியுள்ளன. இங்கு உண்மையை மறுப்பவர்கள் சமூகஇயக்கத்தை, இயற்கையை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற தனித்தனி செயல்களின் மொத்தமாய் காண்கின்றனர். ஆனால் இந்த உலகமும் சமூக இயக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள இடைவிடாது செயல் புரியும் ஒன்றிணைக்கப்பட்ட மொத்தமாகும். இவை சார்பு மற்றும் தீர்மானிக்கும் தன்மைகளால் நிரம்பியுள்ளன. இங்கு சார்புநிலைவாதம் சார்பு நிலையை மட்டும் செயற்பாட்டின் பகுதியை மட்டும் பரிசீலித்து மற்றைய கூறுகளைக் காணத் தவறுகிறது.

மார்க்சுக்கு முந்திய பொருள் முதல்வாதிகள் உண்மையை முற்று முழுதான கட்டுப்பாடற்ற மாறாத நிலையானதாகவே மதிப்பிட்டனர். உண்மையின் சார்பு நிலையைப் பேசத்தவறினர். மாக்ஸ் வரலாற்றில் முதல் முறையாக இதைத் திருத்தினார். ஆனால் நீட்சேயும் இன்றைய பின்நவீனத்துவ வாதிகளும் உண்மையை மறுக்க உண்மையின் சார்புநிலைகளையே நம்பியுள்ளனர். விகாரப்படுத்தி விளக்கினர். மாறும் மற்றும் மாறாத் தன்மைகளை ஒரு பொருளின் நேரெதிர்த் தன்மைகளை அறியாது போயினர். ஒரு குழந்தை குழந்தைப்பருவம், இளமை, நடுத்தரவயது, முதுமை என்று மாறுபாடுகளை அடையும்போது அதன் உடல், உள, நிறை மாறுதல்கள் என்பன நடைபெறுகின்ற போதும் அக் குழந்தை மனிதர்கள் என்ற பொதுவான உண்மையிலிருந்து மாறுவதில்லை. மாறாக அக்குழந்தையின் பண்புகள் மட்டுமே சார்புரீதியான உண்மைகள் மட்டுமே மாறுகின்றன. கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்த செய்தி ஐரோப்பாவை எட்ட 5 மாதங்கள் சென்றன. வாஸ்கொடகாமா இந்தியாவை அடைந்த செய்தி போர்த்துக்கல்லை அடைய கிட்டத்தட்ட ஒரு வருடம் சென்றது. ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட செய்தி ஐரோப்பாவை எட்ட 12 நாட்கள் சென்றன. அன்றைய மனித அறிவியல் வளர்ச்சியில் அவை உண்மையாக இருந்தன. இன்று இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையேயான செய்திகளை அறிய சில வினாடிகள் போதும். பிரயாணம் செய்ய சிலமணி நேரம் போதும். எனவே அன்றைய உண்மைகள் இன்றும் உண்மையாகவே இருக்கும் அதே சமயம் அந்த உண்மைகளைச் சார்ந்துள்ள நிலைமைகளே மாற்றம் பெற்றுள்ளன. இன்றைய மற்றும் அன்றைய உண்மைகள் உண்மைகளாகவே உள்ளன.

மனித வாழ்வுக்கு ஒட்சிசன் அவசியம் என்பதும் புவியீர்ப்புக்காரணமாகவே பழம் நிலத்தில் விழுகிறது என்பதும் உண்மைதான். பூமியில் 10கிலோ நிறையுள்ள ஒரு பொருள் சந்திரனில் 1கிலோவாகவும் பிரபஞ்சத்தின் வேறொரு கிரகத்தில் ஆயிரம் கிலோவாகவும் இருக்கக்கூடும் என்ற உண்மையானது பூமியில் அப்பொருள் 10கிலோ என்ற உண்மையை மறுப்பதில்லை. இங்கு பூமியிலும், சந்திரனிலும், பிரபஞ்சத்தின் வேறு ஒரு கிரகத்திலும் அந்தப் 10கிலோ பொருளைச் சுற்றியுள்ள சார்பு நிலைகளில் ஏற்படும் மாற்றம் அப்பொருளுக்கு ஒரு நிறை இருப்பதை மறுப்பதில்லை. 1-1 = 0 என்பது முழுஉண்மை இல்லை எனில் இன்று உலகில் உள்ள விஞ்ஞானம் தகர்ந்துவிடும். இரண்டு நேர்கோடுகள் கட்டாயம் ஒரேயொரு புள்ளியைத்தான் வெட்டும் என்பதும் ஒரு நேர்கோட்டிலே 180 பாகை அமைந்துள்ளது என்பதும் ஒருபுள்ளியைச் சுற்றி 360 பாகை அமைந்துள்ளதும் உண்மைதான். ஒரு தளத்துக்கு ஒரு நேர்க்கோடு செங்குத்தாக இருக்குமானால் அந்தத் தளத்திலே உள்ள அத்தனை நேர்கோடுகளுக்கும் ஒரு நேர்கோடு செங்குத்தாகும் இது முழு உண்மை. இல்லை எனில் உலகில் உள்ள அத்தனை கட்டடக் கலை முழுவதும் பொறிந்து கொட்டுப்பட்டுவிடும். நாம் எதைக் காண்கின்றோமோ, கேட்கின்றோமோ, உணர்கின்றோமோ, நாவினாலும், தொட்டும் உணர்கின்றோமோ இவைகளை நேரடியான மற்றும் இதுவரையிலான அனுபவ அறிவோடு நம்புகின்றோம். நெருப்பின்றி புகைவதில்லை என்பது அனுபவ அறிவின் உண்மை. கிழக்கே தோன்றி மேற்கே சூரியன் மறைவதான நேர்க்காட்சிவாத அனுபவத்தை அறிவியல் வழிகளில் பரிசோதனைகளாலேயே பொய்த்தோற்றம் கடந்து உண்மையைக் காட்டமுடியும். இவ்வாறாக நீட்சே மட்டுமல்ல இன்றைய பின்நவீனத்துவ வாதிகளும் உண்மை என்பதை மாயை என்று ஒதுக்கிவிட்டு பொய்த்தோற்றங்களை சமய வாதிகள் போல் துரத்திச் செல்கின்றனர்.

## இருப்பு அல்லது சுயம்

ஆதியில் மனிதர்கள் கனவில் வேட்டையாடியபோதும் நடப்பதும் ஓடுவதும் உறக்கத்தில் நடப்புவாழ்வின் பிரதிபலிப்பாய் கனவாய் ஏற்பட்டபோதும், இறந்தவர்கள் கனவில் தோன்றிய போதும் மனித உடலுக்குள் அல்லது அதன் இறப்புக்கு அப்பாலும் அழிவற்ற "ஆவி" என்ற கருத்தும் ஆவியிலிருந்து

www.tamilarangam.net

ஆன்மா என்ற கருத்தும் பிறந்தன. ஜெர்மன் மொழில் Geist என்ற சொல்லும் ஆங்கிலத்தில் Spirit என்பதும் ஆவி, ஆன்மா இரண்டையும் குறிக்கும் சொல்லாகவே உள்ளன. ஆவி, ஆன்மா போன்றவற்றின் தொடர்ச்சியாகவே இருப்பு, சுயம், தூயஉணர்வு, பிரஞ்ஞை, தன்னிருப்பு போன்ற கருத்தியல்கள் உருவாகின. கிரேக்கத்தில் கிராக்கிளிட்டஸ், டெமாக்கிரிட்டஸ், பிளாட்டோ, அரிஸ்டோட்டல் ஆகியோர் இருப்புப்பற்றிப் பேசுகின்றனர். சோக்கிரட்டிசின் பகுத்தறிவை "ஒரு மாமனிதனின் பகுத்தறிவு" எனும் மட்டத்தில் ஏற்று "பகுத்தறிவின் பிதாமகன்" என்று அவரை நீட்சே கொண்டாடுகிறான். ஆனால் இங்கு சோக்கிரட்டிசின் பகுத்தறிவுவாதத்தின் எல்லைக்குட்பட்டே இருப்பு இயங்குகிறது என்பதை நீட்சே பேசுவதில்லை. சுயம், இருப்பு, தன்னிருப்பு, நான் என்பவை புலன் கடந்த அறிவு வடிவமானவை என்று யூத மற்றும் "கொன்பியூசியஸ்" தத்துவங்கள் பேசுகின்றன. "தன்னில் ஈடுபட்டு தன்னை அறிந்து தன்னை உருவாக்க வேண்டும்" என்று கொன்பியூசியசும் "உன்னையே நீ அறிவாய்" என சோக்கிரட்டிசும் "உன்னை உணர், உன்னை அறி" என இந்து சமயமும் போதனை செய்கின்றன. "தன்னையே காதலித்து தன்னுடனே விளையாடுவது தன்னை ஆய்வது ஆத்ம விசாரம்" என்கிறது உபநிடதம். கிறிஸ்த்துவுக்கு முன் 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த வேதப் பிரிவு கூட ஆன்மாவை சுயத்தைப் பேசுகிறது. உலகில் பிரமம் மட்டுமே உள்ளது அவற்றின் தொடர்ச்சியான யோகம், தியானம் மூலமே பிரபஞ்சம் சம்பந்தமான யாவற்றையும் கடந்தும் துறந்தும் ஆன்மாவைக் கண்டறிய முடியும் என்கிறது. கி.மு 2ம் நூற்றாண்டில் "யோகத்துவம்" என்ற சிந்தனைப் போக்கைப் படைத்த "பதஞ்சலி" சுயத்தை அல்லது உணர்விலி மனத்தை அறிவின் உயர்ந்த கட்டமாய் கருதினார். தத்துவம் மனிதர்களின் செயலைக் கட்டுப்படுத்தி விடுகிறது என்கிறார். ஒரு யோகியின் உயர்ந்த நிலையானது தியான நிலையே. பொருட்களின் மீது மையம் கொள்ளாமல் அதன் தன்மையில் ஆழ்ந்து உணர்விலியாக மாறுதல் வேண்டும் என்கிறார் பதஞ்சலி. இந்து சமயம் இருப்பை தன்னிலை மறந்த பிரபஞ்சம் கடந்த, அறிவு கடந்த ஆழ்நிலை மயக்கங்களில் தேடியது. தன்னுள் ஒடுங்கிய சுய தியானத்தின் மூலம் இருப்பைக் கண்டறியலாம் என்று பரிந்துரை செய்தது. கர்மா, மோட்சம், ஆத்மன், புருசா, சம்சரா, தர்மா என்று இருப்பின் பல வடிவங்களை இந்திய கருத்து முதல் வாதம் பேசியது.

இங்கு நீட்சே பேசும் சுயம், இருப்பு என்பன புதிய கண்டெடுப்பல்ல நீட்சேயின் கலகச் சிந்தனையின் பரிசுமல்ல, இவை யதார்த்தத்தை கேள்விக்குள்ளாக்கும், அதை மறுக்கக் கோரும் சமயச் சிந்தனையிலிருந்து பிறந்த பழஞ்சரக்கே. வரலாறு சமூகம் இவைகளை தனிமனிதரின் அகத்துள் அடக்க முயலும் அறிவியல் விரோதத்தின் முயற்சியே. நீட்சே பழம் கருத்துமுதல்வாதத்தை நவீன மயமாக்குகின்றான். கொச்சையான முதலாளியப் பொருள் முதல்வாதத்தின் சில கூறுகளையும் இணைத்துக்கொள்கின்றான். நீட்சே ஒரு போதும் சமூக இருப்பைப் பேசுவதில்லை. மாற்றாக கருத்துமுதல்வாதத்தின் பரம்பரை பரம்பரையான சுயநலத்தை முதன்மைப்படுத்தும் தனி மனித அகத்தை அது சார்ந்த இருப்பையே பேசுகிறான். காண்டின் தனிமனிதர் மேலான ஆய்வை கெகல் சமூக மனிதர்களாக விரிவுபடுத்தி சமூக இயக்கத்தோடு இணைத்தார். பொருள்முதல் வாதத்திசையில் நெறிப் படுத்தினார். ஆனால் நவ காண்டியப் போக்குள் வீழ்ந்து புத்தி கெட்டுப்போன நீட்சே சமூக இருப்பை தனிமனித இருப்பாய் குறுகத் தறித்து விடுகிறான். சோப்பன் கோவர் இந்து சமயத்துள் கண்டெடுத்த இருப்பு மக்ஸ் ஸ்ரேனரின் (Max Stirner) நான், எனது சுயம் போன்ற கருது கோள்களின் தனிமனித வாதப் போக்குள் குடிகொண்டான். நீட்சேயின் இருப்பு உண்மையில் மாமனிதருக்கே உடமையானது. தனிமனிதருக்கே உரியது சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டு உதிரியாக்கப்பட்ட சமூகத்துக்கும் மேலான தனிமனித சுயமே அவனது பேசுபொருள். இதே போல்தான் சங்கரரும் "தத்துவவாதி வாழ்க்கைக்கு வெளியே நின்று அதைக்காணவேண்டும் இருப்பை நாட்டவேண்டும்"என்கின்றார். தனிமனித இருப்பு, ஈடேற்றம் சமூகத்துக்கு வெளியே தனித்து இருப்பதாய் சங்கரர் போலவே நீட்சேயும் எண்ணுகின்றான். சுயம் இருப்பு நனவிலி மனம் போன்ற கருத்தை உளவியல் அடிப்படை வழங்கி ஐரோப்பாவில் பிரபல்யப்படுத்தியவர் மனநோய் நிபுணரான சீக்மெண் பிறைட் தான் (1856-1939) இவர் உளவியலைப் புரிந்து கொள்ள இதைப் பிரயோகிக்க முயன்றார். பின்பு இதை உளவியலுக்கு வெளியே சகல அறிவியல் துறைகட்கும் இட்டுச்செல்ல முயன்றார். மனிதச் செயற்பாட்டுக்காரணம் உணர்விலி மனமே. மரபு ரீதியான உணர்வுகளின் இருப்பே என்றார். மனித நடத்தைகள் செயற்பாடுகள் இவைகளைத் தீர்மானிப்பது அவர்களின் எண்ணம், உணர்ச்சிகள், அறிவு, சமூகச்சூழல்கள் என்பதைவிட பிறவியிலே அமைந்த மனித இருப்புள் மனித இயல்பூக்கங்களில் பாலியல் ஆசைகளில் தங்கிய உணர்விலி மனமே என்றார். கலைகள், கலாச்சாரம், தத்துவம், விஞ்ஞானம், அரசியல் ஆகிய துறைகட்கும் இவைகளை விஸ்தரிக்க முயன்று தோற்றுப்போனார். நிபந்தனைக்குட்பட்ட வகையில் உளவியலில் பிரயோகிக்கத் தக்கதை சகல அறிவியல்

www.tamilarangam.net

துறைக்கும் பரப்ப முயன்று தோற்றுப்போனார். இங்கு சீக்மெண்ட் பிறைட் சோப்பன்கோவராலும், நீட்சேயாலும் பாதிக்கப்பட்டவர் என்பதை நாம் காணமுடியும். இவ்வாறாக சீக்மெண்ட் பிறைட்டின் உளவியல் பகுப்பாய்வு சமூகவியலின் பாதிப்பை உணராமல் குறைபட்டுப்போனது. நீட்சேயின் ஆர்வங்கள் மனிதர்களை ஆரியப் பெருமைகளின் மரபுகளில் மாமனித இருப்பின் அடிப்படையிலே புரிந்து கொண்டன. தனிமனிதர்கள் மேல் சமூகம் செலுத்தும் ஆதிக்கத்தை உரியமுறையில் மதிப்பிடாமல் மனித சுயம் சுதந்திரமாய் இயங்க முடியும் தன்னை தன் இருப்பை நாட்டிக்கொள்ள முடியும் என்று கருதினான். இங்கு மனித சுயம் என்பது சமூக இருப்பில் இருந்து தோன்றியதே. முரபு ரீதியான சில மனித உணர்வுக்கூறுகளை நாம் இதனுடன் இணைத்துக் குழப்பக்கூடாது. சுயத்தை கட்டற்ற சுதந்திர உணர்வாகப் பார்ப்பது மக்களின் சமூகத்தின் அவசியமான அடிப்படையான பொருள் உற்பத்தி முறையைக் கவனிக்காமல் கோட்டை விடுவதாகும்.

வருத்தத்தையும் துன்பத்தையும் வழிபாடு செய்யும் நீட்சே அறிவின் அழிவைக் கொண்டாடும்படி சாதாரண மக்களைக்கோருகின்றான். மக்களின் கிளர்ச்சி செய்யும் வர்க்க உணர்வை ஏதுமற்றதாக்க முயல்கின்றான். எனவேதான் நடப்பு உண்மைகளை மாயத்தோற்றம் ஏதுமற்றவை என்று மாமனிதன் மற்றும் உயர் இனம் இவைகள் அல்லாதவர்கட்கு திரும்பத் திரும்ப விதைக்கின்றான். சுரண்டல் அமைப்பின் ஆசை, சுயநலம், வெறி, பொய், சிக்கனம், கருமித்தனம், பேராசை, இரக்கமின்மை, அவநம்பிக்கை, அதீதமான சுயமுயற்சி சார்ந்த உழைப்பு, தனிநபர் வாதம் பெண் அடிமைத்தனம், தேசியம், மதம், இரட்டைவேடம் எனப் பல மனித குணங்கள் படைக்கப்படுகின்றன. மனிதர்களின் வாழ்வதற்கான போராட்டம் முன்பு நியாயமான ஆசைகள் உணர்வுகள் சிதறடிக்கப்பட்டு தனிமனிதர்களின் சிறப்பியல்புகள் தனித்துவமான சிந்தனைகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூக வார்ப்பான சுயம் அழிக்கப்பட்டு விடுகின்றது. வர்க்க முரண்பாடுகள் ஆர்வங்கட்கு ஏற்ப வித்தியாசமான விருப்புகளை உடைய பல்வேறு தோற்றமுடைய தனிமனிதர்கள் அவர்களது சுயங்கள் தோற்றம் காட்டுகின்றன. இவை உண்மையில் பொருளாதிக்கத்தை அடிப்படையாய்க் கொண்ட வர்க்க சமூக ஒழுங்குகட்கு உரியவையே. முதலாளியின் சுயமும் தொழிலாளியின் சுயமும் ஆணின் சுயமும் பெண்ணின் சுயமும் தலித்தினது சுயமும் மேல் சாதியினது சுயமும் வெள்ளை மனிதரின் சுயமும் கறுப்பு மனிதரின் சுயமும் பிறப்பிலிருந்தே உயிரியில் அடிப்படையில் தோன்றியவையல்ல. இவற்றை நீட்சே இயற்கையின் நியதி என்று கட்டமைக்கின்றான். சுயம், இருப்பு என்பவை தனித்தனி மனிதரோடு மட்டும் தொடர்புடைய ஒன்றல்ல. மனிதர்கள் அடுத்த மனிதரோடு உறவு கொள்ளும் போதுதான் தம் சுயத்தை இருப்பை அறியமுடியும். அதற்கு அடுத்த மனிதர்களின் சமூகத்தின் இருப்பு என்பன முதல் நிபந்தனையாகும். மனிதர்களின் அன்றாட வாழ்வுக்கான போர் நடைபெறும் போது நடப்பு மனிதர்களை வதைக்கும் போது மனிதர்கள் கண்களை மூடிக் கொண்டும் காதுகளைப் பொத்திக் கொண்டும் வெறும் கருத்துக்களின் அகஉலகில் ஆன்மாவின் தயவில் சுயதேடலில் ஒடுங்கிவிட முடியாது என்பதே யதார்த்தம்.

நீட்சேயின் இருப்பு, சுயம், நனவிலிமனம் உட்பட ஆன்மா, ஆழுமை, தன்னிருப்பு யாவுமே உயிரியல் ரீதியில் நரம்பு மண்டலத்தோடு தொடர்புடைய நடப்பின் மற்றும் மரபு வழியான செயற்பாடே. எம் பழக்க வழக்கங்களாலும் நினைவுகளாலும் மூளையில் பதியப்பட்டுள்ளன. எம்மைச்சூழவுள்ள புறவுலகின் அனுபவத்தால் வடிவமைக்கப்பட்டு இயக்கப்படுபவையே. இவை மாறவும் அழியவும் செயலற்றுப்போகவும் கூடியவையே. இவை ஒரு வகையில் எமது உடலின் அனுபவமே. எம் முதுமையில் நமது மூளையின் மேற்பரப்பிலுள்ள "கார்டெக்சின் கூட்டிழைகள்" சிதைவுறுவதால் நமது நினைவாற்றல் குறைகிறது. மனித நினைவுகளை "ஈதர்" அல்லது வேறு இரசாயனப்பொருட்கள் கொண்டு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ அழிக்க முடியும். உளவியல் சிகிச்சைகளால் மாற்றமுடியும். இதுவரை 20க்கும் மேற்பட்ட காடுகளில் மிருகங்களால் வளர்க்கப்பட்ட குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மனிதக் குழந்தைகள் எந்த மனிதக் குணங்களுமற்று மிருகங்கள் போலவே செயற்பட்டன. மனித வாழ்வுக்குள் அவையால் நுழைய முடியவில்லை. கிழக்கிந்தியத் தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மிருகங்களால் வளர்க்கப்பட்ட குழந்தையை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். அதற்கு மனித நடத்தைகளை பயிற்றுவிக்க முயன்றனர். அக் குழந்தை இரவு முழுக்க விழித்திருந்தது. மிருகங்களைப்போல் உறுமியது. நான்கு கால்களால் நடந்தது. உணவை மிருகங்கள் போல் சாப்பிட்டது. அதற்கு மனிதவாழ்வை மொழியைக் கற்றுக்கொடுக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அது தன் இறப்பு வரை மிருகவாழ்வின் அடையாளங்களையே கொண்டிருந்தது. அப்படியெனில் அக்குழந்தை ஏன் மனிதக் குணாம்சங்களை பெறமுடியவில்லை. தன் இருப்பை

www.tamilarangam.net

அடையாளத்தை சுயத்தை மனிதராக இருந்தும் பெற முடியவில்லை என்பதை மனித இருப்பை சமூகத்துக்கு மேலாக உயர்த்தும் எந்த நீட்சேயிசப் போக்காலும் விளங்கிவிட முடியாது.

நாம் வாழும் சமூகத்தின் அனுபவங்களே தனிமனிதர்களிடம் அறிவாக அனுபவங்களாக சுயமாக தசைகளில் பதியப்படுகிறது. இவை வாழ்வியல் அனுபவ அறிவின் திரட்சியே சுத்தமான உணர்வின் பதிவுகளே இங்கு நீட்சேயின் இருப்புக்கான போராட்டமென்பது அக உலகை மட்டுமே முதன்மைப்படுத்தும் பாசிச இருப்புக்கான கலகமே. அதீத தனிமனித வாதத்தின் கட்டுக்கடங்காத வெறியே. இயற்கையானது மனிதர்களிடம் தனிமையே வேண்டுகிறது எனும் நீட்சேயிடம் இதை மட்டுமே எதிர்பார்க்க முடியும். ஒவ்வொருவரும் மனத்தை மாற்றவேண்டுமே தவிர சுயத்தை இருப்பைச் சுற்றி வேலிகட்ட வேண்டுமே தவிர மனிதர்களின் சமுதாய வாழ்க்கையை மாற்ற வேண்டியதில்லை, சோசலிசத்தைக் காட்டவேண்டியதில்லை என்பதே இவர்களது சுயங்களின் பாசிச வாக்கு மூலமாகும்.

## பெண்கள் பற்றி நீட்ஷே

>> Du gehst zu Frauen? Vergiss die Peitsche nicht << "நீ பெண்களிடம் போகும் போது சவுக்கை எடுத்துச்செல்ல மறந்து விடாதே" இது பெண்கள் பற்றிய நீட்சேயின் "சாராதுாஸ்ட்ரா" வாசகம். நீட்சே தனது எழுத்து முழுதும் பெண்களை அடிமைகள், கீழ்நிலை மனிதர்கள் என்று பகுக்கும் பிரிவுகளுடனேயே சமப்படுத்திப் பேசுவதோடு "பெண் எங்கள் எதிரி" (Das weib ist unser Feind) என்று வெறுப்புக்காட்டுகின்றான். பெண்களை மரியாதைக் குறைவாய் நையாண்டியாய் அழைக்கப்பயன்படுத்தப்படும் 'weiber" எனும் நிந்தனைச் சொல்லால் அழைக்கின்றான். இச் சொல் உழைப்பாளர்கள் மற்றும் விவசாய மக்களிடையேயான பெண்களைச் சுட்டப் பயன்படுத்தப் படுவதாகும். பெண்கள் பாலியலுக்கு தொகையான விருப்பமும் பண்பாட்டுரீதியில் பலவீனமானவர்கள். அவர்களிடம் அடிமைத்தனமும், சர்வாதிகார விருப்பமும், வர்ணிக்கமுடியாத தந்திரமும், போக்கிலித்தனமும் நிரம்பப்பெற்றவர்கள். நட்பை அறியாத பெண்கள் காதலிக்க மட்டுமே தெரிந்தவர்கள் என்று நிலப் பிரபுத்துவ ஆணாதிக்கக் கருத்தியல் குப்பைகளை நீட்சே திரட்டுகின்றான். பெண் உண்மையை விரும்பாதவள், வெறுப்பு நிறைந்தவள், பொய்யான பாசாங்குக்கலையில் அவள் நிகரற்றவள், ஆணைக்கண்டு அஞ்சாத பெண் பெண்இயல்பு கொண்டவளல்ல, பெண்களிடம் அறிவியல் பண்புகள் இருக்குமெனில் அவளின் பெண்மையில் தவறு இருக்கின்றது என்றே பொருள் என நீட்சே பேசுகின்றான். பெண் ஆண் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளவே விரும்புகிறாள். அடக்கத்தை இழக்கும் பெண்ணானவள் ருசியை இழந்து விடுகின்றாள். காதலிப்பதிலும் பழி கொள்வதிலும் ஆணை விடப் பெண்ணே அதிகம் காட்டுமிராண்டித்தனமாயுள்ளாள். ஆண் போராட்டத்திற்கும் பெண் தாய்மைக்குமே தகுதியுள்ளவள் எனும் நீட்சேயின் கருத்தியல்கள் முதலாளித்துவத்துக்கும் முந்திய விவசாய சமூகங்களின் பெண் விரோதப் போக்கின் உயிர்ப்பே. அவன் காலத்திய முதலாளிய ஜனநாயகத்தின் கருத்துக்கள் முன்பு கூட அது நிற்க முடியாதளவு பழஞ்சரக்காகும். பல ஆயிரமாண்டு காலம் பெண்கள் மீதான ஆணாதிக்கம் அதை வழிநடத்திய சமூகப் பொருளியல் வாழ்வு வர்க்க சமூக அவலங்கள் பெண்களை சிதைத்தழித்துள்ளதையும் விகாரப்படுத்தியுள்ளதையும் காணாமல் அவர்களின் பிறழ்ந்து போயுள்ள இயல்புகளை இயற்கையான உணர்வுகளாய் நீட்சே கட்டமைக்கின்றான்.

இந்து மற்றும் கிறீஸ்தவ சமயப் போதனைகள் போன்றே நீட்சேயும் பெண்களை பாம்புகள், சூனியக்காரிகள் என்றும் ஆண்கள் பெண்களிடம் தங்களைப் பறிகொடுத்து விடக் கூடாது குழந்தை பெறுவது மட்டுமே பெண்களின் வேலை, வீட்டுப் பணிகட்கு வெளியேயான உலகை பெண்களுக்கு நீட்சே மறுக்கிறான். பெண்கள் குறித்து ஆண்களை அடிக்கடி எச்சரிக்கும் நீட்சே மத்தியகால சமயவாதக் கழிவுகளையே மறு படைப்புச் செய்கின்றான். "நம்முடைய துன்பங்கள் அனைத்தும் பெண்ணிடமிருந்தே வருகின்றன பெண் ஒரு பாவக்குழி" என்ற இந்து சமயக் கண்ணோட்டம், பெண்ணே நீ பற்றவைக்கும் நெருப்பு எம்மை அழிக்கும் என்ற யூதப் போதனையின் சாரம், இவைகளையொத்த சமய சிந்தனைகளின் தாக்கமே நீட்சேயிடம் நிலவியது. நீட்சேயின் மா மனிதர்கள், உயர்மனிதர்கள் வரிசையில் பெண்களுக்கு இடம் கிடையாது. பெண்கள் குடும்பப்பெண்களாக புனிதமாக ஆரியர்கள் அல்லாத மற்ற இனத்தொடர்பு அற்று இருக்க வேண்டும் என்பதே அவனது போதனை. பெண்ணை வென்றெடுக்கப்படவேண்டியவளாய், துன்புறுத்தி சித்திரவதை செய்து உடலின்பம் அனுபவிக்கப்பட வேண்டியவளாய் மட்டுமே நீட்சே

www.tamilarangam.net

கருதினான். அவனிடமிருந்த கிறீஸ்தவ மற்றும் இந்துசமயம் சார்ந்த பெண்கள் பற்றிய கருத்துக்கள் தன் இளவயதில் குடும்பத்தில் பெண்களின் அதீத கட்டுப்பாட்டுள் வளர்க்கப்பட்டமை இளவயதிலேயே அவன் தேடிக்கொண்ட பாலியல் நோய் என்பனவும் பகுதியாய் அவனின் பெண்கள் மேலான வெறுப்புக்குக் காரணமாகும்.

நீட்சே காலம் முன்பாகவே பெண் விடுதலைச் சிந்தனைகள் ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் பரவத் தொடங்கிவிட்டன. மாக்சின் கொம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை பெண்ணின் இருப்பை அறிவித்தது. அவரின் மூலதனம் பெண்களின் உழைப்பு மற்றும் சமூக நிலைகளை ஆராய்ந்தது. ஏங்கல்சின் "குடும்பம், தனிச்சொத்து, அரசு இவைகளின் தோற்றம்" பெண்களின் வரலாற்று நிலைகளைப் பேசியது. ஜெர்மனியின் மிகப்பெரும் தொழிலாளர் தலைவரும் சோசலிஸ்ட்டுமான ஒகஸ்ட் பேபல் (August Bebel) பெண்களும் சோசலிசமும் (Die frau und der sozialismus) என்ற விரிவான நூலை நீட்சே காலத்தில் எழுதினார். திருமண உறவுக்கு வெளியே குழந்தை பெற்றுக்கொள்ளும் பெண்கள் முதல் விலைமாதர்களது வாழ்வு மற்றும் பொருளாதார நிலை பாலியல் நோய்கட்கு ஆட்பட்டு மற்றும் விரைவாக மரணம் அடையும் பெண்கள் போன்ற விபரங்கள் வரை புள்ளிவிபர ரீதியாக ஆய்வுகளை நடத்தினார். (அன்றைய ஜெர்மனியில் வருடா வருடம் திருமணத்துக்கு வெளியே சராசரியாக 170000 குழந்தைகள் பிறந்தன. ஆகக் குறைந்தது 200000 பெண்கள் பாலியல் சந்தையில் தம்மை விற்றுக்கொண்டனர். இது 1880 களிலாகும்) இவரின் சமகாலத்திலும் பின்பும் ஜெர்மனியப் பெண் மாக்சியவாதியான "கிளாரா செட்கின்" பெண்விடுதலைக் கருத்துக்களை பிரச்சாரம் செய்து வந்தார். பின்பு 'Gleichheit" என்ற பெண்களுக்கான முதற் பத்திரிகையையும் கொண்டு வந்தார். அக்காலத்தில் நீட்சேயின் உச்ச எழுத்துக்களின் சமயத்தில் பெண்கள் பொதுவாழ்வுக்குள் நுழைந்து விட்டனர். தொழிலாளர் அமைப்புக்களில் தீவிரமாக ஈடுபடத்தொடங்கி விட்டனர். அனைவருக்கும் கல்வி அனைவருக்குமான வாக்குரிமைப்போராட்டங்கள் வெற்றிபெறத்தொடங்கியிருந்தன. ஆனால் நீட்சே பெண்விடுதலை என்ற கருத்தியலையே பழித்தான். தீவிரமாய் எதிர்த்தான். "பெண்கள் சம உரிமைகோருவது ஒரு நோய்" என்று எழுதினான். பெண்களிடம் எவ்வளவுக்கெவ்வளவு பெண்மை இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு தானே அவள் பெண் உரிமையை எதிர்ப்பாள்". எனவும் "பெண்ணுக்கு உரிமை வழங்குவது பெண்ணுக்கே ஆபத்து" எனவும் வாதிட்டான். பெண்ணின் கடமையான கணவனுக்கு மகிழ்ச்சி தருவது, அவனுக்குக் குழந்தை பெற்றுத் தருவதுடன் அவள் ஆணின் பாதுகாப்புக்கும் கண்காணிப்புக்கும் உரியவள் எனும் கருது கோள்கள் அவனின் கிறிஸ்து எதிர்ப்பு பாசிச மோசடிகட்கு அப்பால் சமயவாதச் சிந்தனைகளின் வழிநடத்தலே. "பெண் உரிமையானது ஐரோப்பாவை அழகற்றதாக்கி விடும் பெண் இலட்சியப் பெண்ணாவதும் கல்வி பெறுவதும் ஆட்டு மந்தையை ஒத்து அவர்கட்கு வாக்குரிமை வழங்குவதும் ஆபத்தானது" இங்கே நீட்சேயின் பாசிச ஆணாதிக்கம் நிர்வாணமாக நிற்கிறது.

## நீட்ஷேயின் மார்க்சிய வெறுப்பு

கொம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை வெளியிடப் பட்டு அரை நூற்றாண்டு காலம் சென்றபின்பே நீட்சே இறந்தான். நீட்சேயின் காலம் தொழிலாளர் இயக்கங்கள் உருவாகிப் பலம் பெற்றகாலம். மாக்சியம் பரவிக்கொண்டிருந்தகாலம். 1871இல் "பாரீஸ் கொம்யூன்" 1875இல் ஜெர்மனியில் தொழிலாளர் அமைப்பான சமூக ஜனநாயகக் கட்சியின் (spd) உதயம். இவற்றோடு சகல முதலாளிய தேசிய வெறிப் பாசிசசக்திகள் வளர்ந்து வந்த ஏகாதிபத்திய உலகுக்கான ஆக்கிரமிப்புக்கருத்தியல்களைத் தயாரித்தோர் உழைப்பாளர்களின் இயக்கங்களைப் பகையோடு எதிர்த்த காலமாகும். இங்கு ஆளும் வர்க்கங்கட்கு ஆதரவாக மாக்சியத்திற்கு எதிராக நீட்சே தலையிடுகிறான். பிரான்சுப் புரட்சியானது மேற்குலகக் கலாச்சாரத்தின் மீதான தோல்வி அழிவு என்ற நீட்சே பாரீஸ் கொம்யூனையும் சோசலிசத்தையும் தாக்கினான். சோசலிச எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவந்த பிஸ்மார்க்கை படு தீவிரமாய் ஆதரிப்பது வரை அவன் சென்றான்.

"வரலாற்று அபிவிருத்தி உயர் இனத்தின் மேன்மையாலேயே ஏற்படும். நவீன ஜனநாயகவாதிகள், தன்னிச்சைவாதிகள், கொம்யூனிஸ்டுகள் எல்லோரும் ஆதிகாலத்தின் கழித்துவிடப்பட்ட சமூக வடிவங்களையே பேசுகின்றனர். சோசலிஸ்டுகள் இதையே நாடுகின்றனர். இது ஆரியர் மேலான எதிர்ப் புரட்சித்தாக்குதலாகும். ஆரிய 'இனம் உடல் ரீதியில் அடிபணிந்து விடுமா?" என்று ஆரிய இனப்

www.tamilarangam.net

பேச்சாளனாகும் நீட்சே தொழிலாளர் அமைப்பான சமூக ஜனநாயகக் கட்சியை நம்புவதைவிட ஒரு Hure (விலைமாதை) நம்பலாம். என்பவன் "சோசலிசம் கழிசறைத் தனமானது, சோசலிஸ்ட்டுகள் கீழ்நிலை மனிதர்கள் அவர்களை நான் வெறுக்கின்றேன். இவர்கள் மகிழ்ச்சியை எதிர்க்கின்றனர். தொழிலாளியை அவனின் சின்ன வருமானத்தில் திருப்தியடைய விடாமல் தடுக்கின்றனர். அவர்களுக்கு பகைமையை பழிவாங்கும் உணர்வையும் போதிக்கின்றனர். சோசலிசவாதிகள், ஜனநாயகவாதிகள், சாதாரணமக்கள் இவர்கள் எல்லாம் ஆரியருக்கு முந்திய ஆதிக்குடிகள். ஆரிய உயர் மனிதர்கட்கு அவர்களின் இனத்தூய்மைக்கு எதிரானவர்கள்."

நீட்சே புரட்சியை மாமனித சிந்தனையின் விரோதியாக்கி எதிர்த்தான். மக்களையும் தொழிலாளர்களையும் கண்டு கிலி கொண்டான். அவர்களை மனிதக் கலாச்சாரமற்றவர்கள் எனவும் கீழ்மக்கள், முரடர்கள் வரிசையில் சேர்த்தான். ஒவ்வொரு புரட்சியும் எப்போதோ புதைக்கப்பட்ட காட்டுமிராண்டித் தனத்துக்கு அதன் சக்திகட்கு மறுபிறப்புக்கொடுக்கிறது. பயங்கரவாதத்தையும் அழிவையும் தருகிறது, என்று முதலாளிய சுரண்டல் பிசாசுகளோடு சேர்ந்து கொள்கின்றான். மறு புறம் மேன்மக்கள் மாமனிதர்களின் ஆதிக்கத்தைப் படைக்க வரம்பற்ற அதிகாரத்தையும் யுத்தச் சூழலையும் இராணுவப்பெருக்கத்தையும் ஆதரிக்கின்றான்.

"சோசலிசம் சோம்பலைக் கூட்டிவிடும் இயற்கையான மனித உழைப்புச் சுபாவத்தை மாற்றிவிடும், நல்லதுக்கும் கெட்டதுக்குமான வித்தியாசம், புத்திசாலித்தனத்துக்கும் மூடத்தனத்துக்குமான வித்தியாசம் சோசலிசத்தால் மாற்ற முடியாது." முதலாளியச் சிந்தனை போன்று உழைக்கும் மக்களை சோம்பேறித் தனம் கொண்டவர்களாக காணும் நீட்சே அவன் காலத்தில் சோசலிஸ்டுக்கள் நடத்திய "எல்லா மக்களுக்கும் கல்வி" என்பதைப் படு தீவிரமாய் எதிர்த்தான். "எல்லா மக்களுக்கும் வேறுபாடின்றிக் கல்வி புகட்டுவது அது காட்டுத்தனத்துக்கு இட்டுச்செல்லும் எல்லா மனிதர்கட்குமான கல்வியறிவு கலாச்சாரம் வளர்ந்து பரவுவது கொம்யூனிசத்துக்கு ஆன தயாரிப்பு ஆகும். உயர்மனிதர்கள் அல்லாதவர்களிடம் பரவும் கலாச்சாரம் உண்மையான கலாச்சாரத்தை அழித்துவிடும்."

சாதாரண மக்களை மனிதமந்தைகள் என அழைக்கும் நீட்சே உன்னதமான குணங்கள் அடிமையினங்கட்கு அல்ல, மாமனிதர்கட்கே உரியது. மனிதர்களிடையேயான சமத்துவம், துன்பப்படும் மக்கள் மீதான மனித இரக்கம் அனுதாபம் என்பன அவனிடம் கிட்டாத விடயங்கள் ஆகும். இக் காலத்தில் சோசலிஸ்டுக்கள் கல்வி மட்டுமல்ல எல்லோருக்குமான வாக்குரிமை, மனித உரிமைகள் இவைகட்குமாகவும் போராடிக்கொண்டிருந்தனர். சமத்துவம் பேசுபவர்களை விசச்சிலந்திகள் எனும் நீட்சே நம்மைச்சாராதவர்க்கு எதிராக நாம் சகல அநீதிகளையும் கையாளலாம் சமத்துவத்திற்கு எதிரான குணமே சிறந்தது. சமத்துவம் பேசும் தத்துவங்கள் கேடானவை. "விசச்சிலந்திகள், சமத்துவம் நீதியானது என்கின்றனர்" என் நீதியோ மாமனிதர்கள் முன்பு மனிதர்கள் சமமானவர்கள் அல்ல, சமத்துவமின்மை, போர் என்பன மனித இயல்பு, வறுமை, உயர்வு, தாழ்வு போன்றவற்றுடன் மனிதர்கள் எப்போதும் போராட வேண்டியுள்ளது. அப்போது தான் இந்த சமூக ஒழுங்குள் தான் மாமனித சக்தி புதிய இனமாக பரிணாம வளர்ச்சியடைய முடியும் என்கின்றான்.

"ஜனநாயகம் எனக்கு உடன்பாடானதல்ல, அது மிகக் கேவலமானது, உயர் மனித குணங்கள் அழுகும் போதுதான் அது பிறக்கிறது. எனவே இன்றைய நிலைகளை எதிர்க்கும் தைரியமான உயர் மனிதர்களை எதிர்பார்க்கின்றேன். அவர்களே மனித இனத்தை மகத்தான சாகசச் செயலுக்குத் தயாரிக்கக் கூடியவர்கள். இவர்கள் மூடத்தனமான ஜனநாயகத்தை அழிப்பார்கள். ஜனநாயகம் மூடத்தனமானதெனில் சோசலிசம் முட்டாள்களின் கோட்பாடு. இயற்கை விதிப்படி உயர்மனிதர்களாக இருக்கும் தகுதி படைத்த மனிதர்களை மறுப்பது அறிவீனம். ஒரு மனிதனுக்கு தனித்துவம் கிடையாது. அவன் சமூகத்தின் அங்கமே என்பது கேவலமானது. சோசலிசத்தில் சிக்கிக்கொள்பவர்கள் குறுகிய கீழ்நிலை மனிதர்கள் விலங்குகளே ஆவர்".

சோசலிசத்தை, புரட்சியை, மக்களை நிந்தித்து, மாக்சியத்தை யூதப்பேராசையின் அவர்களின் உலகை ஆளும் வெறியின் சித்தாந்தம் என்று நீட்சே திரித்தான். மாக்சியம் கிறிஸ்தவ, யூத ஆதிக்கக் கருத்தியல்களின் சிந்தனை என்று விளக்க முயன்றான். மாக்சியம் ஐரோப்பியச் சிந்தனைக்கு அந்நியப்பட்டது என்று காட்ட பிரயத்தனப்பட்டான். சோசலிசத்தின் மனித சமத்துவம் கற்பனையானது

www.tamilarangam.net

என்றவன் "இங்கு தவறின் ஊற்றிடம் சமத்துவம் இன்மையல்ல சமத்துவத்தைக் கோருவதுதான்" என்று "கிறிஸ்து எதிர்ப்பு" நூலில் எழுதுகிறான். மேலும் காட்டு மிராண்டி மக்களிடம் சமமின்மை, ஏற்றத்தாழ்வுகள் பெருமளவு உணர்ந்து கொள்ளப்படுவதில்லை. எம்போன்ற கலாச்சாரமடைந்த மக்களோடு காணப்படும் வித்தியாசம் பெரியது. அவர்கள் அறிவு, மற்றும் நீதிக் கோட்பாடுகளில் சிறிதே முன்னேறியுள்ளனர். ஆணையும் பெண்ணையும் சமப்படுத்த முயல்வது போல் சோசலிசம் இயற்கையான பிரிவினை சக்திச் சமமின்மை காரணமாய் ஏற்படும் நிலைகளைச் சமப்படுத்த முயல்கிறது என்று சோசலிசம் மேல் குற்றம் காண்கிறான். அவனது பாசிச மாமனிதச் சிந்தனை ஏகாதிபத்தியக் கொள்ளையிடல் சுரண்டலுக்கு ஏற்ப தகவமைக்கப்படுகிறது.

"வாழ்க்கை என்பது அடுத்தவரிடம் பறித்தெடுப்பது, காயப்படுத்துவது, எதிரிகளை, பலவீனர்களை அடக்கல், தன் சொந்த ஆர்வங்களைத் திணித்து தன்னோடு இணைத்து சாந்தமாய்ச் சுரண்டுதல்" இங்கு நீட்சே ஏகாதிபத்தியக் கொள்கைக்கு அரசியல் அங்கீகாரம் வழங்குகிறான். அதற்காக பொதுவான மனித நீதிகளை தகர்க்க அவன் பின் நிற்கவில்லை. "சட்டம் என்பது ஒரு புதிய தீங்கு பண்டைய உயர் குலங்கள் இதை ஒப்பவில்லை. சட்டம் உயர் குலத்துக்கு எதிரான வெட்கக் கேடு" ஜெர்மனியப் பெரும் தேசியம் அதன் ஆக்கிரமிப்பு முன்பு சகல மனித குல ஒழுங்குகளையும் நீட்சே உடைக்கின்றான். மறுபக்கம் "பணக்காரர்கள் சகித்துக்கொள்ள முடியாத விடையங்களை ஏழைகள், தொழிலாளர்கள் சகித்துக்கொள்கிறார்கள்" என்று வர்க்க சமூக ஒழுங்குகளை நியாயப்படுத்துகிறான்.

"வரிகளை செல்வந்தர்கள் மேல் விதிப்பதன் மூலம் சோசலிசத்தை இல்லாமல் செய்து விடலாம், முதலாளிகள் வர்த்தகர்கள் மேல் ஏறுமுகமானவரிகளை விதிப்பதன் மூலம் அவர்களை மெல்ல மெல்லக் கரையச் செய்து விட முடியும்" என முதலாளித்துவ சீர்திருத்தம் பறைகிறான். மாக்சியமானது வர்க்க சமூகத்தைத் தகர்த்து விஞ்ஞானத்தின் எல்லா அதிசயங்களையும் உயர் கலாச்சாரக் கூறுகளையும் சகல மனிதர்கட்கும் சொந்தமாக்கவேண்டும் என்று போராடிக்கொண்டிருந்த சமயம் ஜெர்மனிய பாசிசத்தின் மூல ஊற்றாக வர்க்க வேறுபாடுகளை இனம் சார்ந்த உயர் மனிதக் கோட்பாடுகளில் மறைத்தபடி மாக்சிய விரோதியாக நீட்சே எழுகின்றான். இழிநிலையிலும், துயரத்தால் சூழப்பட்ட நிலையிலும், அடிமைத்தன நிலையிலும், திருப்தியடைந்து மக்களை மகிழ்ச்சியாய் மாமனிதனுக்கு அடங்கி நடக்கப்போதிப்பதே நீட்சேயின் குறிக்கோள்.

நீட்சேயின் பாசிசச் சீடர்களில் ஒருவரான பவுல் என்ஸ்ட் (Paul Ernst) 1920களில் சோசலிஸ்டடுக்கள், கொம்யூனிஸ்டுகள் முதலான போக்கிலிகளை தெருக்களில் தூக்கிலிடவேண்டும் என்றான். லெனின் மனைவியான "குருப்ஸ்காயா" நீட்சேயைக் கற்று இருந்தார். ஜெர்மனிய மேலாதிக்கத்திற்கும் ரஷ்யக் பெரும் தேசியவாதத்துக்கும் அது மூலமாய் இருப்பதைக் காட்டினார். மாக்சியப் பெண்ணியவாதியான அலக்சான்ரா கொலந்தாய் (Alexandra Kollantai) 1858 இல் நீட்சேயை ஜெர்மனிய மொழியிலேயே கற்று அதன் அரஸ்டோட்டலின் சிந்தனைப் பாதிப்பு சமூக மேலாண்மைப்போக்கையும் கண்டு சொன்னார். லெனின் கால இளம் கொம்யூனிஸ்ட் கழகத்தின் உறுப்பினர்களிடையே இவை படித்து விவாதிக்கப்பட்டன. ஸ்டாலின் காலத்திலேயே நீட்சே முழுமையாய் தடைசெய்யப்பட்டது. லெனின் 1905 இல் சுவிஸ்லாந்தில் இருந்த காலத்தில் நீட்சேயை ஜெர்மனிய மூல மொழியிலேயே கற்று இருந்தார். ரொட்ஸ்கி 1920களில் நீட்சேயிசத்தை வளர்ந்து வரும் பாசிச அதிகாரத்துக்கான கருத்தியல் என்று விமர்சித்தார். ஜெர்மனியின் மிகப்பெரும் மாக்சிய இலக்கிய விமர்சகரான பிரான்ஸ்மேரிங் (Franz mehring) 1888முதல் மூன்று முறை நீட்சேயின் ஜெர்மனிய ஆதிக்கக் கருத்தியல் வடிவங்களை ஆய்ந்து வெளிப்படுத்தினார். அதன்பின் ஜெர்மனிய மாக்சிய விமர்சகரான கான்ஸ்குன்தர் (Hans Gunther) 1930களின் நடுப் பகுதிகளில் பாசிசம் நிலவிய காலத்தில் பாசிசத்துக்கும் நீட்சேக்கும் உள்ள தத்துவ உறவை ஆராய்ந்தார். (பின்பு பாசிஸ்டுகளிடமிருந்து தப்பிச்சென்று சோவியத் யூனியனில் இருந்த போது ஸ்டாலினால் கொல்லப்பட்டார்) நாசிகளின் வீழ்ச்சியின் பின்பு புகழ்பெற்ற மாக்சிய விமர்சகரான லூக்காஜ் (Georg Lukacs) நீட்சேயையும் பாசிசத்தையும் விரிவாக ஆய்வு செய்து எழுதினார். இன்று தமிழ்ப்பரப்புப் பின்நவீனத்துவ வாதிகள் இட்டுக்காட்டுவது போலல்லாமல் நீட்சேயிசம் அப்போதே அம்பலப்படுத்தப்பட்டு அரசியல் ரீதியில் சிதறடிக்கப்பட்டது. நீட்சேயின் மொழியழகிலும் இலக்கிய நடையிலும் பறிபோன அரசியல், சமூக உணர்வற்ற, புலன்கெட்டதுகளும், மாக்சியவிரோதிகளும் பாசிஸ்டுகளுமே அதைப் பொத்திப் பொத்தி வளர்த்தனர்.

www.tamilarangam.net

## இறுதி நீட்சே

"நான் யார்? அதைக் கண்டறிவது கடினம். ஒரு நூறுவருடம் காத்திருந்து ஒரு வேளை ஒரு மனிதன் அற்புதமானவன் யார் இந்த உயர் பிரிட்டிரிச் நீட்சேயைக் கொள்ளையிட்டது. என்று காணக்கூடும்". எனத் தன்னைப்பற்றித்தானே எழுதிய நீட்சே "நீட்சேயைப் பற்றி நீட்சே" என்று கட்டுரை தீட்டினான். "நான் மனிதனல்ல நான் வெடிகுண்டு" (Ich bin kein mensch Ich bin Dynamit) என்கிறான். "இந்த உலகில் நான் எனக்குரிய கட்டத்துக்கு முன்பே வந்து விட்டேன் என் கருத்துகட்கு இன்னமும் காலம் வரவில்லை" என்று அறிவிக்கும் நீட்சே உலகில் அத்தனை கொடுமைகளும் நிரம்பிய ஒரு காலகட்டத்தில் வாழ்வதாய் அதீத கற்பனையில் வீழ்ந்தான். தான் வேட்டையாடப் படுவதாய் முறையிட்டான். தன்னைப்பற்றி திரும்பத் திரும்பப்பேசினான். "நான் மர்மமானவன் வாழ்க்கையைப்பேசுபவன்" என்ற அறிவிப்பு ஒரு புறமும் என்னைச்சொல்ல வார்த்தைகள் வேண்டும் பலவீனத்தில் எல்லா வடிவமும் தன்னில் ஒலிப்பதாயும் உலகம் கிறுக்கர்களின் இல்லமாகி விட்டது என்று அழுதான். நீட்சே தன் குட்டி முதலாளிய குணத்துக்கு ஏற்ப முரண்பாடுகளும் கனவுகளுக்கும் ஏற்ப சமூகநியாயங்கள் பேசினான். சாகசவாதம் பரபரப்பு மூட்டல் சமூகத்தில் முதன்மைவகிக்க முடியவில்லை என்ற மனக்குறை பொறுமையற்ற துணிச்சல் வாதம் என்பன அவனிடம் ஆட்சியிலிருந்தன. கிறிஸ்தவ சமயம் சார்ந்த இளம் பருவக் கட்டொழுங்குகள் குடும்பத்தில் நிலவிய கடுமையான அதிகார நிலை நண்பர்களற்ற தனிமை என்பன அவனது பிற்கால எழுத்துக்களில் அதீத துணிச்சல் மனித வெறுப்பு, வாழ்வில்காணக்கிட்டாத மாமனிதனைப் படைக்கும் நிலை இவைகளுக்குள் துரத்திவிட்டது. பலவகை முரண்பாடுகளின் தொகுதியாக்கியது. தப்பிக்கொள்ளும் வாய்ப்புள்ள இரட்டைத் தன்மையான உருவக வடிவில் பூடகமாய் எழுதுவதன் மூலம் சந்தர்ப்பவாத மற்றும் நிலையற்ற தன்மைகளையும் வெளியிடுகின்றான். விஞ்ஞானக்கட்டுத்திட்டத்தோடு அறிவியல் இறுக்கத்தோடு எழுத முடியாமையின் பலவீனத்தை மறைக்க இலக்கிய அழகிலும் அலங்காரச் சொற்பிரயோகங்களிலும் இன மேன்மைக் கோட்பாடுகளிலும் மறைகின்றான்.

நீட்சேயின் சகோதரி எலிசபெத் பாசிசத்தின் அங்கமாய் செயற்பட்டவள். அவளின் கணவன் பென்கார்ட் போஸ்டர் (Benhard Forster) நீட்சே போலவே ரிச்சட்வாக்னர், சோப்பன்கோவர் இருவரதும் சீடன். அறியப்பட்ட யூத எதிர்ப்பு வெறியன். யூத மக்களுக்கு எதிரான கலவரங்களில் நேரடியாக சம்மந்தப்பட்டவன். அவன் பராகுவேயில் புதிய ஜெர்மனியம் (Neu Germanien) என்ற பாசிசக் குடியிருப்பை ஏற்படுத்த முயன்று அழிந்து போனான். அவன் இறந்த ஆண்டான 1889 இலேயே நீட்சேக்கு உளவியல் பாதிப்பு ஏற்பட்டது. முதலாம் உலக யுத்தம் பின்பான நீட்சேயின் சிந்தனைகளை ஆராய்ந்த ஒரு விமர்சகர் முதலாம் உலக யுத்தத்தில் ஜெர்மனிய இராணுவம் ஒரு கையில் பைபிளையும் மறுகையில் நீட்சேயின் சாரதூஸ்ட்ராவையும் தாங்கி யுத்தத்துக்குச் சென்றது என்றார். நாசிகால பாசிச வரலாற்றாய்வாளரான அல்பிரட் பவும்லர் (Alferd Beaumler) நீட்சேயிடமிருந்து தொடங்கினான். நீட்சேயின் விசுவாசியான ரோசன் பேர்க் எல்லா நீக்கிரோக்களையும் சிரியர்களையும் அழிக்க வேண்டும் என்றான். மாமனிதச் சிந்தனைகள் உலகை ஆளப் பிறந்தவர்கள் என்ற சித்தாந்தம் மில்லியன் கணக்கான மக்களின் அழிவுக்கு இட்டுச்சென்றது. கிட்லர் மாமனிதரின் பிரதிநிதியாய் எழுந்து ஒரு மக்கள், ஒரு அரசு, ஒரு தலைவர் (Ein volk ,Ein Reich, Ein Fuher) எனப்பிரகடனப் படுத்தினான். நீட்சேயின் பாசிசக் கனவுக்கு உயிர் கொடுத்தான். நீட்சேயை புழுகித்திரியும் பின்நவீனத்துவ விசுவாசிகள் நீட்சேயை பன்முகவாசிப்புக்குட்படுத்தாததின் மர்மங்கள் தெளிவானவை. "என்னைப் படி நன்கு வாசி!" (Lernt Mich gut Lesen!) எனும் நீட்சேயின் வேண்டுகோளை அவர்கள் ஏற்றால் அவனின் பாசிசத்தின் மூலங்களை தரிசிக்க முடியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கட்டுரை எழுத உதவிய நூல்கள்


நீட்சேயின் வரலாற்றுக்கு -
Alice Miller der Demiedene Schissel-1988.

ஜெர்மனிய தேசிய வாதம், ஏகாதிபத்திய வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் -
Robert Kurz ,d; 'Schwarz Buch Kapitalismus" (1999).

நீட்சேயின் அரசியல் தத்துவார்த்த பின்புலன்களை விளங்க
பிரான்ஸ்மேரிங்கின் Neukantianismus, Neuhegelianismus, Neularmarckismus, நூலின் 1888, 1897, 1909 ஆண்டுக் கட்டுரைகள்.

நாசிகள் மீதான நீட்சேயிச செல்வாக்கு பற்றிய ஆய்வுக்கு
திரு.அழகலிங்கத்தால் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட 'Beitragl zur Geschichte der "Asthetik" எனும் ஜோர்ஜ் லூக்காக்ஜ் இன் எழுத்து.

சாராதூஸ்ரா பற்றிய தகவல்கள்-
Annette Von Heinz- Frieder Kur எழுதிய "Propheten Seher zukunftsforscher" எனும் நூல்.

நீட்சேயின் "Morgen Rote" எழுத்துப் பற்றிய தகவல்கள்-
Friedrich Nietzsche - Phaidon Verlag. Kottwig.

*பின்வரும் பத்திரிகைகளில் வெளிவந்த நீட்சே நூற்றாண்டு விமர்சனக் கட்டுரைகளின் விபரங்கள் பயன்படுத்தப்பட்டன.*

1. Neues Deutschland, 26/27 August 2000, 12/13 August 2000, 24/25 Juli 2000, 3
2. Junge welt -25 August 2000.
3. Berliner zeitung 9/10 September 2000.
4. Welt am Sonntag 6 August 2000.
5. Berliner Morgenpost 10 Juli 2000.
6. Die zeit 24 August 2000.
7. Frank Furter Rundschau 26 August 2000.
8. Der Spiegel - 34, 2000.
9. இந்தியத் தத்துவ இயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும் - தேவி பிரசாத் சட்டோபாத்தியாய.
10. எம்.என்.ராய் எழுதிய “பாசிசம்”.
11. அம்பேத்கர் தொகுதி - 6.
12. இயங்கியலின் அடிப்படைகள் சோவியத் வெளியீடு.
13. வருங்காலச் சமுதாயம்.

www.tamilarangam.net

# மனு - அதிமனிதன் - நீட்ஷே



## அம்பேத்கர்

மனித சமூகத்துக்கான புனிதக் கட்டளைகள் என்றளவில், மதக் கருத்துக்கள் இருவகைப்படுகின்றன என்பதை மதப் புரட்சி பற்றிய மேற்கண்ட பகுப்பாய்வு காட்டுகிறது.

*சமூகத்தை மையமாகக் கொண்டவை ஒரு வகை.*

*தனிமனிதனை மையமாகக் கொண்டவை மற்றொரு வகை.*

அதே பகுப்பாய்வு மேலும் காட்டுவது என்னவென்றால்,

சமூகமைய மதக் கருத்துக்களைப் பொறுத்தளவில் எது 'நல்லது', 'சரியானது' என்பதற்கான சோதனை (அதாவது, அறவியல் அமைப்பின் சோதனை),

*அக்கருத்துக்கள் சமூகப் பயன்பாட்டுத்தன்மை கொண்டவையா என்பதே.*

தனிமனிதமைய மதக் கருத்துக்களைப் பொறுத்தளவில் இச்சோதனை,

*அக்கருத்துக்கள் நடுநிலை தவறா நீதி கொண்டவையா என்பதே.*

சமூகப் பயன்பாடு, தனிமனித நீதி என்ற இந்த இரண்டு வகைச் சோதனைகளிலும்

www.tamilarangam.net

இந்துமதத் தத்துவம் தேறுவதில்லை. ஏனென்றால், மனித சமூகத்துக்கான புனிதக் கட்டளை என்றளவில் அதன் மதக் குறிக்கோள் தன்னளவிலேயே ஒரு வகையாக, தனியொன்றாக இருக்கிறது. இக்குறிக்கோளில் தனிமனிதனும் மையமல்ல; சமூகமும் மையமல்ல. ஒரு வர்க்கம்தான் இதன் மையம் - 'பிராமணர்கள்' எனப்படும் 'அதிமனித' வர்க்கம். மறுக்கப்படவியலாமல் முன்னுந்தி நிற்கும் இந்த உண்மையைக் கருத்தில் கொண்டால், தனிமனித நீதியையோ சமூகப் பயன்பாட்டையோ அடிப்படை கொள்ளாமல் இந்துமதத் தத்துவம் கட்டமைக்கப்பட்டிருப்பதன் காரணம் விளங்கும்.



முற்றிலும் வேறுபட்டதொரு கோட்பாட்டை அடிப்படையாய்க் கொண்டது இந்துமதத் தத்துவம். எது 'சரியானது', 'நல்லது' என்ற கேள்விக்கு இந்துமதத் தத்துவம் அளிக்கும் விடை வித்தியாசமானது. ஒரு செயல் சரியானதாகவோ நல்லதாகவோ இருக்க வேண்டுமானால், அது பிராமணர்கள் என்ற அதிமனித வர்க்கத்தின் நலன்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்கிறது.

'ஒரு விஷயம் தெளிவாய் இருக்கிறதா என்பதைத் தேடித்தான் அறிய வேண்டும்' என்றார் ஆஸ்கார் வைல்ட். மனுவோ தேடியறியும் வேலையெதையும் வைப்பதில்லை. தெளிவுபட, ஓங்கிய குரலில் கம்பீரமாய்த் தன் கருத்தை முன்வைக்கிறார் - அதிமனிதர்கள் யார் என்பதை; அந்த அதிமனிதர்களின் நலன்களுக்கு உகந்த செயல் எதுவாய் இருந்தாலும், அது மட்டுமே 'சரியானது', 'நல்லது' என்ற தகுதியைப் பெறும் என்பதை. மனுவின் கூற்றையே மேற்கோள் காட்டுகிறேன்.

'தன் ஒப்புயர்வற்ற தன்மையினாலும், பிறவிமூலத்தின் மேன்மையினாலும், (குறிப்பிட்ட) கட்டுப்பாட்டு விதிகளைக் கடைப் பிடிப்பதனாலும், குறிப்பிட்ட தூய்மையினாலும், பிராமணனே அனைத்து வர்ணத்தாருக்கும் அதிபதி ஆகிறான்' (10:3).

இம்மாதிரியான காரணங்களை மேலும் விரித்துக்கொண்டே போகிறார். அதுவும் இப்படியொரு தன்மையில்:

'பிராமணன் என்பவன் (பிரஜாபதியின், அதாவது கடவுளின்) வாயிலிருந்து உதித்தவனாதலால், அவன்தான் முதலில் பிறந்தவனாதலால், அவனே வேதத்தைக் கைக்கொண்டவன் ஆதலால், அனைத்துப் படைப்புக்கும் அவனே அதிபதியாகிறான்' (1:93).

'தெய்வங்களுக்கும், பித்ருக்களுக்கும் இவன் மூலம் படையலிடப்படவென்றும், இப் பிரபஞ்சம் காக்கப்படவென்றும் - விரதங்கள் காத்துப் பின் தன் வாயிலிருந்தே பிராமணனைப் படைத்தான் தன்னிருப்பான (சுயம்பு) கடவுள் - ஆதலால்' (1:94).

'எவனுடைய வாயின் மூலம் தமக்குரிய அவிர்ப்பாகத்தைத் தெய்வங்களும், தமக்குரிய பிண்டங்களைப் பித்ருக்களும் தொடர்ந்து பெற்று வருகிறார்களோ, அவனைவிட மேம்பட்டதென்று படைக்கப்பட்டவற்றில் எதுதான் இருக்க முடியும்?' (1:95).

'படைக்கப்பட்ட அனைத்திலும் மிகச் சிறந்தவை உயிருள்ளன; உயிருள்ளவற்றுள் மிகச்சிறந்தவை அறிவைக் கொண்டு உயிர்ப்பன; அறிவுள்ளவற்றுள் மனிதர்கள்; மனிதர்களில் பிராமணர்கள்' (1:96).

தெய்வங்களுக்கும், பித்ருக்களுக்கும்

www.tamilarangam.net

படையல்களைப் பெற்றுத் தருவதன் பொருட்டு, கடவுளால் தன் வாயிலிருந்தே படைக்கப்பட்டதைத் தவிர, பிராமணன் உயர்முதல் நிலையில் இருப்பதற்கு வேறொரு காரணத்தையும் மனு தருகிறார். அவர் சொல்கிறார்:

'ஒரு பிராமணனுடைய பிறவி என்பதே புனித தர்மத்தின் (வேதத்தின்) நித்ய அவதாரம். ஏனென்றால், புனித தர்மத்தை நிறைவேற்றுவதற்காகவே பிறந்து, பின் பிரம்மத்தோடு (கடவுளோடு) ஐக்கியமாகி விடுகிறான்' (1:98).

'தர்மத்தின் செல்வங்களைக் காக்கும் பொருட்டுப் பிறவியெடுக்கும் ஒரு பிராமணன் தன் பிறப்பாலேயே புவியிலுள்ள அனைத்திலும் உயர்ந்தவனாகிறான்; படைக்கப்பட்ட அனைத்துக்கும் அதிபதி ஆகிறான்' (1:99).

'பிராமணன் உண்ணும் உணவு அவனுடையதே; அவன் உடுத்தும் உடை அவனுடையதே; அவன் அளிக்கும் கொடையும் அவனுடையதே. பிற மனிதரெல்லாம் அவனுடைய தயவால் வாழ்பவர்' (1:101).

ஏனென்றால், மனுவைப் பொறுத்தளவில்,

'உலகில் உள்ள அனைத்துமே பிராமணனின் உடைமையாகும். தன் பிறவிமூலத்தின் மேன்மையினால் பிராமணன் உண்மையாகவே அனைத்துக்கும் உரிமை படைத்தவனாகிறான்' (2:100).

மனு போதிப்பதாவது:

'அரசன் அதிகாலை எழுந்ததும், மூன்று வேதங்களையும் சாஸ்திரங்களையும் (அரசியல் நீதி) கற்றுணர்ந்த பிராமணர்களை வணங்கி, அவர்களது ஆலோசனைகளைப் பின்பற்றுவானாக' (7:36).

'வேதம் அறிந்த, தூய்மையான, முதிர்ந்த பிராமணர்களை அவன் தினமும் வணங்கி வருவானாக' (7:38).

'அரசன் அதிகாலை எழுந்ததும், மூன்று வேதங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்களைப் பணிந்து, அவர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவானாக' (7:37).

'வயதிலும் இறையொழுக்கத்திலும் முதிர்ந்தவராய், வேதங்களை அறிந்தவராய், உடலிலும் மனதிலும் தூய்மை பெற்றவராய் விளங்கும் பிராமணர்களை அவன் தொடர்ந்து மதித்து வருவானாக. முதியோருக்கு மரியாதை செய்பவன் கொடிய அரக்கர்களிடமிருந்தும் மரியாதை பெறுவான்' (7:38).

'மிக இக்கட்டான தேவையில் அரசன் இருந்தாலும், பிராமணர்களின் உடைமையைக் கவர்ந்து அவர்களுக்குச் சினமூட்டாதிருப்பானாக; சினமூட்டப்பட்ட பிராமணர்கள் தம் யாகங்களாலேயே, சாபங்களாலேயே அரசனை, அவனது நால்வகைப்படைகளோடும் சேர்த்து, அழித்து விடுவர்' (9:313).

இறுதியாக மனு கூறுவதாவது:

'(இதன் மூலம்) பிராமணன் (உலகைப்) படைப்பவன், தண்டிப்பவன், குரு, (ஆகவே, படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும்) புரவலன் என்று உறுதிப்படுகிறது. எந்த ஒரு மனிதனும் பிராமணனிடம் சினமூட்டும்படி ஏதும் கூறாதிருப்பானாக; கடுமையான சொற்களைப் பயன்படுத்தாதிருப்பானாக' (11:35).

அதிமனிதத் தத்துவத்தை, எது நல்லது, சரியானது என்ற தத்துவத்தை முழுமையாய், முடிவாய்ச் சொல்வதற்கு, பின்வரும் மனுவின் இரண்டு உரைகளைத் தருகிறேன்.

'விண்ணுலகு கருதி, அல்லது இப்பிறப்பின், அடுத்த பிறப்பின் நலம் கருதியாகிலும், சூத்திரன் பிராமணர்களுக்குப் பணிபுரிவானாக; பிராமணனின் பணியாள் எனப்படுபவன், அப்பட்டத்தினாலேயே தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறுதிப் பலன்களை அடைந்துவிடுகிறான்' (10:122).

'பிராமணனுக்குப் பணிவிடை என்பதே ஒரு சூத்திரனுக்கு மிகச் சிறந்த தொழில் ஆகும்; இதுவன்றி வேறெது செய்தாலும் அது பலனைத் தராது' (10:123).

மேலும் மனு கூறுவதாவது:

'இயலுமென்றாலுங்கூட, ஒரு சூத்திரன் சொத்துச் சேர்க்கக்கூடாது; சொத்துச் சேர்த்த சூத்திரன் பிராமணனுக்கு வேதனையைத் தருகிறான்' (10:129).

இந்துமதத் தத்துவத்தின் மையத்தை, அதன் சாரத்தை மேற்கண்ட மனுவின் உரைகள் வெளிப்படுத்துகின்றன. இந்துமதம் என்பது அதிமனிதனுக்கான வேதவாக்கே. அதிமனிதனுக்கு எது உகந்ததோ, அதுவே அறிநெறிப்படி சரியானது, நல்லது என்று போதிக்கிறது இந்துமதம்.

இந்தத் தத்துவத்திற்கு இணையாக வேறெதுவும் இருக்கிறதா? இருக்கிறது; அதைச் சுட்டிக்காட்ட எனக்கு விருப்பமில்லையானாலும் அது வெளிப்படையாகவே இருக்கிறது. இந்துமதத்தின் இத்தகைய தத்துவத்திற்கு இணையான தத்துவத்தை நீட்ஷேயிடம் காணப்பெறலாம். இப்படிக் கூறுவதால் இந்துக்கள் கோபப்படுவார்கள்; இயல்பானதுதான் - நீட்ஷேயின் தத்துவம் மிகவும் வெறுப்புக்காளானதல்லவா? அது ஒருபோதும் வேர்கொள்ளவில்லை.

நீட்ஷேயின் வார்த்தைகளிலேயே சொன்னால், அவர் 'சில நேரங்களில் மேற்குடியாட்சிக்கான, கிழாராட்சிக்கான தத்துவஞானி என்று போற்றப்பட்டார்; சில நேரங்களில் தூற்றப்பட்டார்; சில நேரங்களில் அனுதாபத்திற்காளானார்; சில நேரங்களில் மனிதனே அல்லவென்று ஒதுக்கித் தள்ளப்பட்டார்'.

*வல்லமை விருப்பாற்றல், வன்முறை, ஆன்மிக மதிப்பீடுகளை மறுத்தல், அதிமனிதன், பாமரமனிதனின் தியாகம், அடிமைத்தனம், இழிநிலை ஆகியவற்றோடு* அடையாளமிடப்படுவது நீட்ஷேயின் தத்துவம். இத்தகைய சிறப்படையாளங்களால் அவருடைய தலைமுறையினரின் மனங்களிலேயே அவருடைய தத்துவம் ஒருவகையான வெறுப்பையும், பீதியையும் உண்டாக்கியிருந்தது. அறவே வெறுத்தொதுக்கப்படவில்லையாயினும், முற்றிலும் தவிர்க்கப்பட்டவராகவே அவர் இருந்தார். அவரும், 'மறைவுக்குப் பின் அறியப்படும் மனிதர்களில்' ஒருவராகத் தன்னைக் கருதி ஆறுதல் கொண்டார்.

தன்னைப் போற்றக்கூடிய மக்கள் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஒரு தொலையெதிர்காலத்தில் தனக்கு வாய்ப்பார்கள் என்று அவரே கணித்துக் கொண்டார். இதிலும்கூட நீட்ஷே ஏமாற்றத்திற்கு ஆளானார். இக்காலத்தாழ்வு, அவருடைய தத்துவத்தைப் போற்றுவதற்கு மாறாக, அவருடைய தலைமுறையினர் அவரைப்பற்றிக் கொண்டிருந்ததைக் காட்டிலும், பீதியையும் வெறுப்பையும் அதிகரிக்கவே செய்தது. நீட்ஷேயின் தத்துவம் நாஸிஸத்தை உருவாக்க வல்லது என்பது வெளிப்பட்டதுதான் முக்கியமான காரணம்.

இப்படிப்பட்ட கற்பிதத்தை அவருடைய நண்பர்கள் தீவிரமாக மறுத்திருக்கிறார்கள் (M.P. Nicholas, *From Nietzsche Down to Hitler*, 1938). ஆனால் அதிமனிதனை உருவாக்கப் பயன்படுவதைப் போலவே, அதியரசை (super state) உருவாக்கவும் அவரது தத்துவத்தைப் பயன்படுத்த முடியும் என்றறிவது ஒன்றும் கடினமானதல்ல. இதைத்தான் நாஸிகள் செய்திருக்கிறார்கள்.

எப்படியிருந்த போதிலும், நீட்ஷேயிடமிருந்தே தங்கள் வழிமூலத்தைக் காண்கிறார்கள் நாஸிகள்; அவரையே தங்கள் ஞானப் பிதாவாகக் கருதுகிறார்கள். நீட்ஷேயின் சிலைக்கருகில் நின்று ஹிட்லரே படம் பிடித்திருக்கிறார்; தன் ஆசானின் கையெழுத்துப் பிரதிகளைத் தன்னுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறப்புப் பாதுகாப்பில் வைத்துக் கொள்கிறார்; நீட்ஷேயின் நூல்களிலிருந்து உரைகள் எடுக்கப்பட்டு, 'புதிய ஜெர்மானிய நம்பிக்கை' என்று நாஸிக் கூட்டங்களில் உரத்துப் பிரகடனப்படுத்தப்பட்டன. நீட்ஷேயைத் தங்கள் ஞான மூதாதை என்று நாஸிகள் சொந்தம் கொண்டாடுவதை அவருடைய நெருங்கிய உறவினர்களும் எதிர்க்கவில்லை.

நீட்ஷேயின் சிந்தனையே செயலுருவில் ஹிட்லர் என்றும், நாஸிகளின் அதிகார எழுச்சிக்கு அதிமுன்னோடி நீட்ஷே தான் என்றும், நீட்ஷேயின் ஒன்றுவிட்ட சகோதரரான ரிச்சர்ட் ஆக்லரே ஒப்புக் கூறுகிறார். தன் சகோதரன் மீது உரிமை கொண்டாடிக் கௌரவித்ததற்காக அதிபருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், ஜராதுஷ்டிரனின் தீர்க்கதரிசனமான 'அதிமனிதனின்' அவதாரத்தை அவரில் காண்பதாக நீட்ஷேயின் உடன்பிறந்த சகோதரியே தான் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பு தெரிவிக்கிறார்.



யாருடைய பெயரும் தத்துவமும் மிகுந்த பீதியை, வெறுப்புணர்வைத் தூண்டுகிறதோ, அந்த நீட்ஷேயை மனுவுடன் பொருத்திக் கூறுவது இந்துக்களுக்கு நிச்சயம் அதிர்ச்சியையும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்தவே செய்யும். ஆனால் உண்மை அப்படித்தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மனுவின் திட்டத்தையே தன் தத்துவத்தில் கையாண்டிருப்பதாக நீட்ஷேயே வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

*கிறிஸ்துவுக்கு எதிரானவன்* என்ற நூலில் நீட்ஷே கூறுவதாவது:

என்ன நோக்கத்திற்காகப் பொய்மைகள் புனையப்படுகின்றன என்பதுதான் இறுதியில் கேள்வியாய் நிற்கிறது. கிறிஸ்துவத்தில் 'புனித' நோக்கங்கள் அறவே இல்லை என்ற உண்மை தான், அதன் வழிமுறைகள் பற்றிய எனது ஆட்சேபத்தின் அடிப்படை. அதன் நோக்கங்கள் தீமையானவை - வாழ்வை நஞ்சாக்குவது, தூற்றுவது, மறுப்பது, உடலை இகழ்ந்தொதுக்குவது, 'பாவம்' என்ற கற்பிதத்தால் மனிதன் தன்னையே தாழ்த்திக் கொள்வது, தன்னையே மாசுபட்டவனாக்கிக் கொள்வது -- வழிமுறைகளும் தீமையான வழிமுறைகள். மனுவின் நீதிநூலைப் படிக்கும்போதோ என் உணர்வுகள் நேர்மாறாய் இருக்கின்றன. இணையற்ற அறிவார்த்தமும், ஒப்புயர்வின்மையும் கொண்ட அந் நூலை பைபிளோடு சேர்த்துக் கூறுவதே அறிவுத்திறத்திற்கு எதிரான பாவமாய் இருக்கும்.

ஏனென்று நீங்கள் உடனே கணித்து விடலாம். அது (மனுநூல்) ஒன்றும் வெறுமனே யூத மதகுருமார்களின் போதனைகளை, மூட நம்பிக்கைகளைக் கலந்தெடுத்த நாற்றமடிக்கும் யூதக்கலவையல்ல. அதன் மரபிலும், அதனுள்ளிலும் ஓர் உண்மையான தத்துவம் இருக்கிறது. மிக மிகக் கறாரான உளவியலறிஞனுக்கும் ஆய்ந்து பார்க்க ஆழமாக ஏதாவது இருக்கிறது.

எல்லாவற்றிலும் மறக்கக்கூடாத மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், எந்த வகையான பைபிளிலிருந்தும் அது அடிப்படையிலேயே வேறுபட்டது என்பதுதான். இதன் துணைகொண்டு தத்துவஞானிகளும் வீரர்களுமான உயர்குலத்தோர் பாமர மக்களைப் பாதுகாத்து வழிநடத்துகின்றனர். இது உன்னதமான மதிப்பீடுகள் நிரம்பப் பெற்றது. தன்னிலும் வாழ்விலும் ஆரோக்கியம் கொண்டுவிட்ட வெற்றியுணர்வில், வாழ்வுக்கு இசைவு கூறி, முழுமை பெற்றுவிட்ட உணர்வைக் கொண்டிருப்பது. ஞானசூரியன் ஒளிர்கிறான் அந்நூலெங்கும்.

அளப்பரிய விகாரத்தோடு கிறிஸ்துவம் புகைகப்பி வைத்திருக்கும் 'குழந்தை பெறுதல், பெண்கள், திருமணம்' போன்ற விஷயங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கே (*மனுவில்*) மனமார்ந்து, மரியாதையோடு, அன்போடு, நம்பிக்கையோடு கையாளப் படுகின்றன.

'கள்ளக்கலவி புரியாதபடிக்கு, ஒவ்வொரு ஆணும் தனக்கென ஒரு மனைவியை, ஒவ்வொரு பெண்ணும் தனக்கென ஒரு கணவனை ஏற்படுத்திக் கொள்ளட்டும்........ விரகத்தில் வெந்து கிடப்பதைக் காட்டிலும் விவாகம் புரிந்து கொள்வது நல்லது'.[1]

இப்படிப்பட்ட அருவருப்பான விஷயங் களைக் கொண்டிருக்கும் ஒரு புத்தகத்தை எப்படித்தான் ஒருவன் தன் பெண்டு பிள்ளை களுக்குத் தரமுடிகிறதோ! மேரியின் களங்கமற்ற கர்ப்பம் என்ற கருத்தால் மனிதகுலத்தின் தோற்றமே - மனிதனின் தோற்றம் கிறிஸ்துவத்தில் கூறப்பட்டுள்ளபடிதான் என்றளவில்- களங்கப்பட்டு விடும்போது, ஒருவன் கிறிஸ்து வனாய் இருப்பது கௌரவத்துக்கு உகந்ததா?

பெண்களைப்பற்றி இதமான, அன்பான வாசகங்கள் மனுவின் நீதிநூலில் உள்ளளவு வேறொரு நூலில் நான் கண்டதில்லை.

'பெண்ணின் வாய், கன்னியின் மார்பு, குழந்தையின் பிரார்த்தனை, வேள்விப்புகை - இவை எப்போதுமே தூய்மையானவை',

என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் மனு.

இறுதியாக, இன்னுமோர் இடத்தில் குறிப்பிடுகிறார் (இதுவும்கூட ஒரு புனிதப் பொய்யாகவே இருக்கக்கூடும்)[2] :

'நாபிக்கு மேல் உள்ள துவாரங்கள் அனைத்தும் தூய்மையானவை; கீழுள்ள அனைத்தும் தீட்டானவை. ஒரு கன்னிப் பெண்ணிடம் மட்டுமே, உடலின் அனைத்துப் பகுதிகளும் தூய்மையானவை'.

'ஜராதூஷ்டிரன்' என்பது மனுவின் புதிய பெயரே, *இவ்வாறு* சொன்னான் *ஜராதூஷ்டிரன்* என்பது *மனு ஸ்மிருதியின்* புதிய பதிப்பே என்பதை மேலுள்ளவை சந்தேகத்திற்கு இடமில்லாமல் காட்டுகின்றன. மனுவுக்கும் நீட்ஷேவுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடு இருக்குமானால், அது இதுதான்:

இப்போதுள்ள மனித இனத்தோடு ஒப்பிட, அதியாற்றல் வாய்ந்த அதிமனித இனம் என்ற புதியதொரு மனித இனத்தைப் படைக்க உண்மையான ஆர்வம் கொண்டிருந்தார் நீட்ஷே; மனுவோ, அதிமனிதர்கள் என்று தங்களைக் கற்பித்துக்கொண்ட ஒரு சமூக வர்க்கத்தினரின் தனியுரிமைகளை நிலை நாட்டுவதற்கான ஆர்வம் கொண்டிருந்தவர். நீட்ஷேயின் அதிமனிதர்கள் தங்கள் தகுதியால் அதிமனிதர்கள் எனப்படுபவர்கள். மனுவின் அதிமனிதர்களோ, தங்கள் பிறப்பால் அதிமனிதர்கள் எனப்படுபவர்கள். நீட்ஷே பாரபட்சமற்ற ஓர் உண்மையான தத்துவ ஞானி. மனுவோ, ஒரு சமூகக் குழுவில் பிறந்தவர்கள் அதிமனிதர்கள் என்பதற்கான தகுதிகளை இழந்திருந்தபோதிலும், அப் பட்டத்துக்கான தனியுரிமைகளை இழக்காத படி, அவ்வர்க்கத்தினரின் நலன்களை முன்னிறுத்துவதற்காக அமர்த்தப்பட்ட கையாள். மனுவின் இந்த உரைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்:

'மேற்குறிப்பிட்டபடி தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளைப் புரிந்து ஒரு பிராமணன் பிழைக்க முடியவில்லை யானால், ஒரு சத்ரியனுக்கான கடமைகளைப் புரிந்து அவன் பிழைப்பானாக. அதுதான் அவனது அடுத்த சமூகத் தரநிலை' (10:81).

'இவ்விருவகையான தொழில்களிலும் அவனால் பிழைக்க முடியாமல் போனால் என்ன செய்வது என்று கேட்கப்படுமே யானால், அவன் ஒரு வைசியனாக வாணி பத்திலும், உழவிலும், கால்நடை பேணுவதிலும் ஈடுபட்டுப் பிழைப்பானாக' (10:82).

'கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டாலும், அர்ப்பணிக்கப்படாவிட்டாலும், அக்னி மிகப் புனிதமானது. அதைப்போலவே, அறிஞனா யினும், அறிவீனனாயினும் பிராமணன் மிகப் புனிதமானவன்' (9:317).

'எனவே, பிராமணர்கள் எவ்வகை இழிதொழிலில் ஈடுபட்டிருந்தாலும், எல்லா வகைகளிலும் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் (ஒவ்வொருவரும்) தெய்வத்தன்மை பொருந்தியவர்கள்' ( 9:323).

www.tamilarangam.net

இப்படி, நீட்ஷேயின் தத்துவத்தைப் பார்க்கிலும், மனுவின் தத்துவம் தரந்தாழ்ந்த, சீர்கேடான தத்துவமாகும். எனவே இது நீட்ஷேயின் தத்துவத்தைவிட மிக மிக அருவருப்பான, வெறுக்கத்தக்க தத்துவமாகும். சமூகப் பயன்பாட்டுக்கான சோதனையிலும் சரி, தனிமனித நீதிக்கான சோதனையிலும் சரி, இந்துமதம் ஏன் தேறுவதில்லை என்பதை இது விளக்குகிறது.

பாமர மனிதனில் அக்கறை கொண்டதல்ல இந்துமதம். சமூகம் முழுமைக்குமான அக்கறை கொண்டதல்ல இந்துமதம். அதன் அக்கறை மையம் கொண்டிருப்பது ஒரு சமூக வர்க்கத்தில். அவ்வர்க்கத்தினரின் உரிமைகளை ஆதரிப்பதிலும் நிலைநிறுத்துவதிலுமே அக்கறை கொண்டது அதன் தத்துவம். அதனால்தான், இந்துமதத் தத்துவத்தில் 'அதிமனித' வர்க்கத்தின் நலன்களுக்காக, பாமர மனிதனுடைய, ஒட்டுமொத்தச் சமூகத்தினுடைய நலன்கள் மறுக்கப்படுகின்றன; ஒடுக்கப்படுகின்றன; கைவிடப்படுகின்றன.

எனவே இந்து அறநூல்களையும் மீறி, உபநிஷத்துக்களின் தத்துவத்தையும் மீறி - மனு முன்னிறுத்தும் இந்துமதத் தத்துவம் ஒரு சிறு அளவுகூட, இம்மியளவுகூட குன்றிப் போய்விடவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை. மதம் என்ற பெயரில், மனுவால் போதிக்கப்பட்ட இழிவைப் போக்க அந் நூல்கள் திறனற்று, வலுவற்றுப் போய்விட்டன. அவையெல்லாம் இருந்தபோதிலும்கூட, ஒருவர் கூறமுடியும்:

'இந்துமதமே, உன் பெயரே ஏற்றத்தாழ்வு!'.

---

## மொழிபெயர்ப்பாளர் குறிப்புகள்

1. *புதிய ஏற்பாடு* : 1 கொரிந்தியர் அதி. 7: 2,9.

2. 'என்ன நோக்கத்திற்காகப் பொய்மைகள் புனையப்படுகின்றன என்பதுதான் இறுதியில் கேள்வியாய் நிற்கிறது' என்று தொடங்கும் நீட்ஷேயின் மேற்கோள், 'இதுவும்கூட ஒரு புனிதப் பொய்யாகவே இருக்கக்கூடும்' என்று முடிவதால், 'புனிதப் பொய்' பற்றிய நீட்ஷேயின் மேல்விளக்கம் :

"எந்த ஒரு சிறந்த நீதிநூலும் கொண்டிருக்கும் அதே மூலத்தைத்தான் மனுநீதியும் கொண்டிருக்கிறது. பன்னூறாண்டு அனுபவத்தின், அறிவுநுட்பத்தின், அறச்சோதனையின் சாரமாய் விளங்குகிறது. விஷயங்களை எல்லாம் ஒரு முடிபுக்குக் கொண்டு வருகிறது; இனியும் எதையும் உருவாக்கிக் கொண்டிருப்பதில்லை.

இப்படிப்பட்டதொரு சட்டத் தொகுப்புக்கு ஒரு முன்நிபந்தனை இருக்கிறது. படிப்படியாய், வருந்திப் பெறப்பட்ட **உண்மையினுடைய** <u>*அதிகாரத்தை நிறுவும்*</u> வழிமுறைகள், அதனை <u>*மெய்ப்பிக்க*</u> ஒருவன் மேற்கொள்ளும் வழிமுறைகளிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டது என்ற அறிதல்தான் அந்த முன்நிபந்தனை. பயனுடைமையை ஒருபோதும் ஓதிக் கொண்டிருப்பதில்லை ஒரு நீதிநூல். தன் அடிப்படைகளையோ, அடித்துக் கூறும் முற்சான்றுகளையோ எடுத்தோதிக் கொண்டிருப்பதில்லை. அப்படிச் செய்து கொண்டிருந்தால், 'இவ்வாறு நடந்து கொள்வாய்' என்ற கட்டளைக் குரலை, பணிவைக் கோரும் அடிப்படையை அது இழந்துவிடுகிறது.

விஷயம் இதுதான்: ஒரு சமூகத்தின் படிவளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில், அச்சமூகத்தின் அங்கமான ஒரு வர்க்கம் - மிக ஆழமான நுண்ணோக்குக் கொண்ட, அதாவது மிகத் தொலைவான பின்னோக்கும் முன்னோக்கும் கொண்ட வர்க்கமானது -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்திலுள்ள அனைவரும் எவ்வாறு வாழலாம், எவ்வாறு வாழ முடியும் என்பதைத் தீர்மானிக்கும் அனுபவத்தேவைகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று அறிவிக்கிறது. சோதனைகள் நிறைந்த காலத்திலிருந்து, கடினமான அனுபவங்களின் காலத்திலிருந்து எவ்வளவு இயலுமோ அவ்வளவு வளப்பமான, நிறைவான விளைச்சலை அறுவடை செய்வதே இப்போதைய நோக்கமாகிறது. விளைவாக, வேறெதைவிடவும் இனித் தவிர்க்க வேண்டிய விஷயம் எதுவென்றால், மேற்கொண்டும் சோதனை செய்து கொண்டிருப்பதுதான் -

வரையறையற்றிருப்பது, பரிசோதிக்கப் படுவது, தேர்ந்தெடுக்கப்படுவது, விமர்சனத்துக் குட்படுவது என்ற நிலையிலேயே முடிவே இல்லாதபடி மதிப்பீடுகள் தொடர்ந்து கொண்டிருப்பது.

இந்நிலைக்கெதிராக ஓர் இரட்டை மதிற்சுவர் எழுப்பப்படுகிறது:

ஒருபுறம், ***வெளிப்பாடு*** என்பது -

சட்டங்களின் பின்னணிக் காரணங்கள் மனிதனில் உருவானவை அல்ல; படிப்படியான தொரு நீண்டகால நிகழ்வில், ஏராளமான பிழைபாடுகளுக்குப் பிறகு தேடிக் கண்டடையப் பட்டவை அல்ல.

மாறாக, சட்டங்கள் புனித மரபார்ந்தவை; அவை வரலாற்றில் உருப்பெற்றவை அல்ல; வரும்போதே முழுமையாய், குறைவற்றதாய், ஒரு கேளாக்கொடையாய், தெய்வாதீனமாய்த் தோன்றியவை

- என்ற கற்பிதம்.

மறுபுறம், ***மரபு*** என்பது -

இந்தச் சட்டம் நினைவெட்டாக் காலந்தொட்டே மாறுபாடே இல்லாமல் காலா காலத்துக்கும் நின்று நிலவி வந்திருக்கிறது; அதைக் கேள்விக்குட்படுத்துவது தெய்வத்துரோகம், முன்னோர்களுக்கெதிரான குற்றம்

- என்ற கற்பிதம்.

இவ்வாறு, சட்டத்தினுடைய அதிகாரம் நிலையுன்றியிருப்பது இந்த வழிகோளில்தான்: **'கடவுள் அளித்தது; முன்னோர் பின்பற்றியது'.**

வாழ்க்கைக் கலையின் எல்லாவிதமான ஆளுமைக்கும், எல்லாவிதமான முழுமைக்கும் அடிப்படைக் கட்டாயமாய் இருக்கும் தன்னியல்பை, தன்னியக்கத்தை ***உள்ளுணர்வு*** அடையும் பொருட்டு,

'சரியாக வாழ்தல்' என்பது பற்றிய கருத்துக்களில் (பரந்துபட்ட, கவனமாய்ப் பரிசிலிக்கப்பட்ட அனுபவத்தின் மூலம் சரியானது என்று மெய்ப்பிக்கப்பட்டதான கருத்துக்களில்) ***விழிப்புணர்வு*** அக்கறை கொள்வதிலிருந்து சிறுகச் சிறுக கவனந்திருப்புவதே இப்படிப்பட்ட நடைமுறையின் உள்நோக்கம்.

மனுவினதைப் போன்றதொரு நீதிநூலை வகுப்பதானது, எதிர்கால ஆளுமையின் சாத்தியத்தை, அடையக்கூடிய முழுமையின் சாத்தியத்தை ஒரு சமூகத்தின்முன் வைப்பதாகும். இது வாழ்க்கைக் கலையின் அதியுன்னதங்களை ஆர்வங்கொள்ள அம்மக்களுக்கு வாய்ப் பளிக்கிறது.

அந்தளவில் (அதாவது, உள்ளுணர்வு தன்னியக்கத்தை அடையும் பொருட்டு), சொல்லப்படுவது நினைவிலியாக்கப்பட வேண்டும் - எந்தவொரு புனிதப் பொய்யின் நோக்கமும் அதுதான்."

*கிறிஸ்துவுக்கு எதிரானவன் நூலிலிருந்து.*

மொழிபெயர்ப்பு

**உதயகுமார்**

www.tamilarangam.net

# நினைவுகள் மரணிக்கும்போது



நாவல் குறித்து

## ஏ. சிவானந்தனுடன்

யமுனா ராஜேந்திரன்

உரையாடல்

உலகளவில் இன்றிருக்கும் இடதுசாரிக் கோட்பாட்டாளர்களில் சிவானந்தன் மிக முக்கியமானவர். இலண்டனிலிருந்து வெளியாகும் *ரேஸ் அன்ட் கிளாஸ்* பத்திரிக்கையின் ஆசிரியர். சிவானந்தனுக்கு இப்போது எழுபத்தியேழு வயதாகிறது. இவருடைய இரண்டு நூல்களை *(எ டிபரன்ட் ஹங்கர்* மற்றும் *கம்யூனிட்டீஸ் ஆப் ரெசிஸ்டன்ஸ்)* லண்டன் வெர்சோ பதிப்பகமும் ப்ளுட்டோ பதிப்பகமும் வெளியிட்டிருக்கின்றன. ஒரு நாவலும் ஒரு சிறுகதைத் தொகுதியும் *(வென் மெமரி டைஸ்* மற்றும் *வென் தேர் ஈஸ் டைம் டு டேன்ஸ்)* வெளியாகியிருக்கின்றன. இவ்விரண்டையும் இலண்டன் ஆர்க்காடியா பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

இரண்டாயிரமாண்டு மத்தியில் சிவானந்தனைச் சந்திக்க நானும் பத்மநாப ஐயரும் போனபோது உற்சாகமாக வரவேற்றாலும் அவர் தளர்ந்து போயிருந்தார். சில நாட்களின் முன்புதான் இதய சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து வெளிவந்திருந்ததாகச் சொன்னார். முதல் முறையாக அவரது நாற்பதாண்டு கால நிறவெறி எதிர்பபு நடவடிக்கையையும் அவரது கோட்பாட்டு எழுத்துக்களையும் குறித்து முழுமையாக தமிழில் அறிமுகப்படுத்தும் நோக்கோடு 1994 ஆம் ஆண்டு அவரோடு உரையாடும் பொருட்டு அவரைச் சந்தித்தேன். எனது நோக்கத்தை அவரிடம் சொன்னபோது, அவருடைய பல்வேறு முன்னைய உரையாடல்களில் திரும்பத் திரும்ப தான் பதில் சொல்லிவிட்ட கேள்விகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக நான் பயன்படுத்துவதற்கென பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரோடு உரையாடிய பல்வேறு அறிஞர்களுடைய உரையாடல்களையும் பிரதியெடுத்து தொகுத்துக் கொடுத்தவர்- ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகள் தவிர்த்ததாக எனது உரயைாடலை அமைத்துக் கொள்ள விரும்பினார். அவ்வாறே எனது உரையாடலும் சமகால நோக்கில் அமைந்தது. அவ்வகையில் சிவானந்தன் எனும் ஆளுமையை விரிவாக அறிமுகப்படுத்தும் பொருட்டு - ஏனெனில் தமிழ் மொழியில் சிவானந்தன் தொடர்பாக வரும் முதல் எழுத்து அறிமுகம் அதுதான் - ஒரு நீண்ட குறிப்புடன் வெவ்வேறு உரையாடல்கள், கண்ட அறிஞர்கள், அந்த உரையாடல்கள் இடம் பெற்ற இதழ்கள், அவர்கள் உரையாடிய விஷயங்கள், நான் உரையாடிய சமகால விஷயங்கள் போன்ற விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, அந்த உரையாடல் பத்மநாப ஐயர் வெளியிட்ட இன்னுமொரு *காலடி* இலக்கியத் தொகுப்பில் (1997) வெளியானது.

இதற்குப் பின்னால் பல்வேறு சந்தர்ப்பங்களின் பல்வேறு பணிகள் சம்பந்தமாக பல்வேறு நண்பர்களுடன் அவரைச் சந்தித்திருக்கிறேன். அவருடனான எனது இரண்டாவது உரையாடல் இது. இந்த உரையாடலின் போது பத்மநாப ஐயரும் உடனிருந்தார். இவ்வுரையாடலில் முழுக்க முழுக்க அவரது *வென் மெம்ரி டைஸ் (நினைவுகள் மரணிக்கும்போது)* நாவலும், அதன் அரசியலும், அது குறித்து வந்த விமரசனங்களும் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன. இந்த உரையாடலுக்கான நேரத்தை சிவானந்தனுடன் தீர்மானித்துக் கொண்டு, அவசரமாகக் கேட்டுக்கொண்டபோது ஒலிப்பதிவுக் கருவியை வாங்கிக் கொடுத்ததோடு, என்னுடன் வந்திருந்து இந்த உரையாடலைச் சாத்தியமாக்கிய பத்மநாப ஐயருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யமுனா ராஜேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ய ரா** *இந்த நாவலின் தோற்றவியல் பற்றிச் சொல்வீர்களா? எவ்வாறாக இந்த நாவலின் மனிதர்களையும் பிரச்சினைகளையும் உள்வாங்கித் தேர்ந்து எழுத முற்பட்டீர்கள் என்கிற விஷயம் பற்றி நான் கேட்கிறேன்.*



எனது நாட்டின் கதையைச் சொல்ல விரும்பினேன். சில எழுத்தாளர்கள் சொல்கிறார்கள் எழுதக் கதைகள் இல்லையென. ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் சொல்ல ஒரு கதையிருக்கிறது. நான் ஒரு அகதியாக இங்கு வந்தேன். ஆனால் எனது நாட்டின் சாரம் இன்னும் எனக்குள் இருக்கிறது. எனது நாட்டின் மலைகள் இரத்தத்தினால் மூடுண்டு கிடக்கின்றன. என்னால் அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஒரு வகையில் நான் அதிர்ஷ்டாலி. பல்வேறு மனிதர்களுடன் பழகுகிறேன். ஆனால் ஒரே தேசம் எனும் உணர்வு எங்களிடையில் இருக்கிறது. இதுதான் மார்கசீயம் தரும் மன உணர்வு. தனிநபராக நீங்கள் இருப்பீர்கள். சமூகத்துடன் நீங்கள் இருப்பீர்கள். மனிதர்களோடு இணைந்தவனாகவும் நீங்கள் இருப்பீர்கள். எனது நாட்டில் நிரப்பப்படாத ஒரு வெற்றிடம் இருக்கிறது. ஒரு வகையில் எனது நாவல் இந்த வெற்றிடத்தை கவனம் கொள்கிறது. நீங்கள் அறிவீர்கள், நான் 1958 கலவரத்தைத் தொடர்ந்து வெளியேறினேன். ஒரு சிங்களப் பெண்ணை மணந்து கொண்டேன். இங்கு வந்தவுடனேயே நாட்டிங்ஹில் கலவரத்தினுள் நுழைந்தேன். எனது நாட்டில் எதிர்கொண்ட இனவெறியை வேறொரு வகையில் நான் இங்கு எதிர்கொண்டேன். நான் இலங்கையைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிற வெளிநாட்டு விற்பன்னன் அல்ல. 1983 ஆம் வருட அனுபவங்கள் தொடர்பாக எழுதுவதுதான் எனது நோக்கமாக இருந்தது.

1982 ஆம் ஆண்டு நான் இலங்கையில் ஒரு வீடு கட்டத் தொடங்கினேன். எனது வீடு தாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து *ரேஸ் அன்ட் கிளாஸ்* இலங்கைப்பிரச்சினை தொடர்பாக ஒரு சிறப்பிதழைக் கொண்டுவந்தது. அந்த சஞ்சிகையில் எவ்வாறாக இலங்கை அரசு சிங்கள அரசாகவும், தமிழ் மக்களின் மீது தாக்குதல் தொடுக்கிற சிங்கள-பௌத்த பெருந்தேசிய அரசாகவும் இருக்கிறது என்பது குறித்து கட்டுரைகள் வந்தன. அந்த இதழில் நான் எழுதிய கட்டுரையில் இலங்கை சம்பந்தமாக இடதுசாரிகளின் பல்வேறு தவறான கருத்தாக்கங்களை புரிதல்களைத் தொட்டிருந்தேன். சண்முகதாசன் தொழிலாளி வரக்கப் பார்வையிலிருந்து இந்தப் பிரச்சினையைப் பார்த்து எழுதியிருந்தார். இனப் பிரச்சினை எல்லா தொழிலாளி வர்க்கத்திடமும் எவ்வாறு வெட்டிச் செல்கிறதென - மலையகத் தொழிலாளிகள், தமிழ்த் தொழிலாளிகள், சிங்களத் தொழிலாளிகள் என - எவ்வாறாக எல்லோரிடமும் இந்த இன உணர்வு வளர்ந்திருக்கிறதெனப் பார்த்தது அக்கட்டுரை. மதப் பிரிவினைகள் மொழிப் பிரிவினைகள் போன்று சகலரிடமும் ஊடுருவியிருக்கிற இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக, இதுவரை இடதுசாரிகள் கணக்கெடுக்காத இன-மொழி-மதப் பிரச்சினைகள் தொடர்பாக அந்த இதழில் எழுதினேன். அந்த சமயத்தில் நான் செய்த ஆய்வுகள் போன்றனதான் 1985 இல் நான் எழுதத் தலைப்பட்ட இந்த நாவலுக்கான அடிப்படைகளாக அமைந்தன.

இதன் தோற்றவியல் பற்றிச் சொல்லும் போது இரண்டு விஷயங்களை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. எனக்குள் இருக்கிற வெப்பம் வெளியில் வைக்கப்பட வேண்டும் எனும் அவசியம் எனக்கிருந்தது. எனது நாட்டுக்காக நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். எனது மக்கள் கொலையுண்டு கொண்டிருக்கும் இவ்வேளையில் இங்கே இருந்து கொண்டிருப்பது சுலபம். நான் இங்கே இன, நிறவாதத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தேன். இலங்கையில் இனவாதத்தைத் துடைத்தெறியப் போராட வேண்டியதும் எனது கடமை. எழுதுவது என்பது என்னளவில் போராடுதலில் ஒரு பகுதி. எனது எழுத்துக்களைப் பார்த்தால் அது இரு வகையில் அமைகிறது. ஒன்று எனது அரசியல் எழுத்துக்கள். மற்றது எனது ஆக்க இலக்கியமான நாவல், சிறுகதை எனும் எழுத்துக்கள். நான் என்து அரசியல் எழுத்துக்களுக்குள் ஆக்க இலக்கியத் தன்மையைக் கொண்டு வருகிறேன். எனது ஆக்க இலக்கியத்துக்குள் அரசியலைக் கொணர்கிறேன். இது முரண்பாடென்று நான் நினைக்கவில்லை மாறாக பரஸ்பரப் பகிர்தல் என்று நினைக்கிறேன். அரசியல் மனிதர்கள் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். தரிசனங்களைக் கொண்டிருக்க வேண்டும். அதே வேளையில் ஆக்க இலக்கியவாதிகள் அரசியலைத் தேற வேண்டும். அல்லவெனில் அவர்கள் தகவல் தொழில்நுட்பச் சூழலினால் சுவீகரிக்கப்படுவார்கள். அதனோடு சேரந்து ஒத்துழைப்பவர்களாக ஆகிப் போவார்கள். இவர்கள் இப்படியாகிப் போனால் மக்களுக்காகப் போராடுகிறவர்களாக இருக்க முடியாது. விலைக்கு எதிரிக்குப் போராடப் போகிற கூலிவீரனாக ஆகிப் போவான் இந்த எழுத்தாளன்..

**ய ரா** *நீங்கள் இந்த நாவலை ஏன் மூன்று தலைமுறைக் கதையாக எழுத நினைத்தீர்கள்? அதற்கு விசேஷமான காரணங்கள் ஏதேனும் உண்டா? இந்த நாவல் ஒரு வகையில் இலங்கையின் நூற்றாண்டு அரசியலை மறுவாசிப்புக்கு உட்படுத்தியிருக்கிறது. இப்போது நாவல் வெளியாகி விமர்சிக்கப்படுகிற இந்தச் சூழலில் இந்த நாவலின் வெளிப்பாட்டு முறைமை பற்றி அதனது இலக்கிய ரீதியிலான வெற்றி, அரசியல் ரீதியான உள்ளடக்கம் போன்றவை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?*



எனது நாட்டின் கதையைச் சொல்ல விரும்பினேன். அந்தக் கதையைத் தொடக்கம் இல்லாமல் சொல்ல முடியாது- தொடக்கம் என்கிறபோது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் பற்றிச் சொல்லாமல் எனது நாட்டின் கதையை எழுத

www.tamilarangam.net

முடியாது என்று சொல்கிறேன். அந்த வரலாறு இப்போது அநேகமாக மறக்கப்பட்டுவிட்டது. யாழ்ப் பாண விவசாய மனோபாவம், கல்விக்கான அவர் களது அவா, பௌத்தர்களின் கலாச்சார விழிப்பு, சமசமாஜிகளின் இயக்கம் போன்றன- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில எமது நாட்டின் வர லாறு மாறத் துவங்கியது. இருபது முப்பதுகளில் இந்திய சுதந்திரப் போராட்டம்- காந்தி, சரோஜினி நாயுடு போன்றவரகள் இலங்கைக்கு வந்தனர். இந்திய தேசிய சுதந்திரப் போராட்டம் பற்றி அறிந்து கொண்டோம். காமன்வெல்த்தின் உருவாக் கம் முக்கியமான பாதிப்பாக இருந்தது. இங்கி லாந்தில் சக்ளத்வாலா போன்றவர்கள் இடதுசாரி நிலைபாடுகளை எடுத்தனர். குணசேனா இங்கி லாந்தின் தொழிற்கட்சியின் அங்கமாக தன்னை நினைத்தார். இந்திய காங்கிரஸ் கட்சியின் பகுதி யாக அல்லது பிரிட்டீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பகுதியாக அல்ல- பிரிட்டீஸ் தொழிற்கட்சியின பகுதியாக அவர் தன்னை நினைத்தார். குணசிங்கதான் இலங்கை அரசியலில் இன வாதத்தை விதைத்த முதல் நபராக இருந்தார். இவர்தான் இலங்கையில் தொழிற்கட்சியைத் தொடங்கினார். சரவணமுத்து குணசிங்கவின் மிகப்பலமான ஆதரவாளராக இருந்தார். எனது தந் தையும் குடும்பத்தினரும் நானும் கொட்டகெனா வில்தான் இருந்தோம். நடேசய்யர் மலையகத் தமிழர்களுக்குத் தலைமை தாங்கினார். யாழ்ப் பாணத் தமிழர்கள் ஒரு வகையில் மலையகத் தமிழரைப் பொறுத்து இனவாதிகளாக ஆயினர். காரணமாக மலையகத் தமிழர்களின் ஜாதி இருந்தது. இவையெல்லாம் முக்கியமான விஷயங் கள். இந்த வரலாறெல்லாம் இப்போது மறக்கப் பட்டு விட்டது. ஆகவே நாவலின் முதல் பாகம் என்பது எவ்வாறாக இலங்கையின் வட பகுதி இருந்தது என்பதைச் சித்தரிக்க முயன்றது. அதன் மலைகள், பூகோள சீதோஷ்ண நிலை, குழந்தை கள் வளர்தல் போன்றவை வருகின்றன. இனவாதம் அப்போது வளரச்சியுறவில்லை. அப்போது எவரும் பட்டினி கிடக்கவில்லை. சுபிட்சம் நோக்கியதாக வாழ்வு இருந்தது.

ஆனால் நகரமயமாதல், அரசாங்க உத்தி யோகம், பின்காலனியப் பொருளாதாரம், இடப் பெயர்வு இன்னும் கிராமப் புறத்திலிருந்த தமிழ் தொழிலாளிகள் கூட குணசிங்கா அரசியலினால் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இவ்வாறு தான் தமிழ் தேசிய உணர்வென்பது எதிர்மறையாக தமிழர்களிடம் விதைக்கப்பட்டது. இவ்வாறு கடந்த காலம், நிகழ்காலத்தினூடு எதிர்காலம் என்கிற வகையில்தான் மூன்று தலைமுறைக் கதையாக உருவாகியது. இந்த நாவலை பதினைந்து ஆண்டு களுக்கு முன்பு நான் எழுதத் தொடங்கினேன். பல்வேறு பணிகள், மன உலைச்சல்கள், சொந்த அவலங்கள் போன்றவற்றால் தொடர்ந்து எழுதி முடிக்கவில்லை. நிற இனவாதம் அங்கும், இங்கும் என்பதாகத்தான் எனது ஆரம்ப நினைவுகள் அமைந்திருந்தன. துரதிருஷ்டவசமாக எனது மனைவி என்னை விட்டு விலகிப் போனாள். 1963 இல் நான் எனது அடிப்படை வாழ்வு பற்றிக் கவலைப்பட வேண்டியிருந்தது. எழுதுவதற்கான நேரம் முற்றிலும் இல்லை. வேலை, பல்கலைக் கழகப் படிப்பு என நேரம் அரிதாயிருந்தது. குழந்தைகளைக் கவனிக்க வேண்டி, சமைக்க வேண்டி என சொந்தக் காரணங்கள். பிற்பாடு எனது வாழ்வுக்குள் ஜென்னி வந்தாள். நூலக உதவியாளனாக, டீ பாயாக என இருநதது எனது வாழ்வு. இவையெல்லாவற்றையும் நீங்கள் அறிவீர் கள். குழந்தைகள் வளர்கிற வரையிலும் என்னால் இதை எழுதி முடிக்க முடியவில்லை. இடையில் நான் இலங்கை போவதும் வருவதுமாக இருந் தேன். மறுபடி 1970 களின் பிற்பகுதி ஆண்டு களில்தான் எழுதத் தொடங்கினேன். எனது முதல் கடமை குழந்தைகள் வளர்ப்பு. இரண்டாவது கடமை இந்நாட்டில் நிறவாத எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது. எனது நாட்டுக்கான எனது கடமை காத்திருந்தது.

1983 ஆம் ஆண்டு *ரேஸ் அன்ட் கிளாஸ்* சஞ்சிகைக்கான எனது ஆய்விலிருந்து நாவல் வடிவம் கொள்ளத் தொடங்கியது.

*ய ரா*

*இங்கே ஒரு கேள்வியை நான் கேட்க வேண்டியிருக்கிறது. இந்த நாவலை ஆரம்பத்தில் எழுத நினைத்தபோது மூன்று தலைமுறைக் கதையாக நீங்கள் தொடங்க வில்லை. அதனது வளர்ச்சிப் போக்கில்தான் அது மூன்று தலைமுறைக் கதையாக உருப்பெறத் தொடங்கியது எனறு நீங்கள் சொல்கிறீர்களா?*



ஆமாம். குடியேற்றம் தொடர்பான விஷயங்கள் பிரச்சினைகள் எல்லாம் இருந்தபோதிலும் நான் கடந்த காலத் தின் மனிதனாகவே இருந்தேன். ஜான் பேர்ஜர் இந்த நாவல் குறித்து கேள்விப் பட்டிருக்கிறார். பெர்ஜர் ஏற்கனவே புக்கர் இலக்கியப் பரிசு பெற்றவர். ஓவியர். அவரைச் சந்தித்தது எனது வாழ்வில் திருப்புமுனையானது. அவர் பிக்காஸோ பற்றி எழுதியவர் புகாரின் பிரச்சனை பற்றி எழுதியவர். தற்போது பிரான்சில் வாழ்கிறார். இன்ஸ்டிடியூட் ஆப் ரேஸ் ரிலேஷன் ஸின் சேர்மனாக இருந்த மைக்கேல் கெய்ன், புக்கர் அமைப்பின் சேர்மனாகவும் இருந்தார். ஜான் பெர்ஜர் புக்கர் பரிசு பெற்றபோது அதனது பாதி பரிசுப் பணத்தை பிரிக்ஸ்டன் ஆப்ரிக்க மக்களின் *பிளாக் பாந்தர்* அமைப்புக்குத் தந்தார். நாங்கள் மிக நல்ல நண்பர்களாக இருந்தோம். நாங்கள் இலக்கியம்பற்றி பேசிக் கொண்டிருந்தபோது, ஜான் இந்த நாவல் அற்புதமான நாவலாக வரும் என்றார். இரண்டு பகுதிகளாலான இந்த நாவல் படைப்புரீதியில் முழுமையடைந்த ஒன்றல்ல. மூன்று பகுதியாலான நாவலாக இது படைப்பு முழுமை பெறும் என ஜான் சொன்னார். இவ்வாறு தான் இந்த நாவல் மூன்று தலைமுறை நாவலாக உருவானது. இது வரலாறும் வாழ்வும் இணைந் ததால் பாதியில் நிற்பதாக- இந்த நாவல் இரண்டு தலைமுறையில் நிற்கிறது- இரண்டாம் பகுதி என்பது 1956 வரையிலும்தான் வருகிறது- முதல் பகுதி என்பது ஒரு வகையில் என்னை மறுகண்டு பிடிப்பு செய்வதாகும். அவ்வகையில் இந்நாவல் வரலாற்று முழுமை கொண்டதல்ல. அறுபதுகளில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முற்றிலும் புதிய நிலைமைகள் வளர்கின்றன தமிழ் ஆயுத எழுச்சி கெரில்லாப் போராட்டம் போன்றவை. விடுதலைப் போராட்டம் பற்றிய விவாதங்கள் தோன்றுகின்றன. விடுதலை என்பது சோசலிசத்துடன் இணைந்த பகுதி. நாம் முதலில் எம் மக்களை விடுவிப்போம், பிற்பாடு சோசலிசம் பற்றிப் பேசுவோம் என நீங்கள் சொல்ல முடியாது. சோசலிசம் நோக்கிய வழிமுறைதான் விடுதலைப் போராட்டம்.

ய ரா *பல்வேறு விமர்சகர்கள் உங்களது நாவல் பற்றிக் குறிப்பிடும்போது நாவலின் இரண்டாம் பகுதி என்பது வாழ்ந்துபட்ட அனுபவம் கொண்டதாக மிகுந்த ஆதாரத் தன்மையும் ஆழமும் கொண்டதாக இருக்கிறது என்கிறார்கள். ஏனெனில் நீங்கள் அறிந்தபடி இக்காலகட்டம் பெரும்பாலும் உங்கள் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது. நீங்கள் நாவலின் ராஜன் பாத்திரம் போல 1958 இனக் கலவரத்தைத் தொடர்ந்து இலங்கையை விட்டு வெளியேறி விடுகிறீர்கள். 1958க்குப் பின்னால் நீங்கள் இலங்கைக்குப் போனீர்களா? நாவல் 1990கள் வரை விரிகிறது. தொன்னூறு களில் நீங்கள் இலங்கைக்குப் போனீர்களா? வாழ்ந்துபட்ட அனுபவத்துக்கும் நாவலின் மூன்றாம் பாகத்துக்கும் இருக்கும் உறவு தொடர்பான விமர்சனங்கள் குறித்து என்ன சொல்கிறீர்கள்?*



1962ஆம் ஆண்டு நான் இலங்கைக்குச் சென்றேன். அதன்பின் ஒவ்வொரு ஆண்டும் நான் இலங்கை சென்றேன். 1982 இல் அங்கே ஒரு வீடு கட்டுவதற்காக நான் போனேன். ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாதங்கள் வரை அந்த நாட்டில் நான் தங்கியிருககிறேன். மனித உரிமை அமைப்புகள், இடதுசாரிகளுடன் வேலை செய்திருக்கிறேன். வட கிழக்குக்கும் பயணம் செய்தேன். சண்முகதாசன், சிங்கள அறிவுஜீவிகள், ஒரு சில போராளிக்குழு சார்ந்தவர்கள் போன்றோரையும் சந்தித்தேன். 1979 இனக்கலவரத்தில் வெள்ளவத்தயில் நான் தங்கியிருந்த எனது சகோதரரின் வீடு தாக்கப்பட்டது. நானும் எனது மகளும் சகோதரனும் பிறருடன் சேர்ந்து சுயபாதுகாப்புக் கமிட்டியை உருவாக்கினோம். தமிழ்மக்களுடனும் இலங்கை இடதுசாரிகளுடனும் நான் 1982 வரை வாழ்ந்திருக்கிறேன். வரலாறு உங்களிலிருந்து துவங்குவதில்லை. உங்களது பாட்டி உங்களது வரலாறு. உங்களது தந்தை உங்கள் வரலாறு. உங்களது மாமா உங்கள் வரலாறு. உங்களது மகனும் பேரனும் கூட உங்களது வரலாறுதான்.

ய ரா *இம்மாதிரியான வாழ்ந்துபட்ட அனுபவம் தொடர்பான கேள்விகள் ஸல்மான் ருஷ்டி, மைகேல் ஒன்டாஜி போன்றவர்கள்மீதும் வைக்கப்படுகிறது. ருஸ்டியின் இந்திய நாவல்கள் பற்றியும் ஒன்டாஜியின்* ***அனில்ஸ் கோஸ்ட்*** *நாவல் பற்றிய விமர்சனங்களிலும் இந்த வாதங்கள் வைக்கப்படுகின்றன. ருஸ்டிக்கு இந்திய விசா மறுக்கப்பட்டது. இந்தியாவுக்குள் அவர் அனுமதிக்கப்படவில்லை என்பது குறித்து இவர்கள் சௌகரியமாக மறந்து விடுகிறார்கள். இன்னும் எழுத்தாளர்களும் மனித உரிமையாளர்களும் சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றுவருவது என்பது உயிர்க் கொலை தொடர்பான பிரச்சினையாகவும் இருக்கிறது. இதற்கு கொலையுண்ட பல கலைஞர்களின், எழுத்தாளர்களின் பெயர்களை ஆதாரமாகச் சுட்ட முடியும். ஆயுத இயக்கங்கள், அரசின் ஆயுதப் படைகள் போன்றவை குறித்த விமர்சனம் கொண்டவர்களுக்கு நடமாட்டம் என்பது மிகுந்த பிரச்சினைக்குரிய விஷயமாயிருக்கிறது.*



நாவலில் விஜய் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதும் அவர் போராளி இயக்கத்தைச் சேர்நதவர்களைச் சந்தித்ததும் எனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் அமைந்ததாகும். நான் அவர்களைச் சந்திக்க யாழ்ப்பாணம் சென்றேன். என்னுடைய விவாத அடிப்படைகளிலிருந்து என்னை விமர்சிக்கிறவர்களின் விவாத அடிப்படைகள் வித்தியாசமானது. நான் நாவலாசிரியன் அல்ல. நான் ஒரு கதைசொல்லி. நாவலாசிரியர்கள் உருவாகிறார்கள். கதைசொல்லிகள் பிறக்கிறார்கள். நான் கதைசொல்ல விரும்புகிறேன். நான் இலக்கியப் பள்ளிகளுக்குச் செல்லவில்லை. இலக்கியம் எழுதுவது சம்பந்தமான பாடங்கள் படிக்கவில்லை. நாவல் எழுவதற்காக நான் பல்கலைக்கழகப் பாடங்களுக்கும் செல்லவில்லை. நாவல் என்பது கற்பனையாற்றல் சம்பந்தமானது தான். நாவல் எழுதுவதற்கு முழுக்கவும் வாழ்ந்துபட்ட அனுபவம் கொணடிருக்க வேண்டும் என்பது அபத்தமாகும். ஆதாரத் தன்மை என்பது கற்பனையாற்றலின் ஆதாரத் தன்மை, தரிசனத்தின் ஆதாரத் தன்மையாகும்.

ய ரா *இந்திய இலங்கை அரசியல் நாவல்களில் எடுத்துக் கொண்டால், பாலுறவு சம்பந்தமான சித்தரிப்புகள், விவரணங்களுக்கு அதிகமான இடம் இருப்பதில்லை. வாழ்வில் இதற்கு மிகப்பெரும் இடம் இருக்கிறது. உஙகளுடைய நாவலில் நான் பெற்ற அனுபவம் வித்தியாசமானது. பல்வேறு புணரச்சி அனுபவங்கள் மனம் சார்ந்த பாலுறவுத் தோய்வுகள் உங்கள் நாவலில் இடம்பெறுகின்றன. இவ்வகையில் இந்த நாவலின் கதைசொல்லல் முறை குறித்து ஏதேனும் சொல்ல உண்டா? உங்களுடைய பெண் பாத்திரங்கள் மிகப்பலம் வாய்ந்த, சக்தி கொண்ட பாத்திரங்களாக இருக்கிறார்கள். 'சாதாரணமாக இந்த வகைச் சித்தரிப்பை இடதுசாரி நாவல்கள் அல்லது புரட்சிகர நாவல்கள் என்பனவற்றில் பார்ப்பது அரிதானது*



பாலுறவு, அதனது நெகிழ்வு, அன்பு போன்றன மனிதநெருக்கம், அருகாமை சம்பந்தமானது. எமது சமூகங்களில் இதை சொல்ல மறுத்து வந்திருக்கிறோம். அது பேச்சில் வருவதல்ல, நெருக்கத்தில் உணர்வது. ஏன் இவர்கள், இந்தியர்களும் இலங்கையர்களும், இது பற்றி எழுத மறுக்கிறார்கள் எனில் அது ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்வினை. மேற்கு நோக்கிய ஒரு எதிர்ப்புரட்சிகர எதிர்வினை. ஆனால் எமது கலாச்சாரத்தில் பாலுறவும் அதன் நெருககமும் உணரப்பட்டிருக்கிறது. மகத்தான இலக்கியங்களில், எமது காவியங்களில் அது இருக்கிறது. தொடுதலில், உணர்தலில், கற்பனையாற்றலில் பாலுறவு வாழ்கிறது. பாலுறவை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்கள். பாலுறவு எனது நாவலின் அங்கமாக இருக்கிறது. அது அழகானது. ஏனெனில் அது முழுமையானது.

நமது சமூகம் அதீதமாக பெண்எதிர்ப்பு சமூகமாக இருக்கிறது. தமிழர்கள் சிங்களவர்கள் இருவருக்கும் இது பொருந்தும். நமது கிராமப்புறப் பின்னணிகள், விவசாயப் பின்னணிகள் போன்றன நகரமயமாதலின் போது மாறுலை அடைகின்றன- பால்ரீதியிலான சமூகப் பாத்திரங்கள் மாறுதலுக்கு உள்ளாகின்றன. நகரமயமாதலில் பெண்கள் வீட்டு வேலையும் செய்கிறார்கள். வெளியில் சமூக உற்பத்தியிலும் ஈடுபடுகிறார்கள். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் எப்போதும் அதிகாரப் படிநிலைகள் இருக்கிறது. அந்த சமூகத்திறகே உரிய ஜாதிய அடிப்படையிலான, அதைத் தாங்குகிற அதிகார அமைப்பு இருக்கிறது. இந்தக் காரணங்களால்தான் பெண்களின் குணச்சித்தரிப்பென்பது எமது நாவல்களில் அருகியிருக்கிறது. பெருநகரப் புறங்களில் ஆண்களாகிய நாம் குழந்தைகளை வளர்க்கிறோம். இரவுமுழுக்க படிக்கிறோம். அனைவரின் உள்ளாடைகளையும் துவைக்கிறோம். கழிவுகளைத் துப்புரவு செய்கிறோம். இவையெல்லாம் கடினமானதென நாம் அறிவோம். எனது மனைவி ஒரு கத்தாலிக்கப் பெண். எனது அம்மா போன்றவரகள் பலமான ஆளுமை கொண்டவர்கள். அவர்கள்தான் பிரபஞ்சத்தின் மையமாக இருப்பவர்கள். எனது மாமியார் 1958 கலவரங்களின் போது தனது தமிழ் நண்பர்களைப் பாதுகாப்பதில் உறுதியாக நின்றார். இப்படி நான் பார்த்த பெண்கள் மிகுந்த ஆளுமையும் பலமும் கொண்டவரகளாக இருந்தார்கள். அவர்கள்தான் எனது நாவலில் வருகிறார்கள்.

ய ரா *இது ஒரு வகையில் இலங்கைப் பிரச்சனை பற்றிய நாவல். அதே வேளையில் இதில் பின்சோவியத் அனுபவங்கள் இருக்கின்றன. பின்புரட்சி சமூகங்களின் படிப்பினைகளை எடுத்துக் கொள்கிறது. வழிமுறையும் இலக்கும் என்கிற பிரச்சனையையும் எடுத்துக் கொள்கிறது.*



வழிமுறையும் இலக்கும் பிரிக்க முடியாதவை. இரண்டும் வேறுவேறல்ல. அது போல விடுதலை வழிமுறை என்பதும் சோசலிச இலக்கும் பிரிக்க முடியாதவை. நீங்கள் சொன்ன மாதிரி இது பின்சோவியத் பிரச்சினை மட்டுமல்ல, பின்காலனித்துவப் பிரச்சினையும் ஆகும். சோவியத் கம்யூனிஸமும் சரி, காலனியாதிக்கமும் சரி, இரண்டுமே மையப்படுத்தும் சக்திகள். காலனியாதிக்கம் என்பது மையப்படுத்தப்பட்ட அரசுகளை எமது நாடுகளில் உருவாக்கியது. பிரித்தானியர்கள் சென்ற இடங்களிலெல்லாம் பெடரல் கவர்ன்மென்ட், சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்று அமைத்தார்கள். நைஜீரியா, இலங்கை, இந்தியா என எங்கும் இம்முறை நாட்டை ஒன்றுபடுத்தும் நோக்கம் என்றார்கள். எங்கெங்கே காலனியாதிக்கம் சென்றதோ அங்கெல்லாம் அரசியல் ரீதியல் இன்டக்ரேட் செய்தார்கள். பொருளாதார ரீதியில் இன்டக்ரேட் செய்வதற்காக அரசியல் ரீதியில் பிரித்தார்கள். இலங்கையை பொருளாதார ரீதியில் ஒன்றுபடுத்தினார்கள். ஆனால் அரசியல் ரீதியில் தமிழ் மக்களைப் பிரித்து பிரிட்டிஸ் அரசாங்கத்தின் பதவிகளுக்கு சேவகம் செய்வதற்காகப் பயன்படுத்தினார்கள். சிங்கள மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தினார்கள். சிங்கள மக்களிடம் இதற்கு எதிர்வினை வந்தது. யூகோஸ்லாவியாவிலும் இந்த மையப்படுத்தல் தான் மக்களை ஒருவருக்கு எதிராக மற்றவரை நிறுத்தியது. எமது சமூகம் பிளவுண்டு உடைந்து போனது. இனவாதம் இதிலிருந்துதான் தோற்றம் பெறுகிறது. மதப்பிரிவினைகள், இனப்பிரிவினைகள் தோன்றின. இந்த இனத்தை எடுத்துக்கொண்டு நாம் உடைந்து போவோம் என்று பிரச்சினைகள் வளர்ந்தன. இவ்வகையில் மத்தியத்துவப்படுத்தும் சக்திகளால், சோவியத் சக்திகளால், காலனிய சக்திகளால் நாடுகள் உடைபட வேண்டி வந்தன.

இன்னொரு பரிமாணமும் இதில் உண்டு. தொழில்நுட்பப் புரட்சி சமவேளையில் உலகமயமாகும் நிகழ்வு. மூலதனம் சர்வதேசமயமாகியது. தேசிய அரசுகள் உடைந்து போயின. மத, இன, மொழிப் பிரிவுகளாக உடைந்து போயின. இந்த இரண்டும் அருகருகே இணைவாக வருகின்றன. இந்த முரண்பாடுகளில் இருந்துதான் பிரச்சினை வருகிறது. இதை இரண்டு முனைகளிலும் எதிர்த்து நாம் போராட வேண்டியிருக்கிறது. இனச் சுத்திகரிப்பு என்பதை நாம் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. ஆதேவேளை இலத்தீனமெரிக்கா, ஆசியா, ஆப்ரிக்கா என எல்லா இடங்களிலும் இனச்சுத்திகரிப்போடு உலகமயமாதலையும் இதனையும் வைத்துப் பாரக்க வேண்டியிருக்கிறது.

ய ரா *இந்தப் பிரச்சினைகளின் எதிர்காலம் எவ்வகையில் இருக்குமென நினைக்கிறீர்கள்? யூரோப்பியன் யூனியனில் இணைவதெற்கென பெரும்பாலுமான ஐரோப்பியர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரே ராணுவம், அதிகார அலகு, சட்டமுறை, பணப் புழக்கம், இனம், நிறம் என எல்லா அடிப்படையிலும் ஒருங்குதிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எமது நாடுகளோ உடைந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை நாம் நிராகரிக்கவே முடியாது: அதாவது பெரும்பான்மை இனங்கள் இந்த ஆபத்தை உணராதிருக்கிறார்கள். சிறுபான்மை இனங்களையும் அவர்தம் உரிமைகளையும் கலாச்சார அடையாளங்களையும் அங்கீகரிக்க வேண்டியது தமது பொறுப்பு என உணராதிருக்கிறார்கள். தேசியத்தையும் நாம் மூன்று வகையாகப் பார்க்கலாம். பாசிச தேசியம், காலனியாதிக்க எதிரப்பு தேசியம், பிற்பாடு சமகால இனத்தேசியம். இனத்தேசியம் என்பது*

www.tamilarangam.net

*சிறுபான்மை இனங்களின் மீது பெரும்பான்மை இனத்தால் சுமதத்தப்பட்டதாக இருக்கிறது. இந்த ஒடுக்குமுறைக்கான தீர்வு எவ்வாறு இருக்க முடியும்? இந்த நாவலில் நான் ஜேவிபி தேசியத்தில் எந்த ஆபத்தை அறிந்து கொள்ள முடிந்ததோ, அதே அளவிலான எச்சரிக்கையைத் தான் தமிழ் தேசியம் சம்பந்தமாகவும் உணர்ந் தேன். இந்த நாவலை அதனது கருத்தியல் ஒருமைக்காகவும் மறுதலைமுறை தொடர்ச்சி என்கிற மாதிரியான கதை ஒருமைக்காகவும்தான் எனக்குப் பிடிக்கிறது. இந்த இரண்டு விஷயங்களும் நாவலில் ஒன்றை ஒன்று நிறைவு செய்வதாக இருக்கிறது.*



நாம் இருக்கிற சூழலை மறுநிர்ணயம் செய்து கொள்வோம். மூலதனத்தின் உலகமயமாதல், சர்வதேசமயமாகும் தொழிலாளி வர்க்கம். இதுவன்றி தேசிய முதலாளி வர்க்கம. இத்தோடு தேசியம் என்பதும் வருகிறது. எமது அரசுகள் சர்வதேசிய மூலதனத்திற்காகவும் பன்னாட்டுக் கார்ப்பரேஷன் களுக்காகவும் எம்மை ஆளுகிறார்கள். தேசிய மூலதனத்திற்காக நம்மை ஆளவில்லை. நாம் காலனியாதிக்க காலங்களில் போராடிப் பெற்ற உரிமைகள், பேச்சு, எழுத்து, கூட்டம் கூடுதல், தொழிற்சங்க உரிமைகள், எமது பூகோளத்தின் மீதான எமது உரிமைகள் எல்லாவற்றையும் சர்வதேச மூலதனத்தைக் காப்பதற்காக தேசிய முதலாளிகள் எடுக்கும் நடவடிக்கைகளினால் இழந்து கொண்டிருக்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்தியாவுக்குச் சென்றிருந்தேன். சென்னைக்கும் சென்றிருந்தேன். இந்தியாவைப் பாருங்கள். அண்ணன் தம்பி அம்மா அக்கா உறவுகள் அங்கே மாறிப்போயிற்று. அம்மா என்றால் என்ன மதிப்புப் பெறுவாள்? தம்பி ரொம்ப நாட்களாக வேலை செய்கிறான். அவனிடமிருந்து எவ்வளவு காசு எடுக்கலாம்? இந்த விருந்தாளி யால் எனக்கு என்ன லாபம்? என எல்லாமுமே இன்று பணப் பட்டுவாடா உறவுகளாக ஆகி விட்டது. கூட்டுக்குடும்பம், சமூக உறவுகள், கூட்டுணர்வு எல்லாமே மாறிப்போய்விட்டது. கலாச் சாரத்துக்கு மாறாக we defend caste nexus. மதப்பிரச்சினைகள் சம்பந்தமாக நமக்குள் சில புரிதல்களுக்கு நாம் வந்து சேர வேண்டும். இன்று ஒரு புதிய ஏகாதிபத்தியம் எமது நாடுகளைச் சுரண்டி வருகிறது. உலகமயமாதல் என்பதுதான் புதிய ஏகாதிபத்தியத்தின் பெயர். இதனால்தான் உலகமயமாதலை எதிர்த்து உலகெங்கிலும் போராட்டங்கள் எழுந்து வருகின்றன. இந்த உலக மயமாதலால் வறுமை அதிகரித்து வருகிறது. மூன்றாம் உலக நாடுகளின் மூன்றில் இரண்டு பகுதியும், ஐரோப்பாவில் மூன்றில் ஒருபகுதியும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். நம்மை மத, இன வேறுபாடுகள் பிரிக்கின்றன.

இந்தச் சூழலில்தான் கருத்தியலின் முக்கி யத்துவம் உணரப்பட வேண்டும். உங்களுக்கு ஒரு கருத்தியல் அடிப்படை இலலையானால் இவை களைப் புரிந்து கொள்ள முடியாது. இவ்வகை யில்தான் நாம் சோசலிசக் கருத்தியல், மார்க்சியக் கருத்தியல் போன்றவற்றை இந்த நூற்றாண்டின் ஆரம்பித்திலிருந்து தேர்ந்து கொண்டோம். சிறு பான்மை இன உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்பது நிச்சயம். நூறு சதம் இப்பிரச்சி னைகளில் நான் ஒடுக்கப்பட்ட இன மக்களின் பக்கம் நிற்கிறேன். இலங்கையில் தமிழ்மக்கள் தான் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப் படுகிறார்கள். அவர்கள்தான் துயருறுகிறார்கள். அவர்களின் போராட்டம் கேள்விக்கு அப்பாற்பட்டது. இங்குதான் சோசலிசம், விடுதலை தொடர்பான பிரச்சினை வருகிறது. ஆபத்தை நாம் உணர வேண்டும்.

தேசியத்தில் இரு வகையுண்டு. புரட்சிகர தேசியம். எதிரப்புரட்சி தேசியம். அமில்கார் கேப்ரல் ஒரு மாபெரும் தேசியப் புரட்சியாளன். கலாச்சாரம் என்பது பிற கலாச்சாரங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். பிற கலாச் சாரங்களுக்கு திறந்தபடி நாம் இருக்க வேண்டும். கலாச்சாரம் தன்னளவில் உள்ளொடுங்கிப் போக முடியாது. நாம் நமது மக்களை ஒடுக்குகிறோம். இதை எவ்வாறு நிறுத்துவது? யூதர்களைப் பாருங்கள். அடக்கப்பட்ட மக்களாக இருந்து அடக்குமுறையாளர்களாக உருவானவர்கள். இவர் கள்தான் இன்று இலங்கை அரசோடு சேர்ந்து தமிழர்களைக் கொல்கிறார்கள். இது பற்றிய எச்சரிக்கை உணர்வு நமக்கு வேண்டும். இதை அறிவது இயங்கியல் சம்பந்தமான பிரச்சினை யாகும்.

ய ரா

*நீங்கள் அனல்கக்கும் நிறவெறி எதிர்ப் பாளர், அரசியல் போராளி என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது உங்களுடைய சிறுகதைத் தொகுப்பு* ***வென் தேர் ஈஸ் டைம் டு டேன்ஸ்*** *புத்தகமும் வெளியாகி யிருக்கிறது. ஏசியன் டப் பவுண்டேஷனின் ஆசிய பாப் மியூசிக் ஆல்பமொன்றாலும் கூட அவர்கள் உங்களது குரலைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உங்களது கோட்பாட்டு பங்களிப்புகள் பற்றி உலகளவில் இடதுசாரிகள் எழுதிய தொகுப் பொன்றும் 1999ஆம் ஆண்டு உங்களை கௌரவப் படுத்தும் வகையில் வெளியாகியுள்ளது (*்***எ வோர்ல்ட் டு வின்***). *உங்களுடைய அரசியல் எழுத்துக்களில் வெளிப்படும் வெப்பமும் இலக்கிய நயமும் உங்களுடைய எழுத்தில் பரிச்சயமுள்ள வர்கள் அறிவார்கள். உங்களுடைய இலக்கிய ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது? உங்களை ஆகர்ஷித்த எழுத்தாளர்கள் எவரெனச் சொல்ல முடியுமா?*



எனது தந்தை சுயமாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். 16 வயதில் தபால் அலுவலக வேலையில் சேரந்து விட்டார். சகோதர சகோரிகளை சிரமப் பட்டு வளர்த்தார். எனது தாத்தா ஒரு விவசாயி. நாவலில் அவர்தான் பாண்டியன். எனது தந்தை டிக்கன்ஸ், டால்ஸ்டாய், தாஸ்தயேவ்ஸ்கி, ரோமன் எம்பயர் என எலலா வகை புத்தகங்களையும் வாங்கிப் படிப்பார். பஞ்சதந்திரா, வால்மீகி என நிறைய வாங்கிக் குவிப்பார். ரஷ்ய, பிரெஞ்சு நாவல்கள்தான் எனக்குப்பிடிக்கும்.

www.tamilarangam.net

மப்பாஸன், தாமஸ் மான் போன்றவர்களை, குறிப்பாக ஸோலாவை, எனக்கு நிறையப் பிடிக்கும். *ரேஸ் அனட் கிளாஸை* நாங்கள் தொடங்கும்போது சொன்னோம் - சிந்திப்பது என்பது சிந்திப்பதன் பொருட்டல்ல, நடவடிக்கையின் பொருட்டு சிந்திப்பது என்று. இதுதான் என் படிப்பு முறையும் கூட. பிற்பாடு நான் சமகால எழுத்தாளர்களை இந்நோக்கில்தான் படித்தேன்.

ய ரா

*ஆங்கிலத்தில் இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக மூன்று நாவல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உங்களுடைய* ***வென் மெமரி டைஸ்,*** *மைக்கேல் ஒன்டாஜியின்* ***அனில்ஸ் கோஸ்ட்,*** *மற்றது ஸியாம் செல்வதுரையின்* ***.:பன்னி பாய்ஸ்.*** *மைக்கேல் ஒன்டாஜி அந்த நாவலுக்கு ஆய்வு செய்ததாகச் சொல்கிறார். சுமார் 50 அறிஞர்களைச் சந்திக் கிறார். ஆனால் இந்த நாவல் ஆதாரத்தினளவில் சமநிலை கொண்டதல்ல.* ***.:பன்னி பாய்ஸ்*** *அதிகம் இனப்பிரச்சினை பற்றியது என்பதைவிடவும், கொழும்பில் வாழ்ந்த ஒரு தமிழ் சமப்பாலுறவு இளைஞனின் அனுபவம் தொடர்பானது எனலாம். இந்த வகையில் இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்த மானுட சோகத்தை அதிகமாக உங்கள் நாவல்தான் வெளிக்கொண்டு வந்திருக்கிறது. அதாவது தமிழர், சிங்களவர் என இரு பகுதி அப்பாவி மக்களின் மீதான வன்முறையை துயரத்தை உங்கள் நாவல்தான் முன்வைத்தி ருக்கிறது. இதல்லாமல் ரொமேஷ் குணசேகரா தனது* ***ரீப்*** *நாவலில் சில வரிகளிலும், 'பொத்திக்' (****மங்க் பிஸ்*** *எனும் ஆங்கிலத் தொகுப்புக் கதை) எனும் சிறுகதையொன்றிலும் இலங்கைப் பிரச்சி னையைச் தொட்டுச் செல்கிறார். இவ்வகையில் இலங்கை இனப்பிரச்சனை குறித்த ஆங்கிலத் திலான எழுத்துக்கள் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன? நாவலின் இரண்டாம் பாகத்தில் ராஜன் இங்கிலாந்து வந்துவிடுகிறான். அவனுக்கென்று இங்கே அனுபவங்கள் இருக்கின்றன. இதனுடைய தொடரச்சியாக ராஜனின் கதையை எழுதுகிற எண்ணம் உண்டா?*



*அனில்ஸ் கோஸ்ட்* நாவல் இலங்கை இனப் பிரச்சனையைச் சொல்கிறதென நான் நினைக்கவில்லை. இது அதிக மாக ஜேவிபி இளைஞர்களின் எழுச்சி யையும் அரசு இயந்திரத்தின் ஒடுக்கு முறை பற்றியதும் ஆகும். ஸியாம் செல்வ துரையின் நாவல் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பெருநகரக் கலாச்சாரத்தினிடையில் இரு வேறு கலாச்சாரங்கள் கொண்ட மக்களுக்கிடையிலான பிரச்சினைகளைச் சித்தரித்தது என்பது முக்கிய மானதானாலும்கூட, அது அரசியல்ரீதியிலான பரிமாணம் கொண்டதல்ல என்பதுதான் எனது அபிப்பிராயம். ஆனால் இலங்கை நாவல்களில் வாசகர்கள் எதிர்பார்க்கும் விஷயம் யாதெனில் இந்த நாவல்கள் இலங்கை இனப்பிரச்சினையின் விவரங்கள், பரிமாணங்கள் எதையேனும் கொண்டிருக்கிறதா எனபதுதான்.

நான் மேற்கத்திய வாசகர்களின் எதிர் பார்ப்புகளுக்காக நாவல் எழுதுவதில்லை. நான் எனக்காகவும் எனது மக்களுக்காகவும்தான் எழுதுகிறேன். மக்கள் என்று சொல்கிறபோது நம் காலத்தில் வாழும் மக்கள் எனும் அர்த்தத்தில் சொல்கிறேன். புத்த பிக்குகள் பாசிஸ்ட்டுகளாய் இருக்கிறார்கள். போர்ப்பிரகடனம் செய்கிறார்கள். எவ்வாறு இது சாத்தியமானது? உலகின் மிக வன்முறையான மதமாக அது ஆகியிருக்கிறது. ஆனால் மேற்கில் அது அகிம்சையைப் போதிப் பதாக மட்டுமே உணரப்படுகிறது. இதையே பெரும்பாலுமான எழுத்தாளர்கள் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். அதன் மறுபக்க யதார்த்தத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது. இவ்வகையில் புத்தமதம்பால் பாராட்டுணர்வு கொண்ட அமெரிக்கர்களுக்கும் ஐரோப்பியர் களுக்கும் நான் எழுதவில்லை. நமது மக்களுக்கு நான் எழுதுகிறேன்.

நீங்கள் ஒரு அற்புதமான அரசியல் பகுப்பாய்வாளர் என்று இங்கிலாந்துப் பதிப்பாளர் கள் என்னைச் சொல்கிறார்கள். நான் ஒரு அற்புதமான நாவலை வைத்திருக்கிறேன் என்ற சொன்னேன். இருபத்தியேழு பிரதான பதிப்பாளர் கள் எல்லோரும் என்னை அறிவார்கள். எனது நாவலில் அதிகம் அரசியல் என்றார்கள். ஆர்க்காடிய பதிப்பாளர் ஒரு சமப்பாலுறவாளர். அவர் அதிகமும் சமப்பாலுறவு எழுத்துக்களைத் தான் பதிப்பிப்பவர். ஆயினும் அவர் இடதுசாரி யானதால் எனது நாவலை விருப்பமுடன் வெளி யிட்டார். யுரோ ஏஷிய காமென்வெல்த் பரிசை பிற்பாடு எனது நாவல் பெற்றது. இது வரையிலும் மூன்று பதிப்புகள் வந்துவிட்டன. இப்போது இந்தியன் எடிசனும் வந்திருக்கிறது. பெரும் பாலுமான எழுத்தாளர்கள் ஐரோப்பிய சந்தைக் காக எழுதுகிறார்கள். நான் அப்படி எழுத மாட்டேன்.




நார்வேஜியர்கள் எனது நாவலை மொழி பெயர்ப்பதற்காகக் கேட்டு எழுதியிருக்கிறார்கள். இந்தோனேசிய நாவலாசிரியர் பிரமோதயாவின் நண்பரும் கவியுமான ஒருவர் மலேசியனில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழிபெயர்க்க அனுமதி பெற்றிருக்கிறார். இன்னொரு நாவலுக்கு இன்னும் சில காலங்கள் பொறுக்க வேண்டும். என்னைப்பற்றி இப்போதுதான் *எ வோர்ல்ட் டு வின்* என்கிற தொகுப்பொன்று வந்திருக்கிறது. நான் இப்போதுதான் ஆறுமாதம் மருத்துவமனையில் இருந்துவிட்டு வந்திருக்கிறேன். ஆனாலும் ஒரு நீண்ட சித்திரம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஸல்மான் ருஸ்டியும் இந்த நாட்டின் முஸ்லீம் மக்களின் வாழ்வும் தொடர்பானது அந்தப் புத்தகம். சீகிரமே அதை முடித்து விடுவேன். அதையடுத்து ஏன் மதம் மிக முக்கியமானது எனபது குறித்து ஒரு நூல் எழுத இருக்கிறேன். மார்க்ஸ் சொன்னர்: Religion is shy of your past. It is a reaction. மதம் மக்கள் வாழ்வில் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது.

**ய ரா** *உங்களுடைய நாவலில் விஷேமான இன்னொரு அம்சம். இந்த நாவல் ஐரோப்பாவில் வெளியிடப்பட்டிருக்கிறது. மேலும் ஐரோப்பியப் பதிப்பகத்தினால் வெளியிடப்பெற்றிருக்கிறது. காலனியம் பற்றியும் சுதந்திரப் போராட்டம் பற்றியும் பேசுகிறது. ஆனால் ஒரே ஒரு ஐரோப்பியப் பாத்திரம் கூட நாவலில் இல்லை. ஐரோப்பியர்களைச் சந்தோஷப் படுத்துவதற்காக இப்போது இந்தியர்களும் இலங்கையர்களும் எழுதும் நாவல்களில் சம்பந்தா சம்பந்தமில்லாமல், கதை முழுக்க நமது நாடுகளில் நடந்தாலும் கூட, ஆங்கிலப் பாத்திரங்கள், அமெரிக்கர்கள் வருவார்கள். ஊதாரணமாக, பங்கஜ் மிஸ்ராவின் **ரொமான்ஸ்** நாவலில் வரும் அனைத்து முக்கியமான பெண் பாத்திரங்களுமே வெள்ளையர்கள்தான்.*



நீங்கள்தான் இந்த அம்சத்தைக் குறிப்பிட்ட ஒரே ஒருத்தர். எனக்கு ரொம்பவும் சந்தோஷம். நான் எனது மக்களைப்பற்றி எனது மக்களுக்கும் எனது மக்கள்பால் அக்கறையுள்ள உலக மக்களுக்கும்தான் இந்நாவலை எழுதியிருக்கிறேன். அதனால்தான் நாவலில் முழுக்க எனது மக்கள் மட்டுமே இருக்கிறார்கள்.

**ய ரா** *கார்ஸியா மார்க்வெசின் நாவல் உலக அளவில் பேசப்பட்டபின் பெரும்பாலான எழுத்தாளர்கள் மேஜிக்கல் ரியலிச பாணியில் எழுதுவது அல்லது பின்நவீனத்தவ பாணியில் எழுதுவது என்று அதன் மீது மோகம் கொண்ட இவ்வேளையில், ஏன் யதார்த்தவாத வகையை நாவல் எழுதத் தேர்ந்து கொண்டீர்கள்?*



ஏனெனில் நான் பின்நவீனத்துவத்தை வெறுக்கிறேன். எனது எழுத்துக்களில் நான் பின்நவீனத்துவத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறேன். எனது கடந்தகால எழுத்துக்களை நீங்கள் பார்த்தீர்களானால் - *மார்க்சிசம் டுடே* ஆட்கள் முன்வைத்த 'நியூ டைம்ஸ்' எனும் அவர்களது அறிகையை மறுத்தேன். *ஹோக்கம் ஆப் நியூ டைம்ஸ்* என்பது அக்கட்டுரை. கலாச்சார அரசியல், அடையாள அரசியல் போன்ற இவையெல்லாம் பின்நவீனத்துவத்தோடு சேர்ந்து அணிவகுத்து வரும். எல்லாம் பிளவுண்டு கிடக்கிறது, எல்லாம் அலைகிறது என்பார்கள். மார்க்சிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்கொண்டு அதற்கு நேர்மாறாக நடப்பார்கள். உலகம் மாறியிருக்கிறது உண்மைதான். பல்வேறு பழைய வரையறைகள் போதாது என்பது உண்மைதான். பழைய தொழிலாளி வர்க்கம் இல்லை என்பது உண்மைதான். இனப்பிரச்சினை, பாலியல் பிரச்சினை இருக்கிறது உண்மைதான்.

What bullshit is magical realism? What is all this magical realism business? What is magic about poverty? What is magic about torture and rape? What is magic about fundamentalism – Zionist, Islamic, Hindu fundamentalism? What is magic about BJP? நமது யதார்த்தம் நம்மை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. மார்க்ஸ் சொன்னர் : You must apprehend reality in order to change it. Postmodernist says : You must apprehend reality in order to change the interpretation. **I want to change the reality.**

எனது வாழ்க்கை முழுக்க நான் இனங்களுக்கிடையிலான நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கிறேன். இன அநீதியோ அல்லது சமூக அநீதியோ எதுவாயினும் அதை எதிர்த்துத் தான் போராடிக் கொண்டிருக்கிறேன். போஸ்ட் மாடர்னிசமோ அல்லது மேஜிகல் ரியலிசமோ இவைகளை வளர்த்துச் செல்லப்போதில்லை. Between accuracy and imagination, you have to bring in suffering, torture, pain, misery, and ecstasy of life. Of course, you can collapse time and space. That is why, in this sense, I said my novel is collapsed in various places. ஸல்மான் ருஸ்டி மற்றும் மேஜிக்கல் ரியலிஸ்ட் நாவலாசிரியர்களில் எனக்கிருக்கும் பிரச்சினை என்னவெனில், அவர்கள் எவரும் மக்களை நேசிப்பதில்லை. தங்களது பிரதியைக் காதலிக்கிறார்கள். சம்பவங்களை எழுதுவதில்லை. 'ஸ்ரரியலை எழுதுகிறார்கள். காலத்திலும் இடத்திலும் நடக்கிற கொடுமைகளையும் நெருக்கடிகளையும் காலமழித்து இடமழிதுச் செய்வதன் மூலம், இந்த எழுத்தாளர்கள் எதைக் கண்டு பிடிக்கிறார்கள்? *நிகழ்வுகளில் உண்மையைத் தேடு* என்றார் மாவோ. அந்த உண்மை காலத்திலும் இடத்திலும் தீர்மானிக்கப்பட்டதாய் இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டறியாப்புலத்தில் ஒரு சஞ்சாரம்

## Roaming the Greenwood



கோம் டோய்பின் Colm Toibin

போர்ஹே தனது அர்ஜென்டீனிய எழுத்தாளரும் மரபும் என்னும் கட்டுரையில், அர்ஜென்டீனிய, தென்னமெரிக்க எழுத்தாளர்கள் தமக்குள் நெருங்கியும் ஐரோப்பாவிலிருந்து விலகியும் இருப்பதால், மேற்கத்தியர்களினும் மேற்கத்திய க்லாச்சாரத்திற்கு உரிமம் பெற்றவர்களாகக் குறிப்பிடுகின்றார். யூத எழுத்தாளர்களின் மேற்கத்தியப் பங்களிப்பிற்கும், ஐரிஷ் எழுத்தாளர்களின் ஆங்கில இலக்கியப் பங்களிப்பிற்கும் உள்ள அசாதாரண காரணிகளை அவர் தேடுகிறார். ஐரிஷ் எனும் ஒரு உள்ளார்ந்த சிதை குணமும், யூதம் எனும் மேற்கத்தியப் பிறள்வு குணமும் முக்கிய அம்சங்கள் என வாதிடுகிறார். இவரது 1932ல் எழுதப்பட்ட இக்கட்டுரை சமப்பால் கலவி இலக்கியங்கள் குறித்த அணுகுமுறைகளின் இலக்கிய மரபுகட்கு முந்தையதாகும். ஆனால் தற்காலத்தில் இலக்கியத்தின் மையமாக உணரப்படுவது ஐரிஷ், யூத மற்றும் சமப்பால் கலவி இலக்கியங்கள் அல்லது இலத்தின் அமெரிக்க வகையைச் சேர்ந்தவைதான்.

மெல்வில், விட்மன், ஹாப்கின்ஸ், ஜேம்ஸ், யீட்ஸ், காஃப்கா, வுல்ஃப், ஜாய்ஸ், ஸ்டெய்ன், பெக்கெட், மன், ஃபரௌஸ்ட், ழீத், ஃபிர்பேங்க், லோர்க்கா, கோக்டு, ஏடன், ஃபாஸ்டர், கவாஃபி என்று நீளும் இந்த அட்டவணை பெரும்பாலும் இலத்தின் அமெரிக்கர்களாலும், யூதர்களாலும் நிரம்பியதெனும்போது போர்ஹே மெத்த மகிழ்ச்சியடைந்தாலும், இதிலுள்ள சமப்பால் கலவி அம்சம் அவரைச் சற்றே அசௌகரியப்படுத்தக் கூடும். அவரது மரபு பற்றிய கட்டுரையில் ஐரிஷ், யூத, அர்ஜென்டீனிய எனும் பதங்களுடன் சமப்பால் உறவு, ஓரினக் கலவி எனும் வார்த்தைகளால் மாற்றங்களைச் செய்து பாருங்கள். இன்னும் ஷேக்ஸ்பியர், மார்லோ, பேக்கன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளில் சமப்பால் கலவி எனும் சரடு மெலிதாக இழையோடுவதை அறிந்தால், போர்ஹே கலவரமடையக்கூடும். ஆம். எல்லா எழுத்தாளர்களையும் போலவும் அவர் கெஹாட்டி, காச்சோ மார்ட்டின் பியரோ, ஃபிளாபர்ட், கிப்ளிங் போன்ற மகோன்னதங்களிடம் தன்னைப் பறிகொடுத்தவர்.

எல்லா எழுத்தாளர்களிடத்தும் சற்று ஐரிஷ் தன்மையைக் காண்பது எளிது. ஸ்டெர்ன் ஐரிஷ்காரரா? கோல்ட்ஸ்மித், ராபர்ட் ட்ரெஸ்ஸல் அல்லது ஐரிஸ் முர்டாக் ஆகியோர் அயர்லாந்தினரா? ஆனால் ஒருவர் ஓரினக்கலவி உடையவரா இல்லையா என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவது பெரும் ரகசியம் அல்லவா? ககோ லைப் போன்ற சிலர் ஒரினக்கலவி உடையவரா இல்லையா என்று அறிவது கடினம். அவரது கதைகளில் ஆழ்ந்துறங்கும் கணங்களையும், குறியீடுகளையும், பயங்களையும், மேலான்மை களையும் கவனித்தால் அவரும் ஒரினக் கலவியின் அங்கமெனக் காண இயலும்.

ஆனால் இது பற்றி இப்போது அறிய வேண்டிய தேவை என்ன? சமப்பால் கலவி எழுத்தாளர்கள் அனுதினமும் தன்னம்பிக்கை பெற்று வருகிறார்கள். சமப்பால் கலவி அரசியல் வலுப்பெற்றும் வருகிறது. அதன் வரலாறு தன் அடையாளங் களைத் தேடுகிறது, யூதர்களையும் அயர்லாந்துக்காரர்களையும் போல. மங்கலான சில ஆதாரங்களை யாம் அடையாளமிட முடியும். வால்ட் விட்மனுக்கு அவரது எழுத்துக் களில் இந்தப் பாதிப்பு இருந்த தென்று அவரது விமர்சகர்களும் அவரைப் போதித்தவர்களும் கண்டு கொள்ளவில்லை. சமப்பால் கலவி விமர்சகர்கள் அவ்வுறவுகளைப் பற்றிய படைப்பின் அடையாளங் களைச் சென்றடையாதது மட்டு மல்ல, இவ்வம்சத்தை நிராகரிக்கவும் முயன்றனர். லயனல் ட்ரில்லிங், இ.எம். ஃபாஸ்டர் நவீனங்களைப் பற்றிய ஒரு புத்தகத்தை 1984ல் பதிப்பித்த போது ஸிந்தியா ஓசிக்கிற்கு எழுதியது,



'நான் ஃபாஸ்டரைப் படித்துக் கழிக்காத வரை அவர் ஒரு சமப்பால் கலவியாளர் என்று உணராதிருந்தேன். ஏனென்றால் எனக்குள் அப்படி ஒரு கவிப்பு கூடியிருந்தது. எனினும் சமப்பால் கலவி, கலாச்சாரத்தின் முக்கியப் பின்னலில் ஒரு வலுவான இழையாகும்போது விவாதத்துக்குரியாக்கப்படும். இன்று அவ்வுறவு பற்றிய மாற்றங்கள் என்றும் நிகழ்ந்த வண்ணமுள்ளன.'

எழுத்தில் சமப்பால் கலவி முற்காலங் களில் சற்று மறைவாக, சற்று வெளிப்படை யாக இருந்து வந்துள்ளது. தற்காலத்தில் மேலை நாடுகளில் இவ்வுணர்ச்சி தீண்டத்தகாததாக இல்லை. முக்கியமாக நகரங்களில் 'சமப்பால் கலவிக்குப் பிந்திய' எனும் நவீன நிலை உருவாகியுள்ளது. ஆகவே இதுவரை நாம் படித்தவை, படிக்கப் போகின்றவை என்பன விவாதத்துக்குரியன. பயனற்ற கேள்விகள், தீர்வுகள் இவ்வகையில் தவிர்க்க இயலுவன.

தாமஸ் மன் ஏன் சரியாக வெளிப் படுத்தப்படவில்லை. இ.எம். ஃபாஸ்டர் தனது *மாரிஸை* 1914ல் அல்லாமல் எப்போது வெளியிட்டார்? அமெரிக்க வரலாற்றாசிரியர் எஃப். ஓ. மேத்தியேஸன் சமப்பால் கலவி வரலாற்றை ஏன் எழுத வில்லை. லயனல் ட்ரில்லிங்கிற்கு ஃபாஸ்டர் ஒரு ஒரினக்கலவி யாளர் என்று ஏன் தெரிய வில்லை. ஒரினச் சேர்க்கை ஆக்கபூர்வமானதாக உருவாக்கப் பட் டுள்ளது. ஜேன் ஆஸ்டினைப் போல அயற்பால் கலவியாளரின் இறுதி மகிழ்ச்சியில் முடிந்தவாறு ஒரினச் சேர்க்கையாளரின் இறுதி ஏன் இன்பியலில் முடியவில்லை. ஏன் சமப்பால் கலவி ஆபாச மாகத் தோன்றுகிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை நாம் அறுதியிட்டுக் கூற முடியாது. கற்பனையும் செய்யமுடியாது. ஆனால் நிகழ்காலம் மாற்றங்கள் நிறைந்தது. 1970ல் ஜேக்கப் எப்ஸ்டீன் *ஹார்ப்பர்ஸ்* இதழில் எழுதியதைப் பாருங்கள்:

'சமப்பால் உறவை என் அனுபவத்தில் எவ்வளவு பரந்த மனப்பான்மை உடையவரும் ஒப்புக்கொண்டாரில்லை. அமெரிக்காவில் இதனை அணுகும் விஷயத்தில் பொய்மைகள் இல்லையெனினும் காரணங்கள் ஏதுமின்றித் தோன்றிய, தீர்வுகள் ஏதுமின்றி விடப்பட்ட, நமது பகுத்தறிவுக்குச் சவால் விடும் சமப்பால் கலவி நாம் வாழும் இவ்வுலகின் விரக்தியின் விளக்கமெனத் திகழ்கிறது.'

ஒருவேளை அவரது நான்கு மைந்தர் களில் ஒருவன் ஒரினச் சேர்க்கையாளனாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பின் ஆண்களால் திண்டத்தகாதவனாய் விடப்படக்கூடும். அவன் அப்பேர்ப்பட்ட ஒரு வாழ்க்கையை இப்புவியின் வலிகளின் ஓர் அங்கமென வாழ்ந்துதிர வேண்டும்.

'வெளிர்நிற முக்கோணம்' எனும் கட்டுரையில் கிரிகரி வுட்ஸ், 'நாஸி முகாம் களிலிருந்து விடுதலை அடைந்ததும் சிறையில் வெளிர்சிவப்பு முக்கோண அடையாளம் தரப்பட்ட சமக்கலவியாளர்கள் நேச நாடுக ளாலும் குற்றவாளிகளைப் போல நடத்தப் பட்டார்கள். அவர்களது எஞ்சிய நாட்களும் சிறையில் கழிக்கப்பட்டன. ஊழிக்காலச் சின்னங்களிலிருந்து வெளிர்நிற முக்கோணம் நீக்கப்பட்டது. நாஸிகள் தமது சட்ட ஆணை யின் 175ம் பிரிவில் சமப்பால் கலவிக்கெதி ரான கறாரன விதிமுறைகளை வகுத்திருந்த னர். எல்லா நாஸி ஆணைகளையும் போல போருக்குப் பின் இவ்விதி நீக்கப்படவில்லை.

யூதர்களும், வட அயர்லாந்தைச் சேர்ந்த கத்தோலிக்கர்களும் தம் மேல் நாஸிக்காலத் தில் செலுத்தப்பட்ட அடக்குமுறைக்கு எதிராக கணிசமான ஆக்கங்களை உருவாக்க இயன் றது. கதைகளாயும், நூல்களாயும் அவர்களைச் சூழ்ந்திருந்தது வரலாறு. சமப்பால் கலவியாள ருக்கென்றோ ஏதும் விட்டுவைக்கப்பட வில்லை. பழமையின் வலிநிறைந்த பாட்டுக் களோ, தியாகங்களோ எந்தச் சித்திரங்களும் இல்லை. அட்ரியன் ரிச்சின் ஒரு வரியைப் போல, 'கண்ணாடியில் நீ எதைக் கண்டாய், வெறுமையைத் தவிர' என்னுமாறு ஆகி விட்டது நிலைமை. வரலாறும் மரபும் வரலாற்றுக்காணலும் அறிவும் ஒவ்வொரு மனிதனுக்குமான விடுதலைப் பெருவழியை உருவாக்கித் தர வேண்டும். ஆகவே வரலாறும் அறிவும் சமப்பால் கலவி பற்றிப் படிப்பவர் களுக்கும் விமர்சிப்பவர்களுக்குமான அபாயங் களும் தாட்சண்யமின்மைகளும் நிறைந்தது.

வால்ட் விட்மனிலிருந்து இப்போது தொடங்குவோம். 'அந்திசாயும் நேரத்தில் நான் கேட்டது' எனும் கவிதை ஒரே வரியில் எழுதப் பட்டது. கவிதை இசைப்பவர் கவிதையில் வரும் ஒரு சமப்பாலுறவு கதாபாத்திரம் எவ்வாறு பாராட்டுக்களில் தனக்கு மகிழ்ச்சி இல்லை என்று கூறுவதாக உள்ளது. 'அந்த இரவு எனக்கு மகிழ்ச்சியான ஒன்றல்ல, எனினும் எனது அவன் வரக்கூடும் என்ற நினைவே இனிமையானது' எனும் கவிதையின் இறுதிப் பகுதி இவ்வாறாக:

நான் மிகவும் நேசிக்கும் அவன் என்னருகே ஒரே விரிப்பில்
குளிர்ந்த கோடை நிலவு எறியும் கதிர்களின் நிச்சலனத்தில்
உறங்கிக் கிடக்கின்றான், தன் முகம் என்னை நோக்கி
திரும்பியும் தனது கைகளில் ஒன்று என் மார்மீது மெலிய விழுந்தும் கிடந்தவாறு..
ஆஹா நான் அன்றிரவு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தேன்.

இது விட்மனின் சமப்பாலுறவு மிகுந்து காணப்படும் ஒரு காதல் கவிதை. இக்கவிதை எஃப்.ஓ. மேத்தியேஸனும் அவரது காதலர் ரஸ்ஸல் செனேயாலும் இருபதுகளில் படிக்கப்



பட்டது. அவர்களுக்கு முன்மாதிரிகள் யாரும் இல்லையாதலால் இக்கவிதை முக்கியமாகக் கொள்ளப்பட்டது. மேத்தியேஸன் எழுதியது, 'இந்த எமது வாழ்க்கை புதியது. எம்மைப் போன்ற வேறெதுவும் முன் நாங்கள் காண இயலவில்லை. யாம் ஒரு இதுவரை கண்டறியப் படாத புலத்தின் மத்தியில் காணப்பட்டோம். இதே போன்ற வேற்று அனுபவங்களை எம் மால் உணரமுடியவில்லை. நாங்களே எமக் குத் தேவையானவற்றை உருவாக்க இயன்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது எளிதும் அல்ல.'

இந்த யாரும் கண்டறியாத புலத்தை மேத்தியேஸன் கண்டடைந்த போது அவர் ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்று வித்துக் கொண்டும், *'அமெரிக்க மறுமலர்ச்சி: எமர்ஸன் மற்றும் விட்மன் காலக் கலையும் வெளியீடும்'* எனும் நூலையும் 1941ல் பதிப் பித்தவாறும் இருந்தார். எமிலி டிக்கன்ஸனின் எழுத்துக்களில் அவர் புறக்கணித்த முக்கிய மான அம்சம் அவற்றின் திருமறையாக்கும் தன்மையாளகும். எமர்ஸனைப் பற்றிய அவரது கட்டுரை நூறு பக்கங்கட்கு மேற்பட்டது. அந்த நுட்பத்துடன் விட்மனின் மொழிபற்றி அவர் எழுதுகிறார்: 'அருபத்திற்கும் பிராந்திய மொழிக்கும், நடைமுறைக்கும் ஆழ்நிலைக்கும் இடையிலான இறுக்கங்கள் நிறைந்தவை அவை.' ஒபரா மற்றும் ஓவியங்களுடன் கூட, மேலும் அக்கட்டுரையில் அவர் விட்மனின் மீதான பாதிப்புகள் பற்றி எழுதுகிறார். விட்ம னின் பாதிப்போ ஹென்றி ஜேம்ஸ் மீது இருந்த தை விட்மனைப் படித்துவிட்டு அவர் எடித் வார்ட்டனுக்கு, 'மேற்தெரியாத ஒரு மனக்கி ளர்ச்சியுடன் இருந்ததாகக்' கூறும் போது உறுதி செய்கிறார். ஹாப்கின்ஸோ, 'எனக்கு விட்மனின் மனோநிலையை என்னதைப் போன்று உணரமுடிகிறது' என்று கூறுகிறார். மேத்தியேஸன் இங்கு விட் மனின் சமப்பால் கலவி பற்றிக் கூறு வதாகக் கூறுகிறார். அவர் எழுதுகி றார், 'விட்மனின் சமப்பால் கலவி பற்றியும் தன்னுள்ளே தான் உணர்ந்ததை' அந்நூலில் அவர் ஐம்பது பக்கங்களுக்கு முன் குறிப்பிட்டிருக்கிறார். தனது எனக்கான கவிதை முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

அன்றொரு வேனிலின் இளங்காலையில்
நாமிருவரும்
அணைத்துக் கிடந்ததை நான் எண்ணிப்
பார்க்கின்றேன்;
எவ்வாறு நீ எனது இரு தொடைகளுக்கிடையில்
உனது
தலையைப் புதைத்து என் பக்கமாய் உன் முகம்
திருப்பினாய்
நெஞ்சகத்தில் கிடந்த எனது சட்டயை எவ்வாறு
இருபிளவாக்கிப் பிரித்து
உனது நாவினால் தீண்டினாய்
பின் என் தாடியையும் பாதங்களையும்
அவ்வாறே கடந்தாய்.

மேத்தியேஸனின் விமர்சனம் இந்தப் பத்தியின் அடிநாதத்தை நிராகரிக்கிறது. அவர் சொல்கிறார், 'சலனமற்றுக் கிடக்கும் கவிஞனின் உடல் பற்றிய அக்குறிப்பு நோய்க் கூறானதாகவும் சமப்பால் கலவியினதாகவும் தோன்றுகிறது. ஆனால் ஐம்பது வருடங்கள் கழித்து எழுதப்பட்ட அவ்வாக்கியம் அப் பக்கத்தில் தழல் விட்டெரிகிறது; நோய்க்கூறும் சமப்பால் கலவியும். மேத்தியேஸனின் கடிதங்களைத் தொகுத்த ஜொனாத்தன் ஏரக் கூறுவது, 'அமெரிக்க மறுமலர்ச்சியின் மத்திய அதிகாரத்துவ நிலைப்பாட்டு விமர்சனத்தை உருவாக்க நிறைய விஷயங்களைப் புறக்கணிக்கவும் உடைக்கவும் சிதறடிக்கவும் வேண்டியதாயிற்று.' மேத்தியேஸனுக்கு இது நன்றாகத் தெரியும். ஜனவரி 1930ல் அவர் தன் பாய்ஃப்ரண்டுக்கு இவ்வாறு எழுதி னார், 'என்னுடைய பாலியல் என்னைக் கவலையடையச் செய்கிறது, காதலனே, சில நேரங்களில் அது எனது தவறா ன சமூக அங்கீகாரத் தை உறுத்தும்படி உள் ளது. ஆகவே எனது நம்பிக் கையின் உக்கிரம் தளர்ந்து வீழ்கிறது. என்னை முற்றாகப் புறக்கணிக்கக் கூடிய சமூகத்தில் நான் வாழ்வது சாத்தியமா. பொய்மை யற்று வாழ விரும்பும் நான் அஞ்சி வாழ அவமானப்படுகிறேன்'.




அவருடைய மாணவர்கள் மற்றும் சிறுவயது நண்பர்களுக்குத் தெரிந்தவரை அவர் ஹார்வேர்ட் இலக்கியக் குழுக்களுக்கு மத்தியில் சமப்பால் கலவி செய்பவராகவே அறியப்பட்டிருந்தார். வழக்கம் என்ன என்றால் சமப்பால் கலவி செய்பவர்கள் இருபாலாருடன் கல்வி மற்றும் பாலியல் வட்டாரங்களில் நன்கு பழகுவது சாத்திய மில்லை என்பதுதான். இருப்பினும் அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமப்பால் கலவியாளர் என்பது சூசகமே. இவ்விவரங்களை நாம் அமெரிக்க வாழ்க்கை வரலாறுகளின் அகராதியில் காண முடிகிறது. 1950ல் அதாவது தனது காதலர் இறந்து ஐந்து வருடங்களுக்குப் பின் அமெரிக்கத்துவம் அல்லாத நடவடிக்கைக் குழுவில் ஒரு இடதுசாரிச் செயல்பாட்டாளராகப் பங்கேற்கு முன் மேத்தியேஸன் பாஸ்டன் ஓட்டல் ஒன்றின் பன்னிரண்டாவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்; அவருக்கு வயது 48.

நமது இத்தேடலில் வால்ட் விட்மனைத் தனது கவிதைகள் மூலமாக அவர் இப்பேரப்பட்டவர் என்று அடையாளம் காட்டுவது எளிதாய் இருப்பினும், மேத்தியேஸனின் நிலை என்ன? அவர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தவர், உறுத்தலுக்குள்ளானவர், ஆனால் தனியரல்ல. அவர் மீது எந்நிலையும் திணிக்கப் படவில்லையெனினும் தெளிவற்றவர். அவரது கடிதங்களில் இருந்தும் படைப்புகளில் இருந்தும் அவர் ஒரு ஆழமான சமப்பால் கலவியாளர் என்பதும் மிடுக்கான ஒரு கல்வியாளர் என்பதும் தெரியவருகிறது.




ஒருபுறம் இளகியவர். மறுபுறம் புத்திசாலி, கிரிட்டிக். தாம் இக்கலவி செய்பவர் என்று வெளியிட இயலாத பயம் நம்மில் அனைவருக்கும் உண்டு. அது ஒரு கால கட்டத்தில், ஒரிடத்தில், ஒரு நிலையில் வெளிப்படும். இவ்வகைக் கலவியின் ஆதிகாலம் தெளிவற்றது. ஐரிஷ் காலமோ தெளிவானது. ஆழ்நிலையிலின்றி இதனை அணுக இயலாது.

இவ்வுறவின் ஆதி மௌனங்களும் பயங்களும் நிறைந்தது. விட்மன், ஷேக்ஸ்பியரது கவிதைகளைப் போன்றது. காஃப்கா வினது படைப்புகள் இவர்களுக்கு மிகப் பிடித்தமானவை. காஃப்காவின் எல்லாப் படைப்புகளிலும் இவ்வகை உறவின் ஒரு உபப் பிரதியை நாம் காண இயலும்.

ரூத் டீப்பன்பிரன் எழுதுவதைப் போல காஃப்காவின் எல்லாப் படைப்புகளின் முழுமை, 'இப்போது தெரிகிறது காஃப்காவின் அனைத்துக் கதாபாத்திரங்களும் சமப்பால் கலவியாளர் என்பது. அவர் இவ்வுணர்ச்சியை கவனமாய் மறைத்தவர் என்பதால் அவரது படைப்புகளுக்குக் கிடைத்த வேறு விளக்கங்கள் ஆச்சரியப்படத்தக்கவையல்ல. இருப்பினும் அவரது தனிப்பட்ட கடிதங்கள், டைரிக் குறிப்புகள், நோட்டுப்புத்தகங்கள் போன்றவற்றில் உள்ள குறிப்புகளிலிருந்து தனது சகப்பிறள்வாளர்களுடன் ஒரே சமயத்தில் தாமே தம்மை மறைக்கவும் வெளிப்படுத்திக் கொள்ளவுமான குணாதிசயங்களைக் காண இயலும்.'

கிரிகரி வுட்ஸ் தனது *ஒரினக் கலவி வரலாறு* எனும் புத்தகத்தில் ரூத் டீப்பன்பிரனின் கோட்பாடுகள் காஃப்காவின் மேதைமையைக் குறுகலாகப் பார்க்கின்றன என்றும் தன் படைப்புகள் விஷயத்தில் போதுமானதாக உள்ளதென்றும் கூறுகிறார். ஆனால் நமக்குள் கேட்கப்பட வேண்டிய கேள்வி ஒரு ஆக்கத்தை அது ஒரினக் கலவி கொண்டதென நிறுத்த விழையும்போது எழுதியவரின் பரந்துபட்ட வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளும் போதுதான் நிகழும். மேலும் ஒருவரது பிரதி அவர் நடத்தைகள் அனைத்துக்கும் சான்றாய் இல்லை என்று எப்படிக் கருத முடியும்? ஆகவே காஃப்கா எதை நிச்சயம் கூறியிருக்க வேண்டும், எதை நாம் அவர் சொன்னதாகப் புரிந்து கொண்டோம் என்ற விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

*மெட்டமார்ப்பஸிஸில்* வருவது போன்று இக்கதைகள் அடையாளம் காணப்பட்டு விடுவதினின்றும் ஒடுங்கிப் போகும் பயனற்ற வாழ்க்கை வாழும் தனிமனிதர்களைப் பற்றியவை. அல்லது ஜோஸப் கேயைப் பற்றி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றவர்கள் பொய் சொல்வதைப் போல தவறாக வம்பளக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அல்லது மற்ற மனிதர்களுட னான தம் உறவு த கேஸ்ட்டிலில் வரும் போராட்டங்கள் போல பாதி மறைந்தும் மற்றும் மறையாமலும் இருப்பன. த கேஸ்ட்டில் நூலில் வரும் அலைச்சல்களும் மன உளைச்சல்களும் நிறைந்த பொய்மை வாய்ந்த கதாபாத்திரங்கள் இவைகள். இர்விங் ஹோவ் எழுதியதைப் போன்று காஃப்காவின் பாத்திரங்கள் அந்நிய மனோபாவத்தையும் குற்றம், இழப்பு, தோல்வி மற்றும் பிடிப்பு களற்ற நிலையை பிரதிபலிப்பதைப் போல வேறு யாருடைய எழுத்துக்களும் பிரதி பலித்ததில்லை. காஃப்காவைச் சுற்றிக் கசியும் முரண்கள் மிகச் சுயமானவை அல்லது ஒழுங்கமைவில் சுயமற்றவை நமக்கெல்லாம் தெரிந்தவை. அவருள் ஒளிந்து கொண்டி ருக்கும் பரிச்சயமான சுயம் மற்றும் ஒழுக்கத்தை மீறி வெளிப்பட்ட நாம் அறியும் குணம் ஆகியன அவரது முரண்களாகக் கசிகின்றன. அவர் ஒரு பிராக் நகரில் வாழும் ஜெர்மன் பேசும் யூதர், பூர்ஷுவா உலகில் ஒரு மேதை மற்றும் இர்விங் ஹோவைத் தவிர ஒரு சமபால் கலவியாளர் என்ற இக்குணா திசயங்கள் மேற்சொன்ன முரண்கசிவாக இருக்கின்றன. அவரை எல்லா ஹோமோக் களும் அப்படியே படிக்க வேண்டும் என்று வலியுறுத்த அல்ல. ஆனால், அவரது படைப்புகள் அக்கலவியால் பாதிப்படைந் துள்ளன என்றும் அதன் பல பகுதிகள் ஒரு கலவியாளனின் தனித்த நகர் வாழ்வென்றும், யூதத்தில் நம்பிக்கை அற்றவன் என்றும் மற்றும் இருபதாம் நூற்றாண்டு மனிதன் என்றும் படிக்கத் தகுந்தன.

கிரிகரி வுட்ஸ் *1984* எனும் படைப்பை நுட்பத்துடன் படித்து சில கேள்விகளை முன் வைக்கிறார். அதில் வின்ஸ்டன், ஜூலியா ஆகியோரது கள்ளக்காதல் ஆர்வெல்லின் பால், பாலுறவு பற்றிய கருத்துக் காவலர்கள், நாவல் எழுதப்பட்ட 1948ல் வாழ்ந்த சமபால் கலவியாளரின் லண்டன் வாழ்க்கை ஆகிய வற்றை அவர் காண்கிறார். வுட்ஸ் இவ்வாறு ஒவ்வொரு பத்தியையும் குறிப்பிடுகிறார்,

'அவன் அவளுடன் பயமற்றும், வெளிப்படை யாகவும் சாரமற்ற விஷயங்களைப் பற்றியும், வீட்டுக்குத் தேவையான தட்டுமுட்டுச் சாமான்கள் வாங்குவது குறித்தும் பேசிக்கொண்டு தெருக்களில் நடந்து சென்றான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் அவர்களிருவரும் எந்தவிதத் தொந்தரவும் இன்றி கலவி செய்வதற்கான ஒரு தனித்த இடத்தைத் தேடினான். ஓரினக் கலவி வாசகர்கள் இந்த இறுதி வரியை ஒரு முக்கியமான ரகசியச் சொல்லாகக் கருதுவர்.'

வுட்ஸ் கூறுவது, 'நான் எப்போது *1984*ஐப் படித்தாலும் அதில் ஓரினக் கலவி இழையோடும் இன்னொரு நாவலைப் படித்த மாதிரியும் இருக்கிறது' என்பதே. இதில் காணப்படும் விஷயம் வின்ஸ்டன், ஜூலியா எனும் இரு காதலர்கள் தமது காதலுக்கு இடையூறான அச்சுறுத்தல் தண்டனைகளுக் கெதிராகப் போராடுகிறார்கள் என்பதுதான். இருப்பினும் ஆர்வெல்லின் நேரடி வாசிப்பா ளர்களும் ஏன் ஆர்வெல்லுமே கூட இப்படியும் அதனை வாசிக்கலாம் என்று புரிந்து கொள்ளவில்லை: ஓரினக் கலவியாளர் இதனைப் படிக்கும் போது தனக்குச் சமமான



www.tamilarangam.net

பிரசினையாக இதனைக் கொள்ளக் கூடும். இவ்வாறுதான் இங்கிலாந்தில் ஓரினக் கலவி வாழ்வு இருந்துள்ளது, இருந்தும் வருகிறது.

தமது உலகம் கற்சுவரால் மறைக்கப் பட்ட ஓரினக் கலவி வாசகர் கண்டறியாப் புலங்களைச் சித்தரிக்கும் பயங்கள் ரகசியங் களை சுயத்தன்மையுடன் வாசிக்கிறார். காஃப்காவைப் போல தனது ஓரினக் கொள்கையை மறைத்து வாழ்ந்ததற்கான எக்காரணத்தையும் ஆர்வெல்லிடம் நாம் காண இயலவில்லை என்றாலும், அவரது விமர்சகர்களும் அவர் அயல்பால் கலவி யாளர் என்று நிரூபிப்பதாலும் நம்மால் ஒப்புக்கொள்ள முடிகிறது. எனினும் இறுதி முடிவு வாசகர்கள் கையில் உள்ளதே. இதனையே வுட்ஸ் கூறுகிறார்.

தனது, *'தன்னொடுக்கத்தின் அறிவா தாரவியல்'* எனும் நூலில் எவா கொஸோ வ்ஸ்கி செத்விக் குறிப்பிடுவதாவது, 'பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் ஒரு குறுக்கு வர்க்க ஓரினக் கலவியின் நிலையும் அது பற்றிய இடையறாத தத்துவ விளக்கம் மிகுந்த சொல்லாடல் மேலெழுந்த வாரியாகக் கிடைத்தன. குறிப்பாக அவை வைல்டின் மூடி மறைத்த தேடல்களில் இருந்து வெளிப்படை யாகக் கிளர்ந்தெழுந்தன.' கொஸோவ்ஸ்கி இது பற்றி மேலும் குறிப்பிடவில்லை எனினும் ஃபோக்காவிற்குப் பிந்திய எழுத்தாளர்கள் என்று வுட்ஸால் அழைக்கப்பட்டவர்கள் வைல்டின் ஆய்வுகளுக்குப் பின்தான் ஓரினம் சேர்ந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் கலவி செய்யும் கருத்தாக்கம் மேற்தெரிய வந்ததென்று குறிப்பிடப்படுகிறது. அவைகள் ஓரினக் கலவி கள்தான். ஆனால் இது பற்றித் தெளிவான விவாதங்கள் இல்லாததால் வைல்ட் குறிப்பி டும் வரை சம்மந்தப்பட்ட நபர்கள் அவ்வகைக் கலவியாளர் என்பது தீர்மானமற்று இருந்தது. கிரிகரி வுட்ஸ் தியோப்பில் காத்தியரின், *மேட்மாய்ஸில் டி மாபின்* எனும் 1835ல் பதிப்பிக்கப்பட்ட நாவலில் காண்பது போல் நாயகன் டி ஆல்பர்ட் தான் ஒரு ஆணைக் காதலிப்பதாயும் அதன் விளைவாக கீழ்க் கண்டபடி உணர்வதாகவும் கூறுகிறான்,

'1835ல் இப்படித்தான் ஒரு பிரெஞ்சுக் காரன் அவனிடம் வந்தான். அப்போது அவனுடைய வாழ்க்கை அடிப்படையில் மாறிவிட்டதாக நம்பினான். ஒரு ஆண் மகனின் உடலைப் பற்றி நினைத்த மாத்திரத் தில் உடற்கிளர்ச்சி அடைந்தது மாத்திரமல்ல, நினைவாலும் கலவி செய்யும் தூண்டலாலும் ஆளப்பட்டான். இது வெறும் உடற்கவர்ச்சி மட்டுமல்ல. ஆளுமை சம்மந்தப்பட்டதும் கூட.'

இதைத்தான் வுட்ஸ் பின்னாட்களில் ஓரினக்கலவி என்று கூறுகிறார். இது காத்திய ரின் புதினத்தில் வருவது போன்று காலங்கால மாகவும், ஏன் மக்கள் தோன்றியதிலிருந்தும் நடந்து வந்திருக்கிறது. அது சிலருக்கு நடந்த போது தம்மைத் தாமே இவ்வுணர்ச்சியில் இருந்து விலக்கிக் கொள்ளவும் ரகசியமாக வைத்திருக்கவே முற்பட்டனர். சமீப காலங்கள் வரைக்கும் இந்நிகழ்வு சமூகம் பாலுணர்ச்சி யின்மீது விதித்த வரையறைகள் இக்கட்டுப் பாட்டினைத் தீர்மானித்தன. கிரேக்கத்திலும் ரோமிலும் சம வயதுள்ள ஆண்களுக்கு மற்றும் ஆண் மற்றும் சிறுவர்களுக்கு இடையிலான உறவுகள் பாகுபட்டிருந்தன.

ஓரினக் கலவிக்கும் ரோம அரசு வீழ்ந்த தற்கும், ஆஸ்கர் வைல்டின் விசாரணைக்கும் உள்ள முடிச்சு குறிப்பிடத் தகுந்தது. ஆங்கிலத் தில் உள்ள பல பதினாறாம் நூற்றாண்டின் இலக்கியங்களை ஒரு கண்ணோட்டம் பாருங் கள். முதல் 126 சானட்டுகள் மிக முக்கியமான ஓரினக் கலவிப் பிரதி களாகும். வுட்ஸ் முதலில் ஷேக்ஸ்பியரின் சில நாடகங்களையும் *மெர்ச் சன்ட் ஆப் வெனிஸில்* அந்தோணியோவை யும், *டிராய்லஸ் கிரஸிடாவில்* அக்கிலஸ் மற் றும் பெட்ரோகிலஸையும், *ஒத்தெல்லோவில்* காஸியோவுடன் படுக்கையில் கிடந்த இயாகோ வையும் பின்பு குறிப்பிடுகின்றார். இயாகோவி டம் காஸியோ டெஸ்டிமோனாவைப் பற்றிக் குறிப்பிடும் போது இனியவளே என்று அந் நேரத்தில் அழைத்ததும் குறிப்பிடத் தக்கது.

எனது கையை இறுகப் பற்றியும் முறுக்கியும்
அவன்
உரத்து, 'ஓ இனிய பிறவியே' என்று கூறி

www.tamilarangam.net

வேரில் ஆழப் பதித்த முத்தங்கள் கிளைகளில்
மலர்வது போல
என் உதடுகளில் முத்தமிட்டான்
பிறகு என் தொடை மீது தன் கால்களைச் சரித்து
பெருமூச்செரிந்து முத்தமிட்டுப் பிதற்றுவான்,
'கொடிய விதி, உன்னை ஒரு
கலப்பினத்தானுக்குத்
தாரை வார்த்து விட்டது.'

ஏன் கேஸியோவை இயாகோ தள்ளி விடவில்லை என்று வுட்ஸ் கேட்கிறார். ஏனெனில் அவர் இயாகோ ஒரு ஓரினக் கலவியாளன் என்று மட்டுமே கூற விரும்பவில்லை. ஆனால் அவரது பாடல்களில் இன்னும் கேளிக்கை மிகுந்திருக்கிறது. அத்தகைய ஒரு ஈரேழ் வரிப்பா எண் 20ல்:

இயற்கை தன் கையால் தானே எழுதிய
பெண்முகத்தானே
எனது பெருங்காமத்தின் துணையே;
பெண்களைப் போன்ற மென்னிதயம், எனினும்
பொய்மை கொண்ட அவர்களைப் போல
அலைவற்ற ஒன்று
பொய் கலவாத நின் பார்வைகள்
அவர்களினின்றும் ஒளிர்வன
பார்த்த இடங்களில் பொன்னாய் மலர்வன
நிறங்கள் தனக்குக் கட்டுப்பட்ட ஓர் ஆண்
வர்ணமயமானவன்; ஆண்களின் கண்களைக்
கிறங்கடிக்கவும்
பெண்களின் ஆன்மாவை அதிர்வுறவும்
செய்பவன்
பெண் ஒருத்திக்காக நீ இரக்கமின்றி
இயற்கையின் நுட்பங்களால் படைக்கப்பட்டாய்
ஆனால் கூடுதலாக உனக்குத் தரப்பட்ட ஒன்று
எனக்குப் பயனற்றதாகி விட்டது,
ஆனால் இயற்கை உனக்குப் பெண்களின்
மகிழ்ச்சிக்கான
குறி ஒன்றைத் தந்தாலும், நானே உன் காதலன்
அதனால் அவர்களின் சீதனம் எனக்கே



ஹெலன் வென்ட்லர் என்னும் கிரிட்டிக் தனது *ஷேக்ஸ்பியரின் ஈரேழ் வரிப்பாக்கள்* எனும் நூலில் ஆண் எனும் உச்சரிப்புடைய (h-e-w-s) / (h-u-e-s) வாசகங்கள் மேற்கண்ட பாடலில் விரவி வருவதைக் குறிப்பிடுகிறார். பாடலில் நிறைய பெண் மெட்டுக்களும் உள்ளன. வுட்ஸோ பல விமர்சகர்களை தர்ம சங்கடத்தில் ஆழ்த்திய பாடல் இது என்கிறார். 1840ல் டி.எல். ரிச்சர்ட்ஸன் இதனை ஷேக்ஸ்பியர் எழுதியிருக்க வேண்டாமே என்கிறார். 1963ல் ஹெச்.எம். யங் இது அப்படிப்பட்ட கவிதை அல்ல என்கிறார். மேலும் அவர் எப்படி ஆண் குறி தனக்குப் பயனற்றதென்று ஒரு ஓரினக் கலப்பாளர் கூறமுடியும் என்கிறார். ஆனால் வுட்ஸ், 'அப்படியல்ல ஒரு ஓரினக் கலப்பாளனுக்கு மற்ற விஷயங்கள் அவசியமானவை' என்கிறார். 'அவனுடைய பின்துவாரத்துக்கு என்ன வேலை?' செத்விக் கூறுவது போல இப்பாடல்களில் எங்கும் பெண்குறி பற்றிய அடையாளம் இல்லை என்பதே உண்மை. வுட்ஸ் கூறுவது, 'இளைஞனின் பின்புறத்தில் ஏகப்பட்ட சமாச்சாரங்கள் உள்ளன.'

வுட்ஸ் சில பேராக்களுக்குப் பின் குறிப்பிடுவது இந்தப் பாடல்களை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பாலுணர்ச்சி நோக்கில் படைக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் கவிஞர் தன்னுள்ளிருந்து பயணப்படுவதன் ஒரு பிரதிபலிப்பாய் இருக்கிறது என்பதுதான். வாசகர் இது குறித்து விகசித்தாலும் வுட்ஸ் கறாராக இதில் இருக்கிறார். ஷேக்ஸ்பியர் பற்றிய தனது அத்தியாயத்தில் விமர்சகர்கள் தவறான எண்ணத்தைத் தூண்டுவதாக அவர் குறிப்பிடுகிறார். ஒரு தேசியக் கவிஞர் ஒரு நல்ல எழுத்தாளரைக் காட்டிலும் தீவிரமாக தணிக்கை செய்யப்படும் அபாயமுள்ளவராகக் காணப்படுகிறார். பேட்ரிஜ் என்பார் தனது,

www.tamilarangam.net

*'ஷேக்ஸ்பியரின் கெட்ட வார்த்தைகள் - 1968'* எனும் நூலில் அவரை அயற்கலவியாளர் என்றே குறிப்பிடுகிறார். இதனை நிராகரிக்கும் வுட்ஸ் அவரின் 20ம் பாடலை எடுத்துக் காட்டி தங்களில் ஒருவரென நிறுவ முயற்சிக்கிறார். ஆனால் பாடல் 20ன்படி பாலுணர்ச்சியில் ஏதும் அசாதாரணம் தெரிவதில்லை. ஹாலெட் ஸ்மித் பாடல் 20தைப் பற்றிக் குறிப்பிடுவது: 'நண்பரைப் பற்றிக் கவிஞர் குறிப்பிடுவது அன்பாலும் மரியாதையாலும் பரஸ்பரத்தாலும் தன்னுடையதாலும் தானே தவிர பாலுணர்ச்சியால் அல்ல'. ராபர்ட் ஜிரோக்ஸும் அப்படியே குறிப்பிடுகிறார். பீட்டர் லெவி மட்டும் எலிசபெத்தியர்களுக்கு சமப்பால் கலவி புனிதமானது என்கிறார். இரண்டாவது உதாரணம் ஒன்றை பீட்டரிட மிருந்து எடுத்துக் கொள்ளுங்கள். மார்லோ வின் *எட்வர்டு II* ஐப் படித்தவர்கள் அவருக்கும் கேவஸ்டனுக்கும் உள்ள உறவைப் புனிதமாகக் கொள்ளவில்லை. அதே போல் எட்வர்ட் இளைய ஸ்பென்ஸரைத் தேர்ந்தெடுத்து மோகித்ததற்காகவும் பெரிய வரவேற்பு அளிக்கவில்லை. *முதிய மார்ட்டிமர்* நாடகத் தில் ஒரு வசனத்தில் கேவஸ்டனின் உறவு எட்வர்டுடன் நீண்ட பாரம்பரியம் உள்ளதாகக் காணப்படுகிறது. இருப்பினும் அவன் அதை விட்டு வெளியே வரக்கூடும் என்ற நம்பிக்கையில்,

ஆகவே அவன் மனம் கட்டுப்பாடின்றி
கேவஸ்டனை நாடும்போது
அப்படியே தன் எண்ணம் பூர்த்தியாகட்டும்
மாபெரும் மன்னர்களுக்கும் தமக்கேற்ற துணை
உண்டு;
அலெக்ஸாண்டரோ செபாஸ்டியனை
விரும்பினார்
மாவீரன் ஹெர்குலிஸோ ஹைலஸுக்காக
உருகினான்
இரக்கமற்ற பெட்ரோகிலஸுக்காக அகிலஸ்
தலை குனிந்தான்
ஆள்பவர் மட்டுமல்ல ஞானியரும் கூட
விலக்கல்ல
ரோமிய தல்லி ஆக்டேவியஸை நேசித்தான்
இறுக்கமான சாக்ரடிஸுக்கு கொடூரமான
அல்சிபியாடிஸ்
ஆடம்பரமான அந்த முட்டாள் பிரபுவின்
முறுக்கேறிய இளமை வசீகரிக்கும் வரை
அவனை அவன் அனுபவிக்கட்டும்
வளர வளர இம்மாதிரி பொம்மைகளை அவன்
தூக்கியெறியக்கூடும்.

ஹேரி லெவின் கூறுகிறார், 'நாடகத்தின் இறுதிக்காட்சியில் எட்வர்டின் ஆசனவாயில் செலுத்தப்படும் பழுக்கக் காய்ந்த கம்பியைக் கண்ட மாத்திரத்தில் பார்வையாளர்கள் மனதில் ஒரு கொடூர நடுக்கம் பரவுவதைத் தடுக்க இயலாது'. வில்லியம் எம்ப்சன் இதனை வுட்ஸ் இந்நிகழ்ச்சியை சரியாக புரிந்து கொள்ளாதது மட்டுமல்லாமல் என்று கூறித் தொடர்ந்து லைட்பான் குறிப்பிடுவது போல பொம்மை அரசனைச் சிதைப்பதோடு ஒவ்வொரு பொம்மைக்கும் கிடைக்கும் வெகுமதியும் இதுதான் என்று முடிக்கிறார். அதுதான் ஆசனவாயில் பழுக்கக் காய்ந்த கம்பியைச் செலுத்துவது. எந்தப் பார்வையாளனும் இதைப் புரிந்து கொள்ள இயலும்.

முதல் 126 ஸானட்டுகள் ஒளி நிறைந்ததாக, கலை நுட்பமும், கேளிக்கை உடையதுமாக இருக்கின்றன. மார்லோவின் சமப்பால் கலவியோ மிகுந்த கருமையானது. எட்வர்ட் ஒரு முட்டாள், சபலசித்தன். அவனுடைய கலவியாளனுடனான உறவு குழப்பத்தில் முடிவடைகிறது. எட்வர்டின் தண்டனை பார்வையானக இருக்கின்ற எந்த மனிதனும் இன்னொரு ஆணுடன் உறவு கொள்ளும் போது பீதியை வரவழைக்கக் கூடியது. இதுதான் எலிசபெத்திய நாடகத்தின் அரசியல் ரீதியான தவறான கணம். எங்கே இக்கலவி ஒப்புக்கொள்ளப்படுகிறது; குறிப்பாக ஷேக்ஸ்பியரின் *12வது இரவில்* வருகின்ற காதலைப் போல.

சமப்பால் கலவி எழுத்தாளர்கட்கு இது ஒரு முக்கியமான விஷயம். 70களில் எழுதப்பட்ட இவ்வகை இலக்கியம் அவர்கள் எவ்வாறு தம் இன்பத்தைக் கூட்டிக்கொள்ள இயலும் என்பதற்கு உதவி புரிந்தன. ஃபோக்கா கூட சமப்பால் கலவியாளரின் சந்தோசம் ஒரு முக்கியமான கட்டுடைப்பு என்பார். நாம் ஒரு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜோடிக் கலவியாளர் நம்மை விட்டு விலகிச் செல்லும் போது அதனைப் பொருட்படுத்துவது இல்லை. ஆனால் அவர்களே அடுத்த நாள் கைகோர்த்துக் கொண்டு தடவிக் கொண்டு நம்முன் தோன்றினால் சகிக்க இயலுவதில்லை. மகிழ்ச்சிக்காக விடுபடுதலல்ல, மகிழ்ச்சியுடன் நம்முன் திரும்பி வருதல் கட்டுடைத்தல் ஆகிறது. சமப்பால் இயல் எழுத்தாளர்கள் அவ்வகை விமர்சகன் அவர்களைப்பற்றிய தன்னுணர்ச்சியைத் தூண்டவும் தமது முடிவைப் பற்றிய அடையாளங்களை உணர்த்தவும் செய்தனர். எக்கதையிலும் சமப்பால் கலவி பாத்திரம் அக்கலவி அல்லாத ஒரு காரணத்திற்காக தற்கொலை செய்து கொள்ளவோ, இறந்து போகவோ, கொலை செய்யப்படவோ அனுமதிக்கப்பட்டதில்லை. நவீன *எட்வர்ட் II* நாடகத்தில் லைட்பான் கதாபாத்திரம் எட்வர்டுக்கு ஒரு பாட்டில் கால்வின் க்ளீன் ஷேவிங் லோஸன் ஒன்றைக் கொடுப்பதில் தான் எவ்வளவு கொடூரம் இருக்க முடியும்.




*மாரிஸை* ஆரம்பிக்கும் போது ஃபாஸ்டர் 1913ல் இந்த அபாயத்தை உணர்ந்தார். புத்தகத்தின் முதல் வரி எட்வர்டு கார்பென்டரின் நண்பர் ஜார்ஜ் மெரில்லை மிருதுவாக அவர் பின்புறத்தில் பிருஷ்டத்துக்கு மேல் தொடுவதாக அமைந்திருந்தது. அவன் இப்படித்தான் பலரை ஸ்பர்ஸித்தான். அது மிகவும் ஏகாந்தமாக இருந்தது. நீண்ட நாட்கள் பல் விழுந்த இடத்தில் இருந்த ஒரு உணர்ச்சியை அது எழுப்பியது. உள, உடல் ரீதியானது. சிந்தனைகளுக்கு இலக்களியாமல் எனது உணர்ச்சிகளில் ஊடுருவியது. ஹாரோகேட்டுக்கு தன் தாய் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றவர் *மாரிஸை* உடனே எழுத ஆரம்பித்தார். மூன்று கதாபாத்திரங்கள், இருவரது முடிவு மகிழ்ச்சியானது. எல்லாம் எனது பேனாவில் ஊற்றெடுத்தன. தடையின்றி அது நகர்ந்தது. 1914ல் அவ்வேலை முடிவடைந்தது.

ஒரு மகிழ்ச்சியான முடிவுதான் சரியானதாக இருந்திருக்கும். இரண்டு ஆண்கள் காதல் வயப்பட்டு மென்மேலும் செல்வதைத் தவிர, அந்தப் புதினம் அனுமதிக்குமானால் மாரிஸும் அலெக்கும் அவ்வாறே ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் குற்றவாளிகளைப் போல் திரிவதையும் எடுத்துச் சொல்வதென்றே தீர்மானித்திருந்தேன். அவ்வகைப் புனைவு நிகழும் அவ்வருடம் முழுதும் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்னும் விதத்தில், 'இன்ப வருடங்களுக்காக' இதனைச் சமர்ப்பித்தேன். இன்பம் என்ற இக்கருத்தாக்கம் வெளியீடுகளில் மிகுந்த சிக்கல்களை உருவாக்கியது. ஒருவேளை ஒரு சிறுவன் தூக்குக் கயிற்றில் தொங்குவதாகவோ அல்லது ஒரு தற்கொலைத் தீர்மானத்துடனோ இதனை முடித்திருந்தால் சரியாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்குமோ என்னவோ. ஆனால் காதலர்கள் தண்டனையிலிருந்து தப்பித்து விடுவதற்கான சித்தரிப்பு, குற்றத்தை விருத்தி செய்வதாக அமைகிறது.

நாற்பது வருடங்களுக்குப் பிறகும் ஃபாஸ்டர் இப்புத்தகத்தின் இறுதிக் காட்சியில் குறியாக இருந்ததோடு மகிழ்ச்சி நிறைந்ததாக ஒப்புக்கொள்ளும் படியும் எழுதி முடித்தார். (காதலர்களும் மரவெட்டியான் ஒருவனுடைய வீட்டில் நீண்ட நாட்கள் தங்கவில்லை.)

ஃபாஸ்டர், ஸ்டோன்வால் போன்ற எழுத்தாளர்கள் எப்போதும் ஓரினக் கலவிப்பாத்திரங்கள் துன்பியல் வகையில் எழுதப்படும் முறைமையை மாற்றி அமைக்க விரும்பினர். இது ஐரிஷ் எழுத்தமைப்பு என்று கூறலாம். அதில் ஒரு இறந்து போகும் தந்தை அல்லது தனயன் அல்லது குடும்பச் சிக்கல்கள் இயைந்து வந்து கொண்டிருக்கும். லியோபால்ட் ப்ளூமின் தந்தை தற்கொலை செய்து கொள்கிறார். மகனோ இறந்து விடுகிறான். எந்த ஐரிஷ் நாவலும் இனிய திருமணங்களில் முடிவடைவதில்லை. 1766ல்

www.tamilarangam.net

எழுதப்பட்ட *த விக்கார் ஆஃப் வேய்க்ஃபீல்ட் 1766* நாவலிலும் ரோடிடாயிலின் *த ஸ்னேப்பர் 1989* நாவலிலும் நிகழும் சாரமான குடும்பச் சித்திரங்கள் இறுதியில் நிர்மூல மாக்கப்படுதற்கென்றே தோன்றுகின்றன. ஐரிஷ் எழுத் துக்களில் (நாவல் கதை ஆகியன) தோன்றும் வலிய சித்தரிப்புக்கள் சிதில மானவை, சாவும் வீழ்ச்சியும் சார்ந்தவை. நாடகங்களோ சப்தங்கள் மிகுந்தும், கவிதை ஒப்பாரிகளுடனும், புதினங்களோ ஈமச் சடங்குகள் நிறைந்தும் காணப்படுகின்றன.

*மாரிஸ்* நாவலில் ஸ்கட்டர் பாத்திரம் தூக்கில் தொங்கவோ கைதாகவோ போனஸ் அயர்ஸுக்குப் போவதாகவோ இல்லாமல் சித்தரிக்கப்பட்டது பெரும் சாகசம். மாரிஸை அவன் சந்திக்கிறான். ஒன்று சேருகிறான். ஒருவேளை லியோபால்ட் ப்ளூம் கூட மகிழ்ச்சியாகக் கல்யாணம் செய்துகொண்டு தன் மகனுடன் டப்ளின் தெருக்களில் அலைந் தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். உண்மைகள் மாறும். இக்கலவியாளர் வாழ்வும் அன்றே மாறும். அயர்லாந்தும் மாறும். மேற்கண்ட காட்சி நல்லதுதான். அரசியல் கண்ணோட்டத்தில் சரியானதும் தான். ஆனால் இரண்டுக்கும் சம்மந்தமற்ற மூன்றாவது உண்மை நிலை என்ன? காலம் மாறும்போது இறக்கும் குழந்தைகளும், மனம் பிறழும் தந்தைகளும் இல்லாமற்போவர். கலைக்கு அவசியமற்ற இந்தத் துன்பங்களும் என்றும் ஒதுங்கிப் போய்விடும்.

நான் சிறப்பாக மதிப்பீடு செய்வது இரண்டு சமப்பால் கலவியாளர்கள் 90களில் எய்ட்ஸால் இறந்து போன மனிதர்கள் பற்றி எழுதிய இரு புத்தகங்களைத்தான். அவை முகாரி அமைப்பில் உள்ளன. அவை தாம் கன்னின் *த மேன் வித் த நைட் ஸ்வெட்ஸ்* மற்றும் மார்க் டோட்டியின் *மை அலெக்ஸ்ண்ட்ரியா* நாவலும் ஆகும். இரண்டும் ஃபாஸ்டர் விரும்பிய உலகைச் சிருஷ்டிப்பவை இன்பியலானவை ஃபோக்கா வின் அமைதியைச் சாரமாக்குபவை.

எல்லையின்மை எனக்குத் தன்னை இன்றே
அளிக்குமானால்
வேறெதையும் நான் செய்யப் போவதில்லை

டோட்டியின் கவிதை இது. இரு நூல்களி லும் ஏகப்பட்ட சமப்பால் கலவிகள், நண் பர்கள், சமூகங்கள், காதலர்கள்.... ஆனால் ஒவ்வொரு வரியிலும் முகாரியின் வலி நிறைந்த முடிவுகள். இது ஒரு சுதந்திரமும், அசாதாரணமான அன்பளிப்பும் துன்பமும் தான். 1982ல் எழுதப்பட்ட கன்னின் *த பேஸேஜஸ் ஆஃப் ஜாய்* நாவலுக்கு வுட்ஸ், *எகனாமிஸ்ட் ரெவ்யூ*வரில் எழுதியது என்ன வென்றால், ‘மனிதர்கள் இந்நாவலின் பால் ஆகர்ஷிக்கப்படுவர். ஏனெனில் இதன் இறுதி சுகமானது. ஆனால் *த மேன் வித் த நைட் ஸ்வெட்ஸி*ல் கவித்துவமும் மானிட சக்தியும் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன.’

வுட்ஸ் கன்னின் முந்தைய இரு தொகுப் புகளும் சிறப்பாக இருந்தனவென்கிறார். ‘ஆனால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஒரு வேளை இக்கவிதைகள் நன்றாய் இருப்பது கவித்துவம் மற்றும் பண்படாத மானுட சக்தி ஆகியவற்றால் அல்ல. அதில் கசியும் ஒரு முகாரியின் வலிநிறைந்த ஓலமும் தன்னொ டுங்கிய குரலாலும்தான். நான் இவ்விதமே அவ்வாழ்க்கைகள் வேதனையாலும் அவஸ்தை யாலும் சித்தரிக்கப்பட வேண்டுமென நினைக்கிறேன்.’

1954க்கும் 92க்கும் இடைப்பட்ட கன்னின் கவிதைத் தொகுப்புகள் உன்னதமானவை. ஒரு ஆங்கிலக் கவிஞன் அமெரிக்கக் கவிஞனாக உருமாற்றம் பெறுவது ஆர்வத்தைத் தூண்டு கிறது. எதுகை மோனைகளில் சந்தக் கட்டுகள் அமைக்கும் ஒரு 16ம் நூற்றாண்டு பாணிக் கவிஞன் 20ம் நூற்றாண்டின் இசைக் கவிஞனாக மாறி, அந்நூற்றாண்டுக் கலிஃபோர்னியா வாழ்க்கையை அடியொற்றி இசைத்தது மட்டுமல்லாமல் 50 மற்றும் 60களில் வாழ்ந்த ஒரு ஒரினக் கலவிக் கவிஞன் தைரியமாக வந்து தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டது என்பது அசாத்தியமானது. அவருடைய, ‘பொன்மேனித் தெரிவு’ எனும் கவிதை ஒரு ஒரினக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலவியாளன் ஒரு பெண்ணுடன் படுக்கையைப் பகிர்வது படிக்கத் தூண்டுவது.

நான் நீ காண்பதைப் போலல்ல நிச்சயமாக
ஒரு இயலும் அற்றதென் நாடகம்
இருமை மிகுந்தவன் இந்த உன் நண்பன்
எனினும் கலையாத அசைவற்ற ஓர் இரவில்
தொய்வடைந்து விட்ட, க்ஷீணித்துப் போய்விட்ட
வேறொருத்தி உனக்குத் தேவையா எனக்கென்
றுனக்குத் தெரியுமென் றெனக்குத் தெரியுமென்
றுனக்கு

சுயவரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறுகளின் அபாயம் என்று கன் கூறுவது,

'அதனால் நான் எழுதுகின்ற கவிதையை அதன் ரிஷிமூலங்களுடன் சேர்த்துக் காணும் போது நீர்த்துவிடச் செய்கிறது. நான் பொன்மேனித் தெரிவு என்ற கவிதையை ஒரு பெண்ணுக்கு, எனக்குத் தெரியுமென் றுனக்கு எனும் சந்தக் கட்டுடன் அமைத்து எழுதினேன். இப்போது அதைப் படிப்பவர்கள் அது ஏதோ ஓரினக் கலவைக்காக நான் எழுதியது என்று புரிந்து கொள்ளக் கூடும். ஆனால் அது மிக மிகத் தவறு. அந்தக் கவிதையில் இரு பெண்களின் குணாதிசயங்களை ஒருமைப்படுத்தி அமைத்துள்ளேன். மிகத் தெளிவற்றதாகவும் இருமை குணமுடையதாகவும் அது இருக்கிறது. எழுத்தாளரின் சுயசரிதை தெரியாதவனே இக்கவிதையை நன்குணர முடியும்.

ஆனால் ஒரு நேர்காணலில் ஓரினக் கலவி இயக்கம் எவ்வாறு அவரது எழுத்துக்கு உதவுகிறது என்று டோனி சாவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர்,

'ஆம் அப்படித்தான் என்று நினைக்கிறேன். குறிப்பாக எனது துவக்க காலத்தில் மிக நெருக்கமாக.... ஒரு ஏடனியப் பாணியில் ஒரு காதலரைக் குறிக்க நீ என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன். அது கவிதையைப் பாதிக்காது என்று நினைத்தேன். பிறகு தான் இயேன் யங் தனது *மேல் ம்யூஸ்* தொகுப்பில் இணைத்தபொழுது பிரபலமானேன். எனது *புற்களால் ஆன கோட்டை* கவிதை 1973-74 ஒரு ஆணுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்வது குறித்தது. லகுவாக எழுதப்பட்டது. பத்து வருடங்கட்கு முன்பு அவ்வாறு எந்த நிகழ்ச்சியும் நிகழவில்லை என்றே நினைக்கிறேன்.'

கன்னின் தொகுப்புக் கவிதைகள் மேல் நாட்டு எல்லா ஓரினக் கலவி அனுபவங்களையும் உள்ளடக்கியது. 16ம் நூற்றாண்டுக் கவிதைகளால் உந்தப்பட்ட அவர் வியாட்டின் முகாரிப் பாடல்களிலிருந்து அவற்றின் அவஸ்தைகள் புனைவுகளைப் பெற்றுக் கொண்டார். அவரின் ஆதிகாலக் கவிதைகள் ஒரு மத்திய தற்சார்பற்ற மற்றும் ஒழுக்கம் மிகுந்த முடிச்சுக்கள் உடையவை. இந்த வரிகளுக்கிடையில் ஒடுங்கிக் கிடக்கும் அர்த்தம் எனக்கு மிகவும் பிடித்தமானது. ஆனால் அவர் சுதந்திரத்துடன் இன்று எழுதுவது புதியது. வேறொரு ஆணுடனான படுக்கைப் பகிர்வுகள் எப்படி இருக்குமென்று *புற்களின் கோட்டைத்* தொகுதியில் ஒரு விளம்பரப்படுத்தும் விதத்தில் இப்படி எழுதியவர் - (கிரேக்கர்களும் ரோமானியர்களும் சிறுவர்கள் பற்றி எழுதியதைக் காண்க.)

மூட்டம் நிறைந்த பொழுதொன்றில்
கட்டாந்தரையில் நிர்வாணமாய்
நெருங்கி நாம் கிடக்கின்றோம்,
ஸ்பர்ஸங்களுடனும் புட்டங்கள் இடித்துக்
கொள்ளவும்
ஒரு நூலிழை இரு தேகங்களையும் பிரிக்கிறது
காற்று நம் மீது செல்கிறது நிச்சலனமாய்
குளிர்ந்து
ஒரு பசுமை நிறைந்த குளத்து நீரென
இவனா நான் எனது உறுப்பைத் தந்த மனிதன்
நான் உறங்கும் போது
இல்லை நான் காணும் அவ்வகைக் கனவா -
நிஜமே
மனக்கோட்டையிலிருந்து உடைந்தெழுந்த
ஒன்றென நான் உணர
அவ்வழகு அதன் இருப்பைப் போல, நாம்
காண்பதைப் போலல்ல
நான் புரள்கிறேன்
நான் முயங்கிக்கிடக்கும் கனத்த வியர்வை
நனைந்த
அத்தேகம் கொண்ட அவன் ஒரு கனவாக
இருந்தாலும் அவன் உலகை
எதிர் கொள்ளும் ஒரு பூரணத்துடன்

www.tamilarangam.net

ஹென்றி ஜேம்ஸுக்கு 1890களின் மத்தியில் ஒரு அசாத்திய அனுபவம் நிகழ்ந்தது. ஃபிரட் கப்ளான் தனது ஜேம்ஸின் சுய சரிதையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: அவர் ஒரு இளைஞருடன் காதல் கொண்டார். பாலுணர்வு மிகுந்த அவரது ஆழ்மனம் வர்ணிக்க இயலாத வெகுளித்தனத்துடனும் தர்மசங்கடத் துடன் கூடிய அளவு வலிதாயும் இருந்தது. அவர் மார்ட்டின் ஃபுல்லர் டோனுக்கு எழுதுகையில்,



'நீ அழகானவனானது மட்டுமல்ல என்னை வேகமாக ஆகர்ஷிப்பவனும் கூட. நீ மிருதுவானவன், குளிர்ச்சியானவன், மந்திரத் தால் கட்டுபவன் எனினும் இரக்கமற்றவன்; ஆம் இரக்கமற்றவன்.'

ஆனால் ஹென்றி ஜேம்ஸ் இந்த இளைஞர்களுடன் உடலுறவு கொண்டதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை. அவர் *த யங் மாஸ்டர்* எனும் நூலில் ஷெல்டன் நோவிக் ஒலிவர் ஹெண்டல் எனும் தற்கால உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவருடன் ஒரு வேளை உடலுறவு கொண்டிருக்கலாம் என்று கூறுகிறார். அப்போது அவர் 24 வயதிலும் ஹென்றி 20 வயதிலும் இருந்திருக்கக் கூடும். மேலும் நோவிக் எப்படி அவர் ஹோம்ஸை தனது மாமன் மகள் மின்னி டெம்பிளுடன் இணைத்துப் பார்க்கிறார் என்று காட்ட கேட்க்ராய் மற்றும் மேடம் மெர்லி இருவரும் ஒரு வெகுளி அமெரிக்கப் பெண் எப்படிக் காதல் வயப்பட இயலும் என்ற சுவாரஸ்யமான விளக்கத்தில் ஈடு பட்டனர் என்றும் கூறுகிறார்.



ஜேம்ஸ் ஆஸ்கார் வைல்டின் நாடகங் களை கூர்ந்து கவனித்தார். அவரது நாடகங் கள் வைல்டின் நாடகங்கள் நடந்த அதே சபாக்களில் அரங்கேறின. வைல்டிடம் அவருக் குப் பொறாமை. விசாரணை நாடகத்தால் பாதிப்படைந்திருந்தாலும் வைல்டுக்காக அவர் ஒரு பத்திரத்தில் கையெழுத்திட மறுக்கிறார். ஜான் ஏடிங்க்டன் சிம்மென்ஸாலும் அவர் கவரப்பட்டார். எட்மன்ட் கோஸிடமிருந்து அவர் சிம்மென்ஸ் பற்றிக் கேள்விப்பட்டார். அதில் ஒரு குறிப்பீடு சிம்மென்ஸ் ஒரு ஹோமோ என்று பொறி தட்டியது. கோஸிடம் தோண்டித் துருவவும் அவர் விழைந்தார். கோஸ் ஒரு போஸ்ட் கார்ட் மூலமாவது இந்த ரகசியத்தை உடைத்திருக்கலாம். 1893ல் கோஸ் சிம்மென்ஸின் 50 எண்ணிக்கை யில் பதிப்பிக்கப்பட்ட *எ ப்ராப்ளம் இன் மாடர்ன் எத்திக்ஸின்* ஒரு பிரதியை அளித்தார். அந்நூலில் ஓரினக்கலவி, அழகியல் குறித்த விவாதங்கள் உள்ளன. சிம்மென்ஸின் சுயசரிதை பின்னாட்களில் வெளிவந்த போது இந்த நோக்குடன் படித்தார், 'அதில் அவரைப் பற்றி ஒரு முக்கியமான கட்டுரை இருக்காதா என்ன? நான் கூட இது குறித்து எழுதலாம். எனினும் விருப்பம் இல்லை.'

1892ல் அவர் ஜானின் ஒழுக்கப் பிரள்வான மனைவியுடன் ஒரு இரவு உணவு உட்கொண்டார். அதில் பிறந்ததுதான் *பெல்ட்ராஃபோவின் எழுத்தாளன்*. அதில் ஒரு இளம் அமெரிக்கன் ஒரு பிரபல எழுத்தாள னைச் சந்திக்கிறான். அவன் மனைவியோ எழுத்தாளனின் படைப்புகளில் உள்ள ஒழுக்க ஆக்கங்களால் பாதிக்கப்பட்டவள். அவளால் தனது ஆழ்மனதைச் சாடி தம் படைப்புகளை ஆக்க இயலவில்லை என்று கப்ளான் எழுதுகிறார். இரு கதைகள், *த ஆத்தர்* மற்றும் *பீப்பிள்* ஆகியன ஓரினக் காம உணர்ச்சியை வெளியிட இயலாது படைக்கப்பட்டவை. அவ்வாறு அவை காணாததுதான் குறிப்பிடப்பட வேண்டியது. ஜேம்ஸ் அவரது படைப்பு களில் ஓரினக் கலவியை எப்படி காப்பாற்றிக் கொள்ள முயன்றார் என்பது ஆச்சரியம் அளிக்கிறது. தனது கடைசி கால நாவல்களில் எழுதப்பட்ட கதைகள் எவ்வாறு முடிவடையாமலும் மரணபீதி கொண்டிருந்ததாகவும் இன்னும் கூட பல அரிய நாவல்களின் உருவாக்கத்தில் இத்தகு தன்மையை அவர் ஊடாட விட்டிருந்தார் என்பதும் ஆச்சரியம் அளிக்கிறது. ரோம், கிரீஸ், ஃப்ளாரன்ஸ் போன்ற நகரங்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. வாசகர்கள் இவற்றிலிருந்து மார்க் ஏம்பியன்ட் எனும் *பெல்ட்ராஃபா* நூலை எழுதிய ஆசிரியர் ஓரினக்கலவிக் கருவை தனது தலைசிறந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நாவலில் கையாண்டதையும் அவர் மனைவி இதனால் அதிருப்தி அடைந்ததையும் காணலாம். ஏம்பியன்டைப் பாராட்டும் அமெரிக்க உரையாளரும் ஒரு ஓரினக்கலவை யாளர் என்று தோன்றுகிறது. அதே போல் ஏம்பியன்டின் நூல் ஓரினக்கலவி விஷயத்தை உள்ளடக்கியதல்ல அவரும் அப்படிப்பட்டவ ரல்ல என்று தோன்றுகிறது. மார்க் ஏம்பியன்ட் திருமணமாகி அழகான ஒரு ஆணை தன் வாரிசாகக் கொண்டிருந்தார். ஒரு வேளை அவர் மனைவி தன் மகனைப் பற்றிக் கவலைப் பட்டிருக்கலாம். கதையில் மனைவி தனது மகன் அந்நூலைப் படித்துவிடக் கூடும் என்று பயப்படுகிறார் எனும் குறிப்பு உள்ளது. ஆனால் அவன் மிகச் சிறுவனாதலால், அந்த பயம் அவசியமில்லை. அதே போல் *ப்யூப்பின்* நாவலிலும் பெம்பர்டோன் அங்கு ஒரு க்ஷீணித்த பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறான். பையனுடன் உள்ள காதலினால் சம்பளம் தராத போதும் இதனை ஏற்றுக் கொள்கிறான். நீங்கள் விரும்பினால் இந்தக் கதையை இந்தக் கோணத்திலும் படித்துப் பாருங்கள்.



ஜேம்ஸ் இக்கதைகளில் சில வார்த்தை கள் மற்றும் சொற்றொடர்களை சேர்ப்பதன் மூலம் அவற்றின் அர்த்தத்தை மாற்றி இருக்க இயலும். அதற்கு அவர் முதலிலிருந்து துவங்க வேண்டும். இவ்வாறு எதையும் மாற்றி அமைக் காததால் அவர் விரும்பியபடி காட்சிகளை அமைக்கவும் சிறப்பாகப் படைக்கவும் முடிந் தது. தனது வாழ்க்கை அல்லது படைப்பு களிலும் அவர் எல்லையற்ற கட்டுப்பாடுக ளையும் கொண்டிருந்தார் என்பதால் சில வற்றை நிராகரிப்பதற்கும் அவரால் முடிந் திருக்கும். ஆனால் *த ஆத்தர் ஆஃப் பெல்ட் ராஃபோ* மற்றும் *த ப்யூப்பின்* நாவல்களை எழுதிய ஆசிரியர் அந்தக் கட்டுப்பாடுகளை இழக்கும் அளவுக்குச் சென்று விட்டார் எனினும் தனது ஆக்கங்களை இழந்து விட்டார்.



ஜேம்ஸை கிழி கிழி என்று கிழிப்பதை விமர்சகர்கள் நிறுத்த மாட்டார்கள். அவர் ஒரு ஓரினக் கலவியாளர் என்பதால் அம்மாதிரிக் கதைகளை எழுதியிருப்பதை நாம் அடையாள மிட முடியும். பள்ளியிலிருந்து மைல்ஸ் வெளி யேற்றப்பட்டதை தனது *டர்ன் ஆஃப் த ஸ்க்ரூ* நூலிலிருந்து வுட்ஸ் தெரிவிப்பது, 'ஒவ்வொரு சிறுவனும் இன்னொருவனை நேசிப்பதை மட்டுமல்ல அந்த எண்ணத்தையே நேசிப்ப தையும் அதைப் பற்றிப் பேசுவதையும் விரும்ப வில்லையா? இம்மாதிரி அனுமானங்களை எதற்காக திரும்பத் திரும்ப கேள்வி கேட்க வேண்டும். இந்நாவலில் பல விஷயங்கள் செயல்பட இடமளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை கதையாளன் பைத்தியமாகவோ நம்பத் தகாதவனாகவோ இருந்திருக்கலாம். பீட்டர் குவின்ட் மைல்ஸைப் பாலியல்ரீதியாகத் துன்பு றுத்தி இருக்கலாம், அல்லது இரண்டு மே நேர்ந்திருக்கலாம். *பெல்ட்ரா ஃபோ* மற்றும் *ப்யூப்பின்* நாவல்களில் ஓரினக் கலவி பிரதி முழுதும் அனுமதிக்கப் பட்டுள்ளது. இதில் இந்த ஹோமோ உபப்பிரதி பூரண தீய சக்திகளைப் பற்றிய வர்ணனைகளால் நிரம்பியது. *த ஆத்தர் ஆஃப் பெல்ட்ராஃபோவில்,* கதை சொல்பவனும் ஞானியும் ஹோமோக்கள். அதே போல் *ப்யூப்பிளில்* ஆசிரியரும் க்ஷீணித்த மாணவனும் ஹோமோக்கள். 1885ல் கிரிமினல் குற்றத் தடைச் சட்டத்தில் ஓரினக் கலவியாளர்களுக்கு இரு வருட தண்டனையும் கடும் உழைப்பும் தரப்பட்டது. ஹென்றி ஜேம்ஸின் பாத்திரங்கள் கடும் உழைப்பை மேற்கொண்டிருந்தன என்பதை கவனித்துப் பாருங்கள்.

மேற்சொன்ன ஜேம்ஸின் மூன்று கதை களிலும் அழகிய சிறுவர்கள் இறுதியில் மரண மடைவது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வேளை ஜேம்ஸ் ஃப்ராய்டின் சிடர் என்ற அளவில் இக்கதைகளை 1910, 11களில் எழுதியிருக்கலாம், நமக்கு அது பற்றி விபரம் இல்லை. தாமஸ் மன்னின் குடும்பத்தினரும் தன் அழகிய பேரனை *டாக்டர் ஃபாஸ்ட்* நாவலில் வரும் கொடூரக் கொலை செய்யப்பட்ட குழந்தையின் மாதிரியாக ஏன் அவர் கொண்டார் என்று அறியவில்லை. அவரது நான்காவது கதையாகிய *கானகத்தில் ஒரு மிருகமும்* இவ் வகைப்பட்டதே.

www.tamilarangam.net

*ஒடுக்கத்தின் அறிவாதாரவியல்* எனும் நூலில் கோஸோவ்ஸ்கி இக்கதை பற்றிக் குறிப்பிடுகிறார். அதாவது ஜேம்ஸ் அயல் பால் கலவி முறைகளைப் பற்றியும் கலவியாளர் களைப் பற்றியும் திறமையாக வெளிப்படுத்தி னார் என்பது அவர் கருத்து. ஜேம்ஸ் இவ்வாறு அடிக்கடி ஒரு உருமாற்றத்தை வன்முறை கலந்து வெளியிட்டதோடு அதனை அடைவ தற்கான ஒரு நுண்ணிய இழையையும் விட்டு வைத்தார். இந்நூலில் மே பார்ட்ரம், ஜான் மார்ச்சரைச் சந்திக்கும் வேளையில் பத்து வருடங்கட்கு முன் அவர்கள் பரிமாறிக் கொண்ட ரகசியத்தை நினைவு கூறுகிறார், 'நீ எனக்கு அன்று சொன்னது, ஆழ்ந்த, தனித்து வமிக்க, பழக்கமற்ற அக்கூடார்த்தம், கொடூர மானதும் என்றாவது ஒரு நாள் நடக்கக் கூடியதுமாக இருந்தது.' இந்த ரகசியம் ஓரினக் கலவி என்பார் கோஸோவ்ஸ்கி.

இதில் காணப்படும் பழக்கமற்ற என்ற வார்த்தையை நான் வேடிக்கையாக நினைக் கிறேன். இது ஒரு தேவையற்ற சுய நாடகம். மே பார்ட்ரம் இந்த உறவுக்கு அவரைத் தூண்டி யிருக்கக்கூடும், அதனாலேயே ஏதாவது தீமை நிகழ்ந்துவிடும் என்று அவர் அஞ்சியிருக்கக் கூடும் என்று வாசகர்கள் கருத வாய்ப்புள்ளது. இது லேம்பின் வீட்டில் காணப்படும் காஃப்கா வின் சில அடையாளங்கள் போலத்தான். (ஜேம்ஸ் 1901ல் இக்கதை எழுத நினைத்தது குறிப்பிடத் தகுந்தது). இதில் இரண்டு கதாபாத்திரங்கள்தான். மே தான் இறப்பதற்கு முன்னால் அந்த ரகசியம் பற்றித் தெரிந்தி ருப்பதைக் கூறுகிறாள். அது நடந்து விட்ட ஒன்று என்றும் உறுதிபடக் கூறுகிறாள். மாஹெரோ இவ்வுண்மையை அவள் இறந்த பின்னேதான் உணர்கிறான். அவன் காதலில் தோல்வியுறுகிறான். அவனால் மேயைக் காதலிக்க முடிவதில்லை. அதே போல் ஜேம்ஸும் கான்ஸ்டன்ஸ் ஃபெனிமோர் வுல்ஸனைக் காதலிக்க முடிவதில்லை. கார ணம் இவர்கள் ஓரினக் கலவியாளர்கள் என்பது தான். அவனால் தற்பாலியல் உணர் வுக்குத் தீர்வளிக்க முடியவில்லை. அதனா லேயே அவன் யாரையும் காதலிக்க முடிய வில்லை. கப்ளான் இதைத்தான், 'ஜேம்ஸ் காதலையும் உடலுறவையும் மட்டுமல்ல வாழ்க்கையையும் தொலைத்தவர்' என்கிறார்.

ஜேம்ஸின் வாழ்க்கையை அலசும் போது கதை இன்னும் அந்தகாரத்துக்குள் நுழைகிறது. நாவலில் இப்படி நடப்பதில்லை. கதையின் வீழ்ச்சி ஜேம்ஸ் தேர்ந்தெடுத்துக் கொண்ட வாழ்க்கையின் வீழ்ச்சியே. இதைப் போன்ற ஒரு சுய உணர்ச்சியுடன் வேறு எந்த நாவலும் எழுதப்படவில்லை என்று லியான் ஏடல் எழுதுகிறார். *கானகத்தில் ஒரு மிருகம்* நூலில் ஜேம்ஸின் தனிமை கொடூரமாக அறிக்கை அளிக்கப்படுகிறது. இந்த வாழ்க்கை மிகவும் பீதி நிறைந்தது. அதில் வரும் ஒரு வரியில் இவ்வாறு காணப்படுகிறது, 'அவன் தன் காலத்தில் ஒரு மனிதன், இப்புவியில் ஏதும் அவனுக்குக் கிடைக்கவில்லை'. கோஸோவ்ஸ்கி எழுதுகிறார், 'ஒரு ரகசிய உள்ளடக்கம் கொண்ட ஒரு மறுத்தல், அவ்வுள்ளடக்கம் ஒரு ஊனம் என்ற நிலை என்ற தகுதி இந்நாவலுக்கு அருமையான ஒரு உருவத்தையும், திருப்தியையும் அளிக்கிறது.' ஆனால் அது இவ்வாழ்க்கைக்குக் கிடைத்த திருப்தியும் பூரண வடிவுமல்ல. அவ்வாழ்க்கை சுயமுரண்களால் கிழிக்கப்பட்ட ஒரு ஓரின உறவாளனின் வீழ்ச்சி. வாசகர்களுக்குப் பரிச்சயமான கப்ளானின் ஜேம்ஸ் பற்றிய சரிதையில் இந்த உறைந்து கிடக்கும் உண்மை வெளிப்படுகிறது. ஏடலைப் பொறுத்த வரை உள்ளத்தை உலுக்கும் ஜேம்ஸின் ஒரு கதை இது, 'உணர்ச்சிகள் எதுவும் தமது உச்ச உக்கிர அளவில் தம்மை இதைப் போல் தீண்டிய தில்லை. வாழ்விற்கு வெளியிலிருந்து எவ்வளவோ அவர் கண்டிருக்கிறார். அதன் உள்முகத்தின் இத்தகு வடிவிலிருந்து யாரும், என்றும் இவ்வாறு கண்டதில்லை.'

---

தமிழாக்கம்

---

**ஆர். பால கிருஷ்ணன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்நிலைவாதமானது எமது சூழலுக்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டிய தேவை உள்ளது

## ஷாஹ்லா லாஹிஜியுடன்

மஹ்ஸா ஷேகர்லூ உரையாடல்

தமிழில் : **லக்சுமி**


Shahla Lahiji

*இப்போது நீங்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வெளியீட்டாளராக வந்துவிட்டீர்கள். இந்தத் தொழில் துறையில் இருக்கும் மிக முக்கியமான பெண்களில் ஒருவராகக் கருதப் படுகின்றீர்கள்.*

நான் இந்தத் தொழிலை 16 வருடங்க ளாகச் செய்து வருகிறேன். இப்போது 400க்கும் அதிகமான பெண்கள் வெளியீட்டாளர்களாக இருக்கிறார்கள். இதில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் சுய சம்பாத்தியம் உடையவர்களாய் இருக்கிறார் கள். பெண்களுக்கு ஏற்கெனவே நுழைவு மறுக்கப்பட்டிருந்த ஒரு தொழிலில் பெண்கள் துணிந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

*பெண்களின் போராட்டங்கள் எந்தத் தளங்களில் முக்கியமாக நடை பெறுகின்றன என்று எண்ணுகிறீர்கள்?*

### மொழிபெயர்ப்பாளர் குறிப்பு :

ஷாஹ்லா லாஹிஜி (SHAHLA LAHIJI) *ரோஷன்கரன்* பெண்கள் கல்வி மையத்தின் அமைப்பாளரும் இயக்குனரும் ஆவார். இவர் 1942ம் ஆண்டு ஈரானில் உள்ள தாப்பிரிஸ் எனும் இடத்தில் பிறந்து வளர்ந்தவர். தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே தனது எழுத்துக்களைப் பிரசுரித்தவர். அப்போதிருந்தே சமூகம் சார்ந்த, கலாச்சாரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1979ல் ரெஹ்ரானுக்கு இடம் பெயர்ந்தார். 1984ல் *ரோஷன்கரன்* வெளியீட்டு மையத்தை உருவாக்கினார். இம்மையம் அன்றிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட 200 நூல்களை வெளியிட்டுள்ளது. இவருடைய முதல் நூல் *பஹ்ரம் பெய்ஸாயின்* (Bahram Beizaie) *திரைப்படங்களில் பெண்களின் பிரதிமைகள்* ஆகும். இது 1989ல் வெளியிடப்பட்டது. அதன்பின் மெஹ்ராஞ்சிஸ் கார் (MEHRANGIZ KAR) உடன் இணைந்து எழுதிய, *அடையாளத்திற்கான தேடுதல்: வரலாற்றிலும் வரலாற்றுக்கு முந்திய காலத்திலும் இருந்த ஈரானியப் பெண்கள் பற்றிய பிம்பம்* எனும் நூல் 1992ல் வெளியிடப்பட்டது. மஹ்ஸா ஷேகர்லூ(MAHSA SHEKARLOO) ரெஹ்ரானிலும் சிகாகோவிலும் வளர்ந்தவர். ஈரானிலுள்ள பெண்களினதும் அரசியல் வரலாற்றினதும் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ரெஹ்ரானுக்கு வந்துள்ளார். பெண்களின் செயல்பாடுகளில் தன்னை இணைத்துக்கொண்டு பங்குகொள்பவர். →

www.tamilarangam.net




'போராட்டம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் எனக்கு விருப்பமில்லை. ஏனெனில் இது எதிர் எதிராகச் சந்தித்தல் (பொருதுதல் அல்லது மோதுதல்) என்று பொருள் படுகிறது. ஈரானில் அல்லது பாகிஸ்தானில் அல்லது இந்தியாவில் பெண்களின் போராட்டங்கள் என்பது பகிரங்கமானதல்ல. மேற்கில் நாங்கள் கண்டது போல, தெருவில் வந்து திரளாக இறங்கவில்லை. ஊர்வலம் போகவில்லை.

பெண்களின் பிரச்சினைகளில் அநேகமானவை கலாச்சாரப் பிண்ணனியை அடிப்படையாகக் கொண்டவை அல்லது அவர்களது வெளித்தோற்றத்துடன் தொடர்புடையவை. ஈரானில் இப்போதும் ஆரம்ப அடிகளைத்தான் எடுத்து வைத்திருக்கிறோம். நாங்கள் ஏனைய நாடுகளைப் போல் ஜனநாயகத்திற்கானதும் பொது எதிர்ப்பிற்கானதுமான நீண்ட வரலாறுகளைக் கொண்டவர்களுமல்ல. இதற்காகத்தான் இங்கு பெண்களின் கோரிக்கைகள் ஆரவாரமில்லாமல் அமைதியாகக் கேட்கப்படுவதைப் பார்க்கிறோம்.

உதாரணமாக, பொது நொத்தாரிசு அலுவலகங்கள் ஆண்களினால்தான் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகின்றன. அதுவும் மிகவும் மிகவும் கலாச்சாரமும் பண்பும் கொண்ட மத ஒழுக்கம் நிறைந்த ஆண்களால். அவர்களால் பெண்கள் உத்தியோகம் பார்ப்பதை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. நாங்கள் இப்பொழுது எத்தனையோ பெண்கள் இந்த அலுவலகங்களில் தலைமைப் பதவியில் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் இது எங்கும் அறிவிக்கப்படவோ குறிப்பிடப் படவோ இல்லை. இது ஒரு குழப்பத்தைத் தோற்றுவிக்கவில்லை. பெண்களுக்குள்ளேயோ இந்த நிறுவனங்களுக்குள்ளேயோ இந்தப் பங்குகொள்ளலைத் தடுப்பதற்கு எப்போதும் எந்தச் சட்டமும் இருந்ததில்லை. தடைகள் சமூகமும் கலாச்சாரமும்தான். ஆனால் ஒரு பெண் முதலில் ஒரு காரியாலயத்தைத் திறந்த அந்த நாளில், காரியாலயச் சுவர்கள் உடைக்கப்பட்டன. பெண்கள் தங்களுக்கு எது இல்லை என்பதைக் கண்டடைய வேண்டும். தங்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். வெளியீட்டுப் புலமும் கூட

---

ஈரானுக்கும் உலகின் மீதி பாகங்களுக்கும் இடையிலான கலாச்சாரப் பரிமாற்றங்களை இலகுபடுத்தும் வகையில் ஈரானிய நூல்களை ஆங்கிலத்திற்கு மொழியாக்கம் செய்து பதிப்பிக்கும் வேலைகளில் இவ்வெளியீட்டு மையம் அண்மைக் காலங்களில் ஈடுபட்டுள்ளது. ஏப்ரல் 2000 ஆண்டு நடைபெற்ற தற்போது பிரசித்தமாயிருக்கும் *பேர்லின் மகாநாட்டில்* கலந்துகொண்ட சீர்திருத்தவாத அறிவாளர்கள் குழுவில் லாஹிஜியும் இருந்தார். அதன்பின் அவர் இரண்டு மாத காலம் சிறையில் இருந்தார். அதில் நான்கு கிழமைகள் தனிமைப்படுத்தப்பட்ட சிறைவாசத்தை அனுபவித்தார். மூன்று வாரங்களுக்கு முன்பு ஷாஹ்லா லாஹிஜியும் மெஹ்ராஞ்சிஸ் காரும் (பெண்களின் உரிமைகளுக்கான சட்டத்தரணி, எழுத்தாளர்) நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டனர். இவர்கள் இருவரும், 'அரசின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்றும், இஸ்லாமியக் குடியரசின் புனிதக் கட்டளையை அலட்சியப்படுத்தியதாகவும்' இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர் இப்போது தீர்ப்புக்காகக் காத்திருக்கிறார். கார் மீது இன்னும் மேலதிகக் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. இவர் சாதாரண நீதிமன்றிலுக்கு மீண்டும் அழைக்கப்படுவார். இந்நேர்காணல் *பேட் ஜென்ஸ்* எனும் இணையச் சஞ்சிகையின் முதலாவது இதழ் மார்ச் 2000த்தில் வெளிவந்துள்ளது. இது ஒரு ஈரானிய பெண்நிலைவாதச் செய்திமடல்.

www.tamilarangam.net

இந்த நிலையில்தான் இருந்தது. ஏனெனில் அச்சுத் தொழிற்சாலைகள் யாவும் சாதாரணமாக ஆண்களினாலேயே நடத்தப் பட்டன. வெளியீடு என்பதன் அர்த்தம் அச்சுத் தொழிற்சாலைகள் அல்லது அச்சுக் கூடங்கள் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். இப்போது நாங்கள் அச்சுக் கோர்க்கும் தொழிலிலும் நிர்வாகப் பகுதிகளிலும் நிறையப் பெண்களை கொண்டிருக்கிறோம். மீண்டும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதைப் பற்றிப் பேசுதல் மிகவும் குறைவாக உள்ளது. எந்தவிதமான விளம்பரங்களும் இல்லை. பெண்களே இதைப் பற்றி எந்த தடல்புடலும் இல்லாமல் இருக்கிறார்கள்.

அதனால்தான் நான் 'போராடுதல்' எனும் வார்த்தை கொஞ்சம் தீவிரமானது அல்லது அதிகபட்சமானது என்று எண்ணு கிறேன். பெண்கள் தங்களுக்குள்ளேயே உள்ளார்ந்த கலாச்சாரக் கட்டுடன் போராடுகிறார்கள். எதிர்கொள்கிறார்கள். வெளிவாரியாக அல்ல.

---

*ஆரம்ப நாட்களில் அச்சுக் கூடங்களிலும் அச்சுக் கோர்ப்பவர்களு டனுமான தொடர்புகள், அவர்களோடு தொழில் புரிதல் எப்படி இருந்தது? உங்களுடன் வேலை செய்த ஆண்களுக்கு இது விசித்திரமானதாக இருந்ததா?*

---

ஆம். மிகவும் விசித்திரமானதாகத்தான் இருந்தது. எனக்கு வெளியீட்டுத் துறை பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. எனக்கு இது பற்றி எந்த அனுபவமும், எந்த அறிவும் இருந்ததில்லை. எனக்கு இதற்குத் தேவையான இந்தத் தொழில்நுட்பங்கள், செயல்முறைகள், கருவிகள் ஒன்றைப் பற்றியும் தெரிந்திருக்க வில்லை. அநேகமாக நான் சொல்பவை, செய்பவை எல்லாவற்றையும் மிகவும் தமாசாக ஆண்கள் கருதினார்கள். அந்தச் சூழல் ஒரு தொழிலாள வர்க்கத்தினதாக இருந்தது. அந்தச் சூழலுக்குச் சொந்தமில்லாத ஒரு பெண் அதற்குள் நுழைந்தது அவர்களுக்க தர்ம சங்கடமானதாக இருந்தது. இந்தச் சூழல் மிகவும் மிகவும் ஆண்மைத்தனமானது என்று அவர்கள் எனக்குக் காண்பிக்க முயன்றார்கள். மிகவும் வன்மையான சொற்பிரயோகங் களாலும் அளவுக்கதிகமான உரையாடல் களாலும் என்னை அசௌகரியப்படுத்துவதன் மூலமும் என்னைப் பயப்படுத்த நினைத் தார்கள்.

ஆனால் அந்த நிலைமையை எப்படி எதிர்கொள்வது என்று நான் அறிந்திருந்தேன். என்னுடைய அதிகாரத்தை ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு எஜமானியாக அந்தச் சூழலைப் பாதிப்பதற்குப் பாவித்தேன். அதில் மிகவும் பாதிப்பைச் செலுத்திய நெறிமுறை என்னுடைய தாய்மைப் பண்புகள், ஆற்றல்கள் தான். நான் அவர்களிடம் அன்பாக இருந்தேன்; அவர்களுக்கு புத்திமதி சொன்னேன்; பொருளாதாரரீதியாகவும் வேறு வழிகளிலும் உதவி செய்தேன். இவைகள் எல்லாவற்றிலும் இருந்தும் அத்துடன் என்னுடைய அதிகரித்து வரும் அனுபவங்களிலும் அறிதலிலும் இருந்தும் பல ஆண்டுக்கால நடைமுறையின் இறுதியில் அவர்கள் என்னை ஏற்றுக் கொண்டார்கள். இப்போது அவர்கள் என்னை மிகப் பெரிய அளவில் மதிக்கிறார்கள். அத்துடன் என்னை ஒருவிதக் கண்டுபிடிப் பாளராகக் காண்கிறார்கள். நாங்கள் மற்றவர்களுடன் ஒப்பிடும் பொழுது எங்கு நிற்கின்றோம் என்று எங்களுக்குத் தெரியும். அப்போதிலிருந்து ஏனைய பெண்கள் இந்தப் புலத்திற்குள் மிகவும் இலகுவாக நுழைந்தார்கள்.

அனுபவம், அனுவம், அனுபவம்... அத்துடன் தன்னம்பிக்கை. முதல் முறையாக வெளியீட்டாளர் ஆகுபவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். 'உங்கள் துறையை, அதன் நுட்பங்கள் பொறிமுறைகளை, முதலில் அறியுங்கள். நீங்கள் ஒரு வெளியீட்டாளர். அதற்கு முதலில் நீங்கள் ஒரு பெண்.'

www.tamilarangam.net

*அனைவராலும் விரும்பிப் படிக்கப்படும் உளவியல் நூல்களின் பெருக்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் - ஒருவர் தன்மீது நம்பிக்கை கொள்வதைப் பற்றிய நூல்கள்?*

இந்தப் புத்தகங்களை வாசிக்கும் பெண்கள் தொழிற்துறையினுள் நுழைகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்ளுதல் என்பது அனுபவத்திலிருந்தும், முயற்சியிலிருந்தும், தோல்வியிலிருந்தும், திரும்ப முயற்சிப்பதிலிருந்தும் வருகின்றது.

அத்துடன் இது சங்கங்களிலும் கூட்டங்களிலும் நீங்கள் சமூக, தொழில்சார் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும். உதாரணமாக Anjoman-e Senfi Farhangi-e Zanan-e Nasher (பெண் பதிப்பாளர்களின் கலாச்சார சங்கம்). எந்தத் தொழிலிலும் சமூக அழுத்தங்கள், பெண்கள் முன்னோக்கிச் செல்லும் முகமாக தங்களுக்குள் அமைப்பாவதற்குத் தள்ள முடியும். அவர்கள் ஒரு இடத்தை அடைவதற்கு மேலதிக முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் இதில் பின்னுக்கு நிற்கிறார்கள்.

மறுபுறம், பழைய காலத்து வெளியீட்டாளர்களின் அநேகர் அதிகளவு கல்வியைப் பெற்றிருக்கவில்லை. அதே நேரம், பெண் பதிப்பாளர்கள் குறைந்த பட்சம் ஒரு பட்டதாரியாக இருக்கிறார்கள்.

*நீங்கள் ஒரு பெண்கள் கல்வி மையத்தையும் நடத்துகிறீர்கள்?*

நாங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்கிறோம். அநேகமாக அதை நூலுருவில் வெளிக் கொணர்வோம். ஆனால் நாங்கள் பல அங்கத்தவர்களைக் கொண்ட சந்திப்புகளை நடத்தும், அதிலிருந்து மேற்கொண்டு ஆராய்ச்சிக்கு முற்படும் ஒரு ஆராய்ச்சி நிறுவனமல்ல. ஆனால், வெளியீட்டாளர்கள் என்ற பொறுப்புகளிற்கு உட்பட்டு நான் கூட்டங்களை, சந்திப்புகளை நடத்த முடியும்.

*நீங்கள் அரசுசாரா நிறுவனம் ஒன்றைத் தேடுவதற்கு முயற்சி செய்தீர்கள்?*

ஆம். ஆனால் பெண்களின் விடயங்கள் தொடர்பாக எளிதில் உணர்ச்சிவசப்பட்டு விடும் தன்மை கொண்ட அரசாங்கத்தில் இது உண்மையில் சாத்தியமானதல்ல. அதுவும் எனக்கு, ஒரு பெண்நிலைவாத செயற்பாட்டாளராக அடையாளம் காணப்பட்டிருக்கும் எனக்கு அதிகப்படியான தடைகள் இருக்கும் என்று நிச்சயமாகத் தெரியும். ஆனால், எது முக்கியமானதாக இருந்தது என்றால் பெண்களுடைய விடயங்களைப் பற்றி பெண்கள் ஆராய்ச்சி செய்வதற்கு உதவியாக ஒரு இடத்தை நிர்மாணிப்பதுதான்.

*தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இருக்கிறதென்று பல பெண்கள் சொல்லக் கேள்விப் படுகிறேன். இவர்கள் உலகளாவிய கலை, இலக்கியத் திரட்டுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றனர்?*

ஏனெனில் பெண்கள் தொடர்பான நிறைய விடயங்கள் இங்கு இருக்கவில்லை. எங்களைவிட முன்னேற்ற அச்சகம் (Nas e Towsh-Development Press) மட்டும் தான் பெண்கள் தொடர்பான விடயங்களைக் குவியப்படுத்துகின்றன / எடுத்துகாட்டுகின்றது (உதாரணமாக மார்ச் மாதப் பதிப்பில் வந்திருக்கும் நூஸின் அஹ்மதியுடனான நேர்காணல்). சில அரசாங்க நிறுவனங்கள், அமைப்புகள், ஏன் இன்னும் சில அரசுசாரா நிறுவனங்கள்கூட அக்கறை கொண்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றை உண்மையான நேர்மையான செயற்பாடுகளாகக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. நாங்கள் முற்றாக சுதந்திரமாக இருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் குறைந்த பட்சம் நாங்கள் குறிப்பிட்ட விடயங்களுக்காக எதிர்த்து நிற்க முடியும். எதைப் பிரசுரிப்பது அல்லது எது குறித்து ஆராய்ச்சி செய்வது என்பதைத் தெரிவு செய்ய முடியும்.

*உங்களுடைய கடைசி நூல் திரைப்படக் கலைஞர் Rakshan Bani-Etemad ஐப் பற்றியது. இதை நீங்கள் வெளியிட்டது மட்டுமல்லாமல் தொகுத்தும் இருக்கிறீர்கள்?*

பானி-எரிமட்டின் தொழிலின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பின் அவருடைய வேலைகள் எல்லாம் பெண்களை மையப்படுத்தியதாகவே இருந்து வந்தன. முதலில் இவர் தொலைக்காட்சிகளுக்கான ஆவணப் படங்களைத் தயாரிப்பவராக இருந்தார். பெண்கள் தொடர்பான விடயங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பொழுது பொதுவாக, அவரும் பெண்களில் இருந்து விலகித்தான் இருந்திருப்பார். அவர் தனது படங்களில் ஆண்களைக் காட்டுவதில்தான் முதலிடம் கொடுத்தார். முன்பு எனக்கு அவரில் அதிக ஈடுபாடு இருக்கவில்லை. அவருடைய முதல் இரண்டு படங்களும் எனக்குப் பிடிக்கவில்லை. அவருடைய மூன்றாவது படத்தைப் பார்ப்பதற்குக்கூட நான் முயற்சிக்கவில்லை. ஆனால் NARGESS ஐப் பார்த்த பிறகு ஒரு மாற்றம் நிகழ்ந்திருப்பதை உணர்ந்தேன். ஒருவேளை, பெண்களின் விடயங்கள் தொடர்பாக வேலை செய்வதற்கு முன்பு தன்னை ஒரு திரைப்படக் கலைஞராக முதலில் நிலைநிறுத்திக் கொள்ள விரும்பியிருக்கலாம். அவர் ஆரம்பத்திலிருந்தே பெண்கள் சம்பந்தப்பட்ட, பெண்களுடன் தொடர்புடைய சினிமாப் படங்களை எடுத்திருந்தார் என்றால் அவரைப் பற்றி மற்றவர்கள் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்திருப்பார்கள், ஏனெனில் அவர் ஒரு பெண் என்றபடியால். அல்லது அவர்கள் சொல்லியிருப்பார்கள் 'அது ஒரு பெண். இது பெரிய அளவிலான சம்பாத்தியத்தைத் தராது' என்று.

ஆனால் ஒரு திரைப்படக் கலைஞராகத் தனக்கு ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்ட பின், அவரினுடைய தயாரிப்பின் மூலம் / படைப்பின் மூலம் அவருடைய பெண்மையை அவர் அறிவித்திருக்கின்றார். NARGESS க்குப் பின் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை ஒரு பெண்ணின் நிலையில் நின்று வெளிப்படுத்துகிறார். அப்போதிலிருந்து நான் அவர் பற்றிய ஒரு நூலை எழுத வேண்டுமென்று முடிவு செய்தேன். நான் அதனை, அதற்குரிய குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்தேன். அவருடைய கடைசித் திரைப் படமான "Beneath the City's Skin" (மக்களுக்கான சினிமா) ஒரு கற்பனைக் கதை. ஆனால் ஒரு ஆவணப்படத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இது ஒரு சீரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். அதனுடைய இலகுவான கதையாடல்களில் அது ஒரு அழகான திரைப்படம். அது தொழிலாளப் பெண்களின் பிரச்சினைகளைக் காட்டுகிறது. அத்துடன் அவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளையும் கூடவே. இந்த நூலை எழுதுவது பழைய விடயங்களைக் கூறுவதற்கும் எனக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

*இந்தத் திரைப்படத்தில் எதைக் குறிப்பாக, மிகவும் அதிகமாக விரும்பினீர்கள்? ஒரு குடும்பம் ஒரு பெண்ணின் தலைமையில் இருப்பதைக் காட்டுவதா?*

ஒரு தொழிலாளியைக் காணுகிறோம். அவருடைய குடும்ப வாழ்க்கையில் அவருடைய தொழில் தரும் சாதகமான விளைவுகளைக் காண்கிறோம். தூபாவின் வேலைத்தள அனுபவம் வீட்டுக்கு ஒரு சக்தியைக் கொண்டு

www.tamilarangam.net

வருகிறது. வெளியில் பெறும் அனுபவங்களை அவள் எடுத்துக் கொள்கிறாள். அவற்றை அவள் தனது குடும்பத்துக்கு இடமாற்றம் செய்கிறாள்.

Bani-Etemad ஒரு கட்டுக்கதையை உருவாக்க விரும்பவில்லை. அவர் தூபாவினுடைய பழைய தவறுகளைக் காட்டுகிறார். அவள் தன்னுடைய மகளை, அவளைப் புண்படுத்தும் கணவனிடம் எடுத்துப் போவதைக் காட்டுகிறார். பெண்களின் போராட்டத்திற்கான ஒரு குறியீடாக அந்தப் பாத்திரத்தை உருவாக்குவதில் அவருக்கு இஷ்டமில்லை. தூபா எவருடனுமே எந்தச் சண்டையும் போடவில்லை.

பொதுவான பிரச்சினைகளுக்காகப் போராடுவதை மக்கள் இன்னும் விரும்ப வில்லை. அந்தப் பிரக்ஞை நிலையை இன்னும் அவர்கள் எட்டவில்லை. அவர்கள் தங்களுடைய குடும்பங்களில்தான் போராடுகிறார்கள். இதற்கான முதற்படி பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம்தான், அவர்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து கொள்வதற்கு.

---

*நீங்கள் நினைக்கிறீர்களா தூபா கானூம் போல நிறையப் பெண்கள் இருக்கிறார்கள் என்று?*

---

தூபா ஒரு கற்பனைப் பாத்திரம் அல்ல, அவள் யதார்த்தமானவள். அவளைப் போல் நிறையப் பேர் இருக்கிறார்கள். இந்தத் திரைக்கதை 1985ல் எழுதப்பட்டது. ஆனால் அதற்கு அப்போது அனுமதி மறுக்கப்பட்டது. எனவே Bani-Etemad மீண்டும் 1989, 1991, 1996 களில் முயற்சிகள் செய்தார். இறுதியில் 1999ல்தான் அவருக்கு அனுமதி கிடைத்தது. இந்த 15 வருட கால இடைவெளியில் தூபாவின் வாழ்க்கைச் சரிதம் உண்மையிலேயே மாறிவிட்டது.

உதாரணமாக, முதலாவது நகலில் அவளுடைய மகன் போர்முனைக்குச் செல்கின்றான். 1991ல் அது வேறொன்றாக ஆகிறது. இறுதி நகலில் பாராளுமன்றத் தேர்தல்கள் திரைப்படத்திற்கான பின்புலமாக அமைக்கப்படுகிறது. ஏனெனில் அந்தக் காலத்தில்தான் Bani-Etemad அந்தத் திரைக்கதைக்கான அனுமதியைப் பெறுகிறார்.

---

*கலாச்சார அமைச்சினால் அனுமதிக்கப்படாத நூல்களை எழுதியிருக்கிறீர்களா?*

---

இல்லை. அனுமதியளிக்கப்படாது என்று ஏற்கெனவே தெரியும் நூல்களை நான் எழுதுவதில்லை. அப்படி இல்லையென்றால் அவற்றிற்கு அனுமதி கிடைக்கும் காலம் வரை காத்திருப்பேன்.

---

*எந்தவிதமான பிரச்சினைகளுக்கு கலாச்சார அமைச்சு மிகச் சிறிய அளவில் உணர்ச்சிவசப்படுகிறது?*

---

(சிரிக்கிறார்). இது மிகச் சிறிய அளவு உணர்ச்சிவசப்படுதல் அல்ல. இது மிகத் தீவிரமான உணர்ச்சிவசப்படல். நீங்கள் பாருங்கள், திரைக்கதையமைப்புக்கு என்று திட்டவட்டமான நியமங்கள் எதுவும் இல்லை. இது அந்த நூலைப் படிக்கும் ஒருவரின் தனிப்பட்ட தீர்மானத்தில் தங்கியுள்ளது. உதாரணத்திற்கு, அவர்கள் சொல்வார்கள், இந்தப் புத்தகம் அளவுக்கதிகமாக பெண்நிலைவாதம் சார்ந்து இருக்கிறது என்று. எனக்கு நிச்சயமாகத் தெரியாது அவர்கள் எதைக் கருதுகிறார்களென்று, ஆனால், எனக்கு ஒரு வழியில் புரிகிறது அவர்கள் எதையும் விஷேசமாகக் குறிப்பிட்டுச் சொல்லமாட்டார்கள், ஆனால், ஏனென்று எங்களுக்கு ஒரு வகையில் விளங்கும். ஐந்தாவது பாராளுமன்றத்தில் 'பெண்களின் மீதான சுரண்டல்' மீதான சட்ட மசோதா பற்றிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொழுது அது அறிவித்தது 'ஒரு பனுவல், ஆண்களுக்கெதிராகப் பெண்கள் செயற்படு வதைத் தூண்டுவதாக அமையுமானால், பிறகு அது...' என்று. இது எதைக் குறிக்கிறது? ஆனால் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்று தெரிந்து கொள்கிறோம்.

இந்த வகையான உணர்ச்சித் தூண்டு தல்கள் எல்லாமே புதிதானவை என்று எண்ண வேண்டாம். எங்களுடைய வர லாற்றை நீங்கள் பார்த்தால், சமூக உளவியல் நிலையில் நின்று பேசும் பொழுது, விசித்திர மான, அக்கறை கொள்ளக்கூடிய பல விடயங்களை நீங்கள் காண்பீர்கள். 3000 ஆண்டுகளுக்கு முன் கலைத் துறையில் பெண்களின் சிலைகள் - வழிபாட்டுச் சிலைகள் இருந்தன. ஈரானுக்கு ஆரியர்கள் வந்த பொழுது, இந்தச் சிலைகள் கலைப் படைப்புகளில் இருந்து முற்றாக நீக்கப்பட்டன. மட்பாண்டங்கள், உருவ வார்ப்புகள் எல்லா மேகூட தமது வடிவங்களை மாற்றுகின்றன. உருண்டையான வடிவங்கள் உட்பட, முன் னால் தள்ளிக் கொண்டிருக்கும் வயிறுகளைக் கொண்ட உருவங்கள் என்பன தவிர்க்கப் படுகின்றன. நிறங்கள்கூட மாறுகின்றன - மென்சிவப்பு நிறம் கருஞ்சாம்பல் நிறத்துக்கு மாறுகிறது.

அப்போது தொடக்கம் மத சம்பந்தமான விளக்கப் படங்கள், விவரணங்கள் அல்லது ஈரானியப் புராணக் கதைகள் என்பவற்றில் பெண்மையைக் குறிக்கும் ஒரு வரவு என்பது எப்போதுமே வானத்திலிருந்து வருவதாப் புனையப்பட்டது. அது ஆண்-பெண். பால் சாராது இருக்கும். அவள் ஒரு பெண், ஆனால் பாலிலியாக ஆக்கப்பட்டவள் அவள். எப்படியாயினும் அவள் கருத்தரிக்க மாட்டாள். அனாஹிதா -Anahita எங்களுடைய மிகப் பெரிய பெண் தெய்வம். மிகச் சிறிய மெல்லிய நடுப்பாகத்தைக் கொண்டிருக்கிறாள். பெண் தெய்வங்கள் பெரிய வயிறுகளையும், பெரிய மார்புகளையும் கொண்ட பெண்மைக்குரிய சின்னங்களுடன் உருவகிக்கப்படுவதில்லை. இந்தப் பிம்பங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. நான் எதைச் சொல்ல வருகிறேன் என்றால் வெகுதூரம் தேடிக்கொண்டு சென்றடையக்கூடிய கலாச்சார வரலாற்று வேர்கள் நிச்சயம் இருக்கும். பெண்களை நோக்கிய உணர்தல் என்பது ஓரிரவில் கண்டடைந்து விடக்கூடியதல்ல.

பழைய பாரசீகத்தில் பெண்கள் அதிகாரத்தை வைத்திருந்தார்கள் என்று கூறுபவர்கள் - எவ்வளவு பெரிய பிழையை விடுகிறார்கள், எவ்வளவு பெரிய பிழையான முடிவுக்கு அழைத்துச் செல்கிறார்கள். அது உண்மையில் அப்படியல்ல. நான் ஆராய்ந் திருக்கிறேன். நான் என்ன பேசிக் கொண்டி ருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். பல பெண் தெய்வங்களின் விடயத்தில் பெண்கள் அத்தெய்வங்களை வழிபடுவதற்கு உரிமை இருக்கவில்லை. அத்தெய்வங்கள் ஆண்களுக் கான பெண் தெய்வங்களாக இருந்தன. அதற்குப் பிறகு அவை பெண்மைக்கான தோற்றத்தைக் கொண்டிருக்கவில்லை. அதன் பின் அவை பெண்களாகக் கருதப்படவில்லை அல்லது பெண்களாக வழிபடப்படவில்லை.

இந்த ஒதுக்கி வைத்தல்கள் சந்ததி களுக்குக் கடத்தப்பட்டு விருத்தி செய்யப் பட்டன. ஈரான் எப்படி விசித்திரமானதென்று பாருங்கள். பெண்களின் வல்லமை என்பது வெளியில் தெரியாதவாறு மறைக்கப்பட்ட போதிலும் அவர்களினுள் மறைக்கப்பட்டுக் கிடக்கும் சக்தியை உள்ளாரக் காணலாம். இது ஒரு சிக்கலான பிரச்சினை. ஆனால், இது குறித்து ஒரு சமூக உளவியல் ஆராய்ச்சி ஒன்று செய்யப்பட வேண்டும் என்று நான் நினைக் கிறேன். ஏனெனில் இது மறைந்து கிடக்கும் விடயங்கள் பலவற்றை வெளிக்கொணரும்.

ஆனால், நேர் எதிர்த் தன்மைக்குள் போய் விழுந்து விடாமல் இருப்பதில் மீண்டும் ஒருவர் அவதானமாக இருக்க வேண்டும், அதாவது பண்டைய காலங்களில் பெண்கள் எவ்வளவு சக்தி படைத்தவர்களாக இருந்தார் களென்று உரிமை கொண்டாடுவதில். பாரசீக ஆட்சிக் காலத்துத் தகவல்களைப் பார்த்தீர்கள் என்றால், உதாரணமாக பெண்கள் பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்ததைக்

www.tamilarangam.net

காண்பீர்கள். கருத்தரிக்கக்கூடிய பருவத்தை அடைந்துவிட்ட ஒரு பெண் ஒரு மாதத்தில் 15 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப் படுகிறாள். மாதவிடாய் வந்து முடிந்தபின் அதைத் தொடர்ந்து 4 நாட்களுக்கு சூரிய வெளிச்சத்திலிருந்து விலக்கி வைக்கப் படுகிறாள். இந்தக் காலத்தில் சில நாட்களுக்கு நீர்கூட அருந்துவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாள்.

வல்லமை, சக்தி? என்ன வல்லமை? பெண்கள் இதை எதிர்க்கக்கூட இல்லை. இப்படிப்பட்ட தப்பான கருதுகோள்களை எங்களுடைய வரலாற்றிலிருந்து அழிக்க வேண்டும்.

பட்டது மட்டுமல்ல; சில விஷேசப்படுத்தப்பட்ட துறைகளில் ஆண்களைவிடவும் அதிகமான ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவல் எழுத்து மூலமான ஆவணங்களிலிருந்தும் கற்களின் மீது பதிக்கப்பட்ட வரை படங்களிலிருந்தும் பெறப்படுகின்றது. ஆனால் எவரும் இதற்கான காரணத்தைத் தேட முயலவில்லை.

எங்களுடைய வரலாற்றில் ஒரு பிரச்சினை என்னவென்றால் அது எப்போதும் அரசினதும் ஆட்சியாளர்களினதும் வரலாறாகத்தான் இருந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் மக்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து பார்ப்பதில்லை. Ashgani காலத்



Shahla Lahiji

எங்களுடைய வரலாற்றில், நாங்களும் பாரசிக ஆட்சிக் காலங்களில் ஒளிமயமாக இருந்திருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. அப்போது பெண்கள் பழைய கிரேக்கத்தில் இருந்தது போல் அடிமைத் தொழிலாளிகளாக அல்லாது ஊதிய உழைப்பாளர்களாக இருந்த பொழுதுகளில் நன்கு பிரகாசமான காலத்தைக் கொண்டிருந்தோம் என்று சொல்லப் படுகிறது. 'முன்னேற்றத்தின் சரித்திரம்' என்ற கோதாவில் சொல்லப்பட்டுக் கொண்டிருப்பதை அநேகமானவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதை உலுக்கிக் காண்பிக்க முடியும். ஈரானியப் பெண்களுக்கு ஊதியம் கொடுக்கப்

தின் போது நிலவிய எங்களது கல்வி முறைகள் பற்றி எங்களுக்குத் தெரியுமா? பாரசீகத்தை கிரேக்கம் ஆண்ட காலத்தில் இருந்த மக்கள் என்ன மொழிகளைப் பேசினார்கள் என்று எங்களுக்குத் தெரியுமா? கிரேக்கத்தோடு உள்ள ஒற்றுமையான தன்மைகளுக்கு அப்பால் ஜனநாயக மாநிலங்கள் எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன என்று எங்களுக்குத் தெரியுமா? எங்களுக்கு எதுவும் தெரியாது. எங்களுக்கு வரலாறு இல்லை.

கண்டுபிடிக்கப்பட்டவை எல்லாம் மற்றவர்களால் - மறுபக்கத்தில் வாழ்ந்து

www.tamilarangam.net

கொண்டிருப்பவர்களால் செய்யப்பட்டவை. தயாரிக்கப்பட்டவை. 'எதிரி' என்று நான் சொல்லவில்லை. ஆனால், எப்படியோ கடைசியில் அவர்கள் எங்களுக்குப் போட்டியாக இருந்தார்கள்.

---

*நீங்கள் உங்களை ஒரு பெண் நிலைவாதியாக அழைக்கிறீர்களா?*

---

இல்லை. ஒரு பெண்நிலைவாதி என்று இல்லை.

ஒவ்வொரு சமூகத்திலும் குறிப்பிட்ட நபர்கள், குறிப்பிட்ட சிந்தனையாளர்கள், ஒவ்வருவருக்குமான சம உரிமைகளுக்காகப் பாடுபடுகிறார்கள். ஈரானியப் பெண்கள் மட்டுப்படுத்தப்பட்ட சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்காக வேலை செய்வதற்கான தேவை இருக்கிறது. ஈரானிய ஆண்களும்கூடத்தான். அவர்கள் சமத்துவத்தை நோக்கிய வேலைகளை முன்னெடுக்க வேண்டும்.

அப்போது முழுச்சமூகமும் அதனுடைய எல்லாப் பலன்களுடனும் முன்னேற முடியும். எனக்குத் தெரியவில்லை இது பெண்நிலை வாதம் என்று அழைக்கப்படுகிறதென்று.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், மேற்கத்திய நாடுகளில் இருக்கும் பெண்நிலைவாதத்தின் உருவமும் அமைப்பும் நல்லதுதான். அவர்களின் முயற்சிகளை மதிக்கவில்லை என்று நாங்கள் சொல்ல வில்லை. ஆனால் அந்த இடத்திற்கு அந்தப் படிநிலைக்கு நாங்கள் இன்னும் வந்து சேரவில்லை.

எனவே நான் இந்தச் சொல்லின் பிரயோகப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிடு வது என்றால் பெண்நிலைவாதம் மாற்றம் செய்யப்படுவதற்கான தேவை இங்கு உள்ளது என்று இந்த இடத்தில் நான் கருதுகிறேன்.

*"Bad Jens" அமைப்பு ஊக்க மாகச் செயற்படும் ஈரானியப் பெண்களுக்கு ஒரு பொது மன்றத்தை வழங்குவதற்கு முயற்சி செய்கிறது, இது ஏனைய நாடுகளிலுள்ள பெண் செயற்பாட்டாளர்களுடன் இவர்கள் தங்கள் தொடர்புகளைப் பெருக்கி இறுக்கிக் கொள்ள முடியும் என்பதற் காக. இப்படியான தொடர்புகள் நம்பிக்கை தரக்கூடிய விளைவுகளைக் கொண்டு வரும் என்று கருதுகிறீர்களா?*

---

ஆம். ஒரே மாதிரியான கஷ்டங்களையும் மோதல்களையும் எதிர்கொள்ளும் சமூகங் களுடனான தொடர்புகள் என்று கருதினால். உதாரணத்திற்கு பாகிஸ்தானைப் பாருங்கள். சமூகரீதியாக ஈரான் அதிகமாக முன்னேறி யுள்ளது - பெண்களின் சமூகத்திலான நிலைகள் எல்லா விதங்களிலும் இங்கு அதைவிட நன்றாக உள்ளன - ஆனால் பாகிஸ்தானில் வலிமையான ஜனநாயக நிறுவனங்கள் உண்டு. ஈரானியப் பெண் களுக்கு இன்னும் சமூகம் குறித்த ஒரு ஜனநாயக மனோபாவம் இல்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி அதிகம் கவலை கொள்கிறார்கள். அத்துடன் தங்களுடைய வாழ்வைப் பிணைத்து வைத்திருப்பதற்காக எவ்வளவோ சக்தியைச் செலவளிக்கிறார்கள். சமூகப் பிரச்சினைகள் அவர்களுடைய உலகத்திற்கு மிகவும் அப்பாற்பட்டதாக அவர்கள் காண்கிறார்கள். இவைகள்தான் வேறுபாடுகள்.

வெவ்வேறு குழுக்களுக்கிடையில் வெவ் வேறு அனுபவங்கள் பரிமாறப்படும் என்றால் தொடர்புகள் பிரயோசனமானவை. உதார ணத்திற்கு தொழிலாளப் பெண்களின் அனுப வங்கள். எப்படி அவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய உரிமைகளைக் கேட்கிறார்கள்? பிரச்சினை என்னவென்றால், வேலை செய்யும் ஈரானியப் பெண்களில் எவ்வளவு பேர் அமைப்பாக இருக்கிறார்கள் அல்லது நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் இந்தத் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளும் வலிமை அவர்களிடம்

www.tamilarangam.net

இருக்கிறதா? இந்த வேலைகள் எங்களைப் போலப் பெண்களுக்கு விட்டுவைக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு அந்தப் பிரச்சினைகள் இல்லை. நாங்கள் வாதாடிப் பெற்றுக் கொடுக்கும் மாற்றங்களிலிருந்து நாங்கள் அனுகூலங்களைக் கட்டாயமாகப் பெறுவதில்லை. நாங்கள் பல வழிகளில் ஏனைய பெண்களின் உரிமைகளுக்காக உரக்கக் குரல் கொடுக்கிறோம், ஏனையவர்களின் இடத்திலிருந்து. மக்களின் தேவைகளை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டு அவர்களுக்காகப் பேசுகிறோம் என்பது தெளிவில்லாமல் இருக்கிறது.

பெண்களுக்கான இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டது என்று நான் உரிமை கோரவில்லை. ஏனெனில் அப்படி இல்லை. நாங்கள் பிரச்சினைகளை யதார்த்தமாகப் பார்த்து சமூகத்தில் அதற்கான சாத்தியப்பாடுகளுடன் செயற்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன். ஏனைய மத்தியக் கிழக்கு நாடுகளுடனும் ஆசிய நாடுகளுடனும் ஒப்பிடும் பொழுது நாங்கள் அதிகமாக முன்னேறியிருக்கிறோம். வேறு பல வழிகளில் எங்களுடைய அனுபவங்கள் அவர்களுடையவற்றுடன் ஒப்பிடும்போது எதுவுமேயில்லை. இந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு ஒரு வழி இருக்குமென்றால் அது நல்லதுதான். ஆனால் இது எப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நுட்பங்கள் எனக்கு இன்றும் தெளிவில்லாததாகத்தான் இருக்கிறது.




*பேர்லின் மகாநாட்டைப் பற்றி எடுப்போம். சீரியஸான விடயங்கள் எப்படி உருமாறியிருக்கின்றன என்று எந்த இடத்தில் உணர்கிறீர்கள்?*

நல்லது. அவர்கள் எங்களை எச்சரித்தார்கள். திரும்பி வரக்கூடாதென்று. ஆனால் ஒரு கணம்கூட நாங்கள் திரும்பி வரப்போவதில்லை என்று ஒருபோதும் கருதியதில்லை. ஏனெனில் நாங்கள் நினைத்தோம் எது நடந்தாலும் அதை எதிர்கொள்ள வேண்டும் என்று. நாங்கள் என்ன பேசினோமோ அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் (மகாநாடு அதை எப்படிச் சமாளித்தது, கையாண்டது என்பதை ஒருபுறத்தில் வைத்துவிட்டு). நான் பேர்லினில் பேசிய விடயங்கள் நான் இங்கிருக்கும்போது சொன்னவைதான். திரும்பத் திரும்பச் சொன்னவைதான். நான் அவற்றை நம்புகிறேன். எனவே நான் திரும்பினேன். என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்ப்பதற்காக இப்போது காத்துக் கொண்டிருக்கிறேன்.

*உங்களுடைய விசாரணை முடிந்துவிட்டது. உங்களுடைய தீர்ப்புக்காகக் காத்திருக்கிறீர்கள்....?*

Mehrangiz Kar இன் விசாரணை முடிந்துவிட்டது. அப்படியேதான் எனக்கும். அது ஒரு மூடப்பட்ட அறைக்குள் நடந்த விசாரணை. நாங்கள் மட்டும்தான் இப்படியான முறையில் விசாரிக்கப் பட்டிருக்கிறோம். நாங்கள் இருவரும் மட்டும், நீதிபதி, public prosecutor. ஒரே ஒரு பத்திரிகை மட்டும் இந்தப் பிரத்தியேகமான அரச விவகாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. நீதிபதிகூட - சட்டத்தையும் விதிகளையும் மீறி - அடுத்த நாள் தொலைக்காட்சியில் இந்த விசாரணை குறித்துத் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தார். ஆனால் நாங்கள் காரியக் கிரமத்தை மதித்து அதைக் காப்பாற்றினோம். அது ஒரு மூடப்பட்ட அறைக்குள் நடந்த விசாரணையாக இருந்த போதிலும் நாங்கள் அதைப் பற்றி பொது இடத்தில் ஒரு வார்த்தை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசவில்லை. நாங்கள் எந்த அத்துமீறலையும் செய்யவில்லை. ஆனால் நீதிபதி செய்தார்.

---

*பெண்களின் சஞ்சிகைகள் ஏதாவது இந்த நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்களா?*

---

நான் அப்படி எதுவும் நடைபெறுவதைக் காணவில்லை. ஏனெனில் அவர்கள் அதைச் செய்வதாக இருந்தால் இது முக்கியச் செய்தியாகப் பேசப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அதைச் செய்திருப்பார்கள். ஆனால் எல்லாம் சொல்லி நடத்தப்பட்டு விட்டது. நான் இன்னொரு முறை பிறந்தால் எல்லா வற்றையும் திருப்பிச் செய்வேன். நான் செய்ய விரும்பும் எவ்வளவோ காரியங்கள் இன்னும் இருக்கின்றன. என்னுடைய உடல்தான் எனக்குப் பிரச்சினையாக உள்ளது. அது நான் நினைப்பவை எல்லாவற்றையும் செய்ய இடம் கொடுக்காது. என்னிடம் எல்லாவற்றையும் செய்வதற்கான போதுமான அளவு சக்தி இல்லை.

---

*Ms Kar ஐப் போல் நீங்களும் மதச்சார்பான நிறையப் பெண்களுடன் சேர்ந்து வேலைகளைச் செய்திருக் கிறீர்கள். Roshangaran ம் Zanan சஞ்சிகையும் சேர்ந்து நடத்திய விவாதக் களத்திற்கு ஐந்தாவது பாராளு மன்றத்தின் பெண் பிரதிநிதிகளோடு அவர்களுடைய சட்டமியற்றும் அறிக்கைகள் குறித்துப் பேசுவதற்கு அழைத்திருந்திருந்தீர்கள்?*

---

எங்களுக்குத் தோன்றியது, நாங்கள் எங்களுடைய நிலையைப் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று. அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு அவர்கள்தான் பொறுப்பாளிகள் என்பதையும் ஆறாவது பாராளுமன்ற வேட்பாளர்களுக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்றும். அவர்கள்கூட பொறுப்பான காரணம் காட்ட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இதில் எங்களுடன் ஒரே விதமான கருத்துக் கொண்டிருந்தவர்களுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டோம். மத சம்பந்தமான நம்பிக்கைகளுடன் கைகோர்த்து நாங்கள் எப்போதும் ஒரு இணைப்பைப் போடவில்லை.

மறுபுறம், நாங்கள் அவர்களுடைய குடையின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் நிறுவ னங்களுடைய அறிவுரைகளை எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. அப்படி இருப்பதற் கான காரணம் என்னவென்றால் இது இரண்டு பகுதிகளையும் புண்படுத்தும். அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் சில குழுக்க ளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். எங்களுக்கு நாங்கள் மட்டும்தான்.

---

*உங்களுடைய ஆதரவாளர்கள் யார்?*

---

சாதாரண மக்கள், எந்த அரசியல் கட்சியுடனோ, கட்சிப்பிளவுகளுடனோ சேராத வர்கள். இந்த ஆதரவு மையப்படுத்தப் பட்டதல்ல. உதிரிகளாகக் கிடக்கிறது. நாங்கள் சிறிய அளவில்கூடக் கூட்டங்களை ஒழுங்கு செய்ய முடியாது. ஏனெனில் அவை தாக்கப் படுவதற்கான சாத்தியக்கூறு உண்டு.

---

*அண்மைக் காலத்தில் விரைவில் ஒழுங்கமைக்கப்பட மாட்டார்களா?*

---

என்னுடைய அபிப்பிராயத்தில், மக்க ளுக்கு ஒரு தேவை இருக்கிறது என்று உணரும் பொழுது அவர்கள் செய்வார்கள். அது இன்னும் நடக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அதற்கான அடியை எடுத்து வைக்க வில்லை. அவர்களுக்காக இன்னொருவர் அடியெடுத்து வைக்க முடியாது.

www.tamilarangam.net

*நீங்கள் கவிதைகள் எழுதுவதாகக் கேள்விப்படுகிறேன். எப்போதாவது அவற்றை வெளியிடுவீர்களா?*

---

அவை மிகவும் தனிப்பட்டரீதியிலானவை. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில்தான் என்னால் கவிதை எழுத முடியும். இது ஒரு தனிப்பட்ட ஆத்மார்த்தமான தேவையை நிறைவு செய்கிறது. ஆனால் நான் அவற்றை வெளியிடுவதைப் பற்றியோ மற்றவர்கள் அவற்றை வாசிப்பது பற்றியோ எப்போதுமே எண்ணியதில்லை.

---

*அவற்றைப் பிரசுரிப்பது பற்றி நீங்கள் எப்போதாவது சிந்திக்கிறதுண்டா?*

---

நான் நினைக்கிறேன். நான் இறப்பதற்கு முன்பு அவை எல்லாவற்றையும் அழித்து விடுவேன் என்று.

---

*ஜனாதிபதி தேர்தலுக்காக மரபுசார் கட்சிகளில் ஒன்று, ஒரு பெண் வேட்பாளரை நிறுத்துகிறதே. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இப்படி ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கு எப்போதாவது முன்வருவீர்களா?*

---

இல்லை. ஏனெனில் வாக்களிப்பது வேட்பாளரின் பால் சம்பந்தமில்லாதது. ஒரு பெண்ணாக இருப்பது மட்டும் அதற்குப் போதாது. ஐந்தாவது பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள்தான் பெண்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். பெண்களின் தேவைகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒருவரைக் கண்டுபிடிப்பது முக்கியம். அல்லது இப்படிச் செய்வது இன்னும் நன்றாக இருக்கும், சமத்துவத்தைத் தேடும் மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஒருவர். ஏனெனில் எண்ணற்ற ஆண்களும் சம உரிமை வேண்டி நிற்கிறார்கள். அது அவர்களுடைய குழந்தைகள், மகள்கள், தங்கைகள் எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

---

*மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதை நான் கண்கூடாகக் காண்கிறேன். யாருக்கு வாக்களித்தாலும் எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை, மாற்றங்கள் நிகழப் போவதில்லை என்று கூறுகிறார்கள்?*

---

இது பொருத்தமில்லாதது. மக்கள்தான் மாற்றத்தை உருவாக்குபவர்கள் - நான் மக்களை மிகப்பெரிய அளவில் நம்புகிறேன். நிச்சயமாக இதற்காக நிறைய விலை கொடுக்க வேண்டியிருக்கும். இது உலகம் முழுவதும் எல்லா இடங்களிலும் நடந்திருக்கிறது. மனித உரிமைகளிற்காகவும் சுதந்திரத்திற்காகவும் வேலை செய்த ஒவ்வொருவரும் தாங்கள் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்துத் தான் இருக்கிறார்கள். ஈரான் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் ஒருவர் தனது தேவையை உணரும் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வந்து சேர வேண்டும். நான் எப்போதும் சொல்வது என்னவென்றால், எங்களுக்கு என்ன இன்னும் போதாமல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுதல் தான் சுதந்திரத்துக்கான முதற்படி. எங்களுக்குச் சில விடயங்கள் கிடைக்கவில்லை என்று உணரும் போது நாங்கள் அதற்கான கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்குவோம். இந்த வேலைத் திட்டமானது அவசரப்படுத்தப்பட முடியாதது. கலாச்சார ரீதியான பிரக்ஞைகளை உருவாக்குவதன் மூலம் இது இலகுப்படுத்தப்பட முடியும்.

இதனால்தான் நான் கலாச்சார வேலையையும் வெளியீட்டுத் தொழிலையும் தேர்ந்து கொண்டேன். ஏனெனில் கலாச்சார இயங்குதளம் ஒன்று நிர்மாணிக்கப்படும் வரை அரசியல் சமூக மாற்றங்கள் எப்போதும் ஏற்படாது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முறைகேடு இலக்கியம் பற்றிய ஒரு பார்வை

*ஜீனட் வின்டர்ஸன்*

Jeanette Winterson



# Porn Reader

இறுதியாக நீங்கள் எப்போது ஒரு கவர்ச்சிப் பத்திரிக்கையைக் காண நேர்ந்தது? அப்படி ஒன்றைத் தேர்ந்தெடுத்து பிரித்துப் பார்க்க நமக்குள் ஒரு உந்துதல் ஏற்படும் பொழுதும் கடைக்காரரிடம் மேம்போக்காக அதைப் பற்றிக் கேட்பதோடு நின்று விடுகிறோம். ஆனால் நானோ ஒரு வார இறுதியில் *எக்ஸ்ட்ரீம், 40+, 18 மட்டும்* அல்லது *பெரிதும் கருமையானதும்* போன்ற இதழ்களைத் தேடிப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டேன்.

பெண்ணியத்திற்கு இவ்வகை முறைகேடு (போர்னோ) இலக்கியங்களில் தாக்கம் ஏதும் இல்லை. ஒரு வேளை 60 மற்றும் 70களில் பெண்ணியத்திற்கு எதிராகப் பேசப்பட்டிருக்கலாம். எனினும் இப்போது அவை ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டன. நான் பல்வேறு இடங்களில், குறிப்பாக வெளிநாடுகளில் பயணம் செய்யும் பொழுது புகை வண்டி நிலையங்களிலும் விமான தளங்களிலும் உள்ள கடைகளின் மேல் அலமாரிகள் கீழுள்ளவற்றைக் காட்டிலும் இரு மடங்கு பெருத்துக் காணப்படுவதை அறிவேன். இது எதைக் குறிக்கிறது? முறைகேடு இலக்கியங்களை ஆண்கள் முன்னைக் காட்டிலும் அதிகம் வாங்குகிறார்களா என்ன? அல்லது ஒரு வேளை ஆண்கள் முன்னைக் காட்டிலும் குறுகிப் போய்விட்டனரா? அல்லது ஒரு வேளை பெண்களும் அவற்றைக் காண விரும்புகின்றனரா? அல்லது இவ்வகை இலக்கியம் வாழ்வியலில் ஒப்புக்கொள்ளப் பட்டு விட்டதா?

இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வது என்பது எளிதல்ல. வெள்ளை இலக்கியங்களின் பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். ஆந்த்ரே தோர்க்கினும், கேத்தரின் மக்கினனும் வெவ்வேறு ஸ்தாயிகளில் அமெரிக்க நீதிமன்றங்களிலும், வெளிப்பாட்டுத் துறைகளிலும் எல்லா முறைகேடு இலக்கியமும் பெண்களுக்கு எதிரானவை என்று வெற்றிகரமாக விவாதித்துள்ளனர். ஆனால் செம்மையாளர்களாகிய ஹ்யூ ஹெஃப்னர், பால் ரேமன்ட், ரிச்சர்ட் டெஸ்மான்ட் ஆகியோர் இது வெறும் வியாபாரம் தான், பெண்கள் கூட இவற்றை காணலாம் என்கிறார்கள். அதிலும் எக்ஸ்பிரஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீட்டை சமீபத்தில் கொண்டு வந்த டெஸ்மான்ட் வியாபாரத்திற்கும் சுரண்டலுக்கும் நடுவில் இருக்கின்ற இழையை சிறுகச் செய்துவிட்டார். ஒரு வேளை வெற்றிகரமான ஒரு முறைகேட்டு இலக்கிய கர்த்தா ஒரு தேசியப் பத்திரிக்கையை நடத்தக் கூடும் என்றால் அதன் குறியீடுகளை எப்படி இச்சமூகம் உள்வாங்கிக் கொள்ளும்?

டெஸ்மான்ட் இதில் சுரண்டல் ஏதும் இல்லை, பாலியல் தொழிற்சாலை இதற்குத் தகுந்த ஊதியம் அளிக்கிறது என்று நியாயப் படுத்துவார். நாம் இவ்வகை புகைப்படங்களை உருவாக்க உதவி செய்யும் ஆண்களும், பெண்களும், புகைப்படக்காரர்களும் எவ்வளவு ஊதியம் அளிக்கப்படுகிறார்கள் என்று விவாதிக்கவில்லை. என்னதான் வருமானம் தருபவர்களாக இருந்தாலும் இத்தொழில் சுரண்டல்தான், ஏன்? அது பூமியின் மேலுள்ள எல்லாப் பெண்களையும் சுரண்டுகிறது. பெண்ணுடலை இத்தகுதான் என்று காட்டுவது புகைப்படத்தில் வெளிவராத அனைத்துப் பெண்களையும் பகிஷ்கரிப்ப தாகிறது. ஆண்களும் அவர்கள் அனைவ ரையும் இக்கண்ணோட்டத்தில் பார்க்க வழிவகை செய்கிறது. ஆண்கள் மனைவியை ஒரு விதமாகவும் மாடல்களை வேறு விதமாகவும் பார்ப்பதால் மட்டுமல்ல, இவள்தான் பெண்; அவிழ்த்துப் போடு அவள் ஆடைகளை இப்படித்தான் அனைவரும் இருப்பார்கள். அவர்களுக்கு பாலுறவு எப்போதும் வேண்டும், வழிப்போக்கர்களி டத்தில் கூட, உன்னிடம் கூட.

எனக்கு இவ்வகைப் புத்தகங்களைப் படிக்கும் இருவரைத் தெரியும். ஒருவர் என்னுடனே கூட ரயிலில் என் அருகில் அமர்ந்து பிரயாணம் செய்பவர். அந்த முதல் வகுப்புப் பெட்டியில் நான் ஒரே ஒரு பெண்தான். ஜின் மற்றும் இதர அருவருப்பான வாசனைகளுக்கு நடுவில் பிரயாணம் செய்பவள். அந்த மனிதர் மிகவும் நல்லவர். இருப்பினும் அவரது சூழல் என்னை மிகவும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தும். ஆடைக் குறைப்புகளைப் பற்றிய அவரது பேச்சுக்கு நான் முகம் சுளிக்கும் போது அவர் என்னிடம் மன்னிப்புக் கோருவது உண்டு.

இன்னொரு மனிதர் எனக்கு அவருடைய பெண் நண்பர் மூலமாக அறிமுகப்படுத்தப் பட்டார். அவளோ இவ்வகைப் புத்தகங்களில் அந்த மனிதர் மீதான தாக்கத்தினால் படுக்கையில் நித்தமும் அவமதிக்கப்படுபவள் எனினும் அவரை இழந்து விடக்கூடும் என்று எதிர்ப்புக் காட்டாதவள். அவர் அவள் ஒரு விடுதலையாகாத பிறவி என்றும் நகைச்சுவை உணர்வற்ற ஜடம் என்றும் அபிப்பிராயம் கொண்டுள்ளவர். இந்த இரண்டு மனிதர்களும் அந்தப் பெண் மற்றும் எனது அசௌகரியங் களையும், அவமானங்களையும் சற்றுக்கூட மதித்தவர்களல்ல. முறைகேடு இலக்கியங்கள் அல்ல நாங்கள் தான் பிரச்னைக்குட்பட்ட வர்கள்.

இது தான் நமக்கு இப்பத்திரிக்கைகளி லிருந்து கிடைப்பது: பாலியல் பற்றி நேரடியாக அல்ல பழுப்புத் தாளில் மறைந்து கிடக்கும் அதன் மூன்றாவது பக்கத்தில் காணப்படும் பெண்ணுருவைப் போல நாங்கள் அலட்சியப் படுத்தப்படுகிறோம். இந்த முறைகேட்டு இலக்கிய சிருஷ்டியாளர்கள் அவர்களது ஆத்திச்சுவடியில் மிக நீண்ட வார்த்தைக் கட்டை வைத்திருக்கிறார்கள். அவையாவன: *கிளுகிளுப்பு, அழகிகள், துள்ளல், பொம்மைகள், துறுதுறுத்த, மட்டையுரித்தல்.* இந்த அருவருப்பான அட்டவணை நீளுகிறது. இது ஒன்றும் எங்களை பயமுறுத்துவதாக இல்லை. இது வெறும் பொழுதுபோக்கு மட்டும் தான்.

இந்த ஆத்திச்சுவடியுடன் கழிப்பிட இலக்கியங்களும் சேர்ந்து கொள்கின்றன, *ஓட்டை, மணி* போன்றவை அவை. இது அன்றைய தினசரிப் பத்திரிக்கையின் தலையங் கத்தைப் படிக்கிற அளவிற்கு எளிதானதும் புத்திஜீவித்தனமானதுமாகும். எனக்கு என்னுடைய சிந்தனைகளைக் கழற்றி வைத்து விட்டுப் படுக்கைக்கு அனுமதிக்கும் அளவிற்கு இச்சமூகம் தாழ்ந்து விட்டது என்று கூறுவதற்கு முன்பாக இந்தப் புகைப்படங்களுக்கு தங்கள்

www.tamilarangam.net

உருவத்தை அளித்த பெண்கள் அவர்களது மூளையை அவர்களிடமிருந்து எடுத்து விட்டுத்தான் புகைப்படம் எடுக்க அனுமதிக் கப்பட்டிருப்பார்கள் என்று கூறுவேன். நிர்வாணமான பெண்ணின் உடல்கள் பற்றி அவ்வளவாக எனக்குக் கவலையில்லை. பெண்ணின் உடலும் அவ்வளவு அபாயகர மானதல்ல. ஆனால் அவர்கள் சிந்தனை யற்றவர்கள் என்ற தோற்றமளிக்குமாறு அவர்களது உடல்கள் மேன்மைப்படுத்தப் படுகின்றன என்பது தான் விஷயம். அவர்கள் தங்களது எதிர்ப்பைக் காட்டி தங்களை நிலைநிறுத்துவதைக் காட்டிலும் முட்டாள்கள் என்ற அடையாளத்துடன் படுக்கையில் வீழ்த்தப்படுவதையே அனைவரும் விரும்பு கின்றனர்.



என்னுடைய மொழி கடுமையானதாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினாலும் தெருக் களில் இவை மிகவும் புழக்கத்தில் இருப்பதைக் காணலாம். ஆகவே என்னை மன்னியுங்கள்.

இந்தப் படங்களைப் பாருங்கள். வெவ்வேறான வையாக இருக்கின்றன. ஆனால் எப்படி? ஒரு முறை புகைப்படம் பிடிக்கப்பட்டதற்குப் பிறகு ஒரு பெண்ணுடல் மற்றதைப் போன்றதுதான். இந்த ஒத்தத் தன்மையை மறைப்பதற்கு தலைப்புகளை மாற்றிப் போடுவதால் என்ன பயன். இதில் *நிர்வாண வாசகர்களின் மனைவிகள்* அல்லது *எக்ஸ்ட்ரீம்* இரண்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

சொல்லப் போனால் கொச்சை மொழி கொச்சை இலக்கியங்களை விட அதிகமாக விற்பனை ஆகிறது. இது குழந்தைகள் தாம் மொழியைக் கற்கத் துவங்கும் பொழுது சில வார்த்தைகளை திரும்பத் திரும்ப உச்சரிப்பது போன்றது. புத்தக அலமாரியில் காணப்படும் கொச்சை இலக்கியங்களின் வெளியீடுகள் மிகக் குறைந்த அளவே இருப்பினும் அவை பல்வேறு பரிமாணங்களிலும் இவ்வாசகர் களை திரும்பத் திரும்ப உச்சரிக்கத் தூண்டு கின்றன. ஒவ்வொரு பத்திரிக்கைகளிலும் உள்ள தலைப்பையும் தலைப்பு வரிகளையும் எடுத்துவிட்டுப் பார்த்தால் இவற்றின் இடையே வித்தியாசத்தைக் காண முடியாது.

குறிப்பாக அந்தரங்கத்தில் காணப்படும் முடியினை மழிப்பதென்பது பிரசித்தமாகப் பேசப்படும் ஒரு விஷயமாக இருக்கிறது. எவ்வளவு பெண்கள் இவ்வாறு மழித்துக் கொள்கிறார்கள்? இந்த செக்ஸ் இதழ்களைப் பொறுத்தவரை எல்லோருமே அப்படித்தான். ஆனால் உண்மையில் சிறு பெண் களுக்குத்தான் தமது அந்தரங்க உறுப்புகளைச் சுற்றி மயிர் முளைப்ப தில்லை. ரஸ்கினின் மலட்டுத் தன்மை பற்றிய கதையை நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? தனது திருமணத்திற்கு முன் அவர் கண்ட முடியற்ற பெண்ணுடல்கள் கிரேக்க சிற்பங்களுடையவை. திருமணத்திற்குப் பிறகு தனது மனைவியின் அந்தரங்க உறுப்பைச் சுற்றியுள்ள புதரைக் கண்டு பயத்தால் உறைந்து அவர் அவளை அணுகவே இல்லை. என்ன எங்களுடைய இவ்வுறுப்புகள் பயத்தை உருவாக்கத் தகுந்தனவா? அறுவை சிகிச்சைக்கு முன்பு அரங்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உடலைப் போல எங்களது மேனியை மழித்துக் கொண்டு விடலைத்தனக் கற்பனைகளுக்கு நாங்கள் வடிவம் கொடுக்க வேண்டுமா?

பெண் சமப்பால் கலவியாளர்கள் வித்தியாசமானவர்களல்ல. அதாவது மிகக் குறைந்த சமப்பால் கலவி மேற்கொள்ளும்

www.tamilarangam.net

பெண்கலவியாளர்கள் ஆண்களின் கொச்சை இலக்கியப் படுக்கைகளில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். ஆண்கள் பயப்படுகிறார்கள். தங்களது மனைவியரை வேறொருத்தி அழைத்துச் சென்றுவிடக்கூடு மென்று. இந்த முறைகேடான பாலுறவு உலகத்தில் பெண்கலவியாளர்கள் மிக மிக பத்திரமானவர்கள். ஒரு பரிசோதனைக் கூடத்து எலியைப் போல ஒரு பொம்மைப் பாலுறவை அவர்கள் பரிசோதனை செய்து கொள்ளக்கூடும். அவர்களில் சிலர் பழுத்த தலைமுடி உடையவர்கள். நீண்ட விரலுடையவர்கள். ஆகையினால் ஆண் ஒருவன் அந்தப் பிரதேசத்தில் நுழைவதற்கு மாபெரும் தடையாய் இருப்பவர்கள்.

இந்த முறைகேடுப் பாலுறவு உலகம் ஆண்களின் பாதுகாப்பின்மையை ஒரு மாறும் உலகத்தில் உருவாக்குகிறது; அவர்களது பங்களிப்பும் அதிகாரமும் குறைக்கப்படுகிறது; அந்தக் கற்பனை உலகம் எதார்த்தத்திற்கு மிக நெருக்கமாக இருக்கிறது. ஆண்களின் உலகத்தில் அவர்கள் தான் சிறந்தவர்கள். அறிந்தே நடக்கின்ற ஒரே பண்டமாற்றம் ஆண் பெண்களுக்கிடையில். அது ஒரு அடைக்கப் பட்ட உலகம், பெண்களுக்குப் புறக்கணிக்கப் பட்ட உலகம், பிற்போக்கான எல்லா நிர்வாண நிலைகளிலும் விடுதலையும் மாற்றமும் அற்ற உலகம்.

வாராவாரம் இதே விஷயங்களைத் தான் நாம் பார்க்கிறோம். பெண்களைப் பற்றியல்ல. அவர்கள் எவ்வாறு சித்தரிக்கப் படுகிறார்கள் என்பது பற்றி. அவர்கள் மாற்றமடைகிறார்கள். ஆனால் கொச்சை இலக்கியங்கள் அப்படியேதான் இருக்கின்றன. அயற்பால் கலவி இலக்கியங்கள் அவ்வகையே. இதற்கு எதிரான போர் என்பது ஒழுக்கத்திற்கு ஆதரவாக அல்ல. இதனைப் புரட்டிப் போடுவதுதான். ஏன் பெண்கள் சமப்பால் கலவியாளர்களாக இருக்ககூடாது, தம்மைத் தாமே ஏன் விரும்பக் கூடாது? ஆண் கலவியாளர்களைப் பாருங்கள். அவர்களுக்கு தமது ஆன்மீக விகசிப்புதான் அங்கே நடிக்கப் படுகிறது. அங்கே எதார்த்தம் இல்லை. ஒருவேளை ஆண் பெண் உலகங்களைப் பற்றி நமக்கு சிந்திக்க நேரம் இருக்குமானால் குறிப்பாக பாலுறவு பற்றி அங்கே சங்கேதங்களுக்கு இடமில்லை. ஆராய்ச்சி அற்ற வெறும் கேளிக்கை தான். அதிலும் நீங்கள் ஒரு கொச்சை இலக்கியப் படிப்பாளியாக இருந்தால் பெண்ணை அணுகுவதில் இன்னும் மோசமாக இருக்கிறீர்கள். அது எப்படிப்பட்டது என்றால் கிறுக்குப் பிடித்த பழைய பெண்ணியவாதிகள் கருதுவதைப் போல மேல் அலமாரி உறவுகளைப் பற்றியது அல்ல. அதிகாரத்தைப்பற்றியது.



தமிழாக்கம்

**ஆர். பால கிருஷ்ணன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆபாசக் கலையைத் தேடும் அகோரப்பசி

## Gluttons for Porn

Germaine Greer

ஜெர்மேய்ன் க்ரீயர்



*இக்கட்டுரை முற்றிலும் பெண்ணிலைவாத நிலையிலிருந்து சமூக - பொருளாதார - பண்பாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்பதால் முட்டுச்சந்தில் போய் நின்று விடுகிறது. ஆயினும் அமெரிக்க ஐரோப்பிய சீரழிவுப் பண்பாட்டைப் பற்றிய பல தகவல்களைத் தருவதால் பயனுள்ளதாய் இருக்கிறது.*

---

பொது நீரோட்டத்தில் ஆபாசக் கலையின் ஊடுறுவல், நமது தாராளவாதிகள் வாதிடுவது போல், கருத்துச் சுதந்திரத்தின் வெற்றி அல்ல. மாறாக, நமது பண்பாட்டில் கலந்துவிட்ட நஞ்சு. அதற்கான ரசனையை வளர்த்துக் கொள்வதன் மூலம் நமது அழிவை நாமே தேடிச் செல்கிறோம்.

இவ்வாண்டு, மார்ச் 5ம் தேதி, லோலோ ஃபெராரி ஒரு வழியாக மரணத்தைத் தழுவுவதில் வெற்றியடைந்தாள். ஆனால், லோலோ ஃபெராரி இணையதளத்தை தேடிச் செல்லும் 33,200 ரசிகர்களில் பெரும் பாலோருக்கு இச்செய்தியே தெரியாது. தெரிந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதும் இல்லை. அவளது சுய அழிவுப் பயணம் தொடங்கி வெகு நாட்களாகிறது. ஒரு நல்ல நடுத்தர வர்க்க, பிரிட்டன் குடும்பத்தில் பிறந்த அவளின் இயற்பெயர் ஈவ் வலோயிஸ். பதினாலு வயதான ஈவ் ஆண்களுடன் வெளியே கூடச் சுற்றியதில்லை. அப்பொழுது, தனது பழைய கார் விற்பனைத் தொழிலை மாற்றுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்த வியாபாரியின் பார்வை இவள் மேல் விழுந்தது. ஸ்வெங்காலியின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்ட டிரில்பி போல் அவனை உடனே திருமணம் செய்து கொண்டாள். திருமணம் முடிந்த கையோடு 'வசிகரப் படங்கள்' என்று பிரெஞ்சுக்காரர்களால் அழைக்கப்படும் கவர்ச்சிப் படங்களுக்கு 'போஸ்' கொடுக்குமாறு அனுப்பப்பட்டாள். மறுபுறம் அவனை ஆபாசப்பட சூப்பர் ஸ்டாராக மாற்றுவதற்காக, அவளது உடலை வடிவமைக்கும் பணியும் உடனே தொடங்கியது.

இருபத்தி இரண்டு அறுவை சிகிச்சைகளுக்குப் பின் அவளது மூக்கு, மைக்கேல் ஜாக்ஸன் மூக்கு போல மாற்றப்பட்டது. அத்தனை சிறிய மூக்கின் வழியாக அவளால் சரியாக மூச்சு விடவே இயலவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்கை எலும்புகள் பொருத்தி கன்னங்கள் உப்ப வைக்கப்பட்டன. திசுக்களை செயற்கையாக ஒட்ட வைத்து வாய் பெரிதாக்கப்பட்டது. இவற்றின் விளைவாக அவளால் தெளிவாகப் பேச இயலாமல் போனது. நுட்பமான அறுவைச் சிகிச்சைகள் மூலம் அவளது மார்பகங்கள் ஒவ்வொன்றும் 2.8 கிலோ எடையுள்ள மிகப்பெரிய மார்பகங்களாக மாற்றப்பட்டன. இவற்றின் எடையால் நெஞ்செலும்புகள் பலமாக நசுக்கப்பட்டதால் அவளது நுரையீரல்கள் தமது கால்பங்குத் திறனிலேயே செயல்பட்டன. நீங்கள் ஊகிப்பது போல் பால்மாறுபடுவோருக்கு அறுவை சிகிச்சை செய்வதில் புகழ்பெற்றவரும், சதை ஒட்டவைத்துத் தைப்பதில் நுட்பமான பொறியியல் திறமை பெற்றவருமான ஒரு நிபுணரால் அவளது மார்பகக் கூம்புகளை வடிவமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது.

தனக்கு மிக விருப்பமான வெளிர்சிவப்பு அலங்கார உடை அணிவிக்கப்பட்டு, வெண்மைநிறச் சவப்பெட்டியில், தனது பெருத்த மார்பகங்களுக்கு அடியில், கையில் கரடி பொம்மையுடன் புதைக்கப்பட வேண்டுமென்று லோலோ விரும்பினாள். அவளது இழப்பால் தான் சோகமாக இருப்பதாக விக்னே கூறினாலும், பொருளியல் ரீதியாக அவனை இது எவ்விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. அவள் இறக்கும் பொழுது அவளுக்கு வயது முப்பது. முட்டைக் கோஸ் சூப்பும், கோலாவும் மட்டுமே அவள் உண்டு வாழவேண்டியிருந்தது. மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை தினமும் சாப்பிட்டாக வேண்டும். வீட்டைவிட்டு வெளியேகூடச் செல்ல முடியாமல் அரைப்பைத்தியமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். ஆனால், அவள் கணவனுக்கோ "லோலோ 2000" மூலம் அவன் தொழிலுக்குப் போதுமான சரக்கு கைவசம் உள்ளது. அவளது படவங்கியின் மூலம் தன் வாழ்க்கை முழுவதற்கும் நிரந்தரமான கணிசமான வருமானத்திற்கு வகை செய்து கொண்டு விட்டான்.



ஆபாசப் படைப்புகள் பற்றிய பின்னைய தாராளவாதத்தின் அசட்டையான உடன்பாடு பிரச்சினையின் மையத்தைக் காணத் தவறி விட்டது. கருத்துச் சுதந்திரத்திற்கும், ஆபாசப் படங்களுக்கும் இடையே எந்த உறவும் இல்லை. அடிப்படையில் இது ஒரு தனிமனித அக்கறையற்ற, ஈவிரக்கமற்ற தொழில். அதற்கெனத் திட்டவட்டமான கோட்பாடுகள் உள்ளன:

அ) நிமிடந்தோறும் ஒரு நுகர்வாளன் பிறக்கிறான்.

ஆ) அந்தப் பிளந்தவாயனை ஓய்வெடுக்கவோ தப்பிச்செல்லவோ தப்பித் தவறியும் வாய்ப்பளித்து விடாதே.

சுரண்டப்படுவதும் மோசடிக்காளாவதும் இந்த ஆபாசங்களுக்கு உருவந்தரும் ஆண்கள் பெண்கள் மட்டுமல்ல; வீரியங்குறைந்துபோன நிலையில் காமக்கனவுகளால் பீடிக்கப்பட்டு இவற்றுக்குப் பணந்தந்து அனுபவிக்கும் (பெரும்பாலும் ஆண்களான) வாடிக்கையாளரும்தான். இத்தொழில் வளர்ச்சிக்கு இவர்களே அடிப்படை.

பொதுநீரோட்டப் படங்கள் மற்றும் பாலியல் அங்காடிகள் மூலம் விற்கப்படும் அப்பட்டமான வீடியோப் படங்கள் ஆகியவற்றை நெறிப்படுத்தும் புதிய வழிமுறைகள் உண்மையில் மேலும் அதிக ஆபாசங்களைச் சட்டரீதியாகக் காண்பதற்கே வகை செய்கின்றன. திரைப்படங்களில் உடலுறவுக் காட்சிகளைக் காட்டுவதற்கு இப்பொழுது கிட்டத்தட்ட தடைகளே இல்லை எனலாம். R-18 வீடியோப் படங்களில், ஆண்குறி, விரல், பாலியல் பொம்மை ஆகியவற்றை உள்ளே நுழைத்தல், விந்து வெளியேறுதல், வாய்வழிப் புணர்ச்சி, சுயஇன்பப் பூர்த்தி ஆகிய அனைத்தையும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மைக் காட்சிகளாகக் காட்ட சட்டப் பூர்வமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சட்டப்பூர்வம், சட்டவிரோதம் என்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடும் கிடையாது. மற்ற குற்றங்களைப் போலவே இதிலும் சட்ட விரோதம் என்றால், குறைந்த வேலைக்கு அதிகக்கூலி - அவ்வளவுதான். ஆபாசக் காட்சிகள் இனியும் மோசமாக முடியுமா? ஆம், முடியும். இனி அதிக தூரம் செல்ல முடியுமா? இல்லை, முடியாது. ஆனால், ஆண்களின் பாலியல் கற்பனைகளைப் பொறுத்தவரை அதிக தூரம் என்ற வரையறை எல்லாம் கிடையாது.

சட்டவிரோத ஆபாசப் படங்கள் வழி காட்டிகளாகச் செயல்படுகின்றன. அவை செல்லும் வழியிலேயே விரைவில் சட்டபூர்வ ஊடகங்களும் பின்தொடர்கின் றன. இல்லையெனில் லாபத்தில் பெரும் பங்கையும், முடிவில் தொழில் மொத்தத்தையுமே ஈவிரக்கமற்ற சட்டவிரோத சக்திகள் விழுங்கிவிடும். சட்ட விரோதப் படங்களுக்கு எந்தச் செலவும் இல்லாமலேயே ஊடகங் களில் பரபரப்பான விளம்பரங்கள் கிடைத்து விடுகின்றன. அத்தகைய விளம்பரத்தைப் பெறுவதற்கு பொதுநீரோட்டப் படங்களோ கோடிக்கணக்கில் செலவு செய்தாக வேண்டும். எனவே, மெல்ல மெல்ல பொதுநீரோட்டப் படங்களும் சட்டவிரோதப் படங்களின் வழியையே பின்பற்றப்போவது உறுதி. குழந்தைகள் எந்தக் காட்சிகளைக் காணலாம், அல்லது காணக்கூடாது என்பது பற்றிய விவாதங்களில் எத்தனை தீப்பொறிகள் பறந்தாலும், பெற்றோர்களின் தலைமுறை எத்தகைய காட்சிகளைக் காண விரும்பு கின்றனர் என்பதில்தான் பிரச்சனை அடங்கி யுள்ளது. கிராக்கி நிலவும் வரை அதை அளிப்பதற்கு ஆபாசத் தொழிற்சாலைகளும் ஆயத்தமாகவே இருக்கும். சிகரெட்டுகள் இருக்கும் வரை குழந்தைகள் அதைப் பிடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். கிளர்ச்சியூட்டும் பத்திரிக்கைகளையும், வீடியோப் படங்களை யும் தந்தைகள் இழுப்பறையில் மறைத்து வைத்திருக்கும் வரை குழந்தைகள் எப்படியும் அவற்றைப் பார்த்துக் கொண்டேதான் இருப்பார்கள். பெற்றோர்களும் குழந்தைகளும் வெவ்வேறு உலகங்களில் வாழ்ந்து கொண்டி ருப்பதாக நம்புவது ஆங்கிலேயர்களுக்கே உரித்தான மூடநம்பிக்கையாகும்.




வரலாற்றுரீதியாகவும், மொழியியல்ரீதி யாகவும் ஆபாச விவரிப்பு என்பதன் பொருள் விபச்சாரத்திற்கு விளம்பரம் செய்வதே. இது வக்கிரம் என்பதிலிருந்து வேறுபட்டது. காணக்கூடாததைக் காட்டுவதுதான் வக்கிரம். சில ஆபாசப் படங்களில் வக்கரிப்புகள் இருக்கலாம். ஆனால் எல்லா ஆபாசப் படங்களுமே வக்கிரங்கள் அல்ல. அதேபோல் வக்கரிப்புப் படங்களில் பெரும்பாலானவை துளியும் ஆபாசமற்றவை. இந்த வாரம் வெளியிடப்பட்ட ஜிம் கேரி நடித்த, "என், நான் மற்றும் இரீன்" திரைப்படத்தில் கதாநாயகன் தனது கால்சட் டையை அவிழ்த்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்காரனின் அழகிய புல்வெளியில் மலம் கழிக்கும் காட்சி காட்டப் படுகிறது. இது வக்கிரமே தவிர ஆபாசமல்ல. அதேபோல் கதாநாயகனின் தோழனாக வரும் 'தந்திரக்கார ஹேங்க்' குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் மார்புக் கச்சையிலிருந்து பிதுங்கி வெளியே வரும் மற்றொரு கனத்த மார்பகத்தை உறிஞ்சுவது போன்ற காட்சியும் வக்கிரமே தவிர ஆபாசமல்ல. ஆனால் கைக்குழந்தை ஆடையணிந்து தாய்ப்பால் ஊட்டப்பட்டால் தான் குறி விரைப்படையும் ரகத்தைச் சேர்ந்த ஆண்களில் நீங்களும் ஒருவராக இருந்தால் இது ஆபாசக் காட்சியாகத் தோன்றலாம்.

ஆபாசப் படங்களின் பெரும்பகுதி, இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களின் சிறப்புச் சந்தைக்காகவே குறிவைத்து உருவாக்கப் படுகிறது. பாலியல் கோணல்புத்தி இல்லாத வர்களிடம் இவை எந்தக் கிளர்ச்சியையும் ஏற்படுத்துவதில்லை. வழக்கத்திற்கு மாறான வை என்று கருதப்படும் சிறுபான்மை பாலியல்

www.tamilarangam.net

தெரிவுகள், துணை பாலியல் விருப்புக்கள் என்று அழைக்கப்படுகின்றன. தாராளமய சமுதாயம் இந்த துணை பாலியல் விருப்புக் களை மற்ற பாலியல் விருப்புக்களின் ஒரு அங்கம்தான் என்று நிறுவ முயன்றது. "எது உன் உணர்ச்சிகளைத் தூண்டுகிறதோ, அதைப் பெற உனக்கு உரிமை உண்டு'' என்பதே அப்பாவி அறுபதாம் ஆண்டுகளின் கருத்தாக இருந்தது. மனிதப் பாலியல் நடவடிக்கைகள் என்ற பெயரில் நெளியும் புழுக்களை மூடியைத் திறந்து பார்க்கும் வரை இக்கருத்து நிலவியது. ஒருவருக்கொருவர் இன்பம் தர விழையும் மக்களின் ஆசைகளை விடுதலை செய்வதாக அறுபதாம் ஆண்டு களின் பாலியல் சீர்திருத்தவாதிகள் நம்பினர். ஆனால் சிலருக்கு தங்களது மூளையையே அதிரவைக்கும் 'பேரின்பப் புணர்ச்சி' என்ற நிலையை அடைய வேண்டுமானால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதும் தவிர்க்க இயலாது. இந்த ரகத்தினரின் தேவையின் தீவிரத்தை பாலியல் சீர்திருத்தவாதிகள் எதிர்பார்த்திருக்கவில்லை.

"எது உன் உணர்ச்சிகளைத் தூண்டு கிறதோ, அதைப் பெற உனக்கு உரிமை உண்டு'' என்ற வாதத்தின் குறைபாடு என்னவென்றால், ஒருவரது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் விஷயம் அவரது துணையை யும் தூண்டிவிடும் என்று உறுதிகூற முடியாது. கைக்குழந்தை உடையணிந்து முலைப்பால் குடிக்கும் ரகத்தினருக்கு சேவை செய்யும் விலைமாதிற்கு இந்த முகம் மழிக்காத மனிதர்களுக்குப் பாலூட்டுவதால் எந்தத் தூண்டுதலும் ஏற்படப் போவதில்லை. ஆனால், தாராளமாகப் பணம் வழங்கப்பட்டால் மட்டுமே இந்தச் சேவையை செய்வதற்கு சந்தோசமாக உடன்படுகிறாள். (குறிப்பு - லோலோ என்றால் பிரெஞ்சுக் குழந்தைகளின் மொழியில் தாய்ப்பால் என்று பொருள்). துணைப்பாலியல் விருப்புக்கள் மிகச்சில பெண்களுக்கே தோன்றுகின்றன. பெண்களின் பாலியல் விருப்புக்கள் இன்னும் ஒடுக்கி வைக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமென் றும், பெண்கள் அதிகாரத்தில் பங்குகொள்ளத் தொடங்கி, தமக்கேயுரிய பாலியல் விருப்பு களையும் அடையாளம் காணத் தொடங்கி விட்டால் அவர்களும் விசித்திரமான பாலியல் சேவைகளைக் கேட்கத் தொடங்கி விடுவார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். உண்மை என்னவென்றால் தான் காதலிக்கும் நபருடன் 'நெருக்கம்' என்றழைக்கப்படும் நிலையை அடைய வேறெந்த வழியும் இல்லாதி ருப்பதாலேயே பெரும்பாலான பெண்கள் பாலியல் விளையாட்டுக்களில் பங்கேற்கின் றனர். உணவு, பொழுதுபோக்கு போன்ற சேவைத்துறையில் இருக்கும் மற்றவர்களைப் போலவே பாலியல் தொழிலில் ஈடுபடு வோரும் பணத்திற்காகவே அதில் ஈடுபடு கின்றர். பாலியல் தொழிலில் வாடிக்கையாளர் கையே ஓங்கியுள்ளது. இத்துறையில் வெற்றி பெறுவதற்கு தானும் இன்பமுறுவது போல் வெளிக்காட்டிக் கொள்ள வேண்டியுள்ளது. அது ஆண்குறிப் பொம்மையோடு வாய்வழிப் புணர்ச்சியாகினும் சரி, அல்லது பெறுபவரைச் சவுக்கால் அடிப்பதாயினும் சரி. ஆனால் இன்பமுறுவது போல் நடிப்பது தங்களது சேவையில் ஒரு பகுதி அல்ல என்றும் சில பாலியல் தொழிலாளர்கள் கருதுகின்றர். வாடிக்கையாளர் விருப்பம் போல் நடப்ப தோடு தங்களது பணிக்கு வரம்பிடுகின்றர். சுதந்திரமற்ற ஒரு சமுதாயத்தில் ஒருமித்த கருத்து என்பதெல்லாம் அதிகாரம் படைத்தவரின் குரலுக்கு அதிகாரமற்றவர் அடிபணிந்து செல்வதே ஆகும். பணம், அந்தஸ்து, ஆணாதிக்க அமைப்பு, மனிதா பிமான அக்கறையின்மை ஆகிய பல வடிவங்களில் அதிகாரம் வருகின்றது.

ஆசையே இல்லாத இடத்தில் ஆசையைத் தூண்டி, பசியே இல்லாத இடத்தில் பசியைத் தூண்டி இன்பத்தை விற்பனை செய்பவர் களுக்கு வேலையும் லாபமும் தரும் ஒரு சந்தையை உருவாக்குவதே ஆபாசக் கலையின் குறிக்கோளாகும்.

**தேவை இருக்கும் இடத்தில் செயற்கையான தேவைக்கு அவசியமில்லை.**


Greer





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் தேவைகளில்லாத இடங்களில் கவர்ச்சிகரமான காட்சிகள் மூலம் செயற்கையாக ஒரு தேவையை உருவாக்க வேண்டியுள்ளது. ரொட்டியும் வெண்ணெயும் கூட தேவைப்படாத பசியற்ற ஒருவனிடம்கூட சாக்லெட் உண்ணும் விருப்பத்தைத் தூண்டிவிட முடியும். அதற்கு, சாகெலெட்டை வெறும் உணவாக விளம்பரம் செய்யாமல் அதை ஒரு மிதத்தல் உணர்வாக, மாபெரும் இசையாக பாலியல் திருப்தியாக முன்வைக்க வேண்டும். உடல் எடையைக் கூட்டும் ஒரு சாதாரண உணவுப் பொருளான சாக்லெட்டை ஏதோ அருமருந்து போன்று விற்பனை செய்கின்றனர். ஆப்பிள் கேக்கிலிருந்து, பதப்படுத்தப்பட்ட பாலாடை வரை இன்று அனைத்து உணவு வகைகளையும் ஆரோக்கிய உணர்வைத் தருவதாக விளம்பரப்படுத்தி விற்கப்படுவதன் மூலம் போதைப் பழக்கமே ஆரோக்கிய உணர்வாகச் சித்தரிக்கப்படுகின்றது. வணிகரீதியாகத் தயாரிக்கப்படும் உணவுகள் அனைத்தும் போலி உணவுகளே. லேபிளில் எழுதியிருக்கும் பொருட்களால் உண்மையில் தயாரிக்கப்படுவதில்லை. சத்தற்ற உணவுகளை, சுவையூட்டும் பொருட்களோடு கலந்து, உப்பும் இனிப்பும் மிகையாகச் சேர்த்து ஒத்த இயற்பியல் தன்மையுடைய வேதிப்பொருட்களை மேலே தூவுவதன் மூலம் உண்மையான உணவைப் போன்ற தோற்றத்தையும் மணத்தையும் உருவாக்குகின்றனர். உங்களது பாலாடை தடவிய பேரிக்காய்த் துண்டுகள் உண்மையில் தாவரக் கொழுப்பும் சர்க்கரையும்தான். ஆனால் இவையிரண்டுமே லேபிளில் குறிப்பிடப்படுவதில்லை. வணிகமயமான துரித உடலுறவும் இதே போல் ஆசைக்கும், மறுஉற்பத்திக்கும் சம்பந்தமில்லாத போலி உறவுதான். உணவு விளம்பரங்கள் கற்பனை உணவுகளை விற்பனை செய்கின்றன. பாலியல் விளம்பரங்கள் கற்பனை உடலுறவை விற்பனை செய்கின்றன.



துரித உணவு மற்றும் சாக்லெட் விளம்பரங்களால் பசியுணர்வு என்பதே மறந்துபோய் விட்டது. சாப்பாட்டுக்கு முன் நல்ல பசியை வரவழைப்பது எவ்வாறு என்பதெல்லாம் இன்று எவருக்கும் தெரியாது. எல்லா உணவுகளுக்கும் சுவையூட்டும் குழம்பு பசிதான் என்பதையும் மறந்து விட்டோம். இதே போல் ஆபாசக் கலைகளால் ஆசைகளே இல்லாது போய்விட்டன. உணவு விற்பனை மயமானதால் நமது உண்ணும் பழக்கத்திற்கே கேடு விளைந்தது போல், உடலுறவும் விற்பனைமயமானதால் இதிலும் அதே விளைவு ஏற்படப் போகின்றது. இப்பொழுதே நாம் பாலியலில் வரம்புமீறி மேய்கிறோம் அல்லது பசியால் துடிக்கிறோம். உடலுறவு என்பதே இன்று வெறும் இடம் மாற்றும் நடவடிக்கையாக, ஆராதனையாக, வக்கிரமான கட்டாயமாக துளியும் பொருளற்றதாக ஆகிவிட்டது. பாலியலுக்கும், போதைப் பழக்கத்திற்கும் உள்ள ஒத்த தன்மைகள் இப்பொழுது நன்றாகத் தெரிகின்றன. ஒருவகை மருந்தைத் தவறாகப் பயன்படுத்தும் ஆல்கஹாலிக்கில் தொடங்கி ஒருவகை உணவை தவறாகப் பயன்படுத்தும் சாக்கோஹாலிக் ஆகி விட்டோம். போதை மருந்து அடிமையில் தொடங்கி இன்று பாலியல் உணர்வுக்கு அடிமையாகியுள்ளோம்.

துரித உணவும், துரித உடலுறவும் பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்காத ஒரு நிலை அண்மைக்காலம் வரை இருந்தது இன்னும் நினைவில் உள்ளது. நம் நாட்டில் இன்று இருப்பதைவிட குறைவான உணவும், குறைவான உடலுறவுமே அன்று இருந்தது. ஆயினும் உணவையும், உறவையும் அன்றைய மக்கள் நம்மைவிட நன்றாக அனுபவித்தனர் என்றே தோன்றுகின்றது. துன்பத்தைப் போலவே இன்பத்தையும் எண்ணிக்கையால் அளக்க முடியாது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உருளைக் கிழங்குகள் இன்று இருப்பதைவிடச் சுவையாக இருந்தது என்று எவ்வாறு நிரூபிக்க இயலாதோ, அதே போல் 1950களைவிட 2000த்தில் நாம் எண்ணிக்கையில் மிகுந்த, ஆனால் தரத்தில் குறைந்த

www.tamilarangam.net

உடலுறவைப் பெற்றுள்ளோம் என்று நிரூபிக்க இயலாது. ஆனால், ஒரு பொருள் அரிதாக இருப்பதற்கும், அதனால் விளையும் இன்பத்திற்கும் இடையே மனித மனத்தில் ஒரு வேடிக்கையான, சிக்கலான தொடர்பு உள்ளது. உடலுறவின் உச்சகட்டத் திருப்தியை ஒரு சில நிமிடங்களுக்கு மேல் நீடித்தால் திருப்தி குறையத் தொடங்கிவிடுகிறது. வழக்கமான உடலுறவு அவ்வளவே. ஷாம்பெய்ன் மதுவை நீங்கள் தினமும் அருந்தினால் நீங்கள் அதிக இன்பம் அடைவீர்களா, இல்லை, ஆண்டில் சிலமுறை மட்டுமே அருந்தினால் அதிக இன்பம் அடைவீர்களா? மிதமிஞ்சி அருந்தினால் நாம் எதிர்பார்த்த சுவை கிடைக்காமல் மற்றவர்கள் சொல்வது போல் இது ஒன்றும் சிறப்பாக இல்லையே என்று எண்ணுவோம். இன்பத்தை அனுபவிக்கும் நியதி கள் புத்திசாலித்தனமாக நிர்வகிக்கப்பட வேண்டும். ஷாம்பெய்னிலிருந்து நாம் என்ன எதிர்பார்க்கலாம்? மோசமான ஷாம்பெய்னிலிருந்து, நல்ல ஷாம்பெய்னை எவ்வாறு அடையாளம் காண்பது? எப்பொழுது, எங்கு, எந்த வேகத்தில் அதனை அருந்துவது என்பதையெல்லாம் நாம் அறிந்திருக்க வேண்டும்.




பாலியல் உறவோ ஷாம்பெய்னைவிடப் பலமடங்கு சிக்கலானது. தனித்தல்லாமல் இருவரோ அல்லது இரண்டிற்கும் மேற்பட்டோரோ பங்கேற்கும் பட்சத்தில், மதுவைவிட உடலுறவு மிக மிகச் சிக்கலானது. ஒரு மதுப்பிரியர் தன் மதுவை ரசிப்பதற்கு தொடர்ந்த சோதனைகள் மூலமாக மட்டுமன்றி, படித்தும் தெரிந்துகொள்ள வேண்டும். அதே போல் பாலியல் இன்பத்தை நுகரும் வழிகளைச் சொல்லும் ஆபாசக் கலையை ஒரு தகவல்முறையாக ஏன் கருதக்கூடாது என்று தோன்றலாம். ஆனால் இரண்டுக்கும் பல முக்கிய வேறுபாடுகள் உள்ளன. மதுவைப் பற்றிப் படிப்பதாலேயே ஒருவருக்கு போதையோ, கிளர்ச்சியோ ஏற்படுவதில்லை. அந்தத் திருப்தி பின்னால் தான் கிடைக்கும். ஏனெனில் யாரும் மதுவைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கும் போதே மது அருந்திக் கொண்டிருப்பதில்லை. மேலும் மதுவைப் பற்றிப் படித்தால்தான் மது அருந்தும் ஆசை வரும் என்ற கட்டாயமும் இல்லை. ஆனால் பாலுறவுக் காட்சிகளை வீடியோவில் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தாங்களும் உடலுறவில் ஈடுபடுகின்றனர். உடலுறவுக் காட்சிகள் பார்வையாளர்களின் உடலுறவு உறுப்புக்களைத் தூண்டிவிடுவதோடு, மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, உடனடியாக வடிகால் தேடுமாறு கட்டாயப் படுத்துகின்றன. தனியாகவோ, கூட்டாகவோ ஈடுபடும் துரித உடலுறவு ஆபாசப் படங்களால் தான் சாத்தியமாகிறது. ஆபாசக் கலையின் அதிகரிப்பும் உருளைக் கிழங்குத் துருவலின் அதிகரிப்பைப் போன்றது. இன்று பல்பொருள் அங்காடிகளின் ஒரு முழு வரிசையின் இரண்டு புறங்களிலும் உருளைக் கிழங்குத் துருவல் பாக்கெட்டுகளே அடுக்கி வைக்கப் பட்டுள்ளன. முன்பு துருவல் பாக்கெட்டுக் குள் உப்பு இருக்கும் சிறிய பாக்கெட்டைத் தேடி எடுப்போம். இன்று உப்பு, காரம் எல்லாம் தூவி ஆயத்தமாக பாக்கெட்டில் அடைக்கப் படுவது மட்டுமல்ல, வேதிப் பொருட்களைத் தெளிப்பதன் மூலம் எந்த மணத்தை வேண்டுமானாலும் துருவலில் கொண்டுவர முடிகிறது. இப்பொழுது துருவல்கள் எரால் மீன்கலவை, வாட்டிய பன்றிக்கறி, மூக்கைத் துளைக்கும் வோர்செஸ்டர் குழம்பு, புடம் போட்ட பன்றியின் தொடைக்கறி, பாலாடை, கீரை, வெங்காயம் கலந்த புளிப்பான கிரீம், எலுமிச்சை கலந்த கடல்நண்டு என்று எண்ணற்ற வாசனைகளுடன் வருகின்றன. இறுதியாக விந்துவின் வாசனையுடன் தயாரிக்கப்படும் காலமும் வந்துவிடும் என்றே தோன்றுகிறது. உடலுக்கு ஊட்டம் தராமல் கொழுப்பை மட்டும் கூட்டும் உணவிற்கு துருவல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கற்பனை உடலுறவும், கற்பனை உணவைப் போல் நுகர்வோர் முழுத்திருப்தி அடைந்துவிடாமல் இருக்குமாறு வடிவமைக்கப்படுகிறது.

வீடியோவிலும், திரைப்படங்களிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் எவற்றைக் காணலாம் அல்லது காணக் கூடாது என்பதைப் பற்றிய விவாதங்களுக்கும் ஆபாசக் கலைக்கும் தொடர்பே இல்லை எனலாம். மாறாக, குறைந்து கொண்டே வரும் நமது அதிர்ச்சி மட்டத்தோடு இவ்விவா தங்களுக்கு தொடர்பு உண்டு. மற்ற ஊடகங்களில் காணப்படும் காட்சிகளின் அடிப்படையிலேயே வீடியோ, திரைப்படம் ஆகியவற்றில் எதைக் காட்டலாம் என தணிக்கை அதிகாரிகள் முடிவு செய்கின்றனர். மற்ற ஊடகங்களைவிட சற்றுக் குறைவான மட்டங்களில் வீடியோவும் திரைப்படமும் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. (ஆயினும் இணையதளத்திற்குச் சமமாக இவை இரண்டும் வந்துவிடுவது மிதமிஞ்சியதாகிவிடும். அதற் கான காலம் இன்னும் கனியவில்லை என்று கருதுகின்றனர்). கிட்டத்தட்ட கடந்த எழுபது ஆண்டுகளாக மேலும் அதிகமாகக் காட்டும் நிலையிலேயே வளர்ந்து கொண்டிருக்கிறோம். இனியும் தாங்க முடியாமல் நாட்டின் வயிறு விரைவில் குமட்டலெடுக்கப் போகிறது. நாய்ச்சண்டை, சேவல் சண்டை, ஓரினப் புணர்ச்சியாளர் குளிப்பறைகள், பாலியல் கருவிகள் விற்பனைக் கடைகள் ஆகிய வற்றுக்கு எதிர்ப்பலைகள் கிளம்பத் தொடங்கியுள்ளன. புத்தகங்களை எரித்தல், மாறுபடுபவர்களைச் சிறையில் அடைத்தல், பெண்களுக்கு முக்காடிடுதல், ஆண்களுக்கு தலையை மழித்தல் ஆகியவையும் தொடங்கி விட்டன. தலிபான் ஒரு புதிய நடைமுறை அன்று. நாம் விரும்புவதெல்லாம் குரூரமற்ற அமைதியான புரட்சி. மிருகத்தனமான, மிகையான காட்சிகளைக் காணச் சகிக்காமல் மக்கள் அவற்றைப் புறக்கணிக்கத் தொடங் குவதன் மூலம் அதன் தயாரிப்பாளர்கள் பேரளவில் பொருள் இழப்பு அடையத் தொடங்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு நடப்பதற்கான அறிகுறி எதுவும் இதுவரை கண்ணில் படவில்லை. கற்பனை உடலுறவுகளும், உடலுறவுச் சேவைகளும் அதிர்ச்சி தரும் அளவில் வளர்ந்து கொண்டுதான் உள்ளன. 'லோலோ' பெராரியின் சிறப்பம்சமான "மாபெரும் மார்பகங்கள்" இன்று உலக இணையத்தளத்தில் சுமார் 8,80,000 தளங்களைப் பிடித்துள்ளது. ஆனால், "இளம் சிறுவர்கள்" தலைப்பின் கீழ் தேடிப் பார்த்தால் சுமார் 20,00,000 தொடர்புகள் உங்களுக்குக் கிடைக்கலாம். பூதாகரமாக வளர்ந்துவிட்ட இந்தத் தொழிலை அடியோடு அழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் புலப்படுகிறது. பணம் கட்டிப் பார்க்க வேண்டிய தளங்களிலிருந்து திருட்டுத்தனமாகக் காப்பி எடுத்து ஆபாசப் படங்கள் இலவசத் தளங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் ஆபாசப் படத் தயாரிப்பாளர்களின் லாபங்கள் பேரளவில் வற்றிப் போகின்றன. ஆனால் இது நடந்தேறுவதற்குள் நம்மிடம் கலாச்சாரம் என்று பெருமையடித்துக் கொள்வதற்குக்கூட ஆபாசக் கலாச்சாரத்தைத் தவிர வேறெதுவும் மிஞ்சாது போலிருக்கிறது.

இன்று நமது இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், மேடை நாடகங்கள், இசைத் துறை, நுண்கலைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் கூட ஆபாசக் கலை நமது பண்பாட்டுத் துறையில் பிடித்துள்ள இடத்தில் சிறுபகுதியைக் கூட பிடிக்கவில்லை எனலாம்.

---



*த கார்டியன்*
*செப்டம்பர் 24*
*2000*

---

www.tamilarangam.net

ஒரு முதியவரின் மரணம்
ஒரு நூலகம் எரிந்ததற்குச் சமன்

- ஆபிரிக்க பழமொழி



# இலங்கையின் பூர்விக குடிகள்

## வேடர் : வன்னியால-அத்தோ

ராகவன்

1

இயற்கையுடன் வாழ்ந்து, இயற்கையைச் சுரண்டாமல் அதனை நேசித்து, மதித்து, வணங்கி அதனின்று தமக்குத் தேவையான வற்றைப் பெற்று பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கைச் சமநிலையைப் பேணி வந்த மக்கள் இன்று ஏகாதிபத்திய, உள்ளூர் சுரண்டலின் கொடூரத்தால் அழிந்து வருகின்றனர். தம் வாழ்வு முறைமையை, தம் மொழியை, தம் கலாச்சார மற்றும் அறிவுச் சேகரிப்புகளை மட்டுமல்லாமல் தாம் உயிர் வாழும் உரிமையையும் இழந்து நிற்கின்றனர். நாகரீகமடைந்தோர் எனப்படுபவர் அழிவின் விளிம்பில் நின்றுகொண்டு இயற்கை பற்றிச் சிந்திப்பதை இவர்களோ தமது வாழ்நெறி யாகக் கொண்டுள்ளனர்.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் இன அழிப்பின் போது அவுஸ்திரேலிய, வட-தென் அமெரிக்க கண்டங்களில் பல்லாயிரம் பூர்விக குடிமக்கள் முற்றாக அழிக்கப்பட்டோ, சிதைக்கப்பட்டோ உள்ளனர். அவுஸ்திரேலியா வில் 1788ல் பேசப்பட்டு வந்த 250 பழங்குடி மொழிகளில் இன்று 20 மொழிகளே எஞ்சியுள்ளன (Geo2 : 2001). 1900களில் 270 வகையான பழங்குடிகள் இருந்த பிரேசிலில் இன்று மூன்றில் ஒரு பங்கினர் அழிந்து விட்டனர். மேலும் மூன்றிலொரு பங்கினர் 1000த்திற்கும் உட்பட்ட எண்ணிக்கை உடையவராக உள்ளனர் (Time, 23.30.1991).

2

*''நான் இந்தக் காட்டினில் பிறந்தேன். எனது மூதாதையர்கள் இங்கிருந்தே வந்தனர். நாமே வனவாசிகள். நானிங்கு வாழ்வதற்கும் சாவதற்கும் விரும்புகின்றேன். மறுபடி நானொரு ஈயாகவோ, எறும்பாகவோ பிறந்தாலும்கூட நான் இக்காட்டில்தான் மறுபடி வாழ்வேன் என்பது தெரியுமென்றால் நான் மிகவும் சந்தோசமடைவேன்''.*

- உருவாறிக திஸ்ஸகாமி.

இந்த மனிதர் தாம் வாழும் காட்டினை எவ்வளவு நேசித்தார் என்பது தெரிகிறது. இம்முதியவர் தனது 97வது வயதில் இறக்கும் போது இவர்கள் வாழ்ந்த காடு இவர்களிடம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கவில்லை என்பதே துயரமான உண்மை யாகும். அரசுப் படைகளாலும், குண்டர் களாலும் தமிழ் மக்கள் மீதான இனப்படு கொலை நடாத்தப்பட்ட அதே 1983ம் ஆண்டு நவம்பர் திகதி இலங்கை மண்ணில் எஞ்சி யிருந்த வேடர்களின் பூமியானது மதுறுஓயா தேசிய வனம் என அறிவிக்கப்பட்டது. அங்கு நுழைவதற்கு எவருக்கும் உரிமையில்லை. அனுமதியுடன் பார்க்க வருபவர்கள் மட்டுமே உள்ளே நுழையலாம். ஒரு விலங்கை வேட்டையாடவோ, எடுத்தச் செல்லவோ அல்லது எத்தாவரத்தையும் சேதப்படுத்தவோ, அழிக்கவோ தடை விதிக்கப்பட்டது. இம் மண்ணின் புதல்வியரும் புதல்வர்களும் குழந்தைகளும் ஒரே இரவில் அரசினால் அநாதைகள் ஆக்கப்பட்டனர். உல்லாசப் பிரயாணிகளுக்கு மட்டும் காடுகள் திறந்துவிடப்பட்டன.

எந்த மக்கள் இக்காட்டினுள் இந்தத் தாவரங்கள், மரங்கள், செடிகொடிகள், விலங்குகள், பறவைகள், நீர், நிலம் என பல ஆயிரக்கணக்கான வருடங்களாக இயற்கைச் சமநிலையை, உயிர் பன்முகத் தன்மையை (biodiversity) பேணி வந்தார்களோ, அவர்கள் தம் காட்டிலிருந்து ஒரே நாளில் - எவர் இயற்கையை அழித்தனரோ, எவர் அரிய பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என அழித்தொழித்தனரோ - அவர்களால் தூக்கி யெறியப்பட்டனர். இதுவே இலங்கையின் பூர்விக குடிகளின் வரலாறாகும்.

3

*"லாலா நாட்டிலிருந்து விஜயனும் அவனது 700 நண்பர்களும் புத்தர் நிர்வாணம் அடைந்த தினத்தன்று இலங்கையை வந்தடைந்தனர். விஜயன் அங்கிருந்த இயக்கர் அரசியான குவேனியை மணந்து வாழ்ந்து வந்தான். பின்பு பாண்டி நாட்டிலிருந்து பெண் எடுத்து மறுமணம் செய்தான்..."*

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலங்கை பௌத்த வரலாற்று நூலான *மகாவம்சம்*, விஜயன் இந்தியாவிலிருந்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வந்ததாகவும், அவன் இலங்கையில் காலடி எடுத்து வைத்த தினத்தி லேயே புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததாகவும் கதையாடல் செய்கிறது. இதற்கு அந்நேரத்தில் நிலவிய வரலாற்று அழுத்தங்கள், இந்து சமயத்தின் மீள்வரவு, தமிழர் படையெடுப்புகள் என்பன காரணங்களாக இருக்கலாம். எனி னும் சிங்களவரின் மூதாதையரான விஜயன் இலங்கைக்கு வந்தபோது, இலங்கையில் ஏற்கெனவே இயக்கர், நாகர் எனும் குடிகள் இருந்ததாகக் கூறுவது முக்கியமானது. அத்து டன் இயக்கர் அரசியான குவேனியை விஜயன் முதல்மணம் செய்ததாகக் கூறுவதும் கவனிக் கத்தக்கது. *மகாவம்சம்* இங்கு மக்கள் ஏற்கெ னவே வாழ்ந்து வந்ததை ஏற்றுக்கொள்கிறது. இலங்கையில் சிங்களவர், தமிழர் மத்தியில் வேடர் என வழங்கப்படும் இலங்கையின் பூர்விக குடிகள் தம்மை Wanniyala-aetto (வனவாசிகள்) என அழைத்துக் கொள்கின்றர். சிங்களவர் தமிழர் மத்தியில் வேடர் எனப்படு பவர், நாகரீக வாழ்வில் தாழ்ந்தோர், சுத்த மில்லாதவர் எனும் கருத்தாக்கமே உள்ளது.

Vana என்பது சமஸ்கிருதத்தில் காடு (வனம்) Aetto என்பது வசிப்பவர். Van(y)a-la-aetto என்பது வனத்தில் வசிப்போர் எனப் பொருள் தருவதாக சுகந்தபால டி சில்வா (Suganthabala de Silva, 1972:27) கூறுகிறார். எனவே வனவாசிகள் எனும் சொல் இம் மக்களின் ஆளுமையைப் பிரதிபலிப்பதாகவே இக்கட்டுரையில் பாவிக்கப்படுகிறது.

கி.பி.5 ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த பௌத்தத் துறவியான பாஹியான் (Fa Hiyan) இலங்கைத் தீவில் இராட்சதர்கள் (demons & dragons) வாழ்ந்து வந்ததாகவும் இவர் கள் அயல்நாடுகளிலிருந்து வந்த வியாபாரி களுடன் பண்டமாற்று வியாபாரம் செய்ததாக வும் தமது பயணக்குறிப்பில் குறிப்பிடுகிறார். இவர்கள் வரலாறு பற்றி மேலதிக எழுத்து ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

## தொல்லியல் ஆதாரங்கள்

இவர்கள் மூக்கையும் தலையையும்

www.tamilarangam.net

உடலமைப்பையும் பார்த்து அளந்த மேலை நாட்டு இனவியலாளர் இவர்களை, 1) ஆபிரிக்க அல்லது 2) அவுஸ்ராலொயிட் (அவுஸ்திரேலியப் பழங்குடியினர்) அல்லது 3) மத்தியத்தரைக்கடல் மனிதர்களின் வழித் தோன்றல்கள் எனக் குழம்பியவாறு உள்ளனர். ஆனால் இவர்களை அவ்வாறு வகைப்படுத்தி விட முடியாது என்பதே உண்மையென்றும் அதற்கு விடையும் கிடைக்காது என்றும் மானிடவியலாளரும் அகழ்வாராய்ச்சியாளருமான டாக்டர் நந்ததேவா விஜேசேகரா கூறுவார்.

இன்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தியாவையும் இலங்கையையும் இணைத்தவாறு நிலத்தொடர்பு (பாக்கு நீரிணை) இருந்ததாகத் தெரிகிறது. இவ்வழியே பழைய கற்கால மனிதர் இலங்கைக்குள் வந்து சேர்ந்தனர். யால மற்றும் மாங்குளத்தை யண்டிய பிரதேசங்களில் 2,50,000 வருடங்கள் தொடங்கி 5,00,000 வருடங்களுக்கு முந்தைய பழைய கற்கால மனிதர்கள் கூடி வாழ்ந்த தற்கான தடயங்கள் (அவர்கள் பாவித்த கல்கருவிகள் போன்றன) கிடைத்துள்ளன.



இந்தியாவில் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னமே பழைய கற்கால மனிதர் வாழ்ந்த தடயங்கள் உள்ளன.

பாஹியான் குகையில் கண்டெடுக்கப் பட்ட மனித எலும்புக்கூடுகள் கி.மு. 30 ஆயிரம் வருடங்கள் பழையன. இவை தென்னாசியா வில் கண்டெடுக்கப்பட்டுள்ள தற்கால மனிதனின் எலும்புக்கூடுகளில் பழமையானது. மேலும் பரடொம்பா (Batadomba) குகையில் கி.மு.14 ஆயிரம் வருடங்கள், கித்துள்கலபெலி (Kitulgala Beli) குகையில் கி.மு. 11,000 வருடங்கள், பெலன்பண்டி பலஸ்ஸா (Bellan-Bandi Palassa) இல் கி.மு. 4,500 வருடங்கள் பழமையானதுமான மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் உருவ ஒற்றுமையானது, ஒரே மாதிரியான மனிதர் தொடர்ந்து வாழ்ந்து வந்ததைக் காட்டி நிற்கிறது.

கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தான் சிங்கள, தமிழ் மூதாதையின் குடியேற்றம் தொடங்கியது. தம் வாழ்க்கைப் போராட்டத் தில் ஆதிக்க சமூகங்களுடன் (சிங்கள - தமிழ்) வனவாசிகள் கலந்து, கரைந்து போனது நடந்து வந்துள்ளது. ‘வேடர்களும்’ சிங்கள வரும் அதிகம் மணம் புரிந்ததாக R.L.Spittel (*Wild Ceylon*, 1924) கருதுகிறார். டாக்டர் செனரத் பரணவிதான (*Inscriptions of Ceylon*, 1970) ஊர்களின் பெயர்கள் பற்றிய ஆய்வில், சிங்களவரும் ‘வேடரும்’ சேர்ந்து ஒரே மக்களாகியதாகக் கூறுகிறார். இரத்தின புரியில் Veddha-Gala (வேட கால) Veddha-Ela (வேட எலா) Vedi-Kanda (வேடி கண்டா) எனும் பெயரிலமைந்த ஊர்கள் வனவாசிகள் இருந்ததைச் சுட்டி நிற்பதாக அறிஞர் நந்ததேவா விஜேசேகரா குறிப்பிடுகிறார். மற்றும் கதிர்காமத்தில் பெரஹெராவின் போது முருகன் வள்ளியை மணமுடிக்க வரும்போது தடுக்கும் சடங்கை இன்றும் வனவாசிகள் செய்து வருவதானது நீண்ட வரலாற்றுத் தொடர்பைக் காட்டி நிற்கிறது.

4

***வாழ்க்கை முறை***

இவர்கள் வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல், சேனைப் பயிர்ச்செய்கை மூலம் தமது உணவைத் தேடிக் கொள்கின்றனர்.

வேட்டையாடுவது பெரும்பாலும் ஆண் விலங்குகளையே. பெண் விலங்குகளாயின் கருத்தரிக்காத, குட்டிகளில்லாத விலங்கு களையே வேட்டையாடுவர். முயல், காட்டுப் பன்றி, மான், குரங்கு, அணில், உடும்பு போன்ற

www.tamilarangam.net

விலங்குகளை வேட்டையாடுவர். வேட்டையாடிய விலங்கை தமது குடும்பம், குழுவினருடன் பகிர்ந்து கொள்வர். வில்லும் அம்புமே இவர்களது வேட்டைக் கருவிகள். அத்துடன் கோடரியும் வைத்திருப்பர். தற்போது குழல் துப்பாக்கி (Shotgun) பயன்படுத்துகின்றர்.

தேன் மற்றும் பழங்கள், கிழங்குகள், மூலிகைகள் இவர்களது சடங்கின் போது புகைபோடத் தேவையான ஒருவகைப் பிசின், பீடியிலை என்பவற்றைச் சேகரிக்கின்றனர். தேன் அடை முற்றாக நிரம்பாமல் இருந்தால் மீண்டும் பொந்தினுள் வைத்துவிடுவர். மூலிகைகளை அறிந்து பயன்படுத்துகின்றனர். சில செடிகள் காட்டு ஆவிகளின் கோபத்துக்கு ஆளாவர் என பிடுங்குவதில்லை. ஆண்கள் வேட்டையிலும், ஆண்களும் செய்தாலும் பெண்களே அதிகம் உணவுச் சேகரிப்பிலும் ஈடுபடுகின்றர்.

சேனைப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயம் சிறு அளவில் செய்கின்றனர். ஒரு சிறு



பகுதி காட்டைத் துப்புரவாக்கி எரித்துவிட்டு அந்நிலத்தில் குரக்கன், நெல், சோளம் போன்ற தானியங்களுடன் மரவள்ளி, வள்ளிக் கிழங்கு, மிளகாய் போன்றவற்றையும் பயிரிடுகின்றனர். இரண்டு வருடங்கள் வரை அந்நிலத்தைப் பயன்படுத்திப் பின் அப்படியே 10-15 வருடங்கள் செடிகள் வளர விட்டுவிடுவர். இச்சசேனைப் பயிர்ச்செய்கை மூலம் பசளை, கிருமிநாசினி இல்லாமல் நல்ல விளைச்சலைப் பெறமுடியாது. நிலமும் சேதமடைவதில்லை.

### சடங்குகள்

வெவ்வேறு வகையான குழுக்களிடம் வெவ்வேறு சடங்கு முறைகள் உள்ளன. பொதுவாக இவர்களிடம் இறந்த தமது மூதாதையரின் ஆவியை (யக்கா) வணங்கும் முறை உள்ளது. தமக்கு இதுவரை கிடைத்த பொருட்களுக்கு நன்றி சொல்வதுடன் இனிவரும் காலமும் கிடைக்கச் செய்யுமாறும் மற்றும் அவர்களின் ஆலோசனைகளையும் வேண்டி நிற்பர். நடனம் ஆடிக் கொண்டிருக்கும் போது மெய் மறந்த நிலையை அடையும் ஒருவரின் உடலுள் புகும் மூதாதையரின் ஆவியானது அவர்களுக்கு அலோசனைகள், கட்டளைகளைச் சொல்கிறது.

### உறவு

மணம் செய்ய விரும்பும் பெண் தான் விரும்பும் ஆணை, தான் மரப்பட்டை நார் கொண்டு பின்னிய கயிற்றை அவனது இடுப்பில் கட்டிவிடுவதுடன் அவர்கள் உறவு ஆரம்பமாகிறது. ஆண் இறந்தால் அவனின் சகோதரனின் மணம் முடிப்பர். விதவை முறை இல்லை. அவர்களின் குடும்ப அல்லது இடப் பெயரானது தாய்வழியாகவே பிள்ளைக்குப் போகின்றது. தாய்வழிச் சமூகமாகவே இது இருக்கிறது. ஆனால் பெரும்பாலானோர் சிங்கள மற்றும் தமிழ் வாழ்வுமுறையைப் பின்பற்ற வேண்டியிருப்பதால் இம்முறை அருகி வருகிறது.

### வாழிடம்

ஊவா மாகாணத்தில் மத்தியமலை நாட்டிற்குக் கிழக்காகவும் கிழக்கு மாகாணத்தை எல்லையாகவும் கொண்ட வனமே இவர்களின் எஞ்சிய நிலமாக உள்ளது. இப்பகுதி மரங்கள் நிறைந்த, ஆறுகள் ஓடும் பசுமையான வெப்பவலய வனப்பிரதேசமாகும். முன்னைய காலங்களில் குகைகளில் வாழ்ந்தாலும் தற்போது குடிசைகளில் வாழ்கின்றனர். குடும்ப உறவுகள் சேர்ந்த குழுக்களாகவே வாழ்கின்றனர். தம்பனையில் (மகியங்கனை, மகா ஓயா அருகில்) இவர்களின் கடைசிக் கலாச்சாரம் எஞ்சியுள்ளது.

### மொழி

இவர்களின் சொந்த மொழி பெரும்பாலும் அழிந்தும் சிங்கள மொழிச் சொற்களே அதிகம் கலந்தும் உள்ளன. இன்றும்கூட இவர்களின் பேச்சில் பழைய

www.tamilarangam.net


கதிர்காமத்தில் வன்னியால அத்தோ

மொழியின் சொற்றொடர்கள் (Phrases) பாவனையில் உள்ளன. மொழி பற்றிய ஆய்வுகள் இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளன.

5

### வனவாசிகள் சனத்தொகை

| | | |
|---|---|---|
| 1921 | - | 4510 |
| 1946 | - | 2361 |

1963 இலிருந்து தனியாக கணக்கெடுப்புகள் இல்லை.

### அபிவிருத்தித் திட்டங்களும் வனவாசிகள் அழிவும்

இலங்கை சுதந்திரமடைந்த பின் 1950 ஆரம்பங்களில் பின்தங்கியோர் அபிவிருத்திச் சபையின் பிரிவான வேடர் சமூக நலவாழ்வுக் குழுவானது இவர்களை 'நாகரீக மனிதர்களாக்கி' நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டது. இவர்களை நிரந்தரமாகக் குடியேற்றுவது, கல்வி வழங்குவது, விவசாயிகளாக்குவது என இவர்கள் கலாச்சார நீக்கம் செய்யப்பட்டு சிங்கள, பௌத்தமயமாக்குதலே நடைபெற்றது. 1955 இல் உலகவங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய அணைத் திட்டமான கல்லோயத் திட்டம் மூலம் இவர்கள் பெருந்தொகையாக வெளியேற்றப்பட்டு, வேறு இடங்களில் குடியமர்த்தியபோது இவர்களின் வளமான வேட்டை, உணவுச் சேகரிப்பு நிலங்கள் பறிபோயின.

அதனையடுத்து, 1977 இல் இங்கிலாந்து, கனடா, மேற்கு ஜெர்மனி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இலங்கையிலேயே மேற்கொள்ளப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டமாகும். இதன் மூலம் புதிய மின் உற்பத்தி நிலைகள், கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டன. 11,000 ஹெக்டர் காடுகள் அழிக்கப்பட்டன. மதுறுஓயா ஆற்றின் வடக்கேயுள்ள பகுதி 'System B' எனவும், தென்மேற்குப் பகுதி 'System C' எனவும் பெயரிடப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு விவசாய, குடியேற்ற நிலங்களாக மாற்றப்பட்டன. 1,40,000 குடும்பங்கள் இங்கே குடியேற்றப்பட்டன. வனவாசிகள் பற்றியோ, சுற்றுச்சூழல் பற்றியோ எந்தவிதமான அக்கறையுமின்றி இவைகள் மேற்கொள்ளப் பட்டன.

### மதுறுஓயா தேசிய வனம்

இவை எல்லாவற்றினதும் உச்சகட்டமாக உலக வனவிலங்கு நிதியம் (WWF), உலக சூழல் பாதுகாப்பு அமைப்பு (IUCN), ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டம் என்பவற்றின் ஆதரவுடன், அமெரிக்க அபிவிருத்தி நிறுவனத்தின் (USAID) நிதி உதவியுடனும் ஆரம்பிக்கப்பட்ட மதுறுஓயா தேசிய வனமானது வனவாசிகளின் எஞ்சியிருந்த இறுதி நிலத்தையும் பறித்துக் கொண்டது. 1987 நவம்பர் 9 ம் திகதி முதல் எவரும் உத்தரவின்றி உள்ளே நுழைய முடியாதென்றும் வேட்டை மற்றும் உணவுச் சேகரிப்பில் ஈடுபட முடியாதென்றும் தடை விதித்தது அரசு. காவலரண்கள் அமைக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டு வனக்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். வாழ்வுமுறை துண்டிக்கப்பட்ட வனவாசிகள் பலர், பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர். தற்போதைய போர்ச் சூழ்நிலையில் பொலநறுவையில் குடியமர்த் தப்பட்ட பலர் மற்றைய இடங்களில் குடியமர்த் தப்பட்டவரோடு தொடர்பு கொள்ள முடியாத படி தடுக்கப்பட்டுள்ளனர். உல்லாசப் பயணி களுக்கு மட்டும் மதுறுஓயா தேசிய வனமானது திறந்துவிடப்பட்டுள்ளது.

### வனவாசிகளின் எதிர்ப்பு

தமது மூதாதையரின் நாட்டி லிருந்து வெளியேறுவதற்கு உருவாறிக திஸ்ஸகாமியின் குழுவினர் மறுத்தனர். அரசாங்க அதிகாரிகள் எவ்வளவோ பேசிப்பார்த்தும் வேறு இடங்களில் குடியேற அவர்கள் இணங்காததால், அவர் வாழும் மட்டும் அவரும், அவரின் குழுவினரும் தொடர்ந்து அங்கிருக்க அனுமதித்தனர். இன்று இறந்துபோய்விட்ட திஸ்ஸகாமியானவர் வனவாசிகளின் வாழ்வின், ஆளுமையின், எதிர்ப்பின் குறியீடாக உள்ளார்.

### குடியேற்றப்பட்ட வனவாசிகளின் அவலம்

வெவ்வேறு காலங்களில் குடியேற்றப் பட்டோர், அல்லது பொதுக் கலாச்சாரங்க ளுடன் முன்பே கரைந்தோரின் வாழ்வு மோசமாகவேயுள்ளது.

1978 இல் அநுராதபுரத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்று இன்னும் கூட 44 கிராமங்கள் வனவாசிகள் கிராமங்களாக அடையாளப்படுத்தப் படுகின்றன. இவர்கள் சிங்கள மொழி, பௌத்த சமயத்தைக் கைக்கொண்டு பெரும்பான்மைச் சமூகத்துடன் இணைந்துள்ள போதும் புதிய வாழ்முறையில் இவர்கள் வளர முடியாதிருப்பதால் மற்றைய கிராமத்தவரால் சுரண்டப்படுவதாகக் கூறுகிறது.

1992 இல் சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் ஆதிக்குடிகள் அபிவிருத்தித் திட்டம் பற்றிய வல்லுநர்கள் இலங்கையில் செய்த ஆய்வானது குடியேற்றப்பட்ட வனவாசிகள் பொருளாதாரரீதியில் பின்தங்கியும், சமூகநிலையில் தனிமைப் படுத்தப்பட்டும், அரசியல் நிலையில் ஓரங்கட்டப்பட்டும் உள்ளதாகக் கூறுகிறது. மேலும் புதியவாழ்வு பற்றிய அனுபவம் இல்லை. பணப்புழக்கம், பணம் சேமிப்பு பற்றி அனுபவமின்மை, தொடர்விவசாயம் பற்றிய அனுபவம் இன்மை, போட்டி மனப்பான்மை இன்மை போன்ற காரணங்களால் இவர்கள் வாழ்வு சிக்கலானதாக மாறியுள்ளது. இவர்களின் சுதந்திர வாழ்வு, காடுகள், வாழ்வு நெறி, சடங்குகள் என்பவற்றை இழந்து போனதால் இவர்களுக்கு மனஅழுத்தத்தைக் கொடுத்துள்ளதாகக் கூறுகிறது. மேலும் வேறு ஆய்வுகள் இவர்களிடம் முன்பு காணாத குடிப்பழக்கம், நோய்கள், மனஅழுத்தம் என்பன காணப்படுவது பற்றி கூறுகின்றன. இவர்கள் மரக்கறி உணவையே பெரும்பாலும் உண்ண நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

## 6

### வனவாசிகளின் இன்றைய நிலை

சுவிடன் மானிடவியலாளர் விவேகா ஸ்ரேகேபோர்ண் (இவர் பல வருடங்கள் வனவாசிகளுடன் வாழ்ந்தவர்) 1996 ஜூலையில் ஜெனிவாவில் நடந்த ஐ.நா. சபையின் ஆதிக்குடிகள் வேலைத்திட்டக் குழுவின் (WGIP) கூட்டத்திற்கு ஒரு வனவாசி பிரதிநிதியை அழைத்து வந்திருந்தார். இக்கூட்டத் தொடர் முடிவும், தொடர்ந்து பல சர்வதேச அமைப்புகளின் வேண்டுதல்களும் இலங்கை அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்தன. 1998 மே மாதம் வனவாசிகளின் எதிர்ப்பின் குறியீடான திஸ்ஸகாமி இறந்து விடுகிறார். திடீரென 1998 ஆகஸ்ட் 7ம் திகதி இலங்கை ஜனாதிபதி சந்திரிகா க்ண்டியில் நடந்த வைபவமொன்றில் வனவாசிகள் 50 பேருக்கு தமது வாழ்வு முறையை தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குகிறார். மேலும் 50 பேருக்கு விரைவில் வழங்கவிருப்பதாக

www.tamilarangam.net

அறிவிக்கிறார்.

1998 ஒக்டோபர் 24ம் திகதி 9 குடும்பங்கள் காட்டிலுள்ள தமது பழைய கிராமங்களுக்குத் திரும்பி தமது குடில்களை அமைத்தபோது, வனக்காவலர் அவர்களை விரட்டியடித்து தமக்கு அறிவித்தல் ஒன்றும் வரவில்லை என்றனர். தொடர்ந்து இவ்வாறு செய்தால் 10,000 ரூபா அபராதம், வேட்டை உணவுச் சேகரிப்பில் ஈடுபட்டாலோ 20,000 ரூபா அபராதம் என்றனர்.

தொடர்ந்து 1998 டிசம்பர் 23 அன்று உருவாறிக புஞ்சிபண்டா வேட்டையாடச் சென்ற போது வனப்பாதுகாவலர்களால் சுடப்பட்டார். அவரின் மனைவி ஒரு மாத காலம் அவரைத் தேடியபோது மோசமான சிறைச்சாலை ஒன்றில் அவரை வைத்திருப்பது தெரிய வந்தது. பின்னர் காவலுடன் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். இடுப்புக்குக் கீழேயும், முகத்தின் அரைவாசியும் உணர்வற்று இருந்தது. உண்பதற்கோ, குடிப்பதற்கோ, விளங்கிக் கொள்ளவோ முடியாத நிலையில் அவர் இருந்த போதும் அவரின் மனைவி குற்றப்பணம் செலுத்தும்படி வேண்டப்பட்டார். செய்திகள் வெளிவரவே, சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு, அங்கு அவர் 1999 மே மாதம் 30-ந் திகதி இறந்து போகிறார். இவரைச் சுட்ட வனக்காவலரோ விடுதலை செய்யப் பட்டுள்ளார். இவை யாவும் வனவாசிகள் தமது மரபுவாழ்க்கையைப் பின்பற்றலாம் எனச் சந்திரிகா அறிவித்து, விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட பின்பே நடை பெற்றுள்ளன.

## 7

காலம் காலமாகவே மையங்களின் அரசியலானது, விளிம்பு நிலையில் இருக்கும் மக்களை, அவர்களின் கலாச்சாரத்தை சிதைப்பதாகவோ அல்லது கலாச்சார நீக்கம் செய்வதாகவோ தான் இருந்து வருகிறது. இதனையே காலனித்துவ மயமாக்கல், ஆங்கில மயமாக்கல், பார்ப்பனிய மயமாக்கல், சிங்கள மயமாக்கல், தமிழ் மயமாக்கல்... என்கிறோம். ஆனால் இன்றை ஏகாதிபத்தியத்தின் உச்சமாக, உலகமயமாதலானது ஒரு மையச் சிந்தனை கொண்ட, ஒரு மொழி பேசுகின்ற, ஒருமைக் கலாச்சாரத்தை (monoculture) பின்பற்று மாறு உலக மக்களை நிர்ப்பந்திக்கிறது. இம்மூர்க்கமானதும் வேகமானதுமான செயற்பாட்டில் பெரிய மொழிக் குடும்பங்களே திணறிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் விளிம்பு நிலையிலிருக்கும் பழங்குடியினரைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை.

உலகெங்குமிருக்கும் பல்வேறு கலாச் சாரங்களின் பன்முகத்தன்மையை (cultural diversity) அழிப்பதானது, வெவ்வேறு சிந்தனை முறைகளை, மொழிகளை, கலாச்சாரங்களை, அறிவுச் சேகரிப்புகளை அழித்துவிட்டு பொதுமைக் கலாச்சாரத்தை நிறுவுவதானது ஒரு பாசிச செயற்பாடேயாகும். இலங்கை வனவாசிகள் தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மாணிக்கும் அடிப்படை மனித உரிமையையே வேண்டி நிற்கின்றர். இது தமது நாட்டில் தமது சடங்குமுறையை, மொழியை, கலாச்சாரத்தை, தம் வாழ்வுமுறையை பின்பற்றுவதற்கும், தமது சந்ததியினருக்குத் தொடர்ந்து கொடுப்பதற்குமான உரிமையே யாகும். இது அவர்களது உயிர்வாழ்வதற்கான இறுதிப் பிராயசித்தம் ஆகும்.



www.tamilarangam.net

www.tamilarangam.net

www.tamilarangam.net

# மற்றுமோர்



மார்க்ஸிய நீரோட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீண்ட பயணம்

ஜிப்ஸிக் கவிதை

எங்கே அது கொண்டு சேர்க்கும் என்றறியாமலே
இருளில்
நாங்கள் ஒரு பாதையைத் தேர்ந்தோம்

மாபெரும் நிலப்பரப்பை எங்களுக்குப் பின் விட்டு
எமது துயர யாத்திரையை நாம் துவங்கினோம்

எமது கனத்த சுமைகளைத் தாங்கிக்கொண்டு
பல்வேறு பக்கப்பாதைகளில் பயணம் செய்தோம்

எமது தந்தையர்கள்
முதுமை எய்திய அடர்ந்த கானகங்களில்
வழியில்
எமது மரணமுற்ற மனிதர்களைப் புதைத்தோம்

இருளின் மத்தியில் நாங்கள் இளைப்பாறினோம்

எமது ஆன்மாவைப் புதுப்பித்துக்கொள்ள
நாம் கொஞ்சமாக அமர்ந்தோம்
அப்போது கொஞ்சம் உறங்கியும் போனோம்

துண்டு ரொட்டியும் இல்லை
துளிநீரும் அருந்தவில்லை
அப்பத்தின் துணுக்கும்கூட எம் உதட்டில் படவில்லை

அதிகாலை வந்ததும் நாம் விழித்தோம்
மறுபடி எமது பயணம் தொடர்ந்தோம்

மூலம்:
ஸபான் இலியாஸ்
மெஸடோனியா

தமிழில்:
யமுனா ராஜேந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்